[illegible]துணை.

கூர்மபுராணம்.

காப்பு.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வெண்ணிலாக்கற்றைகான்றுவிளங்குமோர்பிறைக்கோடின்றி
யெண்ணிலோர்பாகங்கூந்தற்பிடியெனவிருந்தவாற்றாற்
பெண்ணொருபாகம்வைத்தபிஞ்ஞகனுருவுகாட்டு
மண்ணலங்களிநல்யானையடிமலர்சென்னிவைப்பாம்.

பூருவகாண்டம்.

இருபத்துமூன்றாவது

இராவணன்வதையத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அள்ள [illegible]ஞ்சேற்றிடைப்பெடையோடலவனாடுஞ்சிறுகுழியைக்
கள்ய [illegible]ங்குநறும்புன்னைத்தாதுதூர்க்குங்கடற்கரைவாய்
வள்ளல [illegible]டலந்தானையொடுமிறுத்தல்கேட்டுவல்லரக்கன்
றெள்ளுமறைநூற்றுறைபோயதேர்ச்சித்துணைவரொடுந்தேர்ந்தான். (௧)

அன்னகாலைவீடணன்போரரக்கர்கோமான்முகநோக்கிக்
கன்னிக்கற்பினுருவமைந்தகமலத்தடங்கட்சானகியை
யின்னேவிடுதல்நெறியெனவுமிலங்கைவேந்தன்முனிந்துரைப்ப
மின்னுநகுவேல்வீடணன்போந்திராமனுழையின்மேயினான். (௨)

கல்லுங்கருங்கட்பெண்ணாகநடந்தகமலக்கழற்காலோன்
மல்லார்தடந்தோள்வீடணனைமதிநூற்றுறைபோமாருதிதன்
சொல்லாற்றேறியிலங்கைநகர்க்கிறைநீயென்னச்சுடர்பரப்பி
எல்லோன்போலவிருந்திருவுமெரிமாமவுலிசூட்டினான்.

உரவுத்திரைநீர்க்கடலடைப்பான்வருணற்பழிச்சியுயர்கரையின்
விரியுந்தருப்பசயனத்தின்மேவியோரேழ்நாளுற்ப
வருணன்போதந்திலனாகவெகுண்டுவரிவெஞ்சிலையினொடும்
புருவச்சிலைகால்குனித்திடலும்புகைந்தகோரேழ்புணரியுமே.

கரைகொன்றிரங்குகடல்புகையவருணன்வெருவிக்காகுத்தன்
விரைமென்கமலத்தாள்பணிந்துவேலையடைப்பானுரைத்தேகச்
செருவேக்கறவுற்றுயர்திணிதோட்செம்மனளனாலணைகட்டிப்
பரிதிமான்றேரொளிர்தடக்குஞ்சுவேதவரையின்பாலிறுத்தான். (௫)

இறுத்ததானையிடைப்புகுந்தசுகசாரணரையெதிர்பற்றிச்
செறித்தகழற்கால்வீடணன்போய்ச்செங்கட்கரியோன்முன்னுய்ப்ப
வொறுத்தறீறுவிடுத்தியெனவிடுப்பவொற்றர்பணிந்தேகிக்
கறுத்தநெஞ்சினிலங்கையர்கோனறியவனைத்துங்கட்டுரைத்தார். (௬)

கரியதிரைவாரிதிசெவப்பக்கடைக்கண்சிவந்தோன்றனைக்காண்பான்
திருகுசினத்தவாளரக்கன்செம்பொன்மணிக்கோபுரமிவர
வரைகொன்றுயர்ந்தமணித்தடந்தோளரக்கற்காணபான்மணிவண்ண
னிரவிதடந்தேர்ச்செலவகற்றுஞ்சுவேதவரையின்மீதிவர்ந்தான். (௭)

வெள்ளிப்பொருப்பையெடுத்தபுயனிவனுமென்னவீடணன்போர்
வள்ளற்குரைததல்கேட்டிடலுமணிக்கோபுரத்தின்மிசைதாவிக்
கள்ளக்கொடியவரக்கனெடுஞ்செருவேற்றவன்றன்கதிர்முடிகள்
தள்ளிச்சயங்கொண்டிராமனடிதாழ்ந்தானிரவிகாதலனே. (௮)

விலங்கற்றிணிதோளங்கதனையிராமன்றூதுவிடுப்பவவ
னிலங்கைநகரினிடையெய்தியிகல்வேலரக்கன்முன்றுறலு
மலங்கல்வடிவாளிராவணனுமாரைநீசொலெனயன்றன்
புலன்கடேயவானுதியிற்பிணித்தோன்புதல்வனெனப்புகன்றான். (௯)

என்றலோடுமிலங்கைநகரொரித்தகவியாண்டுளதென்ன
வுன்றன்சிறுவன்வீக்கவகப்பட்டவிழிவினுளங்கொதித்துக்
கன்றியுயர்வானரத்தலைவர்கடியக்கானத்திடையொளித்துப்
பொனறியதுவோவுய்ந்ததோவறியேனந்தப்புன்குரங்கே. (௰)

பொற்பிற்கரைசைவிடுத்தியெனப்புகலமறுத்திப்புன்குரங்கை
மற்போரரக்கர்கோறிறொனவந்தோராவியறமாய்த்து
வெற்பார்தடந்தோளங்கதனுமிராமனுழையின்விரைவிற்போய்க
சறபாடழித்தபுயத்தரக்கனசெய்தியனைத்துங்கட்டுரைத்தான். (௧௧)

கலிநிலைத்துறை.

செங்கட்புலிப்போத்தனவங்கதன்செப்புமெல்லைக்
கங்கைக்கிறைவன்றனைவிற்கடற்றானைசூழ
வெங்கட்கொடியோர்மிடைகின்றவிலங்கைமூதூர்
மங்குற்புறம்போகுயரிஞ்சிவளைந்துகொண்டான். (௧௨)

கரைகொன்றிரங்குகடலிற்கவிவெள்ளமெய்திப்
புரிசைப்புறத்தினிறுத்தார்க்கும்பூசல்கேட்டு
வரைகொன்றதிண்டோளரக்கன்றிறன்மள்ளர்யாரும்
பொருவெஞ்சிலைக்கைப்பெரியோனொடும்போரினேற்றார். (௧௩)

கம்பார்களிற்றுப்பிரசங்கன்கனன்றுசெல்லச்
சம்பாதிவெற்பொன்றெறிந்தன்னவன்றன்னைமாய்த்தான்
வம்பார்மலர்த்தாருவின்மாருதிபோதலோடும்
வெம்பாவுயிர்போகவிழுந்தனன்சம்புமாலி. (௧௪)

வென்வேற்பிரதபன்றன்னுயிர்வீயவெம்போ
ரொன்னார்வணங்குநளனோர்கதைகொண்டுமாய்த்தான்
கன்னாடுதின்டோட்டபனன்றனைக்காய்ந்துகேசன்
பொன்னாட்டுமாதர்நலங்கூட்டுணப்போக்கினானே (கரு)

விண்ணுங்கவிங்குதிணிதோளுடையிந்திராக்கன்
றன்னங்கம்வீழவிறல்வீடணன்றணடின்மாய்த்தான்
மன்னற்கிளையோன்விருப்பாக்கனைவாளியொன்றாற்
றென்னம்புலத்தோர்விருந்தேற்பச்செலுத்தினானே. (கசு)

வெயில்கான்றிருள்சீத்தெழுவெங்கதிர்ச்செல்வன்மைந்த
னயில்வேற்பிரகத்தனைவெங்களத்தாவியுண்டான்
றுயிலாதவென்றிமயிந்தன்பொருதோமரத்தால்
வயவெஞ்சிலைவச்சிரமுட்டியைவாகைகொண்டான். (கஎ)

அழல்வெம்பகுவாய்த்திறலக்கினிகேதுவோங்கு
மெழுவென்றதிண்டோள்வலிரச்சமிகேதுவொன்னார்
தொழுமெச்சகோபனவிராழிச்சுதந்தனென்னுங்
கழிவெஞ்சினத்தாருயிருண்டனன்கங்கைநாடன். (கஅ)

சுடுவெஞ்சினத்துவயமீளிதுமிந்தனென்போ
னடல்கூரசனிப்பிரபன்றனதாவிகொண்டான்
கடலுஞ்சுவற்றுங்கனல்வெங்கட்குசேனன்வெய்ய
மிடல்வித்துன்மாலியுயிர்விண்ணகத்தேற்றினானே. (ககூ)

இவ்வாறிராமனெரிதம்பியிலங்குவைவேல்
வெவ்வாயரக்கர்தமைவிற்கொடுநூழிலாட்டு
மவ்வேலைதன்னிற்றிரைவேலையினாழிவெய்யோன்
செய்வான்களம்போற்குடபாலுறச்சென்றுசேர்ந்தான். (உ0)

கங்குற்பொழுதினிருதர்க்கிறைகாதன்மைந்தன்
வெங்கைச்சிலையின்கணைமாரிவிலக்கியன்னோன்
றுங்கக்கொடிஞ்சித்தடந்தேர்துகளாகவீசிச்
சிங்கக்கொடும்போத்தெனவங்கதன்சீறியார்த்தான். (உக)

மான்றேரழிந்ததிறலிந்திரசித்துவானின்
மீன்றோய்படலத்தின்மறைந்துவெகுண்டுநோக்கிச்
சான்றோர்புகழுந்தனிவிற்கைத்தலைவர்தம்மே
லூன்றோய்பகுவாயரவக்கணையுந்தியார்த்தான். (உஉ)

செங்கட்பணைக்கைக்கொலைவேழஞ்சிலம்பினாலிற
றங்கிச்சிமிழ்ப்புண்டுகிடந்தெனததம்பியோடும்
பொங்குந்தழல்வாய்ப்புயங்கக்கணைதோள்பிணிப்ப
வெங்கட்களத்திற்கிடந்தானிகல்வென்றிவீரன். (உங)

கலிவிருத்தம்.

செய்யதாமரைக்கணான்செய்திநோக்கியே
வெய்யவன்காதலன்வெகுளிமீக்கொள
வையிருதலைவர்போயரக்கன்மைந்தனைக்
கையினிற்கவர்கெனக்கடிதிற்றூண்டினான். (உ௪)

தூண்டியமாருதிமுதலதூயவர்
தேண்டினர்வானிடைச்செல்லவெய்யவன்
காண்டலுங்கணைகளால்வீழ்த்தித்தாதைபால்
மீண்டனன்புகுந்தமைவிளம்பினானரோ. (உ௫)

தாதையுமைந்தனைத்தழுவியொற்றராற்
சீதையைக்கொணர்ந்தவர்செய்திகாட்டென
வோதலும்புட்பகத்தேற்றியொல்லைபோய்ப்
போதரிநெடுங்கணாள்புலம்பக்காட்டினார். (உ௬)

அரிறபவுணர்ந்தனளழுங்கனியெனத்
திரிசடைமனங்கொளத்தெருட்டத்தேறிய
புரிகுழலணங்கினைக்காக்கும்புன்மையோர்
மருமலர்ச்சோலையிற்சிறைவைத்தாரரோ. (உ௭)

ஒளியிழநகிலர்முசமுயிருண்டாமெனத்
தெளிவொடும்வீடணன்செப்புமேல்வையிற்
களியொடுந்தடஞ்சிறைக்கலுழனெய்தினான்
றளையெயிற்றரவுதன்றொடர்ச்சிவிட்டதே. (உ௮)

தாள்வளாமுடிமுதற்றழும்புதீர்ந்துயர்
கோள்விடுமதியெனக்குமரருய்ந்தெழ
நீளிருஞ்சிறையினானீவியேகினான்
றோன் டலியாலமிழ்தெடுத்ததோன்றலே. (உ௯)

முருகுறழ்செவ்வியோர்குனித்தமொய்ப்புடை
வரிசிலைநாணொலிமடித்தவாயுடைப்
பரிதிசேய்முதலியபடைஞரார்ப்பொலி
யுருமெனவிராவணன்செவியினுற்றதே. (௩0)

கேட்டலுமிராவணன்கிளர்ந்ததானைமேற்
பூட்டுவிற்புகைநிறக்கண்ணன்போகென
வாட்டிறலொடுஞ்செருமலையமாருதி
தாட்டுணைபிடித்தனன்றரையினெற்றினான். (௩௧)

கச்சையம்புகர்முகக்களிநல்யானைபோல்
வச்சிரத்தெயிற்றவன்மலையவாலிசேய்
கச்சுவாளவன்கையிற்பறித்துநாண்மலர்ச்
செச்சைதாழ்முடித்தலைசிதறவீசினான். (௩௨)

மாருதிக்ககம்பனுடைந்துவான்றவழ்
கார்நிறத்திராவணற்குரைக்குங்காலையிற்
பார்புதைத்தெழுமிருள்பருகிப்பாய்திரை
யார்கலியகடுகீண்டருக்கன்றோன்றினான். (௩௩)

எரிகவிழ்த்திணைவிழிபுகையவேற்றெதிர்
[illegible]பிரகத்தனைக்கீழைவாயிலிற்
குருதிவாய்வழியுகக்குத்திவீழ்த்தினா
னிருதர்வெங்கூற்றெனத்திரியுநீலனே. (௩௪)

அகம்பனன்றிரிசிராபனசனாடல்வேல்
நிகும்பனொள்வாளதிகாயனீள்கும்ப
னருங்கதிர்வேலிராவணிநராந்தகன்
றிகழ்ந்தவேல்மகோதரன்றேவராந்தகன். (௩௫)

ஈங்கிவர்முதலியதலைவரெண்ணிலர்
வாங்கியவில்லினர்மடித்தவாயினர்
வீங்கியதோளினர்வெருண்டநெஞ்சினர்
பாங்கினிலளப்பரும்படையொடேகவே. (௩௬)

மாற்றலர்வயிறெரிதவழ்ந்துமாழ்குறக்
கூற்றமுங்கண்புதைத்தஞ்சக்கொல்சினத்
தேற்றுரிமுரசினமிடியினார்ப்பெழ
வாற்றல்சாலிராவணனமரிலெய்தினான். (௩௭)

கொய்யுளைச்சுவற்பரிகோடிபூட்டிய
வையமூர்ந்துடுகணைமழைபொழிந்திடும்
வெய்யனைக்கண்டனும்வெகுண்டுமாருதி
யெய்யெனுமளவையினெதிர்ந்துகூறுவான். (௩௮)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

கருந்தடங்கண்ணிபங்கன்வாழ்கயிலையெடுத்தநின்புயவலிகாண்பான்
பொருந்தினனெனதுமார்பிடையொருகாற்குத்தெனநின்றுபோரிரப்ப
விரைந்தெனைமுன்னர்க்குத்துகென்றரக்கன்வெற்புறழ்மார்பெதிர்கொடுப்ப
விருந்தடங்கிரியினசனிவீழ்ந்தெனக்குத்தினனெறுழ்வலியனுமன். (௩௯)

எறுழ்வலித்தடந்தோண்மாருதிபுடைப்பவிழிபெருங்குருதிகான்றெழுக
வறிவழிந்தொல்லையுணர்வுவந்தெய்தியாற்றலங்கவியினைவியப்பக்
கறைகெழுவேலோய்நின்முறையென்மேற் குத்தெனக்கல்செய்தோணிமிர்த்
துக், குறுகிநின்றண்டகோளகைவெடிப்பவனுமன்மேற்குத்திநின்றார்த்தான்.

வாய்வழிகுருதிபொழிதரவனுமன்மண்ணிடைமயங்கிவீழ்ந்தயரப்
பாய்புலிப்போத்தினமர்க்கெதிர்புகுந்தநீலன்மேற்பரிகொடேர்கடவிக்
காய்கனற்பகழியொன்றினால்வீழ்த்திக்கவிக்குலத்தலைவரைத்துரந்து [ன்
சேயுறழ்கொற்றத்திலக்குவன்றடந்தோட்சிலைத்தொழில்வியர்தெதிர்புகுந்தா

அல்லியங்கமலக்கடவுளேயாகவஞ்சனவண்ணனேயாகக்
கொல்சினவடலேற்றண்ணலேயாகக்குறுகலர்க்கடந்தயானாக
வில்லினாலிவனைவெலற்கரிதென்னவெண்ணினைச்சேற்றொடுங்குருதி
பில்குநெட்டிலைவேலெறிந்துவார்சழற்காலிலக்குவன்மார்பகம்பிளந்தான்.()

குருதிவேல்பாயக்களத்திடைவீழ்ந்தவரசிளங்கோளரிதன்னை
யிருபதுகையும்வருந்தறவெடுத்துமெடுப்பரிதாகின்றசையுந்
திருவில்முகங்கள்பத்தினுங்குருதிசிந்திடக்குத்திவீழ்த்தனுமன்
வரிசிலையிளவறனையெடுத்தேகிமணிநிறவண்ணன்முன்னுய்த்தான். (௪௩)

எய்துமவ்வேலைவேல்படுமயர்ச்சியிளவறீர்ந்தெழுந்துநின்றையன்
செய்யபங்கயத்தாடொழுதனனிற்பச்சிலைத்தொழிற்கொருவனென்றுரைக்கு
மையசெங்கமலக்காடுபூத்தனையவஞ்சனக்கொண்டல்கண்சிவந்து
வையமேத்தெடுக்குமனுமன்மேலிவராவிராவணனோடமர்மலைந்தான். (௪௪)

காற்றுறழ்கடுப்பிற்கலினமான்றடந்தேர்கழைசுளிகவுண்மதக்களிறு
பாற்றினாக்கவரிக்கூந்தன்மாதறுகட்பாய்புலிப்போத்தனையவர்
வீற்றுவீற்றுகமறிதரவிராமன்வரிசிலைகுனித்தலும்வெகுண்டு [ன்.
கூற்றுமெய்பனிப்பவனுமன்மேலரக்கன்கொடுங்கணைபொழிந்துநின்றார்த்தா

மாருதிமருமம்பிளந்திடவரக்கன்வடிக்கணைதொடுத்தமைநோக்கிக்
கார்முகவிநோதனிருதர்கோன்கவசங்கனலுமிழ்படைக்கலந்தடந்தே
ரூர்தருபாகன்வரிசிலையனைத்துமோரொருபகழியாற்றுணித்துத்
தார்புனைமவுலியொருபதுங்கணையாற்றள்ளிமற்றிங்கிவைபுகல்வான். (௪௬)

கூந்தல்மான்றடந்தேரணிந்தபொற்கவசங்கொடுஞ்சிலையடுங்கணைப்புட்டில்
காந்தெரிகவிழ்க்கும்படைக்கலமின்றிநின்றனைசீதையைக்கடிதி
னீந்துநின்னாவியுய்தியேலுய்தியன்றெனிலின்றுபோய்நாளைப்
போந்துவெங்களத்தினின்னிளையோடுவிளிதியேற்போகெனவிடுத்தான். (௪௭)

வெள்ளியம்பொருப்புமெடுத்தவனாணஞ்சமக்கலனாகிவெய்துயிர்த்துப்
பள்ளநீர்வேலியிலங்கையினெய்திப்பரிவுடனமைச்சரோடெண்ணி
யெள்ளருமதுகைக்கிணையிலாக்கும்பகன்னனைப்படுதுயிலெழுப்பி
யுள்ளிலைச்சூலந்திரித்துமானுடர்தமாவியுண்டிடுகெனவிடுத்தான். (௪௮)

விடுத்தலுமிமைப்பிற்செருக்களத்தெய்திவானரவீரரையள்ளி
மடுத்துவாய்ப்படுத்தக்கவுட்புடைகுதட்டிமலர்கதிர்ப்பரிதிசேய்தன்னைப்
பிடித்துயரிலங்கைபுகுதலுந்தடங்கணரக்கியர்பெய்தமென்சாந்தி
னடுத்தமெய்த்துயர்தீர்ந்திரவிசேயரக்கன்மூக்கொடுசெவிபறித்தகன்றான்.()

திருகுவெஞ்சீற்றமடங்கலேறனையான்செவியொடுமூக்கினைக்கவர்ந்த
விரவிகாதலனைத்தொடர்ந்துவெங்களத்தினேற்றவருயிர்பிழிந்துண்டு
வருதலுமிராமன்கொடுமரங்குழைத்துவடிக்கணைபற்பலதூண்டி
யருவரைத்தடந்தோள்மருமநீள்சென்னிவீற்றுவீற்றாய்விழவறுத்தான்.(௫0)

களத்திடைக்கும்பகன்றனையிராமன்கடிந்தமைகேட்டவல்லரக்க
னுளத்திடைவெகுளிமீக்கொளக்கண்ணினெழுகுவெங்கனற்சிகைகதுவித
துளிப்புயல்வறப்பக்கனன்றதிகாயன்றன்முகநோக்கிநீதுனைவி
னளப்பருஞ்சேனைசூழ்வரச்செல்கென்றறைதலுமடுகளத்தெதிர்ந்தான். (௫௧)

பொருப்புறழ்தடந்தோள்வாநரமெழுநூறுருவவோர்பொழிகதிர்வேலாற்
செருக்களத்தெறியுநராந்தகன்றனையங்கதன்பரியொடுஞ்செகுத்தா
னுருத்துவந்துடற்றுந்தேவராந்தகனையனுமனோர்குத்தினாலொறுத்தான்
பருப்பதமதனால்மகோதரனைவிமறிந்திடவெறிந்தனனீலன். (௫௨)

மாருதிசினவித்திரிசிராவங்கைவாள்பறித்தவன்றலைதுமித்தான்
போர்முகத்திடபன்மத்தனைக்கதையாற்புகையெழப்புடைத்துயிர்குடித்தான்
கார்முகங்குழைத்துமலரயன்கணையாலிலக்குவனமரர்கண்களிப்ப
நேரலர்க்கடந்ததிறலதிகாயனெடுந்தலைதுமித்துநின்றார்த்தான். (௫௩)

கறங்குதெண்டிரைநீருலகெலாம்வென்றகதழ்சினத்தடலதிகாய
னிறந்தமைகேட்டுநிருதர்கோன்சினவியிந்திரசித்தினைவிடுப்பச்
செறிந்தகூரிருள்வாய்வெஞ்சமருடற்றித்திசைமுகன்பகழியாலிராமன்
மறங்கள்போரிளவல்வானரத்தலைவர்யாரையுமண்ணிடைவீழ்த்தான். (௫௪)

வரிசிலைக்கல்வியுருவெடுத்தனையவாளெயிற்றரக்கன்வெஞ்சமரிற்
புரிதொழிலனைத்துமிராவணற்குரைத்துப்பொங்குபேருவகையினிருப்ப
நிருதர்புங்கவனும்வீடணன்சாம்பன்றனையினினிகரில்போரனும
னருகுசென்றெய்திநீர்பிழைத்தமையாலிறந்திலர்யாருமென்றறைந்தான். ( )

மெய்புகுகருவிமாற்றுறுமதகந்துணிபடுமெய்பொருத்தத்தக
மெய்தியதழும்புதீர்த்திடுமதகமின்னுயிரளித்திடுமதக
மையகேள்வெள்ளிவரைக்குநல்லிடபகிரிக்குநாப்பண்ணினிதமரு
மையறுமருத்துவரையினிலுளநீகொணர்கெனமாருதிபாய்ந்தான். (௫௬)

பாய்தலுமதனில்மருந்துகாண்கிலனாய்ப்பருவரைபறித்துவந்துப்பச்
சேயதாமரைக்கட்செல்வனைமுதலோர்துயிலுணர்ந்தாரெனவெழுந்தா
ரேயவம்மலையைமாருதிமுன்னரிருந்துழிவைத்துமீண்டெய்தக்
காய்சினங்கதுவியிரவிசேய்முதலோர்கடிமதிலிலங்கைதீமடுத்தார். (௫௭)

அன்னதுகேட்டுநிருதர்கோன்கும்பகன்னன்றன்மைந்தரையழையா
மின்னகுசுடர்வேற்றலைவரோடேகிவெஞ்சமர்புரிகெனவிடுப்பக்
கன்னவிறிடோட்குரக்குவெஞ்சேனைக்கனைகடலுடைதரக்கலக்கிக்
கொன்னுனையயில்வேற்கப்பணஞ்சிதறிக்கூற்றமஞ்சுறவெதிர்மலைந்தார். ௫௮

அங்கதன்சினவியகம்பனனென்னுமரக்கனுக்கமருலகளித்து
வெங்கணைநேர்பிரசங்கனைமறலிவிருந்தெதிர்கொள்கெனவிடுத்தான்
செங்கைவள்ளுகிராலடுசினத்துவிந்தன்சுரோணிதக்கண்ணனைச்செகுத்தான்
பங்கமில்மயூபாக்கனைத்திறல்மயிந்தன்பறவைகட்டுணவுயிர்படுத்தான்(௫௯)

நள்ளிருள் விழுங்கிக்கதிரொதிரொடுங்குமபரிதிசெய்நாசிளமபிறைதாழ
வெள்ளெயிறகல்வாயகும்பன்வானமகளிர் நகைவிருந்தினைதிடவிடுத்தா
ன், கொள்ளைவண்டூறைதாரநிகும்பனைததிறலகூரனுமரேனுர்குத்தினிற்கொன்
றுன், வள்ளலோர்கணையாலடல்புரிமகராக்கணணணையாருயிரமாய்த்தான். ()

ஈங்கிவையரக்கனசெவிமுதலுறலுமிந்திரசிததினைவிடுபப
வாங்கவன்மாயாசீதைதனைபவிறல்கூரனுமனமுன்றடிநதிகல்வேள்வித்
தீங்கறப்புரிவானிகும்பலைககுறலுமாருதிதிருமறுமார்பன்
பாங்குவநதாககன்புரிநதமையுணாப்பபபருவராற்கடலில்வீழ்ந்தயர்நதான். ()

ஆயபோழ்தனுமனுரைத்தல்கேட்டையவழுஙபிடேவிராவணிவஞச
மாயையிர்சீதைவகுததனன்றழிநதுமகருசெய்வானிகும்பலைக்ககன்றுன்
மேயவவவேள்விமுறறறினம்மாலவெலலுதலரிதமருடறறித்
தீயினைசசெகுபபாணிளவலைவிடுததுயெனறுவீடணனறெளிநதுரைததான. ()

உரைத்தலுங்கமலத்தடங்கணுனிளவலெல்லைபோகெனத்தொழுதேகி
வரைத்தடந்திணிதோளனுமன்மேலிவர்நதுவானரவீராபினருடர
வரககாகோனிளவலகனனறுழுனனடையபவரான்விழிதெரித்தழப்புரத்திற்
செருக்களஞ்செவப்பசிறிதுகண்சிவக்குஞசேவகனிகும்பலைசேர்ந்தான் கூ௨

அருமறைத்தக்கன்புரிமகங்கணங்களழித்செனவடல்பினததரக்கன்
புரிதருமவேளவிவாநரததலைவரழித்த வுமபண்டிறநதன்ன
வெரியுமிழதறுகணாரககாகோன்சிறவணிமைகரிநதழலுகவிழித்துப்
பரிதிமானறடநதேரனையபொற்றேரிற்பாய்புலிப்போத்தெனவிவாந்தான். ()

அந்தரததமராரிமைப்புருக்கண்களிமைத்துவான்றுறந்தனரகல
மநதரமவெடிப்பமாதிரததலைவாவயிறெரிதயழாதுநினறெங்கக
கந்தடுபுழைக்கைதிககயம்வெருவிக்களிமதநறுறநதுகானபடர
விந்திரன்பகைஞனண்டகோளகையுமிடிதரவரிவிலநெனறிந்தான். (கூ௫)

களத்தெதிரேற்றவோரொருகவிகட்காபிரமாயிரங்கணைக
டுளைத்துவில்விசையினேமியங்கிரியந்துனைவினிலுருவிவின்படர
வளைத்தலைப்புகுதமரவெனச்சிலபோயனுமனசாகமூடுருவத்
தளிப்புயமேலழுங்கடையுகத்திறைக்குந்தாரைபோறகணைமழைபொழிநதான்.

கூற்றுமெய்பனிபபவரக்கர்கோன்விடுத்தகொடுங்கணையாவையுங்கணையால்
மாற்றிவாளரககனமருமநீள்தடக்கையணிமுடிநுணடுகள்படுத்திக்
காற்றுறழ்புரவிசலினமானறடந்தோகளிறறினநதுணித்துவெஙகுருதி
யூற்றிருந்தொழுகக்கவநதமாட்டயரவிலக்குவனுறுகணைபொழிந்தான். (கூ௭)

இந்திரன்மருமம்போழ்ந்ததுமறலியீருளின்றீஞசுவையறிந்த
தந்தாத்தியங்குமபுட்பகவூர்தியரத்தவெமபுனலிறுடியது
செந்தழற்கடவுள்பழுவெலும்பொடித்ததீயவெந்திறன்முகப்பகழி
மந்தாத்தடந்தோண்மாருதிமருமமபோழ்ந்திடவலிதினின்விடுத்தான். (கூ௮)

[illegible] ()

[illegible]

[illegible] (௧)

[illegible]

[illegible]

[illegible]

[illegible] பொருப்பு [illegible]
வருப [illegible]
மருப [illegible]
[illegible] (௭௭)

மூவகையுலகுந்தனதடிப்படுத்தமுழுவலித்தடம்புயவரக்கன்
வாவுமான்றேரின்மதிக்குடைநிழற்றவயங்குவெண்சாமரையிரட்டக்
கோவெடுத்தருந்துங்குருதிவாளவுணர்குற்றுடைவாள்கூமந்தேகத் [தாம்
தேவர்மெய்நடுங்கித்திசைதொறுமவணங்கச்செருக்களத்தொல்லையினடைந்

ஆயிரமுசெருவிற்மறலியைப்புறங்கண்டமர்பெருந்தருக்கசமம்வேட்டு
மாயிருஞாலமுழுவதுந்திரிதரவாகைவேற்றிறல்விருபாக்கன்
காய்கதிர்ப்பரிதிசிறுவனையெதிர்ந்தோர்கணைகவிழுற்புடைத்தலும்வெகுண்டு
தீயுமிழ்தருகண்டிதுநிலவாளாக்கனைமறிதரச்சென்னியைதெரித்தான் (௭௰)

மலகெலாம்விழுங்குமறலிநாவென்னவுமிழ்கொடுந்தழற்சிகைபாப்பி
யிலகுவாள்விதிர்த்துக்கேடகந்திரித்தமகோதரன்களத்தெதிரேற்பக்
சொலைபழுத்தொழுகுங்குருதிவாளேந்திக்கூன்புறப்பலகைகைக்கொண்டு
மலையும்வெஞ்சமத்தின்வாலிதன்றுனைவன்மற்றவன்றலைதுமித்தெறிந்தான் ()

கங்கமுங்கழுகுமார்க்குமவெங்கரத்திற்கவிக்குலத்தலைவரைத்தராங்க
நிகழ்வெறென்னைக்கொடுஞ்சமரியலைக்குமாபெரும்பக்கன்முன்சென்று
ஆங்கமால்வரையிற்றிரண்டதோள்வலியாற்சோர்வுறவிலக்கிடைவீழ்ந்தி
யங்கதன்றிணவியாவரிபோத்திறைங்கவறுடல்பிளர்தலைந்தான். (௪௧)

தானையந்தலைவர்விரிந்தமைநோக்கித்தழலெழவிழித்துவல்லரக்கன்
வானிடைப்புத்தபுடுக்கணைஞ்சிதறமற்றறையவன்முழமவெடிப்பத்
தேனவிழ்கமலப்பொகுட்டினின்றுறையுந்தேவருஞ்செவித்தலம்புதைப்பப்
பானிறச்சங்கமொருபதுநூதனதுபாழியாய்தொறும்படுத்தொலித்தான். ()

பையராநெந்றிச்சுடிகையிற்கிடந்தபார்முகங்கிழியவோரெட்டு
மைதவழ்குடுமிவரைபறிபதெறியும்வானரத்தலைவர்களொவரும்
கையினாழந்தாள்மருமங்கள்சென்னியெங்கணுங்காய்கணைசெருகி
மெய்யெனக்கிடப்பவுலகெலாமவென்றயிராவணனிருப்பிலைகுழைந்தான் ()

மற்றவைநோக்கியிலகுவன்சினவிடவரையனையவிற்குழைத்துப்
பொற்றடந்திணிதேர்வலவனிசென்னிபொங்கழற்கணையினால்வீழ்த்திப்
பற்றலர்முதுதகன்றடலாநெடுங்கன்சிவப்பமுப்பணைப்புயத்தரக்கன்
கொற்றவெஞ்சிலைகளொருபதுந்துமியக்குருதிதோய்கணையினாலறுத்தான் ()

பாதகத்தொடர்ச்சிப்பழவினைச்சிமிழ்ப்புப்பற்றறப்பசும்புயலனையா
னடைக்கப்பசும்பொற்செய்யதாமரைத்தாளசரணமென்றடைந்தபேரறிவின்
வீடணன்வெகுண்டோர்கதையினாலடித்துவெஞ்சினத்தரக்கர்கோனடவுக்[ன்
கோடுயர்பசும்பொற்கொடிஞ்சியந்தடந்தேர்க்குரகதமனைத்தையுங்கொன்று

கொடிஞ்சியந்தடந்தேர்க்கொய்யுளைப்பரிகண்மறிதலுமிரணியற்செகுத்த
மடங்கலேறனையவிராவணன்சினவிவாய்மடித்தெயிறுதின்றுரப்பி
விடங்கவிழ்த்தெரிகால்சுடரிலைநெடுவேல்வீடணன்மேலெறிந்திடலுங்
கடங்கவிழ்காடக்கரிகிரிகளையோன்கணையினாலங்கதுதுணித்தான். (௮௰)

புயனிறமலி பாயகருங்கயமேனிப்புலவுகா பாக்கராசோன்சினவி (௯)
வெயிலிலையிமுத்துகொலைதொழில்பயிறிவெவ்விடத்தொடயில்மேய்
மயறும்வருகையன்பதிருட்சமைத்துவாத்திறமறையொடுமளித்த
வயில்விளையெறியவுரம்பிளந்திலையோன்மனைமிசைவீழ்ந்துயிராயினான். அ

கலினமான்றடந்தேர்கொணரவலரகன்கடிமதிலிலங்கையிற்புகலு
மலையுறழ்தடந்தோணமாருதிமுன்போல்மராத்துமாமலைகொணர்ந்துய்ப்ப
வலகில்சுசேனன்மருத்தினையப்பயனைப்பனமுனைபோலவும்மெழுந்தான்
சிலைவிழுங்குபாதோன்ராமமாருதியைநகுமுவிமற்றிங்கினையதிரியான். ()

உற்றுழிபாவியுதவினைசகுயினைநீகர்பொருந்ருளைடனிலன்றே
மறமெருகைமாறளிட்பதொன்றுவப்பமருமாமைய்யினைமீட்டுங்
கற்றடகணிதோனுமன்முன்போலவைதத்வணகழ துவாதறலும் |ன்
வெற்றிவேலரக்கன வேறொருமணித்தேரிவர்ந்து வெங்களத்திடைப்புகுந்தா

மலரயனடவுமெகினமென்புள்ளுரவலியழிந்திரியமோதியநு
நிலவுமவெங்கதிரோன்பரிசொடோரராகசமேயியநகிரிவலம்வந்த
தலகறுபுவனமுழுவதுந்திரிந்தபவிண்ணினிடைப்பாநலவுய
கலினமான்றடந்தோடவிவல்லரக்கன்கவிகுலயிரியவந்தேறனன. (௧0)

தேரின்றரக்கன்கொடுந்தமம்பினைப்பசலைத்தப்பூம்[illegible]தோனிராமன
பாரினின்றுடற்றலரிசௌவயிரப்பபடையுடைக்குரிசிலமோ[illegible]
பூரபோலநடந்தேரிராமனுக்குச்யுதென முமொலைலயினிழிந்து |ன்
கார்வயிறுடைகுந்தும்புடைத்த நசோகாமுகக்குரிசிலமுன கொணர்ந்தா

அந்தரத்தமரார்வமிகெடவுற்றுயிராவணமேறுமார்மலைதா
கிநதிர்னளித்தகொடிகுசிமானமடந்தேரிவாமெனமாநலிவணங்கக்
கந்தடுபுழைக்கையொறுழ்வலிபபருத்தாட்கரைகளிகடாக்களினையான
மந்தாநதிவருகினையுவாததறுகணவாளரிப்போற்றெனவிவர்ந்தான். (௧௨)

விண்ணைவாரித்தசேரிவரிமையும்வெருசினததராக்காதங்கோவு
மண்ணினியீன்வெற்பின்மாதிரமெட்டின்வானவர்தானவருறையுங்
கண்ணகலவிசயமிறந்திந்தாப்கறகார்முகவிருசைகாட்டி
யெண்ணில்லெய்வுலதுயவெருவொடுந்தளரவேறுராவிராப்பகலமலைந்தார். ()

மைந்தகார்கமலம்காடுபுந்நலைடமணிநிவணணன்விருணிதுப
பத்துடைத்தலையுந்தோளசுருநமிப்பப்பனமேபோன்முளைத்தமருடற்க
கைத்தலம்விதிர்த்துகைகளருந்தலையுமாயிரங்காலகடிதகற்றி
யாதநவெற்பென்னயிராவிதோமருவாடமர்களத்திடைக்குவித்தான் (௧௩)

கலைகடருவமையுரைந்திழலத்தங்கலைகடலலதாவேறில்லை
பணியிருவிசும்பிற்பினையெடுத்துரைப்பிரபணியிருவிசும்பலாதில்லை
வலைசமுலிராயனிராவணனுடற்றும்போரினுக்கிலைவகுத்துரைப்பி
னலையப்போரிராமனிராவணனுடற்றுமருநமைவைற்றிலையால். (௧௫)

என்றுவாளவர்கடுதியெடுத்திசைப்பவிராகவனிருஞ்சிலைகுழைத்து
மன்றலங்கமலத்தயன்படைவிடுப்பமழவிடையுயரியகடவுட்
குன்றெடுத்தோங்குந்தடம்புயத்தரக்சனுரம்பிளந்தாருயிர்குடிப்பப்
பொன்றினீணிலத்தில்வீழ்ந்தனனமரர்பூமழைபொழிந்துநின்றார்த்தார்.(கசு)

ஆர்த்தனரமரர்விஞ்சையரியக்கருமறைபாடினின்றுடித்
தார்த்தனர்மலரான்மெய்மையுமறனுந்தோமறத்தலையெடுத்துயர்ந்த [லகும்
வேர்த்தடல்புழுங்கிப்பொயமைபோயொளித்தவிழுமறையொழுக்கமெவ்வு
போர்த்ததுதிங்கடோறுமும்மாரிபொழிந்திடச்சிறந்ததெவ்வுலகும். (கஎ)

தாமரைக்கண்ணனருளின்வீடணனைத்தகைபெறுவிராவணற்கினிதி
னேமறக்கருமமியற்றதியெனலுமியாவையும்விளைவினிலியற்றித்
தேமலர்த்துளவோன்சேவடிவணங்கிநிறறலுந்திருமறுமார்பன்
காமர்வண்டறைதாரிலகுவவிவற்குக்கதிர்முடிபுனைகெனவுரைத்தான்.(கஅ)

ஒழுகொளிப்பரிதிவெண்மதிக்கடவுண்மாநிலமுள்ளநாள்காறும்
பழமறையனையவிராகவன்சரிதையுலகினிறப்பினுநாளளவுஞ்
செழுமணித்திகிரிதசைதிசையுருட்டிக்கிளர்மதிலிலங்கைகாக்கென்ன
மழவிடையன்னவீடணறகிாவல்வாளொளிமணிமுடிகவித்தான். (கக)

இருள்வயிறாந்தவெங்கதிர்கடவுள்சிறுவனைமுதலியவெவர்க்குங்
குருமணிக்கலன்களளப்பறுநிதியமருப்பவுங்கொள்கெனவழங்கி
வரையறழ்தடந்தோள்வீடணன்போந்துவள்ளருள்வணங்கலுமகிழ்ந்து
செருமலிதிணிதோளனுமனோடேகிச்சிதையைக்கொணர்கெனவிடுத்தான் ()

அன்னதுகேளாவரக்கன்மாருதியோடசோகநீள்வனத்திடைப்புகுந்து
கன்னியங்கற்பினணங்கினைவணங்கிக்கனிபெருஞ்சோபனம்விளம்பிப்
பொன்னவிர்மணிப்பூஞ்சிவிகையினேறறிப்புணர்முலையரக்கியர்சூழ [தான்.
வென்னையாளுடைய வண்ணலையிராம னிருந்துழிக்கொணர்ந்துமுன் விடுத்

அருந்தவக்கற்பிற்கரசினைநோக்கியெனதுசீர்கெடாதருஞ்சமத்திற்
றிருந்தலர்ச்செகுத்துமீட்டனனின்மேனசையிலுல்மீட்டிலனினக்குப்
பொருந்துழியேகென்றுரைத்தலுமணங்குபொங்கழலிலையவன்றருகென்
றிரந்திடவள்ளலருளினுலினையோனியற்றியவெரியிடைப்புகுந்தாள். (சoஉ)

அங்கியங்கடவுளிராமன்முன்னெய்தியரக்கன்முன்கவரவந்துறலும்
பொங்குநீள்வெள்வித்தழற்புகவளியன்புணர்த்தியமாயையையரக்கன் [திற்
மங்கையென்றெண்ணிக்கொணர்ந்தனனந்தமாயையீண்டழிந்ததென்னிடத்
றங்கியசீதையிவளவணீண்டிற்சூரம்பராங்கற்பின்வெந்தழலால். (சoங)

ஐயுறேலிந்தவணங்கினைகொள்கென்றங்கியங்கடவுளுமலர்ந்த
செய்யதாமரைமேற்புனிதனுமுக்கட்டேவனுந்தயரதனென்னும்
பொய்யெதிபுல்லமையரசனுமுரைப்பப்பூங்கழல்சென்னியின்வணங்கி
வெய்யவாட்டடங்கட்சீதையையிராமன்மேதகத்தெளிந்துகைக்கொண்டான்.

பரதனைத்தாயொடிகழ்ந்திடுமுனிவுதீர்த்தரசுபரிக்கியங்குலத்தி
னுரிமைபூண்பதற்கோர்வரமளித்திடுகென்றிராகவன்றொழுதுரைத்திடலும்
வரையுறழ்தடந்தோள்மார்பகத்தொடுங்கைமைந்தனைத்தழுவிவாள்வேந்த
னரசிளங்குமரவளப்பரிதாருமவ்வரமளித்தனனென்றான். (௧௦௫)

ஆள்வழக்கறநீண்டம்பலைத்தொழுதுமயில்விழிப்புலோமசைகணவன்
றுளதாமரைக்கட்குரிசிலோர்வரநீகேட்கெனத்தசமுகனைவிடுத்த
வாளிபால்மறிந்தகவிக்குலமனைத்துமுய்ந்திடும்வரமளிக்கென்ன
நீளிருந்தடக்கையிராகவன்கேட்பவிந்திரனேர்ந்தஃதளித்தான். (௪௦௬)

விட்புலத்தமரர்மறைதலுங்கணையால்வீய்ந்திடுங்கவிக்குலமனைத்துங்
கட்புலங்களிப்பவிராமனைநோக்கியுய்ந்துளங்களித்தவாளரக்கன்
புட்பகமளிப்பவிளையவனோடும்புணர்முலையனங்கொடுமிராமன்
நட்புடைக்கவிகடம்மொடுமிவர்ந்துநளிகடற்சேதுவையடைந்தான். (௧௦௭)

இராவணன்வதையத்தியாயமுற்றிற்று.

இருபத்துநான்காவது.

இராமன்சிவலிங்கப்பிரதிட்டைபண்ணினவத்தியாயம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

சேதுவினெய்திவரிசிலையிராமன்சினகரமணிபெறக்கோலி
யாதியுமுடிவுமறிவுருவிலிங்கத்தன்பெயராலினிதமைத்துத்
தூதுளங்கனிவாயணங்கொடிளவறன்றொடுஞ்சூழ்ந்துநின்றிறைஞ்சித்
தாதவிழ்மலர்தூய்நெஞ்சகங்குழைந்துதடங்கணீரொழுகிடத்துதிப்பான். (௧)

அருவமாயுருவாயநாதியாயொன்றாயைம்பெரும்பூதமாய்வேறாய்த்
தெரிவரும்பொருளாய்த்தெரிபவையாகிச்செங்கண்மாலயனெனவுரைக்கு
மிருவருங்காணுமறைபொருளாகிச்சகத்தினையியக்கியுமியங்காக்
கரியதுவாகித்துரியமாய்த்துரியாதீதமாங்கடவுளேபோற்றி. (௨)

நீற்றொளிபழுத்தவெள்ளியங்கிரியோனிலவமிழ்மேனியாய்போற்றி
கூற்றினையுதைத்துச்சிறுவனையளித்தகுரைகழற்றாளினாய்போற்றி
பாற்றினஞ்சுழலுமுவிலைச்சூலப்படையுடைக்கடவுளேபோற்றி
மாற்றலருறையுமுப்புரமெரித்தவாணகைக்குரிசிலேபோற்றி. (௩)

பையரவணையிலறிதுயிலமர்ந்தபண்ணவன்முகிழ்முலைமுயங்கி
யையனையளித்தகடவுளேபோற்றியாதியம்பரமனேபோற்றி
மையுறழ்கூந்தல்வருமுலைத்துவர்வாய்மலைமகள்கொழுநனேபோற்றி
பொய்யிகழ்ந்துணரும்புண்ணியருளத்திற்புகுந்திடும்புனிதனேபோற்றி. (௪)

என்றுநாத்தழும்பவிதயநெக்குருகவிராகவனேத்தலுமிரங்கிப்
பொன்றிகழ்சடையுமிலகுமுக்கண்ணும்புலியதளுடையுமெண்டோளு

மன்றலங்கூந்தற்கவுரியோர்பங்குமாயுயர்மழவிடையுயர்த்த
குன்றவிற்குழகனுங்கவனமைத்தகோதறுமிலிங்கமுடெழுநரான். (ரு)

குரவனைப்பிழைத்தோர்கள்ளுநர்நறவங்குடித்தவர்கொலைத்தொழில்புரிவோர்
மருவிமற்றிவரோடிணங்குநர்முதலாம்பாதகரேனும்வந்தெய்தித்
திரையெறிநன்னீர்ச்சேதுவினாடித்தெளிந்துநீயமைத்தவிவ்விலிங்கம்
பரவிடிற்பாவமுழுவதுந்தீர்ந்தெம்பதமலர்நீழல்வீற்றிருப்பார். (சு)

அங்கண்மாஞாலமழியினுமழியாச்சேதுவினீமகிழ்ந்தமைத்த
பொங்கொளியிலிங்கத்தகன்றிடாதுறைவலென்னவேயோர்வரம்புகன்றருளி
மங்கையோர்பாகன்மறையவீடணனும்வாநரத்தலைவருஞ்சூழச்
சிங்கவேறனையான்புட்பகமிவர்ந்துகிட்கிந்தைமருங்குசென்றடைந்தான். (எ)

அடைதலுமிரவிசிறுவனிறகிழமைபூண்டிடுமயில்புரைநெடுங்கண்
மடநடைத்துவர்வாய்த்தாரையுந்தீஞ்சொன்மாசறுமதிமுகருமையுந்
தொடர்புறுமற்றக்கவிக்குலத்தலைவர்துணைவியர்யாவருஞ்சூழப்
படர்தருவிமானமிவர்ந்தசானகிதன்பதமலரிறைஞ்சியேதடுத்தார். (அ)

தமிழ்முனிமனையாள்வினவில்யான்செய்ததகுதிகளனைத்துமோதுகினு
மிமிழ்கடலடைத்ததுணைதநிடேல்முனிவனங்கையினேற்றருந்தியதா
லமிழ்தினுமினியாயெனவருமுனிவாசாலைகளனைத்தையுங்காட்டிக்
கமழலர்துறைசூழயோத்தியர்வேந்தனபரத்துவன்சாலைகண்ணுற்றான். (கூ)

பழுதறுமறைதேர்பரத்துவாசன்சேர்சாலைகண்ணுறுதலும்பரம
னெழுகொளிவிமானமிழிந்துசென்றெய்தவுயர்தவமுனியெதிர்போந்து
தழுவிநன்கியம்பியாசனமளித்துத்தாமரைக்கண்ணனேமுதலா
யுழையுறுமெவர்க்குநெஞ்சகங்களிப்பவுவப்பொடுநல்விருந்தளித்தான். (க௦)

தெள்ளுநான்மறைதேர்முனியொடுநெறியிற்கவிக்குலந்தின்றுளங்களிப்பக்
கள்ளறாதொழுகுங்கனிகளுங்கிழங்குங்காய்களுமுறுவராற்பெற்று
வள்ளல்மாருதிபோய்ப்பரதனுக்கெனதுவரவுரைக்குதியெனவிடுப்ப
வுள்ளமுமுன்னாயும்பிற்படவனுமன்விரைந்துபோய்ப்பரதனுக்குரைத்தான்.

இராமன் சிவலிங்கப்பிரதிட்டைபண்ணின வத்தியாய முற்றிற்று.

ஆகசெய்யுள் - ககஅ.

இருபத்தைந்தாவது.

இராமன் முடிசூடிய வத்தியாயம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

உரைத்தமாருதியைத்தழுவியுள்ளுவந்துமான்மதச்சேற்றொடுங்குலவி
யரைத்தசாந்தகலத்தப்பியதென்னவகங்குளிர்ந்தன்னையரோடும்
வுரைத்தடந்திணிதோளிளையவனோடும்வாட்டிறற்பரதன்விற்றுணை
யிரைத்தெதிர்கொள்ளப்புட்பகமிவர்ந்துநந்திவயனணுகக்கடந்தான். (க)

தடைந்தகார்வண்ணன்வணங்கியபாதனகங்குளிர்ந்திட வெடுத்தணைத்து
மடங்கலேறனையவிலக்குவனோடுமன்னையர்மலரடிவணங்கி
தடங்கொடாமரையோன்மனத்தினிலளித்தவசிட்டனைததாழ்ந்தினிதிருப்பக்
குடங்கையினெடியகண்ணிமாமியர்தாளவணங்கலுந்தழுவியுள்குழைந்தார்.

செயிரறுநந்திக்கிராமமாங்கெய்திசடிலைத்தழும்பிருந்ததேசட்குமரர்
மயிர்வினைமுடித்துவாசநீராடிவெண்டுகில்மாலைசார்ந்தணியா
வுயிர்நிகர்நண்பினிரவிசேயகுகன்வேலரக்கர்கோனொடுமினிதுறைந்து
மயில்கெடவிமைக்கும்புட்பகமதனையளகையாகோனுழைவிடுத்தான். (௩)

அய்யனுமபரதன்றேர்விடவிளவலவிர்மதிக்கவிகைமேற்கவிப்பப்
பொய்யறுமரக்கனிலகுவனோடுபொலன்கொள்வெண்சாமரையிரட்ட
வெய்யவன்மைந்தன்சத்துருஞ்சயத்தின்மேறசெலவாநரரொவரு
மெய்யல்வாரணத்தின்மனுடரிற்போதமணிமதிலயோததிவந்தடைந்தான்.(௪)

ஏர்குடியிருந்துசுணங்குபூத்தலாந்தவிளமுலைதொண்டையந்துவர்வாய்த்
தாரையைமுதலாம்வாநரமகளிர்மாமியர்குழாநதொடுந்தழுவக்
கார்புறங்கொடுகருங்கருங்குழறசீதைகதிர்மணிச்சிவிகையினேறிப்
பார்புகழ்நதேத்துமயோததியினிராமன்பயிறருமுறையுளிறபுகுந்தான். (௫)

கங்கையைமுதலாநதிப்புனலோரோழ்கலைகடற்கடவுணீரனைத்துஞ்
செங்கவேறன்னவனுமனைமுதலோர்கொணர்தலுஞ்செழுமறைவசிட்டன்
மங்கலமுழவங்கறங்கநீராட்டிமடங்கலந்தவிசினிலிருத்தி
யங்கலுழ்மேனியணங்குடனிராமற்கவிரொளிமணிமுடிபுனைந்தான். (௬)

இராமன் முடி சூடிய வநதியாயமுற்றிற்று.

ஆகசெய்யுள் - கஉ௪.

இருபத்தாறாவது.

அகத்தியன் இராவணன்மரபுரைத்தவத்தியாயம்.

இதுவுமது.

மரகதக்கொண்டல்மணிமுடிசூடிமகிழ்வுடனிருக்குநாடன்னிற்
பரவருந்தவத்தினகத்தியனமுதலாப்பகர்ந்திடுமுனிவரர்யாரும்
விரைவினிலெய்திவாழ்த்ததலுமையன்வியப்புடனபூசனைபுரிய
வுரவுநீர்க்கடலோரோழையும்பருகுந்தமிழ்முனியீங்கிவையுரைப்பான். (க)

இந்திரசித்தையிருபதுபணைத்தோளிராவணன்றனையிகல்விளைக்குங்
கந்தடுபுழைக்கைக்களிறனகும்பகன்னனையனைச்சமர்க்களப்படுத்தி
யுர்துலகேழும்வாழ்நதிடவளித்தாயென்றலுமுரவுவேலிராம
னந்தமில்சீர்த்திக்குறுமுனியோடுமஃங்குழைந்திங்கிவையுரைப்பான். (உ)

வெள்ளியங்கிரியைவேரொடும்பிடுங்குமரக்கனைமுதலவிளம்பாம
லெள்ளருந்திறல்கூரிந்திரசித்தையியம்பியதெவனவன்றிறலுக

தள்ளருஞ்சீர்த்தியக்கர்தந்தோற்றமுழுவதுஞ்சாற்றுதியென்னக்
கொள்ளைவண்டறைதாரிராகவனுரைப்பக்குறுமுனியாங்கவைபுகல்வான் (௩)

குமரிவண்டரற்றுந்தாமரைக்கிழவன்குமரனற்புலத்தியனென்போன்
றிமிரநீண்மாயைகடந்துநற்றவஞ்செயதிரணவிந்துவினுயர்சாலை
யமைவுடனெய்தித்தவஞ்செய்காலத்திலம்பகட்டிளமுலைத்துவாவா
யிமையவர்மாதரளபயிலவெய்தியீர்ம்புனலாட்டயர்ந்தனரால். (௪)

ஆங்கவர்தம்மைப்புலத்தியனோக்கியாயிழைமாதர்யாரேனு
மீங்கினியெய்திற்கருப்பமுற்றிடுகவென்றலுமவர்வெரீஇயகல
வோங்குசீர்த்திரணவிந்துவின்மகளிதுணராதிடாதாங்கெய்திடலுங்
கோங்கிளமுலையாள்கருப்பமுற்றிடத்தன்றந்தைபாற்குறுகியீதுரைத்தாள் ()

உரைத்தலுந்திரணவிந்துவென்றுரைப்போன்புலத்தியற்குவப்பொடுமந்த
விரைக்கருங்குழலையளிப்பமற்றவளுமவிச்சிரவாவினையீன்றாள்
பரத்துவன்மகளையாங்கவன்வேட்டுவைச்சிரவணன்றனைப்பயந்தான
வரையபருமறைதேர்வைச்சிரவணன்மூவாயிரவருடநோற்றனனால். (௬)

குறுந்துளிதூற்றுங்கங்கைதாழ்சடையோன்கோதறுமுனிவநோக்கிச
செறிந்திடுமியக்கர்வேந்தனுக்கென்னச்செப்பினன்புகழுமவ்வேந்தற்குப
பறந்துசெல்விமானமளித்தனனீனகப்பரிவொடுந்தந்தையைவணங்கி
யுறைந்திடுகவொன்றளிக்கெனவிலங்கைமாநகருறைதியென்றுரைத்தான். ௭

தொன்றதொட்டரக்கர்வாழ்வுறுமிலங்கைத்தொன்னகரணிகடக்குபேர
னுறைதருஞ்செல்வத்தமர்ந்தனனினைவுவப்பொடுவரிசிலையிராம
னன்றறிமுனிவபுலத்தியனளிக்குமுன்னமுநானமகிழெயிற்று
வென்றிசேரரக்கருளர்கொலோவவர்தங்காதையைவிளம்புகவென்றான். (௮)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

முன்னங்கமலப்பொகுட்டின்முதல்வன்சிலரைப்படைத்தாங்
கன்னோர்தமமிற்சிலரையியக்கரெனப்பேராக்கிப
பின்னுஞ்சிலரையரக்கரெனப்பேரளித்தானவருள்ளா
முன்னுங்கேதியோடும்பிரசேதிவலியனானான். (௯)

ஆலக்கருஞ்சேறுமிழுமலங்குசுடர்வேற்கேதி
காலனொடும்பிறந்தகதிர்மென்கொங்கைப்பயையைச்
சாலவதுவையாற்றிமின்னுகேசனறன்னை
வேலையிடத்திற்பிறந்தவிடமாமெனவுயிர்த்தான். (௧௦)

[illegible]ருவார்க்கிடியேறென்னவயவாண்மினனுக்கேசன்
[illegible]ரையாள்சந்திமகளாஞ்சாலகடங்கர்கடையை
முருகார்மாலைசூட்டியுயிர்போன்முயங்குநாளிற்
கருவுட்கொண்டவ்வரக்கிகவின்மந்தரத்திற்கலந்தாள். (௧௧)

மைதோய்பைம்பொற்குடுமிவரையின்வயிறுவாய்த்து
வெய்யகாமங்கனற்றமின்னுக்கேசற்றொடர்ந்து
னைதயலேகலோடுந்தனியேகிடந்தச்சிறுவன்
பையுளுற்றுக்கலுழ்தல்பரமன்கண்ணிற்கண்டான். (கஉ)

ஏயசிறுவன்றன்னையெம்மானருணோக்கித்
தாயினளவினின்றேவளர்கவென்னச்சாற்றி
யாயவரக்கன்றனக்கோரம்பொன்னகரமளிப்ப
வேய்மென்றடந்தோட்கவுரிவிழைவினிதனைப்புரிவாள். (கங)

அரக்கர்மகளிர்கருப்பமுடைந்தஞான்றேபெறவும்
விருப்பினீன்றவன்றேமக்கள்விரைவினவளர்ந்து
பரித்ததாய்பொன்றிடவும்பவளச்செவ்வாய்க்கவுரி
யுரைத்தற்கரியவரமாங்குதவியிறையோடகன்றாள். (கச)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

கச்சமார்யானையின்றோல்போர்த்தாடுங்கடவுளருளினிதிற்பெற்று
பச்சிரத்தங்கொப்புளிக்கும்பரிதிவேற்சுகேசனெனுமரக்கனெந்தை
யிச்சையுடனினிதளித்தமாநகரில்வாழுநாளியக்கர்கோனு
நச்சிலைவேற்கிராமணிதன்மகளைச்சுகேசனுக்குநல்கினனே. (கரு)

ஈற்றுளைந்தசிறுதும்பிமேன்மேற்போய்ப்பறந்திடுமீர்ஞ்சிறையினூற்ற
காற்றினலமருமருங்குற்றேவவதிசுகேசனொடுங்கலந்துவெய்ய
மாற்றெறியுமாலியவான்சுமாலியொடுமாலிதனைவயிறுவாய்த்தாள்
கூற்றும்வெருவருந்திறலோர்கொடுந்தழலினின்றுதவங்கோலினரால். (கசு)

மற்றவர்தந்தவநோக்கிமறைக்கிழவன்மகிழ்ந்தனனீர்வரங்கேட்கென்னப்
பற்றலரைவென்றுலகமெமதுகுடைக்கீழ்வைகப்பாலியென்னப்
பொற்றசெழுங்கமலத்தோனவையளித்துநீங்குதலும்புவனமயாவுங்
கொற்றமுறவடிப்படுத்திவிச்சுவகன்மாவொடிவைகூறலுற்றார். (கஎ)

விண்ணகர்போலெழிறிகழும்விழுத்தகுநன்னகரமொன்றீங்கியற்றுகென்னக்
கண்வழுக்குகதிரொளிகால்திரிகூடமால்வரையினுடலக்கண்ண
ணண்ணவொருநகரமுனமமைத்தனனங்கமர்ந்தொனநவிறலோடும்
பண்ணியவாமபரித்தடந்தேரரக்கரொருமூவருமப்பதிபுக்காரால். (கஅ)

கந்திருவர்குலத்துதித்தவயனெடுங்கணருமதையாங்கன்னிவேற்கட்
சுந்தரியின்னமுதமொழிக்கேதுமதிவசுதையெனுஞ்சுடர்வேலுண்கட்
பைந்தொடிமாதரையீன்றாளாங்கவரோர்மூவரையும்பரிதிவேற்கை
மைந்துடைமாலியவானுஞ்சுமாலியுமாலியுமுறையின்வதுவைசெய்தார் (ககூ)

மாலியவான்றோள்புணர்ந்துசுந்தரிவச்சிரமுட்டியெச்சகோபன்
காலனிகருண்மதத்தன்விருபாக்கன்றுயில்வோனைக்கடிவோன்மத்த
னுலகிகர்துன்முகனோடனலையெனுமணங்கினையும்வயிறுவாய்த்தாள்
சீலமுறுகேதுமதிசுமாலியைத்தோய்ந்தீன்றவரைத்தெரிக்கலுற்றாம். (உ0)

விகடனுயர்பிரகத்தன்விறற்காலகார்முகன்வெம்பாசகன்ன
னிகல்செயகம்பனனண்டன்சங்கிருதிபுகைக்கண்ணனெழிற்பிரசங்க
னிகரில்சுபாரிசனெடுங்கைகசிரும்பீநசியயில்வேனெடுங்கட்செவ்வாய்ப்
பகாமுதமுறழுமொழிப்பாவைப்புட்பொற்கலையென்னப்பகர்வரன்றே. (உக)

மாலியெனவுலகேத்தும்வல்லரக்கன்வசுதைவனமுலையிற்றோய்ந்து
சீலமிகுமனிலனெடுமனலனாகசம்பாதியென்னுநதிதில்
கோலமணிமுடியரக்கர்நால்வரையுமினிதுயிர்த்தான்குறுகார்ச்செற்று
ஞாலமுழுவதும்வெருவமாலியவான்கொடுங்கோன்மைநடத்துநாளில்.(உஉ)

விண்ணவர்வெவ்வரக்கர்புரிகொடுந்தொழிலுக்காற்றாதுகயிலைமேவித்
தண்ணிலவுகதிர்க்கற்றையமுதிறைக்குந்தாழ்சடையோன்சரணம்போற்றிக்
கண்ணறையராமரக்கர்மூவரையுங்கடிந்தெமக்குக்களைகணாகி
யண்ணலெமக்களித்தியெனவிரந்திடலுங்கறைமிடற்றெம்மடிகள்கூறும். ()

தூயசாறுமலர்தூவிவழிபாடுபுரிந்தருளுஞ்சுகேசன்மைந்த
ராயிரம்வெம்பிழைசெயினுமாங்கவரைக்கோறலெமக்கடுப்பதன்றாற்
றீயரைக்கொல்கெனமாலைப்பணிதநீர்விரைந்தாங்குச்செல்வீரென்னப்
போயமரர்குறையுரைப்பநெடியோனுமதற்கியைந்தபோமினென்றான (உச)

அவ்வுரைகேட்டயினெடுங்கட்புலோமசைவெம்முலையாளையணைக்கும்பாகன்
கௌவையொழிந்தமரர்தொழவிண்ணடுபுகவிழைந்தகருமம்யாவும்
வெவ்வினைத்தூதுவருரைப்பமாலிமுதலரக்கருளம்வெருண்டுகேட்டுப்
பௌவநெடுங்கடற்றானைபுடைசூழப்பண்ணவரூரவளைந்துகொண்டார். (உரு)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இருந்தலர்புகுந்தமாற்றஞ்செவித்தலைவெதும்பக்கேட்டுக்
கருங்கடற்செவப்பவந்தகவுத்தவமணிநதமார்பன
முருங்கெரிகவிழ்க்குஞ்செங்கண்மூரிவெங்கலுழனூர்ந்து
வருந்தலீரமரரொன்னவாளமரழுவத்துற்றான. (உசா)

தோற்றமுமுடிவுமில்லான்றாண்டுபுட்சிறகர்வீசுங்
காற்றினாலரக்கர்சேனைகவிழதலுமாலிவெம்போ
ரேற்றுவெங்கலுழனஞ்சியிரியவெங்கதையாலெற்றக
கூற்றுறழ்திகிரியேவியவன்றலைதுறைத்திட்டானே. (உஎ)

மாலிவெங்களத்தின்வீழமாலியவான்வந்தெய்தி
வேலினாலெறியவையன்விலக்கிமற்றதனைப்பற்றி
யாலமேயனையான்மெய்யினெறிதலுமயர்ந்துவீழ்ந்து
சூலமொன்றெடுத்துப்பின்னுந்தோன்றன்மேல்விடுத்துநக்கான். (உஅ)

நக்கவாளரக்கன்பின்னுங்கலுழன்மேனடந்துசெல்லச்
செக்கர்வானனையவெய்யசிறைவிசைக்காற்றின்மொத்துண்
டொக்கலோடுடைந்துமிக்கவுலவைசேர்சருகிற்சிந்தி
யழுக்கடலிலங்கைநீங்கிப்பாதலமருங்குபுக்கான். (உகூ)

பாதலத்துறையுநாளிற்பாசிழைப்பருமவல்குற்
காதளங்கொளிரும்வேற்கட்கைகசிவதுலையாற்றத்
தீதறுவானைத்தேடித்திரிவுழியியக்கர்வேந்தைப்
போதரக்கண்டுநோனான்பாதலம்புகுந்துசொல்வான். (௩௦)

நச்சயில்பொருவுமொண்கணங்கைக்கைகசிநீகேட்டி
விச்சிரவாவைமேவிவிறன்மகப்பெறுதியென்னப்
பச்சிளங்குரும்பைமாறும்பணைமுலைக்கழைகொல்மென்றோட்
செச்சைதாழ்கூந்தல்போந்துதெய்வமாமுனியைக்கண்டாள். (௩௧)

நாணொடுமீண்டுபுக்கநங்கைநீயாரையென்ன
வேணவாவோடுநின்றனருளினால்விறலின்மிக்க
மாணுடைமைந்தர்தம்மைவயிறுவாய்த்திடுவான்போந்தேன்
பூணருந்தவத்தோயென்னப்புணர்ந்திலையுரைக்கலுற்றான். (௩௨)

பொன்புரைதிதலைபூத்தபொம்மல்வெம்முலையாய்கேட்டி
நண்பகலணைந்தவாறருணிலமவெருவச்செய்யும்
வன்புடைமனதருவெய்யமைந்தரைப்பெறுதியென்ன
வன்பொடுவணங்கிநின்போலருமகவேண்டுமென்றாள். (௩௩)

கன்னலுமமுதுங்கைப்பசுகனிந்தமென்குதலைகேட்டி
பின்னர்நீயுயிர்க்குமைந்தன்பெட்பொடுமென்போலீண்டு
மன்னுமற்றுன்பாறரேன்றிவரம்பறுமாயுளெய்தி
யுன்னருங்குணத்தனாகியுலப்பினாள்வாழ்வனென்றான். (௩௪)

இருபதுகரமுஞ்சென்னியீரைந்துந்தாங்குகின்ற
இருவிலிதன்னைமுன்னஞ்சிறப்பொடுவயிறுவாய்த்துக்
கருவரையனையகும்பகன்னனையீன்றுபின்னு
முருவவோடரிக்கட்சூர்ப்பநகையையுமுயிர்த்தாளன்றே. (௩௫)

வீடணன்றன்னைப்பின்னும்வியப்பொடுமினிதினீன்றாங்
கோடரிக்கண்ணாளந்தமைந்தரையுவந்துநோக்கிச்
சேடமிறிருவின்மிக்கவியக்கர்கோன்செல்வமெய்த
நீடிருந்தவங்களாற்றிநின்மின்களென்னப்போனார் (௩௬)

ஐந்தழனடுவினின்றோராயிரம்பருவஞ்சென்றான்
மைந்துடைச்சென்னிபத்திலொன்றறுத்தழலின்மாட்டி
வெந்திறலரக்கன்பத்தாஞ்சென்னியுமவெட்டுமெல்லை
வந்துசெங்கமலப்புத்தேள்வரங்கொளென்றுரைத்தலோடும். (௩௭)

விஞ்சையரவுணர்சித்தருரகர்விண்ணவர்கடம்மாற்
றுஞ்சுதலின்றியெல்லாவுலகமுந்துனைவில்வெல்ல
வெஞ்சமத்தற்றசென்னிதோளவைமீளவெய்தக்
கஞ்சநாண்மலரோய்நல்கென்றிரத்தலுங்கடவுளீந்தான். (௩௮)

வீடணன்முன்னரெய்திவேண்டுவகேட்டியென்ன
நாடொறுந்தருமசிந்தையெய்திநானுலவாதாவி
பீடுறநல்கென்றேதப்பிதாமகனளிப்பவிண்ணோர்
மாடுறுகும்பகன்னற்குயர்வரம்வழங்கலென்றார். (௩௯)

என்னலுமரக்கனாவில்வாணியையேவியெந்தை
மின்னுவேற்கும்பகன்னவரமொன்றுவேண்டுகென்ன
மன்னுநித்திரைதாவென்றுமருண்டவன்கேட்பநல்கிப்
பொன்னவிர்கமலப்புத்தேள்தனதுலகுதனிற்புக்கான். (௪0)

ஊழ்வினைப்பயத்தான்மாந்தாக்கொழியநல்வரங்கள்பெற்றுப்
பாழியம்புயத்தார்மற்றோடடர்வனத்தெய்துமேல்வைச்
சூழ்சுடர்ப்பரிதியொள்வாட்சுமாலிதன்மைந்தரோடும்
வாழியென்றேத்தியன்னோர்த்தழீஇயிவைவழங்கலுற்றான். (௪௧)

கொடிமதிலிலங்கைமூதூர்கொள்கெனமறுத்தல்கேட்டாங்
குடல்சினவுருமேறன்னபிரகத்தனுருத்துநோக்கி
யடல்கெழுமவுணர்தம்மைத்துணையொன்றெண்ணுதன்றோர்
மிடைதருதுறக்கம்வென்றோர்விரகினிற்கொண்டிலாரோ. (௪௨)

ஆதலாற்கோடியென்னுமருட்பிரகத்தன்றன்னை
மேதகுதபோன்பாற்போயினிதினில்வேண்டுகென்ன
வீதுசென்றியம்பலோடுமியக்கர்கோன்றந்தைபாற்போய்த்
தூதினுற்றசக்கிரீபன்சொன்னவையாவுஞ்சொன்னான். (௪௩)

அளகைமாநகரினீபோயமர்தியவ்விலங்கைதன்னைத்
தலையவிழலங்கற்றிண்டோட்டசக்கிரீபற்குநல்கென்
றுளமகிழ்தந்தைகூறவுவப்பொடுமளித்துப்போனான்
வளமிகுமிலங்கைதனனின்முடிகவித்தரக்கன்வாழ்ந்தான். (௪௪)

பின்னுமாக்காலகேயன்விழைவொடும்வதுவையாற்றத்
தன்னுடைத்தங்கையாஞ்சூர்ப்பநகையைத்தயாவினல்கி
மன்னியகாணின்வேட்டமாடலுமயனுடெய்துங்
கன்னலங்குதலைச்செவ்வாய்க்கனியனையக்கண்டுசொல்வான். (௪௫)

ஈங்குநீயாரையென்னமயனென்போனேமையென்னும்
பூங்குழலணங்கைப்புல்லிப்பொருவில்துந்துபிமாயாவி
யாங்குலமைந்தரோடுமம்பலைத்தகன்றவாட்கட்
கோங்கிளமுலைசேரிந்தக்கோதையையினிதினீன்றேன். (௪௬)

மேயநீயாரையென்னவிச்சிரவாமுன்னின்ற
நேயநன்மைந்தனென்றுநிகழ்த்தலுமயனன்போடு
தீயெரிசான்றாய்மந்தோதரிதனைக்களிப்பினல்கிப்
பாய்கதிர்ப்பரிதிவேலும்பரிவுடனளித்துப்போனான். (௪௭)

முருக்கிதழ்முத்தமூரன்முகிழ்முலைககன்னியோடு
மரக்கர்கோனிலங்கையெய்தியன்புடனிருக்குநாளின்
விரைச்செழுந்தெரியன்மார்பன்விரோசனனினிதினீன்ற
திருக்கொள்வச்சிரசுவாலைதனைக்கும்பகன்னன்சேர்ந்தான். (௪௮)

ஆடல்வேற்சயூடனன்பினளித்தருள்சரமைதன்னை
வீடணன்விதியின்வேட்டுமேதகவொழுகுநாளி
லேடவிழ்கூந்தன்மந்தோதரியிகலிலங்கைவேந்தன்
பீடுறுமகிழ்ச்சியெய்தவிராவணிதன்னைப்பெற்றாள். (௪௯)

கனைகுரல்முகிலினார்த்துக்கலுழ்தலான்மேகநாத
னெனுமுயர்நாமம்பெற்றாங்கெரியெனவளருநாளில்
வனைகழலரக்கர்கோனைமன்பதைவருத்தலென்றாந்
துனைவினிலளகைவேந்தன்றூதனுரைத்தல்செய்தான். (௫௦)

தூதுவனரக்கன்முன்போயுன்னுடைத்துணைவன்வெய்ய
மாதவம்புரிந்துதிங்கட்கண்ணிசேர்வரதனோடு
மேதமில்நண்புபூண்டானின்னையுமுலகுக்கெல்லாந்
தீதிழைத்தருளலென்றுச்செப்பினனென்னலோடும். (௫௧)

வெஞ்சமமென்னில்வெய்யவிரிதழற்பிழம்புகக்கி
நஞ்சுகொப்புளிக்கும்வாய்வாட்டடறுரீஇநாமவேலான்
றுஞ்சவில்விடையாரோடுந்தோழமைகொண்டானென்னி
லஞ்சுவன்கொல்லோவென்றவன்றலைதுணித்துவீழ்த்தான். (௫௨)

வீழ்த்தவனுடலைவெய்யவரக்கர்க்குவிருந்துநல்கிக்
காழ்த்தவெம்மனத்துப்பேழ்வாய்க்கதழ்சினத்தரக்கர்கோமான்
சூழ்த்ததன்சேனையோடுமமைச்சொடுந்துணைவின்விண்ணோர்
வாழ்த்திடுமளகைமூதூர்மருங்குறவளைந்துகொண்டான். (௫௩)

கொடிமதில்வாயிலோரைக்கொன்றுவாளரக்கர்கோமான்
முடிதகர்ந்தொதுங்கவெய்யமாணிபத்திரனைமோதி
யுடல்சினக்குபேரனாவியுலந்திடவடித்துவீழ்த்திச்
சுடர்செய்புட்பகவிமானந்துணைவினிற்கவர்ந்துபோனான். (௫௪)

இருநிதியியக்கர்வேந்தன்றுயரொழிந்திமைப்பினெய்தி
விரிகதிரிமைக்கும்பைம்பொனளகையின்மேவவெய்யோன்
பொருவருங்கிரியினீங்கிச்சரவணம்புகுதுமேல்வைத்
தெருளொடும்விமானநிற்பவரக்கர்கோன்சிந்தைசெய்தான். (௫௫)

இத்தலையெய்தலெந்தையிறைவியோடமர்ந்தானென்ன
மைத்தகுமிடற்றாநந்திவிலக்கவாண்முகத்தைநோக்கிக்
கைத்தலம்புடைத்துவெய்யோனகுதலுங்கனன்றுநந்தி
யித்தலைக்குரங்காலுன்சீர்தொலைகவென்றுருத்துரைத்தான். (௫௬)

வைதலுந்தசக்கிரீபன்வான்றொடர்கயிலைவெற்பை
வெய்தினிலெடுப்பவெந்தை விரற்றலைநுனியாலூன்றப்
பையுளுற்றழுதுமாழ்கிப்பரமனைப்பழிச்சிவெய்யோ
னைதுணர்சாமகானமறியொடுபாடலுற்றான். (௫௭)

ஆயிரம்பருவமிவ்வாறழுதலாலரக்கர்கோனுக்
கேய்வுறவியம்புநாமமிராவணனென்றுகூறி
மாய்வறுவரமுநல்கிவிடுப்பவாளரக்கன்போந்து
மீயுயரிமையவெற்பின்மேவியோரணங்கைக்கண்டான். (௫௮)

கண்டுநீயாரையென்னவந்தணன்களிப்பினோடு
மண்டரோத்தெடுப்பவீன்றவருட்குசத்துவசனென்போ
னெண்டகுவேதமோதும்வாக்கிடைப்பிறந்தேனென்னை
தண்டலின்மறையோன்வேதவதியெனச்சாற்றினாள். (௫௯)

சொல்லருந்தந்தைதன்னைத்தோன்றியோரரக்கன்கொன்றான்
முல்லைசால்கற்பினன்னைமுனியொடுமுடிந்தாள்யானுங்
கல்லெனீர்வேலைசாப்பட்கண்டுயினெடியோன்றனைப்
புல்லுவான்றவஞ்செய்கின்றேன்புலவுவேலரக்கவென்றாள். (௬௦)

என்றலும்வலிதின்வெய்யோன்பற்றுமீர்ங்குழலைநங்கை
தனதுணைக்கையாலரிக்கிக்கிளையொடுஞ்சாம்பராகிப்
பொன்றிடவுன்னையெய்தும்பிறப்பினிற்புரிவேனென்னக்
கன்றியவுளத்தினோடுங்கனலின்வீழ்ந்தாவிமாய்ந்தாள். (௬௧)

கோற்றொடியிறந்தபின்னர்க்கொல்புலியனையவீரன்
போற்றருமருத்துவப்பேர்ப்புரவலனசாலைநண்ண
வீற்றுவீற்றாகவிண்ணோர்பறவையின்வெருவிப்போக
வேற்றமர்க்கெழுதியென்னமருத்துவனெழுந்துவந்தான். (௬௨)

வெஞ்சினமொழிதியென்னமுனிவரர்விலக்கமன்ன
னெஞ்சலில்சாலையெய்தவிராவணனிகழ்ந்துபோனா
னஞ்சவானவர்கண்மீட்டுமுயர்மகமுடித்துக்காக்கை
யஞ்சிறையன்னமஞ்ஞைக்கருள்வரமளித்துப்போனார். (௬௩)

காதியைமயலைவெம்போர்கருதுதுற்சந்தன்றன்னைத்
தீதுறவரக்கன்வென்றுதிசைகடற்றானைசூழத்
தூதுணம்புறவுவைகுந்துகிற்கொடிமாடத்துச்சி
யாதவன்றடந்தேர்தேய்க்குமயோத்திமாநகரஞ்சேர்ந்தான். (௬௪)

தரவுகொச்சகக்கலிப்பா.

அனரண்ணியன்போர்வேண்டியவரக்கன்முனமெய்திச்
சினவெங்கணைபொழியத்தனிதேர்நின்றுமிழிந்தே
பனையொத்திடுகையானனியடிப்பப்பதைபதையா
வினைவற்றயர்தலும்வெய்யவனிருபன்றனைநக்கான். (௬௫)

மன்னர்க்கியல்படுபோரிடைமடிதல்வயங்கோட
லென்னத்தனியெண்ணுநெஞ்சையெள்ளிச்சிரித்தமையாற்
றுன்றூற்றவெண்மரபின்றொருதோன்றல்நனிசோன்றி
யுன்னைச்செகுத்திடுவாரெனவைதாருயிரொழித்தான். (௬௬)

ஆற்றலொடுங்கொடியோன்பிலமடையப்புகுமெல்லைத்
தோற்றுமிசைபயில்மாமுனியரக்கனைமுனைந்தோன்றிச்
சாற்றும்பிலவழியன்றிநுதழல்கால்வடிவேலோய்
கூற்றின்னகர்க்கேநம்வழியீதென்றுகுறித்தான். (௬௭)

என்றூமுனிகூற்றோடுநீவ்வுரைகூறினனேகப்
பைந்நாகரோடமர்செய்குதல்பணிவெங்கடல்நடைதல்
பின்றுகுமென்றடல்கூர்தருபிறைவாளெயிறரக்கன்
றெனணந்திசைசென்றூர்நழனமடோடமர்செயநாள். (௬௮)

காற்றின்கணைவெய்யோன்கணைகனலின்கணைகொலனுங்
கூற்றின்கணைமுதலாகியகணையைச்சிலைகோலி
மாற்றிச்சமர்புரிவேலையிலஞ்சித்திறன்மறலி
யேற்றம்பிறிதில்லாதுயர்யமதண்டமெடுத்தான். (௬௯)

அக்காலையின்மலரோனவணெய்தாவடலரக்கன்
மிக்கானவரத்தான்றுவிடலென்றுவிலக்க
மைக்கார்நிறக்கூற்றும்வெருவோடும்மறைந்தோடப்
புக்கானிலங்கையின்மீட்டுமெப்புலிப்போததனவரக்கன். (௭௦)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

துணிகதிர்நெடுவேலிராவணன்பிலத்திற்றுன்னிவாருநாகரோர்நூறந்து
மணிமகினகரில்வைகிடுநிவாதகவசரைவாளமரேற்ப
வணிகிளர்கமலத்தயனவணெய்தியாங்கவற்கிராவணனோடு
மிணையறுநட்பச்செய்தனுமவனுங்கொண்டொழிதிங்கனூறிருந்தான். (௭௧)

யிகாவினன்னகரநீங்குழிக்காலகேயரில்வித்துயுச்சிருவன்
செருவினிலேற்பவவனுயர்தொலைத்துத்தேனுவைககண்டிபோற்றி
வருணனார்புதல்வுமைந்தனைவென்றுவணப்புடைமாதனைக்கவர்ந்து
பொருவருமிலங்கைபுகுந்துசூர்ப்பநகைதனைக்கானார்புகுந்தினனால். (௭௨)

அருவரைத்தடந்தோளிராவணியென்போளந்தணனருளினுலடர்க்குஞ்
செருவினிலெவர்க்குந்தெரியுருதொளித்துச்செருச்செயுமாயையுமொன்றூர்
வெருவரவெங்குந்திரிதருதேருநிகும்பலைவேள்வியிறபெற்று
மருவினனவனோடிலங்கையிறபுகுதவீடணன்வணங்கியாங்குறைப்பான் (௭௩)

பொருவரலின்றிமதுவெனவுரைக்கும்வெந்திறலவுணனீண்டெய்திப்
பொருவருங்கும்பீநசியினைக்கவர்ந்தானென்றலுமிராவணன்புழுங்கி
யுரைபெறுதானைகடலெனச்சூழக்குரோணிநாலாயிரத்தோடு
மருவலனங்கும்பீநசிபிரந்துறைப்பமதுவொடுமரக்கர்கோனட்டான். (௭௪

பாழியந்தடந்தோண்மதுவொடுஞ்சூழ்ந்தபலகிளைப்பரப்பொடுமரக்கன்
மாழைமென்னோக்கிப்புலோமசைகணவன்மாநகர்தனதடிப்படுத்து
வீழியங்கனிவாயியக்கியரமரர்கின்னரர்மிதுனம்வீற்றிருக்குஞ்
சூழ்சுடர்ப்பரிதிபோக்கறநிவந்தகயிலையிற்றலைவின்வந்தடைந்தான். (௭௫)

கள்ளூற்றிருக்குநறுமலர்ப்பைங்காவினரக்கனிறுத்திடலும்
பிள்ளைத்தென்றனறவுயிர்த்துப்பிரிந்தாருயிர்மேற்றணிநடப்ப
வெள்ளிவீழின்கதிர்பரப்பிவிழைவோர்ப்பிரிந்தோராருயிரை
யள்ளியுண்ணுந்திங்களொடுமடைந்ததந்தியிருண்மாலை. (௭௬)

குணக்கும்விசும்புமுகம்விளர்ப்பக்குளிர்க்கூர்திங்கட்கொழுந்தன்பர்த
தணக்கும்மகளிர்மார்பணைந்துங்கவர்ந்துதாளவட்டாங்கி
யணைக்குமுலைமேற்றீயிறைக்குமாலைப்பொழுதிலடலரக்கன்
வணக்குமருங்குல்மடவார்தங்காமமெண்ணிவருந்துற்றான். (௭௭)

குடபாற்பிறந்தகுழந்தைமதிக்கொழுந்திற்பொழிபுநிலாக்கற்றை
வடவாமுகம்போலுடலவெதுப்பமமரோடுமடலரக்கன்
கடல்வாய்த்தோன்றியமுதுயிர்க்குங்கதிர்வெண்முத்தசவடம்பொரியா
வுடலுஞ்சிலைவேள்வன்மையினைவியந்துவருந்தியுறைபோழ்தின். (௭௮)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

விளிம்புறத்தூக்குசெஞ்சுடர்க்கற்றைமேகலைமருவுடனிமைப்ப
விளம்பிறைவடந்தாழ்ந்தேர்குடியிருந்தவிளமுலைவெற்பிணைத்தாங்கித்
தளர்ந்திடைமிகுநுசுப்பெனவிரங்கித்தவளவாய்க்கிண்கிணிபுலம்ப
வளர்ந்தறிவரியகருங்குழன்மீதிலஞ்சிறைத்தும்பியாட்டயர. (௭௯)

கண்கவர்வனப்பிற்கதிர்சுரந்தொழுகக்கடல்வயிற்றரித்தவாணமுத்த
வெண்கதிர்முறுவலிளைஞராருயிரைவேரோடுமகழ்ந்தொளிபரப்ப
விண்குடிவாங்கமேக்குயர்ந்தோங்குவெம்முலையுலகெலாங்கவரப்
பண்கனிந்தொழுகுமென்மொழிக்குதலைபாகொடுந்தோழமைகொள்ள. (௮௦)

காவியுங்குமிழுங்கடந்தெறிதடங்கண்கடியகூற்றினைமுதலமா
ராவியுண்டுமிழ்ந்துசெவ்வரியொழுகியயிலொடுந்தோழமைகொள்ளா
வேவினைமுனிந்துகொலைத்தொழில்பழுத்துத்தவக்குறும்பொன்றறவெறிந்து
மாவகிர்மருட்டிமதர்வைகொப்புளித்துவள்ளைவார்குழைமிசைநடப்ப. (௮௧)

கலையெறிகடல்வாய்க்குளித்தமுத்திமைக்குங்காஞ்சிசூழ்கலைவளரல்கு
லுருவமேகலையினிவப்புறக்கைபோயுயர்திசைமுழுவதுங்கவர்த
திருவநீள்புருவக்கொடிமதன்பிடித்தசிலையெனவழகுகண்படுப்ப
விரியிருள்பருகுஞ்சேட்டிளமதியின்விழுத்தகுவாணுதலிலங்க. (௮௨)

கலிவிருத்தம்.

வன்னமுலைமாதரடியீடுதனிவாழ்த்தப்
பொன்னசலமொத்துவளர்பூண்முலைசுமந்தே
மின்னிடைவருந்துமெனமேகலையிரங்க
வன்னமெனுமென்னடையரம்பையவண்வந்தாள். (௮௩)

வந்திடுமரம்பையையிராவணன்மகிழ்ந்து
பைந்தளிர்மருட்டியபதத்துணைபிடித்துச்
செந்துவரிதழக்கனியிருத்தகவளித்தே
யுந்திடவெனைத்தனிபுரக்கெனவுரைத்தான். (௪)

என்னலுநின்முன்னவனிதிக்கிழவனின்ற
மன்னனளகாபரனெனைத்தனிவரித்தா
னென்னுடன்மணப்பதுதகாதெனவுரைத்தும்
அன்னல்புளித்தென்னநனிகட்டுரைபுகன்றான். (௫)

சொல்லென்கிளிக்கிளவிகேட்டருளில்தீயோ
னல்குல்பகர்வோர்க்குமுறையோவெனவணைந்தே
வல்லையினடர்ந்துவலிதிறநனிபிடித்துப்
புல்லியமுதன்னமயிலைபோகநனிதுய்த்தான். (௬)

ஆங்கவன்விடுத்திடலுமாரமுதமன்ன
கோங்கமுலைமாதுமளகாபரனைநண்ணி
யீங்கிதுவிளம்பவவனின்னுமிதுபோலுந்
தீங்குசெயின்வன்றலைதெறிக்கவெனவைதான். (௭)

ஐயகமலப்பொதியவிழ்ப்பவரிமாலேறோ
வெய்யவனுதித்திடலும்வெந்திறலரக்கன்
மொய்யமருடற்றுபலதானையுடன்மொய்ப
மையிலமராபதியில்வந்தனன்வளைந்தான். (௮)

இந்திரன்முகுந்தருளையெய்தியிவைகூற
வொதிறலரக்கனுயிர்விட்டிடுகாலம்
வந்திடுவளவிறல்தகாதெனமறுப்ப
வந்திலுயர்வானவருஞ்சமரிறுத்தார். (௯)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

விண்ணவர்படலந்தானைவெருக்கொடுமுறியவெற்றி
யண்ணலருந்தமாலிவெம்போர்புரிந்துமழன்றுபீறி
நண்ணியவசுக்கடம்பினவையில்சாவித்திரியபேர்ப
பண்ணவனவன்றனுயிர்கைதயிறுற்படுத்திட்டானே. (௧௦)

அள்ளிலைவயிரப்பைம்பூணிராவணனழன்றுசீறிக்
கொள்ளைவெம்பகழிவாங்கிமலையினைக்குரீஇமொய்ப்பதென்ன
வெள்ளைமால்யானைமேலும்விண்ணவர்க்கிறைவன்மேலு
மெள்ளிடவிடமின்றென்னச்சிலைநுழைத்தெய்திட்டானே. (௧௧)

இந்திரன்வருணன்காற்றுக்கிறைவன்வெங்கூற்றமங்கி
நந்தலில்லளகைவேந்தனுமவேணிருதிதண்ணன்
சந்திரமவுலியன்றோர்மருத்துவருந்தலைவர்தாக்கி
வெந்திறலரக்கர்சேனைவளைந்துவெம்புசல்செய்தார். (௧௨)

தாப்புலியனையசீற்றச்சயந்தனைமேகநாதன்.
யாப்புறுத்திடுதற்செய்தவிசற்பவுலோமன்போந்து
காப்பனென்றெடுத்துப்போகிக்கடலிடையொளிப்பவெய்யோன்
பாப்பணைப்பள்ளியான்றன்முன்னவன்பால்வந்துற்றான். (௯௩)

வச்சிரப்படையால்வெய்யவரக்கரைமறியமாட்டிக்
கச்சையங்களிற்றிற்றேன்றுங்கதிர்முடியமரர்கோனை
நச்சரவணியும்புத்தேள்நல்கியமாயைதன்றா
லிச்சையின்மேகநாதன்யாப்புறுத்திதனைச்செய்வான். (௯௪)

இந்திரன்றன்னைவவ்வியிராவணியிகலினேற்ற
வந்தமிலமரர்யாருமமர்தொலைந்தோடமோதித்
தந்தைமுன்னுய்ப்பவெய்யோன்றனையங்கடலினோடு
மெந்திரப்பொறிசேரிஞ்சியிலங்கையில்வர்துசார்ந்தான். (௯௫)

இன்னவையமரர்கூறவீர்ங்கமலத்தின்மேய
முன்னவனிலங்கையெய்திமுகமனன்கியம்பிவிண்ணோர்
மன்னனைவிடுதியென்னநிகும்பலைமகத்திற்றேன்றும
பொன்னெடுந்தேரினெய்திற்பொன்றிடாவரநல்கென்றான் (௯௬)

அவ்வரமலரோனல்கியருளினிந்திரனைமீட்டுச்
செவ்விசேரரக்கனைமிந்திரசித்தென்றோதி
யெவ்வெலாத்திசையும்போற்றுமிந்திரனயர்ச்சிரா
மௌவலங்கரியகூந்தல்வாணிதனகேள்வன்சொல்வான். (௯௭)

ஆள்வழக்கறுக்கும்வேற்கணகலிகைமுலையிற்றோய்ந்த
நீளிரும்பாவந்தன்றானெடுந்துயருழநதாயீது
வேளவியொன்றியற்றிற்றீருமென்றலும்வேள்வியாற்றி
வாளொளித்துறக்கம்புககான்மலரயன்மறைந்துபோனான். (௯௮)

என்றருமுனிவன்கூறவிராமனுங்கியம்பலுற்றான்
குன்றினையெடுத்ததிண்டோளிராவணன்குறுகும்போரில்
வென்றதையன்றித்தோற்றதுண்டெனில்விளம்புகென்னத்
தென்றமிழ்கோத்தசெஞ்சொலமுனிவரன்செப்பலுற்றான். (௯௯)

பொன்வரைவிழுதுவிட்டாலன்னதோர்பொற்புவாய்ந்த
மன்னுமாயிரங்கையோடும்வாளமர்க்களத்தினெய்தும்
துன்னுபோரருச்சுனன்றன்சூழலினிராவணப்பேர்
மன்னவனெய்தியன்றோற்காண்கலான்வல்லைமீண்டான். (௧௦௦)

நருமதையாற்றினூடிவெண்மணற்குன்றினன்கி
னரனுடைப்பூசையாற்றியிராவணனமருமேல்லை
மருவுமாயிரம்பொற்கையால்வரநதிதடுததுவேந்தன்
பொருவருமகளிரோடும்பூம்புனலாடலுற்றான். (௧௦௧)

குடபுலத்தெதிர்ந்துதெவ்வர்வருதலுமரக்கர்கோமா
னடுதிறற்சகனைக்கண்ணுறலறிகெனத்தூண்டவன்றோன்
மிடலுடையருச்சுனப்பேர்வீரியன்கரத்தாலாற்றை
யடலொடுந்தடுத்துநீராட்டயரெதிர்ந்ததென்றான். (௧0௨)

சீற்றமுந்தாலும்வேறுதெரிகலாவரக்கன்சீறி
யேற்றலுமருச்சுனப்பேரோந்தவீர்குடைந்தமூழ்குங்
கோற்றொடியவரையஞ்சலென்றுவெங்குருதிவெள்ள
மூற்றிருந்தொழுகும்வெய்யகதையொடுமுருத்துவந்தான். (௧0௩)

வருதலுமரக்கர்கோமரன்வாய்மடித்தெயிறுதின்றுங்
இருபதுகரத்தினாலுமெடுந்தொருகதையாலெற்ற
கருதலர்ச்செருக்கறுங்காத்தவீரியன்கதையாற்றள்ள
விருவரைவீழ்ந்ததென்னவஞ்சுவிற்கிடைபோய்வீழ்ந்தான். (௧0௪)

வீழ்ந்தவாளரக்கன்றன்னைவிரைவின்யாப்புறுத்திமன்னன்
றாழ்ந்துதன்சேனைவாழ்த்தத்தன்னகர்புகுதுமெல்லை
யாழ்ந்தநூற்கேள்விமிக்கபுலத்தியனரசற்போற்றி
வாழ்ந்திடுகென்றுவெய்யோன்வன்சிறைநீக்கினானே. (௧0௫)

தளர்வொடுமிலங்கையெய்தித்தன்கிளைப்பரப்பினோடு
மளிமுரல்தாமமார்பன்சிலபகலமர்ந்தபின்னர்க்
களியொடும்வெம்போர்வேட்டுக்கதழ்சினக்களிறுபோலக்
கிளரொளிமாடஞ்சூழ்ந்தகிட்கிந்தைநகரிலுற்றான். (௧0௬)

வாளமர்வேட்டுவந்தேன்வாலியெங்குளனேவென்ன
வாளரியேறுபோலுமிராவணனறையத்தாரை
நீள்கடனான்குமெய்திநீறணிகடவுள்செய்ய
தாளிணைவணங்கப்போனான்வல்லையேற்சார்தியென்றாள். (௧0௭)

என்றலுமரக்கன்றென்னங்கடலினிலிமைப்பினெய்தி
வன்றிறல்வாலிபின்போய்ப்பற்றலுமறங்கொள்வாலி
குன்றனான்றனைவாகுமூலத்திறுகவுயர்சேர்த்தித்
துன்றுநாற்கடலுந்தாவிக்கிட்கிந்தைச்சூழல்சேர்ந்தான். (௧0௮)

அவ்வுழியரக்கர்கோனைவிடுத்துநீயாரையென்னச்
செவ்விதின்முகங்கள்பத்துங்கோட்டிநாணோடுநீயோ
னெவ்வெலாத்திசையும்வென்றவிராவணனென்பேரென்றன்
கவ்வையில்தோழனென்னவெரிகரியாகச்சொன்னான். (௧0௯)

ஆங்கதன்றோர்திங்கள்வைகியடல்புனையரக்கர்கோமான்
வீங்குநீர்வேலைசூழ்ந்துவெண்மதிநெற்றிதோயு
மோங்குசிரிஞ்சிமுற்றியொள்ளொளிமாடம்போர்த்த
தீங்கெறியிலங்கைமூதூர்சேர்ந்தினிதிருந்தானென்றான். (௧௧0)

யாரினில்விசும்பினிடைபாதலத்தினையில்லாத
மாருதியிருப்பவாலிக்கிரவிசேயஞ்சிமொழ்கிச்
கார்வரையிடங்கடோறுமொளித்துதெனகழறுசென்று
சீர்கெழுமிராமன்கேட்பத்தென்றமிழ்முனிவன்சொல்வான். (௧௪௧)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

கேசரியென்னுங்கவிக்குலக்கிறைவன்மனைவியாங்கிடைபுனைசெய்வா
யாசறுவளப்பினஞ்சனைவயிற்றின்வளிசகவதரித்தவருளான்றே
மாசறுகனியென்றிரவியையாகுவவ்வுழிப்பாய்தலுமிராகு
தேசுறுமகவாற்குரைப்பநாற்கோட்டுத்திக்கயமூர்ந்துவனடைந்தான். (௧௪௨)

இந்திரனடவும்பகட்டின்மேற்குவெரியுமிழ்வச்சிரப்படையால்
நந்தலின்றெய்துநாகிளங்கவியின்கொடிற்றின்மேற்குச்சலுமிறப்ப
மைந்தன்வீந்தமையாலுலவைவர்தெய்வளியியங்காமலெவ்வுயிரு
மெந்திரப்பொறிபோனின்றிடவியற்றமலரயனுங்கண்வந்திறுத்தான். (௧௪௩)

கையினுற்கமலப்பொருட்டுறைகடவுளீவலுங்காற்றினாருசிறுவ
னுய்தடிபாசவச்சிரப்படையோனறுமனென்றொருபெயர்பகர
வைதுணரீசன்முதலியதேவரனைவருந்தத்தமபடையால்
மெய்யினிலூறுபடாவரத்தோடும்வீந்திடாவாயுளுமளித்தார். (௧௪௪)

கஞ்சனைமுதலதேவர்கண்மறையக்காற்றிறைகையினுற்றுங்கி
யஞ்சனைகையிற்கொடுத்தனனகலவனுமனவ்வாத்தினுன்முனிவ
ரொஞ்சுமாறியற்றவன்னவரிராமனினையடிசேர்ந்திடுமளவுஞ்
செஞ்செவேதனதுவலியினையறியாதிருக்கெனச்சிறினாசபித்தார். (௧௪௫)

திறல்புனையிருக்கரசசெனவுரைச்சூர்ந்ததறுகவிக்குலவேந்த
னறனுடைவடபான்மகளிராந்தடத்தினண்ணலுமணங்குருவெய்த
மறனுடைமகவான்முன்னரும்பினனிரவியுமணத்தலாலன்றோன்
விறல்கெழுவாலிதன்றெடும்விளங்குசுக்கிரீபன்றனைப்பயந்தான். (௧௪௬)

தாமரைக்கிழவனருளினுற்பின்னூர்தன்னுருவெய்தியக்கவிவேந்
தேமுறநாளுஞ்சிறந்தகிட்கிந்தையெய்தியாருயிருலந்திடலும்
நாமவேல்வாலிதனைக்கவிக்கிறையாய்நன்முடிகவிப்பமற்றவனுங்
காமருதடந்தோளிரவிசேய்தன்னைக்கதழ்சினத்தொடுதுரந்தனனால். (௧௪௭)

ஆங்கவனமைச்சாமாருதிதனதுவலியினைமுனிவரரறைந்த
தீங்குறுசாபத்தாலுணராதுதிரிந்தனனெனவிவைகூறி
வாங்குவிற்றடக்கையிராமனுக்காசிவழங்கிமாமுனிவரரோடு
நீங்கருந்தவத்துக்குறுமுனிநிகரில்பொதியவெற்படைந்தனனென்றுன். ௧௪௮

அகத்தியர் இராவணன்மரபுரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆக செய்யுள் - ௨௪௨.

உ

பரமபதிதுணை.

மகாபாரதம்.

காப்பு.

நீடாழியுலகத்துமறைநாலொடைந்தென்றுநிலைநிற்கவே
வாடாததவவாய்மைமுனிராசன்மாபாரதஞ்சொன்னநா
ளேடாகமாமேருவெற்பாகவங்கூரெழுத்தாணிதன்
கோடாகவெழுதும்பிரானைப்பணிந்தன்புகூர்வாமரோ.

வீடுமபருவம்.

மூன்றாம்போர்ச்சருக்கம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

தந்தமுறியிலவர்வைத்ததயிர்பால்வெண்ணெயெட்டாமற்
குந்தியுரலின்மிசையேறியிளங்கோவியர்முன்கூத்தாடி
நந்தன்மனையிலசோதையிருநயனங்களிப்பவிளையாடு
மைந்தனிருதாளொருநாளுமறவாதாரேபிறவாதார். (௧)

ஏலாவமரின்மூன்றாநாளிரண்டுபடையுந்திரண்டேறக்
காலார்திண்டேர்வீடுமனும்வகுத்தான்கடுங்காருடவியூக
மேலாம்வெற்றிப்பாண்டவர்தம்வெஞ்சேனையைக்கொண்டெஞ்சாம
லுலாவர்த்தசந்திரப்பேர்வியூகம்வகுத்தான்றுளவோனே. (௨)

போரோதொடங்கியிருபடையும்புகுந்தபொழுதிலுகந்தொலைத்த
காரோதொடங்கிக்கார்கோள்வெய்கடுங்கால்கலிகொண்டார்ப்பனபோல்
வாரோதொடங்கும்பணைக்குலமுமணிக்காகளமுமுடன்முழங்கப்
பாரோதொடங்கியெவ்வுலகுமடைவேசெவிடுபட்டனவே. (௩)

சொல்லார்கேள்விக்கங்கைமகன்றுரோணன்முதலாமதிரதரு
மெல்லாரிரதகயதுரங்கமேலாளுடனேகாலாளும்
வில்லான்முன்னாட்டமைத்தூர்ந்தவீரன்றனையுஞ்சிறுபதத்தே
மல்லால்வஞ்சமல்லடர்த்தமாயன்றனையும்வளைத்தாரே. (௪)

சூரர்க்கெல்லாமுதலெண்ணுந்துரியோதனனுந்தம்பியரு
மாரக்கவிகைக்காந்தாரர்முதலாயுள்ளவவனிபருஞ்
சேரத்திரண்டுகரிகளொருசிங்கம்வளைத்ததெனச்சிங்க
வீரத்துவசனின்றுழிப்போய்வளைத்தார்சமரம்விளைத்தாரே. (௫)

வரத்தான்மறையாற்றும்பெற்றவரிசாபங்கள்பிடித்ததனிக்
கரத்தான்மறைந்தவரவர்தங்கடைக்கண்படைக்கண்விரைந்துவிடுஞ்
சரத்தான்மறைந்தகல்வானந்தரணிதலமச்சரந்துணித்த
சிரத்தான்மறைந்தவாறுகுருதிச்சேற்றான்மறைந்ததிசைநான்கும். (௬)

துவசம்பிளந்துதேருருந்துரகம்பிளந்துசூடாமணிப்பொற்
கவசம்பிளந்துமார்பகமும்பிளந்தூடுருவக்கடோற்கசன்று
னவசந்திரமாமுனைவாளிதொடுத்தான்றொடுத்தநாழிகையி
னவசம்பிறந்துதம்பியர்முன்விழுந்தானொருவர்க்கழியாதோன். (௭)

நாகந்துவசமெனவுயர்த்தோனடுங்காமுன்னாண்ணலை
மாகந்தனிற்சென்றமர்கடந்துவருமைந்துடையோன்றிருமைந்தன்
வேகம்படநின்றொருசமரவேலானமீண்டுமவ்வேந்தன்
பாகன்றனதுமருமத்திற்பாயந்தானவனுமாயந்தானே. (௮)

விழுந்தான்வேலாற்றேர்ப்பாகன்வெருசாயகத்தால்விறல்வேந்தர்
தொழுந்தாளரசன்றனுமுயிர்சோர்ந்தானென்னுந்தொனிகேட்டுச்
செழுந்தார்வாகைவிசயனையுந்திருமாலையும்விட்டொருமுனையா
யெழுந்தான்மந்தாகினிமைந்தனிளைந்தோர்தமக்கோரெயில்போல்வான். (௯)

வண்டாரலங்கல்வலம்புரியோன்மார்பந்துளைத்தவாளிவழி
கண்டானெடுத்துத்தாழ்ந்ததிருக்கையாலணைந்துக்காற்றேரிற்
கொண்டானுவிதருமருந்துகொடுத்தானவனுங்கொடுத்தமருந்
துண்டானுண்டகணத்தினின்மீண்டுணர்ந்தானுலகேழுடையானே. (௰)

மன்னன்றனையச்சந்தனுவின்மைந்தன்பெரும்பேரணிசிறுவிப்
பொன்னங்குன்றேயிவன்சிலையுமிவனேகாணும்புராரியென
மின்னுங்கழற்கால்வீமனுடனேவெம்போர்விளைத்துவிடலையராய்
முன்னின்றவரும்பின்னிடத்தன்முனைவாளியினல்வினைசெய்தான். (௧௧)

மருமங்களினும்புயங்களினும்வதனங்களினுங்கண்களினுஞ்
செருமும்படிவெங்கணைமாரிசிந்திச்சிந்திச்சிரந்துணித்துத்
தருமன்சேனைப்பரவையெலாந்தானேயாகித்தலைநாளிற்
பொருமந்தரமால்வரைபோலத்திரிந்தான்வெம்போர்புரிந்தானே. (௧௨)

மலையொத்திருங்கடகளிறும்வயமாவணியுமான்றேருந்
தொலையத்தொலையயாவரையுஞ்சுடுவெங்கணையாற்றுரந்துதுரந்
தலையத்தரங்கமெறிகடல்வாய்வடவாநலம்போலவனின்ற
நிலையைக்கண்டுங்காணான்போனினைந்தான்விசயனிகரில்லான். (௧௩)

இதுவுமது.

காடெரிதுற்றெனவீடுமனிப்படிகாதிமலைத்திடவு
மானநினைத்திலைசாபமெடுத்திலைவாளிதொடுத்திலைநீ
யேனிதுனக்கெனமாயனுரைத்தவனேறிரதத்திழியா
வானதெனக்கினியாகவெனத்தனியாழியெடுத்தனனே. (௧௪)

ஆழியெடுத்தனன்வீடுமனைப்பொருதாவியழித்திடுவா
னாழிமுகக்கனல்போலெழுமப்பொழுதோடியருச்சுனனுந்
தாழிதனக்குமுன்வீடுகொடுத்தருடாளிணையைப்பிடியா
வாழியுனக்கிவனேதிர்விதகமாயவென்றுதொழுதான். (௧௫)

வாசவன்முற்பெறுகாளைதொழுதகொழுமாறுபடச்சினமுங்
கேசவனிப்படிமேல்வருகிறபநுகேவலமுற்றுணரா
நாசநமக்குறுகாலநணித்தெனநாடிநடுக்கமுடன்
றேசணிபொற்றடமேருவெனத்திரிதேரினைவிட்டிழியா. (௧௬)

ஆரணகற்பிதமாதவவச்சுதவாழியிடைத்துயிலுங்
காரணசிற்குணரூபமலர்க்கொடிகாதன்மனத்துறையு
நாரணவற்புதவானவருக்கொருநாயகநிற்பணியும்
வாரணமுத்திவிசால்தலத்திடைவாழ்வுறவைநதவனே. (௧௭)

ஆவியழித்தனைதூணிலுதித்தடலாடகனைத்தலைநாண்
மாவலியைச்சிறுமாணுருவத்துடன்வார்சிறைவைத்தனையா
லேவிலரக்கனைவீழவடர்த்தனையானொரிலக்கெனவோ
நீவலியிற்சினமூளுமனத்தொடுநேமியெடுத்ததுவே. (௧௮)

யானரகிற்புகுதாமலெனக்குயர்வானுலகைத்தருவா
னீநினைவுற்றதுபோனபிறப்பிலென்னிடுதவப்பயனே
யானுமினிப்பிறவாமலளித்தருளீசவெனப்பரவா.
ஞானமனத்தொடுநாகுழறப்பலநாடியுரைத்தனனே. (௧௯)

ஆரியனப்பொழுதாறினனிறைவுமாடலருச்சுனனுந்
தாரைவடிக்கணையாயிரமுய்ப்பதொர்சாபம்வளைத்தெதிரா
யாரெதிர்நிற்பினும்யாவர்தடுப்பினும்யானினியிப்பகலே
சேரமுருக்குவனேறுகெனத்தனதேர்மிசைபுக்கனனே. (௨௦)

நீறுபடுத்தினன்மாமகுடத்திரணீணிலவைப்படையச்
சேறுபடுத்தினன்மூளைகளிற்றிசைசேர்குருதிப்புனலா
லாறுபடுத்தினனோரொருவர்கெதிராயிரம்வைக்கணையா
லீறுபடுத்தினன்வீடுமன்விட்டவர்யாவர்பிழைத்தவரோ. (௨௧)

வாயுவடிக்கணைவாசவன்வைக்கணைவாருணமெய்க்கணைசெந்
தீயின்வடிக்கணைதேவர்ஈடர்க்கணைசேரவிடுத்தமையா
லாயமுனைப்படுதேரணிபட்டனவாளணிபட்டனவெங்
காய்கரிபட்டனபாய்பரிபட்டனகாவலர்பட்டனரே. (௨௨)

நாடியொளித்தனர்சூழ்புனன்மத்திரநாடன்முதற்பலருங்
கூடியொளித்தனர்மாரதரிற்றிறல்கூரும்வயப்படையோ
ரோடியொளித்தனராடமரிற்றுரியோதனனுக்கிளையோர்
வாடியொளித்தனர்மாகதரொட்டியர்மாளவர்குச்சரரே. (௨௩)

எண்சீரடியாசிரியவிருத்தம்.

பார்த்தனம்பினுன்மேவலார்படைப்பரவைசாயவேவிரவுகோவியர்
தூர்த்தனன்புடன்கண்டுவந்துதன்றுருக்கசேனையின்பக்கமெய்தினன்
சேர்த்தவெம்பனைக்கொடிமகிபனும்வில்விநோதனுஞ்செல்வமைந்தனுங்
காத்துநின்றுதங்காவலன்றனைக்கொண்டுபோசறைகடிதினெய்தினர். (௨௪)

வெஞ்சரத்தினால்விசயன்வென்றபோர்மிகுசளத்தின்வாய்விசையொடற்றன
குஞ்சரத்தின்வீழ்க்கைகளுகமேகுருதிவட்டமும்பரிதிவட்டமே
பஞ்சரத்தொடுந்திரியுமானையின்பக்கமெங்கணும்பட்டுமூழ்கிய
செஞ்சரத்தின்மேற்சிறகர்பண்டுவச்சிரமரிந்திடுஞ்சிறகர்மானுமே. (௨௫)

கொற்றமன்னர்சென்னியினணிந்தபொற்கோளம்யாவையுந்தாளமாகவே
யற்றைவெஞ்சமத்தடலருச்சுனனாண்மைபாடிநின்றலகையாடுமான்
முற்றவெம்பிணக்குவையும்வேழமுமுடுகுவாசியுந்தேருமொய்ம்புறத்
துற்றகூற்றெனவொன்றுபட்டெழச்சொரியுமூளையாறருவியொக்குமே. ௨௬

பமரமும்மதக்கரிவிலாவின்வேல்பட்டவாய்பிணம்பறியநிற்பன
குமரன்வேலின்வாயன்னமூர்தருங்கோடுடைத்தடங்குன்றமொக்குமா
லமரர்கோன்மகன்செங்கையம்பினாலற்றவீரர்தந்தலைகள்சவ்வியச்
சமரபூமிசேர்ஞாளிமானுடத்தலைவிலங்கினிற்றன்மைசாலுமே. (௨௭)

அன்றுவெஞ்சரத்தொடுதறிந்தவாளரசர்சோரிமெய்ப்பட்டதாரலிற [கிறு
சென்றுசெங்கதிர்ச்செல்வன் வாருணத்திசையடைந்து வெண்டிரையின்மூழ்
கின்றருச்சுனன்பொரமறந்தநெடியசெங்கண்மானேமிதொட்டதும்
பின்றைவில்லெடுத்தமர்மலைந்ததும்பேசினான்மபீபதிபிதாமகன். (௨௮)

தருமன்மாபெருஞ்சேனைதன்னுளார்தங்களாசரத்தொடுதனஞ்சயன்
பொருவிலாண்மையும்வீமன்மாமகன்பொருதவீரமும்புகழ்ந்துபாடினா
ரரவகேதனன்சேனைதன்னுளாரழிந்தமன்னருக்கழுதாற்றினா
ரிருவர்சேனையுங்கண்படாமலன்றிரவுபட்டதென்னென்றியம்புவாம். (௨)

தென்னிலங்கையிற்கொண்டதென்னையேகோமியாகவாரிலமேனியா
னின்னமும்பொரத்தீதுமோகவத்தின்றுமென்றுகொண்டெண்ணியேயொ
தன்னெடுந்தனிச்சயிலமும்பொலந்தமனியத்தடஞ்சயிலமாகவே [லோ
மின்னெடுஞ்செழுங்கதிர்பரப்பினானவெய்யவேழ்பரித்தேர்விபாகரன். (௩௦)

மூன்றாம்போர்ச்சருக்கமுற்றிற்று.

நான்காம்போர்ச்சருக்கம்.

கலிவிருத்தம்.

தேடியவசலியைசாபந்தீர்த்ததா
ணீடியவுலகெலாமளந்தநீண்டதா
ளோடியசகடிறவுதைத்துப்பாம்பின்மே
லாடியுஞ்செவந்ததாளென்னையாண்டதாள். (௧)

நற்பகலிடைவருநாளினாயகன்
பொற்பகலுறவொளிபுரியுநேமியான்
பிற்பகலணியையும்பிறங்குசேனையான்
முற்பகல்வியூகமேயாகமூட்டினான். (௨)

கார்முகில்வண்ணனைக்கண்டுகொணலார்
தாமுமவ்வியூகமேசமைத்துமுந்திரு
ரோமமோடெதிர்முனைந்திருவர்சேனையும்
போர்முரசெழவெழப்பொங்கியார்த்தவே. (ங)

ஏழிருபுவனமுமேந்துமேருவைச்
சூழ்வனகிரிக்குழாஞ்சுற்றுமாறுபோற்
பாழியம்புயகிரிப்பவனன்மைந்தனை
வேழவெம்படையுடைவேந்தர்சூழவே. (ச)

வஞ்சிவிருத்தம்.

ஆலாலமெனக்கதுவாவதிரா
மேலாள்விழவீமன்வெறுங்கைகளா
லேலாவுடலென்புகமோதவெறுந்
தோலாயினசிற்சிலதோலினமே. (ரு)

மேல்வாய்தமகையொடுமேலெழவுந்
தோல்வாயவைகீழ்விழவுந்துணியா
மால்வாரணம்வாய்கள்கழன்றனமுன்
றுல்வாயெனுநாமநலம்பெறவே. (சா)

மதிவெண்குடைமாருதிவன்புடனே
குதிகொண்டொருகைகொடுகுத்துதலா
லதிர்சிந்துரவல்லுரமத்தனையு
மெதிர்சிந்துரமாகியிளைத்தனவே. (எ)

உடலிற்றசையாவுமுடைந்துநெடுங்
குடலற்றுவிழும்படிகுத்துதலான்
மிடல்பற்றியவீமன்வெறுங்கைகளா
லடலத்திகளத்திகளாயினவே. (அ)

கந்தாவகன்மொய்ம்புறுகாளைபுயக்
கந்தாலமர்செய்துகலக்குதலிற்
றந்தாவளசேனைதரிப்பறவே
தந்தாவளமுற்றனசாயுறவே. (கூ)

வெவ்வாயுவின்மைந்தன்வெகுண்டொருதோன்
மொய்வாகுவில்வைத்தெதிர்மோதுதலாற்
கைவாலதிமெய்தலைகால்கள்கரந்
தவ்வாரணம்வாரணமாகியதே. (க0)

கம்பித்தனகாருடல்பேருயிருங்
கும்பித்தனவாயுகுமாரனிவ
னம்பொற்கரபங்கயமள்ளுதலிற்
றும்பிக்குலமாயினதும்பிகளே. (கக)

பொன்னாகமணிப்புயன்வெங்கதையான்
முன்னாகமலைந்துமுருக்குதலா
லெர்நாகமுநாகமெனும்படியே
மணனாகவமெங்குமடிந்தனவே. (கஉ)

கோடுங்கரமும்பறியக்குதிகொண்
டோடுங்குருதிப்புனலூடுடல
மூடும்படியாவருமூழ்குதலா
லாடுங்கயமாயினவக்கயமே. (கங)

வீசுந்தமகைம்முதன்மெய்ம்முழுதுங்
கூசும்படிசிற்சில்குழம்புகளாய்
மூசுங்களபக்குலமொய்ம்பனுடற்
பூசுங்களபக்களிபோன்றனவே. (கச)

கிரியேயெனவந்தெதிர்கிட்டினபுன்
பொரியேயெனவாணிடைபுக்கனபோ
ரரியேறனையான்வலிமைக்கவர்தங்
கரியேகரியல்லதுகண்டவர்யார். (கரு)

இவ்வாறுவெருண்டிவனெற்றுதலுங்
கைவாரணவேலைகலக்கமுறத்
தெவ்வாகியமன்னவர்தேர்களொடும்
வெவ்வாசிகடம்மொடும்வென்னிடவே. (கசா)

உடைகின்றமைகண்டுரகத்துவசன்
குடையுங்கொடியுங்குளிர்மாமுரசும்
படையுஞ்சிலதம்பியரும்பலரும்
புடைகொண்டுவரப்போனானவன்மேல். (கஎ)

வீமற்கெதிர்நின்றவன்வில்லறவுஞ்
சேமக்கவசஞ்சிதைவுற்றிடவு
நாமக்கணையேவினனாயகனு
மாமுத்தமதிக்குடைமன்னவனே. (கஅ)

ஆறம்பினிலற்றரவத்துவச
னூறம்பகன்மார்பினுழைந்ததுபின்
வேறம்புதொடுத்திலன்வீமனவன்
மாறம்புதொடுத்தனன்மற்றிவன்மேல். (க௯)

சிங்கக்கொடியற்றணிதேர்சிதைவுற்
றங்கத்தினுழைந்தனவம்புகளுந்
துங்கக்கடகத்திரடோள்புடையா
வெங்கட்கனல்வீமன்வெகுண்டனனே. (உ0)

கொந்தாணிவனென்றுறுதிக்கதிர்வே
லந்தார்முடிமன்னரநேகருடன்
வந்தார்பலதம்பியர்மைத்துனருங்
கொந்தார்தொடைவீரகுமாரருமே. (உக)

மலருங்குடைமன்னவர்வந்தமைகண்
டலருங்கொடிவாளரவோனருகே
பலருங்கரிதேர்பரியாளுடனே
சிலரும்புவிப்பாலர்திரண்டனரோ. (உஉ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

எதிர்ந்தார்மன்னரிருதிறத்துமொருவர்க்கொருவரிடையிடைநின்
றதிர்ந்தார்சிறுநாண்பேரொலியாலுடையாவல்லவகிலாண்ட
முதிர்ந்தார்போரிற்செருக்கணையான்முரட்டேர்துணிந்துமுடிதுணிந்து
முதிர்ந்தார்தத்தமுடனிலத்திலுயர்ந்தாராவியுயர்வானில். (உங)

தாமத்தெரியல்வலம்புரியோன்றடந்தாமரைக்கைத்தனுத்தறியச்
சேமக்கவனப்பவனகதிப்பரிமாநான்குஞ்சிரந்துணிய
மாமொட்டொடிந்துகொடிஞ்சியுடன்மான்றேர்சிதையமார்புருவ
நாமக்கணைகள்பலபடவில்லுதைத்தானின்றுநகைத்தானே. (உச)

முன்னாளமரிற்கடோற்கசன்றன்முனைவெஞ்சரத்தான்மூழ்குவித்தான்
பின்னாண்மீளப்பிறைக்கணையாற்பிளந்தானவனைப்பெற்றெடுத்தோ
னென்னாவிரங்காமெய்ந்நடுங்காவெடுத்தாரணைத்தார்சகுனியுமப்
பொன்னார்தடந்தேர்ச்சல்லியனுமுதலாவுள்ளபூபாலர். (உரு)

தம்முன்றளர்ந்தநிலைகண்டுதெரியாராகித்தம்பியர்க
ளெம்முன்பொருதற்கிசைவார்களிசைவீரொன்றென்றிகல்கூறித்
தெம்முன்செவிகள்செவிடுபடச்சிறுநாணெறிந்துதேர்கடவி
முன்முன்கடிதிற்கணைபொழிந்தார்முகுர்தன்றடுத்தமுகில்போல்வார். (உசா)

வின்மேல்விசையிற்கடும்பாணமேன்மேனிறுத்திவேந்தரைப்பார்த்
தென்மேனினைவென்றவரவர்பேரிரதந்துணித்துச்சிலைதுணித்துத்
தன்மேல்வந்ததம்பியரிற்றரியாதுடன்றவைவர்க்கு
மன்மேலெய்தவாளியெனத்தொடுத்தானைந்துவயவாளி. (உஎ)

சேனாவிந்துசுதக்கணன்பொற்றேர்ப்பிங்கலசன்சலாசந்த
னானாவீமவாகுவெனுமடல்வாணிருபரைவரையும்
வானாடாளும்படிவிடுத்தான்வன்பாற்றம்மையவரையுங்
கானாள்கென்றகாவலனைப்போல்வான்வீரக்கழல்வீமன். (உஅ)

ஒருபால்வீமன்சிலைவிசயனொருபாலொருபாலபிமன்னு
வொருபானகுலன்சாதேவனொருபாலொருபாலுரகேச
னொருபாலரக்கன்பாஞ்சாலனொருபாலடலுத்தமபானு
வொருபாலுடன்றுபொரப்பொரவேயுடைந்ததரசன்பெருஞ்சேனை. (உகூ)

விண்ணாடருக்காவெஞ்சமத்திலசுராதிபனைவென்கண்டோன்
மண்ணாளரசர்மகுடசிகாமணியேபோல்வான்மாமரபாற்
பண்ணார்பஞ்சகதிமான்றேர்ப்பகலோனென்னப்பகதத்த
னெண்ணார்துரக்கவரும்படையையஞ்சலென்றென்றெதிர்சென்றார். (௩௰)

அலைகால்வெள்ளக்கருங்கடல்போலதிராநின்றவாகவத்தின்
மலைகால்பெற்றுவருவதுபோல்வருதிண்பனைக்கைமாமிசையான்
சிலைகால்வளைத்துத்தீவாய்வெஞ்சரங்கொண்டடையார்சிரங்கொண்டான்.
கொலைகால்செங்கட்கரியநிறக்கூற்றன்றனக்குங்கூற்றனான். (௩௧)

தாராரோடைத்திலகநுதற்சயிலம்பதினாயிரஞ்சூழ
வாராநின்றமதகயத்தின்வன்போர்வலியுமனவலியும்
சேரார்வணங்கும்பகதத்தன்றிண்டோள்வலியுஞ்சிலைவலியும்
பாராநின்றகடோற்கசன்றன்படையின்றளர்வும்பார்த்தானே. (௩௨)

கலிநிலைத்துறை.

ஆயபோதிலாயிரநூறுமதமாவு
மேயதீயகாலனையொக்குமேலானுஞ்
சாயகமுஞ்சாபமும்யாவுந்தானேயா
மாயவேடங்கொண்டவனோடுமலைவுற்றான். (௩௩)

சங்கமூதத்தார்முரசார்ப்பமுழவார்ப்பப்
பொங்கும்பூழியாழிவறக்கும்படிபோதச்
சிங்கங்குன்றிற்செல்வதுபோலச்சிலையோடு
மெங்குந்தானும்வேழமுமாகியெதிர்சென்றான். (௩௪)

மைபோலார்த்துமும்முறைதானமழைசிந்திக்
கைபோன்முட்டிக்கையொடுதத்தங்கால்வீசி
மெய்போல்வெம்போர்செய்தனவீரன்விறல்வேழம்
பொய்போனின்றவருபகதத்தன்புகர்வேழம் (௩௫)

நின்றார்நின்றபடிகடிதாகநெடிதோடிச்
சென்றார்கண்டசிந்துரம்யாவுந்தீயப்பிற்
கொன்றார்மற்றக்கொற்றவர்யாருங்கொலையுண்டார்
வென்றான்றேவீமன்மகன்சேனையில்வீரர். (௩௬)

ஆனவானவாகவமெங்குமானைப்போர்
போனபோனமைந்தர்பிழைப்பீர்போமென்றன்
றானமெய்தாவவ்விறைபோனானுயிரோடும்
போனகண்டாய்கதிரோனும்புறமிட்டான். (௩௭)

பூந்தண்மாலைப்பஞ்சவரானைப்போர்வென்று
சேர்ந்தசேர்ந்தமன்னவரோடுந்திறலோடுந்
தாந்தம்பாடிவீடுபுகுந்தார்தனையாளும்
வேந்தன்றானும்பாசறைபுக்கான்வீடுமன். (௩௮)

பூண்பாய்மார்பிற்புத்திரர்தம்மைப்பொலிவோடுங்
காண்பானவர்க்கண்டிலள்பெற்றகாந்தாரி
சேண்பாலெய்தச்சென்றனரோவென்றிருகண்ணீர்
தூண்பாலாகிச்சோர்தரவுள்ளஞ்சோர்வுற்றாள். (௫௯)

கொன்னேகுந்திமைந்தரிருக்கக்கொலையுண்டார்
முன்னேமுன்னுமுன்னமுடிந்ததின்னென்றோ
மின்னேயென்னமெய்குலையாமண்மிசைவீழ்ந்தா
ளென்னேயென்னேயென்றினையாநின்றென்செய்தாள். (௬௰)

வீரர்கற்பின்பின்னனையானைவிறன்மைந்த
ரொருமன்றிலேற்றவுமாமன்றென்றோதா
ளொருவன்பிற்கண்ணறைமன்னனொருதேவி
யாருவெள்ளத்துன்புறவன்றேயடிபிட்டாள். (௬௧)

ஆளாய்மாய்ந்தவேந்தரிடந்தோறழுமோசை
கேளாவெப்போதேருவமென்றக்கிளர்கங்குன்
மீளாவோடிற்றத்திசைவானோர்மிளிர்சென்னிச்
சூளாமணிபோல்வந்ததுகாலைச்சுடரம்மா. (௬௨)

நான்காம்போர்ச்சருக்கமுற்றிற்று.

ஆக செய்யுள் - எ௨.

ஐந்தாம்போர்ச்சருக்கம்

க௳

கருமாமுகிற்கோலநெஞ்சத்திருத்துங்கருத்தெய்துமே
லருமாதவன்றானுமவன்முத்திதருகைக்குமவனேகுருத்
தருமாலைமணநாறுதாளானைவண்டேறுதண்ணந்துழாய்
மருமாலைபுனைகின்றதிருமாலையல்லாதுவல்லார்கள்யார். (௧)

வரசங்கமுந்தாரையுஞ்சின்னமும்பொன்மணிக்காளமு
முரசங்களுந்துந்துபியுமெங்குமெழவிம்மமுழவிம்மவே
கரைசிந்துதிரைசிந்துநுரைசிந்துவிரைசிந்துகணமென்னவே
அரசன்பெருஞ்சேனைவெள்ளம்புறப்பட்டதணியாகவே. (௨)

விருதாயிரங்கோடிமுரசாயிரங்கோடிமேன்மேலெழப்
பொருதானையுடன்வந்தணைந்தார்புறந்தந்தபூபாலருங்
கருதாவரக்கன்கொடுந்தானையிறைவன்கடுந்தானையென்
றிருதானையும்போலவெதிருற்றவிருமன்னதிருதானையும். (௩)

அரக்கர்க்குமுதல்வானளித்தோருமெமரின்றுமவர்போலுமைத்
துரக்கைக்குநின்றேனெனத்தெவ்வர்தம்மோடுசொல்லிற்றெனக்
குரக்குக்கொடித்தேரின்மிசையோடிவிசையோடுகூத்தாடவே
புரக்கைக்குநின்றோனுடன்செங்கண்விசயன்புறப்பட்டனன். (௪)

அரனின்றனன்போலவவனின்றதேரொத்தவணிதேர்மிசைப்
பொரநின்றமதிமைந்தனொடுசென்றுமுனைநின்றுபொரவெண்ணியே
சரநின்றகுனிசாபவிசயன்றனைக்கொண்டுசெங்கங்குறித்
துரநின்றவவனெஞ்சுடைப்பாகன்மான்றேருகைத்தூரவே. (ரு)

ஊர்கின்றதேரோடியுயர்கங்கைமகனின்றவொருதேருடன்
சேர்கின்றவெல்லைக்கலிங்கேசர்முதலானதெம்மன்னர்போய்
நேர்கின்றவிசயன்றனுடன்மோதியவனேவுநெடுவாளிபட்
டூர்கின்றபுண்வாய்ல்வார்கின்றசெந்நீரினிடைமூழ்கினார் (சா)

செல்லுங்கலிங்கேசரலையுண்டநிலைகண்டுசிவனென்றுபார்
சொல்லும்பெருஞ்செமமல்பல்லங்களவன்மேறனெடுததேவினான்
கொல்லுங்கொடும்பாணமவையைந்துவிசயன்கொதித்தேவினான்
வில்லுந்தன்வின்ஞாணும்விறலம்புமுடனற்றுவிடைகொள்ளவே. (எ)

இவர்கொண்டசெற்றத்தொடிவ்வாறுபோர்செய்பவிகல்வீமனைப்
பவர்கொண்டநெடுவேலைபோல்வந்துமொய்த்தார்கள்பலமன்னருங்
கவர்கொண்டமுனைவாளியவர்மார்புதோறுங்கழன்றோடவே
தவர்கொண்டுசெற்றான்முன்னளகேசனமர்வென்றதனியாண்மையான். (அ)

துச்சாதனன்றம்பிமார்மைந்தர்மற்றுஞ்சகுனிசல்லிய
னெச்சாபமுடிமன்னரும்பின்னருந்துன்னியெதிர்சீறினா
ரச்சாபமொன்றாலுமன்றவ்வவர்க்கம்பநேகந்தொடுத்
துச்சாசனஞ்சொல்லிநின்றானவ்வடன்மன்னருடனோடவே. (கூ)

செருத்துப்புடைத்தோடிவருதம்பியர்க்கண்டுசெற்றத்துடன்
கருததுப்புகைந்துட்கலங்கிக்கடைக்கண்கள்கனல்காலவே
மருததுத்தருங்காலைநின்றானையின்றாவிமலைவேனெனா
வுருத்துத்தடந்தேரின்மிசைவந்தடுததானுரக்கேதனன். (க0)

போரதநிலைநின்றுவன்போடுசாபம்பிடித்தெங்கணுஞ்
சோராதவயவாளியீரைந்துசேரத்தொகுத்தேவினா
னாராவமுடனிட்டகவசம்பிளந்தோடியாணமைக்கெலாம்
வீராபிடேகஞ்செய்வயவீமனகன்மார்பின்மிகமூழ்கவே. (கக)

ஈமந்தொறுஞ்சென்றுநடமாடுகழலையனெதிராய்வருங்
காமன்றனுடன்மேல்விழித்திட்டநுதலிற்கனற்கண்ணனைத்
தாமம்புனைந்தாரமணநாறுமார்பத்தடந்தோயவே
வீமன்றொடுத்தானோரொதிரம்புபார்மன்னன்மிடல்சாயவே. (கஉ)

கலிவிருத்தம்.

ஓரம்பினுனேர்ந்தேழுலகுடையானலமரவே
வீரம்புனைவீமன்குனிவில்லோடெதிர்நிற்கப்
பேரம்பரவுலகாள்பவர்புகழ்பூரிசவாவ
நீரம்புதொடுத்தானொருதேர்மேலினனிவன்மேல். (கங)

இவனாண்மையைமதியாதெதிரெய்தானெனவெய்திற்
பவனாகதிபெறுதேரினனளினாபதியிளவ
லவனாருயிர்கவர்வேனெனவப்பொன்றுதொடுத்தான்
றவனான்மறைதெரிபூரிசவாவுஞ்சரம்விட்டான். (௧௪)

எணற்றுயர்வரைமார்பினரிருவோர்களுமொருவோர்
காணற்றெழிலரிதாமுறைகடிதிற்கணைதொடவே
நாணற்றனவெஞ்சாபமுநடுவற்றனவெனினுங்
கோணற்றனபுகல்வாரொருகுறையற்றதவர்க்கே. (௧௫)

ஒருகேடகவுளாதேறினருளமேயெனவமரிற்
பொருகேடகநட்வுங்கனபொற்றேர்மிசையிழியா
முருகேடவிழ்தார்மார்பினர்முனைவாளமிரண்டோ
டிருகேடகமிருகையினுமிருவோருமெடுத்தார். (௧௬)

படிவாயுடுபதியுந்தினபதியும்பொருதெனவே
தொடிவார்கரதலமொன்றியதுறுதோலிடைமறையா
வடிவாண்முனையசையாவிசைவருசாரிகள்பயிலா
விடிவாய்முகிலதிராவெதிரெதிர்சீறினரிப்பால். (௧௭)

தோலாதடலொடுசீறினதுரகத்தொடுதுரக
மேலாளொடுமேலாள்வரிவில்லாளொடுவில்லா
ளோலாமுடியரசோடரசிரதத்துடனிரதங்
காலாளொடுகாலாண்மதகரிமாவொடுகரிமா. (௧௮)

நீடுங்கடகரியின்கரநிரையற்றனநதியா
யோடுங்குருதியின்வாளைகளெனவோடினவொருசார்
கோடுஞ்சிலையம்பிற்றலையரியுண்டனகுறைநின்
றாடுந்தொறுமுடனாடுவவலகைக்குலமொருசார். (௧௯)

கோல்கொண்டவைசிலைகொண்டவைவாள்கொண்டவைகூர்வாய்
வேல்கொண்டவையவைதம்முடன்விழுகைத்தலமொருசார்
கால்கொண்டுகுசெந்நீர்விரிகளமோககனமதா
மால்கொண்டகரிக்கோடிளமதியாவனவொருசார். (௨௦)

முந்நீர்தருபவளங்கொடுமுன்னஞ்சமைவனபோற்
செந்நீரின்மிதந்தோடுவதேராழிகளொருபா
னன்னீர்மழைபொழிசெம்புனனதிவாய்வருதுறைபோ
லந்நீரிடைபுகுமூளைகளலைபாய்வனவொருசார். ௨௧)

வையாரயில்கணைதோமரம்வாள்கப்பணமுதலாங்
கையாயுதமுழுதுந்துளைவழிசெம்புனல்கால
மெய்யாயிரவிதமாய்விழவெம்போரிடையிருபத்
தையாயிரமுடிமன்னவரகல்வானமடைந்தார். (௨௨)

இவ்வாறுமூனைந்தாருயிரிருசேனையுமடிய
மைவானுலகிடமற்றதுவயவீரர்நெருக்கா
லவவானவர்தமதாலயம்வலம்வந்தவருக்கன்
செவ்வானுறுகுடபால்வரையிடமென்றதுசேர்ந்தான். (உ௩)

எப்போதுமரும்போரினிலிதயங்களிகூர்வார்
கைப்போதுறுபடைசெம்புனல்கடலுண்டதுகால்வா
ரொப்போதுதலரிதாயிருதிறமன்னருமொருவா
வப்போதணிகத்தோடுமெகன்பாசறைபுக்கார். (உ௪)

இரவென்றிருள்கெழுநஞ்சினிளந்திங்களெயிற்று
ரரவுண்டதுதான்மீளவுமிழ்ந்தோனெனவருக்க
னூரவுங்குடதிசைநீனிறவுததிக்குளொளித்தோன்
விரவுங்குணதிசைவேலையின்மிசைவந்துகிளர்ந்தான். (உ௫)

ஐந்தாம்போர்ச்சருக்கமுற்றிற்று.

ஆக செய்யுள் - ௬௭.

ஆறாம்போர்ச்சருக்கம்.

இதுவுமது.

கோயிலாளுடையபைங்கொண்டலார்கண்டுயில்
பாயலாய்வாழநீபாக்கியஞ்செய்ததென்
நீயலாதுவமைவேறில்லெனத்தீயநின்
வாயெலாநஞ்சுகால்வாளெயிற்றுரகமே. (௧)

பயிலும்வெம்பாசறைப்பாண்டவரைவருந்
துயிலுணர்ந்தணிபசுந்துளபமாலடிபணிந்
தயிலுநஞ்சனையபோரடுகளங்குறுகினார்
சயிலவெங்கடகரித்தானையுந்தாமுமே. (௨)

பகுத்தபல்லணிகளின்பான்மையக்குரோணியான்
மிகுத்தவெஞ்சேனையாம்வெள்ளநீர்வேலையை
தொகுத்துவண்டிமிர்தொடைத்துருபதன்றிருமகன்
வகுத்தனன்புறமிடாமகரமாவியூகமே. (௩)

போகமுந்தருமமேயானமெய்ப்புனிதனு
நாகவெங்கொடியுடைநாயகக்குரிசிலும்
வேகவெம்படையுடைவேந்தருஞ்சேனையு
மாகவங்குறுகினாரிரவம்பெருகவே. (௪)

பொருஞ்சமங்கருதியாள்புரவிதேர்போதகந்
தெரிந்துகொண்டிருதிசையினுஞ்செல்லவே
பெருஞ்சனந்தன்னையப்பீடுடைவீடுமன்
கிரிஞ்சமென்றுள்ளபேர்வியூகமுங்கட்டினான். (௫)

இந்திரன்முதலியவிமையவர்தங்களா
லந்தரமிடனறவரவுளைந்தலமர
வந்துவந்திருபெரும்படைஞருமாறுபட்
டுந்தினார்முந்தினாரொட்டினார்முட்டினார். (௬)

பரவினால்விதவயப்படைஞருஞ்சூழவா
இரவினான்வெம்பகையிருளினுக்கென்றுதன்
புரவினான்மறையெனப்பூண்டதேர்தூண்டினான்
விரவினான்வீமன்மேல்விற்கையாசிரியனே. (௭)

சிலைவரம்பெறுதலிற்றேசிகன்சிறவு
நிலைபெறும்புகழினானெஞ்சினஞ்சலிசெயா
மலையினும்பெரியதேர்வலவனும்புரவியும்
தலையறும்படிசரந்தனுவளைத்துதையினான். (௮)

சூழிவெங்கசரதுரகதநிருபரை
வீழவெங்கணைகளான்மெய்துளைத்தளவிலே
தாழநின்றிலனெழிற்சல்லியன்றன்னொடே
தோழவின்றமர்செய்கென்றொருதிசைத்தோன்றினான். (௯)

வல்லைவெஞ்சமர்செயவல்லைநீவருகென
வில்லையுந்துணிசெய்துவெல்லவந்தவனையுந்
தொல்லைவெங்கரியெனத்தேரொடுந்தோண்மடுத்
தெல்லையம்புவியின்மேலெற்றினான்வீமனே. (௧௦)

சல்லியன்றன்பெருஞ்சலிவுகண்டங்கையி
னெல்லியங்கனியெனநேரலாருயிரெனப்
பல்லி[illegible]களுமெழப்பாந்தளம்பொற்கொடி
யல்லியந்தெரியலானங்குவந்தணுகினான். (௧௧)

வெம்புயவீமன்மேல்வில்வளைத்தாயிர
மம்புகண்மாரிபோலார்த்தெழவீசினார்
தும்பையந்தார்முடிச்சூழ்படைமன்னருந்
தம்பியர்யாவருமாமனுந்தானுமே. (௧௨)

தோன்றரித்துவசனுஞ்சோகமில்பாகனார்
வான்றடந்தேரொடும்வருகெனச்சென்றெதி
ரூன்றினான்மைந்தருமிளைஞருமுயிரையே
போன்றமைத்துனரும்வாணிருபரும்புடைவர. (௧௩)

நின்றிருசேனையுநேர்படவேலினும்
வன்றிறல்வில்லினும்வாளினுமலைவுறக்
குன்றனதோளினாரிருவருங்கொக்கரித்
தொன்றினார்வில்வளைத்தொருவருக்கொருவரே. (௧௪)

அவனுமம்பிவனுரத்தழுகுறவெழுதினா
னிவனுமம்பவன்மணித்தோளின்மேலெழுதினான்
புவனமெங்கணுமிகப்பொறியெழப்போர்செய்தார்
பவனனுங்கனலியுநிகரெனும்பரிசினார். (௧௫)

வரத்தின்முன்பெறுகதைவன்மையும்வின்மையுஞ்
சிரத்தினின்றெண்ணவோர்பேர்பெறுஞ்சேவகன்
சரத்தினுங்கடுகுதேர்ச்சர்ப்பகேதனனையன்
றுரத்தின்வெங்கணைகள்பட்டுருவவில்லுதையினான். (௧௬)

தான்விடுங்கணைகளிற்றம்பியர்தம்மையுந்
தேன்விடுந்தெரியலானெய்துபுண்செய்தபின்
னான்விடும்படிதுளைத்துருவுபல்பகழியால்
வான்விடும்பேயையும்வானிலுய்த்தனனரோ. (௧௭)

வாவருங்கவனமாக்கடுகுதேர்வலவர்போ
யேவருஞ்சிலைகள்போயிருபுயவலிமைபோ
யாவரும்பண்டுதாமிடுபுறமிட்டனர்
தேவருங்கண்டுவந்தலர்மழைசிந்தினார். (௧௮)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

ஏயவரிசிலைவீமனொடுபொருபோரிலைவரும்வென்னிட
மேயவிழியிலையாயபதிதருவீரர்பலரும்விகன்னனு
மாயமுதிர்சினமூளவிரைவுடன்மீளவரவபிமன்னுவுந்
தூயவரிசிலைவாளிகொடுதனதேர்கொடவனெதிர்துன்னினான். (௧௯)

மானவபிமனுஞானவிகனனைவாளிபலபலவேவவமே
லானவிரதமுமாவும்வலவனுமாழிகளுமுடனற்றபின்
றானவிரதமுறுமல்விசையொடுதத்தியருகுறுசித்திர
சேனனெனுமிளையோனதணிபெறுதேரின்மிசைகடிதேறினான். (௨0)

மற்றையிளைஞருமைத்துனனுமதமத்தகயபகதத்தனுஞ்
செற்றவிகனனுமுற்றுமிவனொடுசெற்றியமர்பொருகிற்றினார்
வெற்றியபிமனும்விற்கையுடனவர்விட்டகணைகள்விலக்கிமார்
பெற்றுகணையனைவர்க்குமவரவரெய்த்துவிழவிழமொத்தினான். (௨௧)

நெடியவரிசிலைநிமிரமுறைமுறைநெடியவிசையுடன்விசியுநா
ணிடியுமுகிலெனவலிலவெளிமுகடிடியவதிர்பெருநகையுடன்
கொடியவிகனனைமடியவவனுடல்கொடியகுடருகுகுருதிநீர்
வடியவிருபுயமொடியவுதையினன்வடியகணையொருநொடியிலே. (௨௨)

மன்னர்மணிமுடிமன்னுகனைகழன்மன்னனிளவல்விகன்னனை
முன்னருறுகணைபின்னர்விழவிழமுன்னரமர்பொரமுன்னினான்
பொன்னசலநிகரன்னபுயவபிமன்னுவொருவனுமின்னுநா
மென்னவமர்பொரவின்னரணுகுவதென்னவெருவினர்துன்னலார். (௨௩)

அன்றையமரினிலொன்றுபடவவரங்கமயர்வுறுபங்கமே
தென்றுமொழிவதுதந்தமனையுறவெந்தநிருபருமுந்நின்ஞர்
வென்றுபொருமுனைநின்றவபிமனைவிஞ்சுமுவகைகொணெஞ்சுடன்
சென்றுதழுவினரிந்துவரவெழுசிந்துவெனமகிழ்தந்தைமார். (உச)

கோடுமுதலொடுவாளிகளினிறவீழ்வபலகடகுஞ்சரங்
காடுபடுதுளவோன்முன்வரவிடுகஞ்சன்மழகளிறுக்குமா
லோடுகுருதியினூடுவடிவொருபாதிபுதைதருமோடைமா
நீடுமுதலையின்வாயின்வலிபடுநீலகிரியைநிகர்க்குமால். (உரு)

மாலுமதகடசாலநுதலுமருப்புமொருகையும்வதனமுந்
தோலுமொழியவுளானதசைபலபேய்கணுகர்தருதும்பிமா
நாலுமறைகளுமோலமெனவகல்வானமெனமுழுஞானமே
போலுமெனவொளிர்மேனியுடையுவர்போர்வையுரியதள்போலுமே. (உசு)

சேனையிபமுகமற்றுவீழ்வனசென்றுதிசைவழிகவ்விவிண்
போனவயவர்கள்படைகொடெதிரொதிர்பூசல்புரியிருபூதமுஞ்
சோனைமழைமுகில்வாகன்முதலசுரோசர்தொழுதுதிக்கவே
யானைமுகவசுரோசனுடனமராடுமுதல்வனையொக்குமே. (உஎ)

இமையமனுகினன்விசயன்மதலையையிற்றையமரினியுங்களுக்
கமையுமெனமுதலனிகமடையவுமணியுமவணிபர்நால்வருந்
தமையனொடுதமபதியினணுகினர்தங்கவினொடுகங்குல்போய்ச்
சிமையமணுகினன்மீளநனியிருள்சிதையவுதயதிவாகரன். (உஅ)

ஆறும்போர்ச்சருக்கமுற்றிற்று.

ஆ செய்யுள் - கஉரு.



பரமபதிதுணை.

கூர்மபுராணம்.

திருமால்கொண்டருளிய கூர்மமூர்த்தத்தினது நூல். புராணம் பழமை. இது பண்டுள்ளவரலாற்றின்மேல் பணபாகுபெயரும், இவ்வரலாறு தானமாகிய நூல்மேல்நிற்றலின் தானியாகுபெயருமாய்நிற்றலால் இருமடியாகுபெயர்;—ஆகவே இத்தொடர் செய்யுட்கிழமையென்னும் பொருட்பிறிதின் கிழமைப்பொருளில்வந்த ஆறும்வேற்றுமைத்தொகைநிலைதொடராய் நூற்குக்காரணக்குறியாய்வந்தது. கூர்மபுராணம் நிலைமொழி வருமொழி வடசொற்களாதலால் இயல்புபுணர்ச்சி. "கடலகமுழுதும் பொதிந்த பேழ்வயிற்றுக்கடவுண்மோட்டாமை யெம்பெருமான் - வடமொழிதொகுத்த தெய்வமாக்கதையை" என இந்நூலில்வருதல்காண்க. பண்டுள்ளவரலாறுகள் உலகத்தின் தோற்றமும், உலகத்தினொடுக்கமும் மன்வந்தரமும் முனிவர்களரசர்கள்மரபும சரிததிரமுமாம். இவ்வைந்துமே பதினெண்புராணங்களுக்கும் இலக்கணங்களாதலால் அவற்றுள் ஒன்றாகிய இக்கூர்மபுராணத்திற்கும் இவையே இலக்கணங்களாகக்கொள்க. "தோற்றமுலகமீண்டொடுங்கறுகடர்மன்வந்தரமுனிவர், ஆற்றலரசர்மர்பவர்தஞ்சரிதமென்னுமோரைந்தும், சாற்றும்புராணவிலக்கணமென்றறிஞருரைப்பர்" எனவும் "பிரமநற்பதுமம் வைணவஞ்சைவம் பேருலகேத்துபாகவதம், அருமறைதெளித்த பௌடிகம் நாரதிய மார்க்கண்ட மாக்கினேயம், கருதருமபொருள்சேர் பிரமகைவர்த்த மிலிங்கநல்வராகமெய்க்காந்தம், மருவுவாமனஞ்சொற் கூர்மமீண்மச்சங் காருடஞ்சிறந்தவாயவியம்" எனவும் ஐந்திலக்கணஙகளுககும் பதினெண்புராணங்களுககும் இந்நூலுள்வருதல்காண்க. இது கவியாற்செய்யப்படுதலிற் காவியமன்றோவெனின்; காவியமெனல் பொதுவகையாயினும் வேதத்தின் சாரமே பதினெண்புராணமாதலால் புராணமெனல் சிறப்புவகையாலெனக்கொள்க.

காப்பு. *

(இ-ள்.) வெள் நிலா கற்றை கான்று-வெள்ளியநிலவின்பெருக்கைவீசி, விளங்கும் ஓர் பிறை கோடு இன்றி-விளஙகாநின்ற ஒரு இளம்பிறையையொத்தகொம்பில்லாமல், எண்ணில்-நினைக்கில், ஓர்பாகம்-ஒருபாகமானது, கூந்தல் பிடி என-மத்தகத்தினீண்ட மயிரையுடைய பெண்யானையைப்போல், இருந்த ஆற்றால் - இருந்ததன்மையால், பெண் ஒரு பாகம் வைத்த - உமாதேவியாரை யொருபாகத்தில்வைத்தருளிய, பிஞ்ஞகன் உருவுகாட்டும் - (தமது) பிதாவாகிய சிவபெருமான் திருவுருததோற்றத்தை அடியார்க்குக்காட்டியருளும், அண்ணல் அம் களிநல்யானை - பெருமையையுடைய அழகிய மதச்செருக்கினையுடைய கல்லமூத்தபிள்ளையாரது, அடிமலர் சென்னி வைப்பாம்.- திருவடித்தாமரையை எமது சிரத்தின்மேற்சூடுவாம்.

ஓர்பால் பெண்யானை யிலக்கணமுடைமையால் பிறைக்கோடின்றிக் கூந்தற்பிடியென விருந்தவாற்றால் எனவும், சிவபெருமான் இலக்கணமுற்றும் தாம் வாய்த்திருத்தலால் பிஞ்ஞகன் உருவுகாட்டுமெனவுங்கூறினார்.

பூருவகாண்டம்.

முன்னுள்ள பெரும்பாகமென விரிதலால் இடவேறுபாட்டின்மேனின்ற இடைச்சொற்றொடரெனக்கொள்க. இரண்டும் வடசொற்களாதலால் "இடையுரிவடசொலி னியம்பியகொளாதவும்" என்றவிதியால்வந்த இயல்புபுணர்ச்சி.

இருபத்துமூன்றாவது.

இராவணன்வதை யத்தியாயம்.

அத்தியாயம் சிறுபாகம். இராவணனைவதைத்தலையுணர்த்திய சிறுபாகமெனவிரிதலால் மூன்றுசொல் இரண்டுசந்தியாக்கி, முன்னது அழிக்கப்படுபொருளில்வந்த இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடரும், பின்னது இயற்றப்படுபொருளில்வந்த உருபும் பயனுந்தொக்க இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடருமாகக்கொள்க. இராவணன் யாரையுமழச்செய்பவன் எனக்கூறுவர். இப்புராணத்தில் கயிலையின்கீழகப்பட்டு ஆயிரவருடம் அழுதலால் இராவணன் எனச் சிவபெருமான் பெயர்தந்தருளினர் எனக்கூறுதலால் இக்காரணம்பற்றிவந்ததெனக்கொள்க. அதனைப் பின்னர்க்காண்க.

1. (இ-ள்.) அள்ளல் கரும் சேறு இடை - அள்ளலாகிய கரியசேற்றினிடத்தில், பெடை ஓடு அலவன் ஆடும் சிறு குழியை - பெண் ஞண்டோடு ஆண் ஞண்டுகலந்து விளையாடும் சிறியகுழியினை, கள் வாய் உயிர்க்கும் - மதுவினைத்தமதுவாயாற் கொப்புளித்துமிழும், நறும் புன்னை தாது - நறுமணங் கமழும் புன்னைமலரின் மகரந்தங்கள், தூர்க்கும் கடல் கரை வாய் - தூர்க்கின்ற கடலின்கரையினிடத்து, வள்ளல் - இராமமூர்த்தியானவர், கடல் அம் தானை ஒடும் - கடல்போல அளவின்றிப் பரந்த அழகிய எழுபதுவெள்ளவானரசேனையோடும், இறுத்தல் கேட்டு - இடையறாது வசித்தலைக் கேள்வியுற்று, வல் அரக்கன் - வலிமைமிக்க இராவணனானவன், தெள்ளும் மறை நூல் துறை போய - வடித்தெடுத்த வேதநூலின் வழியே சென்ற, தேர்ச்சி துணைவர் ஒடும் - ஆராய்ச்சியையுடைய பெரியோர் முதலிய மந்திரிகளோடும், தேர்ந்தான் - (இனிநிகழுஞ்செய்தியை) ஆராய்ந்தான்.

பெரியோர் - மாலியவான் முதலாயினோர். மந்திரிகள் - மகோதரன்முதலியோர். அள்ளல் - அள்ளுதலாகிய பொருள்மேல்நிற்றலால் தொழிற்பெயர் இது குழம்பாகிய பொருள்மேல் தொழிலாகுபெயரும், அது உவமையாகுபெயராய்ச் சேற்றின்மேலும் நிற்றலால் இருமடியாகுபெயர். கருஞ்சேறு என்றது பழையசேறாதலால் அள்ளற்கருஞ்சேறு என்ற தொடர்பினமொழியை விசேடித்துவந்த இருபெயரொட்டுப் பண்புத் தொகைநிலைத்தொடர்.

புன்னை மலராகிய சினைப்பொருள்மேல் நிற்றலால் முதலாகுபெயர். உயிர்க்கும் எதிர்காலப்பெயரெச்சம், இது புன்னை யென்னும் வினைமுதற் பொருள் கொண்டது உயிர்பகுதி, கு சாரியை, ககரத்தோற்றமும் உகரக்கேடும்சந்தி, உம் எச்சவிகுதி. நெய்தல் நிலமாதலால் புன்னைமரங்களின் மிகுதியைக்கூறுதலின்மிகுதி நவிற்சியணி. (க)

2. (இ-ள்.) அன்னகாலை - அக்காலையில், வீடணன் - விபீஷணர், போர் அரக்கர் கோமான் முகம் நோக்கி - போர்த்தொழிலையுடைய இராக்ஷதர்களுக்கு அரசனாகிய இராவணனுடைய முகத்தைப்பார்த்து, கன்னி கற்பின் உரு அமைந்த - அழியாத கற்பே ஒருருக்கொண்டுவந்தாலொத்த, கமலம் தடம் கண் சானகியை - தாமரைமலர்போன்ற பரந்தகண்களையுடைய சீதாபிராட்டியை, இன்னே விடுதல் - இப்பொழுதே சிறையினின்றும் விடுதல், நெறி எனலும் - (நாம் உயிருய்யும்) வகையென்றுகூற, இலங்கை வேந்தன் - இலங்கைக்கரசனாகிய அவ்விராவணன், முனிந்து உரைப்ப - கோபித்துப் பழித்துக்கூறுதலால், மின்னு நகு வேல் வீடணன் - மின்னலைப்போலும்விளங்கும் வேலையேந்திய அவ்விபீஷணர், போந்து - அவ்வாலோசனைச்சபையினின்றுஞ் சென்று, இராமன் உழையில் - இராமமூர்த்தியினிடத்து, மேயினான் - (தமது மந்திரிகளோடு) அடைக்கலமடைந்தார்.

மந்திரிகளாவார் அநலன், அநிலன், அரன், சம்பாதி. வீடணன்-விபீஷணன் என்னும் வடமொழியின்திரிபு. பார்ப்போர்க்குப் பயங்கரஞ் செய்யுந் தோற்றமுடையவன். சானகி - சனகன்புத்திரி சானகி, இது தத்திதாந்தபதம். அன்ன அகரச்சுட்டின்திரிபு. அந்த என்றாற்போல மருஉ எனினும் அமையும். இனி காலப்பொருள்மேல் நின்ற இடைச்சொல் ஈறுதொக்கு இன்னண நின்றது. எனலும் இடைச்சொல்லடியாகப் பிறந்த வினையெச்சம் என் இடைச்சொற்பகுதி, அல் சாரியை, உம் எச்சவிகுதி. இது நிகழ்காலத்தின்மேல்நின்று, முனிந்து என்னும் பிறவினைமுதல் இறந்தகால வினையெச்சத்தின் முதனிலைகொண்டது. முனி பகுதி, ந் சந்தி, த் இடைநிலை, உ எச்சவிகுதி. உரைப்ப காரணப்பொருள்மேல் நிற்றலால் இறந்தகாலவினையெச்சம் உரைபகுதி, பகரமெய்விரித்தல் விகாரம், பகரமெய்சந்தி, அ எச்சவிகுதி. போந்து இறந்தகாலவினையெச்சம் போ பகுதி. மேயினான் மே பகுதி, ய் சந்தி, இன் இறந்தகால விடைநிலை, ஆன் முற்றுவிகுதி, பகுதியல்லாதன இடைச்சொற்களாதலால் யகரந்தோன்றியது. விபீஷணன் இராமனிடத்தில் அடைக்கலம் அடைந்தான் என்பது "கரங்கண்மீச்சுமந்துசெல்லுங் கதிர்மணிமுடியன்கல்லும், மரங்களுமுருகநோக்குங்காதலான்கருணைவள்ளல், இரங்கினனோக்குந்தோறு மிருநிலத்திறைஞ்சுகின்றான், வரங்களின்வாரியன்னதாளிணைவந்துவீழ்ந்தான்" எனக்கம்பராமாயணத்தில் வருதல்காண்க. (உ)

3. (இ-ள்.) கல்லும் கரும் கண் பெண் ஆக - கருங்கற்பாறையும்கரியகண்களையுடைய ஓர்பெண்ணாக, நடந்த கழல் கமலம் காலோன் - சென்ற வீரகண்டைகட்டிய தாமரைமலர்போன்ற பாதங்களையுடைய இராமமூர்த்தி, மல் ஆர் தடம் தோள் வீடணனை - மற்போர் நிறைந்த உயர்ந்ததோளையுடைய விபீஷணரை, மதி நூல் துறை போம் மாருதி தன் - அறிவுநூலின்வழியேசென்ற அநுமனுடைய, சொல்லால் தேறி - உறுதிச் சொல்லால் (அவர்செய்தி

யைத்) தெளிந்து, இலங்கை நகர்க்கு இறை நீ என்ன - இனி இலங்கைநகரத்திற்கு அரசன் நீயேயென்று, சுடர் பரப்பி - கிரணத்தைவீசி, எல்லோன் போல - சூரியனைப்போல, இருள் துருவும் - இருளையோட்டும், எரி மா மவுலி சூட்டினான் - விளக்கம் அமைந்த பெரியகிரீடத்தைச் சூட்டினார்.

கருங்கற்பாறையாகக் கிடந்த அகலிகைசாபத்தைப் போக்கினமையால் கருங்கட் பெண்ணாக நடந்த என்றார். இறைநடுநிற்றல் அதுதொழிலாகுபெயரா யரசன்மேல்நின்றது. இறு பகுதி, உகரக்கேடுசந்தி,ஐ தொழிற்பெயர் விகுதி. துருவல் தேடுதல். ஓட்டுதல் உரியபொருளாதல் துருவல் என, ஒப்புடைப்பொருள்மேல்தந்து கூறியது குணவணி. துருவும் என்னும் எதிர்காலப் பெயரெச்சம் மவுலி யென்னும் வினைமுதற்பொருள்கொண்டது துருவுபகுதி மருத்தின்புத்திரன் மாருதி, இது தத்திதாந்தபதம். (௩)

4. (இ-ள்.) உரவு திரை நீர் கடல் அடைப்பான் - பெரிய அலையையுடைய நீர்மயமாகிய கடலில் சேதுபந்தஞ்செய்ய, வருணன் பழிச்சி - வருணனைத் துதித்து, உயர் கரையின் - உயர்ந்த கடற்கரையின்கண், விரியும் தருப்பை சயனத்தில் மேவி - பரப்பிய தர்ப்பாசனத்திலிருந்து, ஓர் ஏழ் நாள் நோற்ப - ஏழுநாள் தவஞ்செய்யவும், வருணன் போதந்திலன் ஆக - அவ்வருணன் வராதிருக்க, வெகுண்டு - இராமமூர்த்தி கோபித்து, வரி வெம் சிலையின் ஒடும் - கட்டமைந்த கொடியவில்லோடும், புருவம் சிலை கால் குனித்திடலும் - தமது புருவமாகிய வில்லின்காலையும் வளைக்க, ஓர் ஏழ் புணரியும் புகைந்த - எழுகடலும் கோபத்தீப்பற்றிப் புகைந்தன.

திரை வினைமுதற்பொருளில்வந்த, இகரவிகுதியொடு புணர்ந்து குன்றியதொழிற்பெயர். அடைப்பான் எதிர்காலவினையெச்சம் அடை பகுதி, பகரமெய் சந்தி, பான் எச்சவிகுதி. பழிச்சி, மேவி, வெகுண்டு இறந்தகாலவினையெச்சங்கள் பழிச்சு, மேவு, வெகுள் பகுதிகள். நோற்ப நிகழ்காலவினையெச்சம் நோன்மைபகுதி, ஈறுகெடுதலும் லகரம் றகரமாகத்திரிதலும் சந்தி, பகரமெய்விரித்தல் விகாரம், அ எச்சவிகுதி. புருவத்தை வில்லாக உருவகஞ்செய்து வெஞ்சிலையோடு கூட்டிக் குனித்திடலும் என்றமையால் இது சமுச்சயவணி. போதந்திலன்போ என்னு முதனிலைத்தனி வினைப்பெயர் தன்னை வினைப்படுத்தவந்த தா என்னும் வினைப்பகுதியொடு கூடி ஒருசொற்றன்மைப்பட்டுநின்ற போதா வினைப்பகுதி, முதல் குறுகல் விகாரம், நகரமெய் சந்தி, தகரமெய் இடைநிலை, இல் எதிர்மறையுருபு, அனைத்தும் ஒருபகுதி,அன் விகுதி. நிகழ்காலத்தில் போதருகின்றிலன் எனவரும். ஆக என்பது எச்சப்பொருளைத்தரும் இடைச்சொல்லாதலால் போதந்திலன் என்னும் வினைமுற்றை எச்சப்பொருளாக்கியதெனவறிக. ஒறுத்தல் தொழிற்பெயர் ஒறுபகுதி "ஊழிசென்றதுமொப்பதாமொருபகலவையோர், ஏழுசென்றனவந்திலனெறிகடற்கிறைவன்" எனக் கம்பராமாயணத்தில் வருதல்காண்க. (௪)

5. (இ-ள்.) கரை கொன்று இரங்கு கடல் புகைய - கரையொடு மோதியொலிக்குங் கடல் புகைந்தெழ, வருணன் வெருவி - வருணன் அஞ்சிவந்து, காகுத்தன் விரை மென் கமலம் தாள் பணிந்து - இராமமூர்த்தியினது வாசமிக்க மெல்லிய தாமரைமலர்போன்ற திருவடியையவணங்கி, வேலை அடைப்

பான் உரைத்து ஏக - சமுத்திரத்திற் சேதுபந்தஞ் செய்யச்சொல்லிப்போக, செரு ஏக்கறவு அற்று உயர் திணி தோள் - போர்த்தொழிலிற் குறைதயர்ந்த திண்ணியதோளையுடைய, செம்மல் நளனால் - பெருமையமைந்த வாநரத்தச் சனால், அணை கட்டி - சேதுபந்தஞ்செய்து, பரிதி மான் தேர் எதிர் தடுக்கும் - சூரியனுடைய குதிரைபூண்ட தேரை எதிரேதடுத்துயர்ந்த, சுவேத வரையின் பால் இறுத்தான் - (சிகரத்தையுடைய) சுவேதமலையின் பக்கத்தில் வசித்திருந்தார்.

சுகுமரபில்வந்தவன் காகுத்தன், இது தத்திதாந்தப்தம். வெருவி இறந்தகாலவினையெச்சம் வெருவுபகுதி. ஏக்கறவு தொழிற்பெயர் ஏக்கறுபகுதி, உகரக்கேடு சந்தி, உ தொழிற்பெயர் விகுதி, வகரமெய்சந்தி "உடையார் முன்னில்லார்போலேக்கற்றும்" என்னும்திருக்குறட்குப் பரிமேலழகருரையிற்காண்க. இறுத்தான் உயர்திணை யாண்பாற்படர்க்கை வினைமுற்று இறுபகுதி, த் சந்தி, த் இறந்தகாலவிடைநிலை, ஆன் ஆண்பால்விகுதி. பரிதிமண்டலத்திற்கும் சுவேதமலைக்குந் தொடர்புகூறினமையால் தொடர்புயர்வு நவிற்சியணி "நவையறுமுலகிற்கெல்லாநாயகநீயேசீறிற், கவையகின்சரணமல்லாற் பிறிதொன்றுகண்டதுண்டோ" எனக்கம்பராமாயணத்தில் வருதல்காண்க.

6. (இ-ள்.) இறுத்த தானை இடை புகுந்த-அங்குவசித்த எழுபதுவாநரசேனை வெள்ளத்ினடுவில் தமது உருவொளித்துவந்த, சுகசாரணரை எதிர் பற்றி - சுகன் சாரணனென்னும் தூதுவரை எதிர்ந்து பிடித்து, கழல் செறித்த கால் வீடணன் போய் - வீரகண்டைகட்டிய காலையுடைய விபீஷணர் சென்று, செம் கண் கரியோன் முன் உய்ப்ப - தாமரைபோலச் செவந்த கண்களையுடைய கரியநிறத்தையுடைய இராமமூர்த்தியின் முன்னேவிட, ஒறுத்தல் தீது - (தூதாகவந்தவரை) தண்டித்தல் கொடியசெய்கை, விடுத்தி என - (அவர்களை வருத்தாது) விடுவிப்பா யென்றுகூற, விடுப்ப - (பணித்த அவ்வாறே) விடுக்க, ஒற்றர் பணிந்து ஏகி - தூதாகவந்த அச்சுகசாரணர்கள் வணங்கிச்சென்று, கறுத்த நெஞ்சன் - கோபித்த மனத்தையுடைய, இலங்கையர் கோன் அறிய - இராவணன் தெரிந் துணர, அனைத்தும் கட்டு உரைத்தார் - (நடந்தசெய்தி) முழுமையும் விடாது தொகுத்துச்சொன்னார்கள்.

சுகசாரணர் "சிலவிகாரமாம்" என்றவிதியால் நிலைமொழி யீறுகெட்டும் "உயர்திணையும்மைத் தொகைபலரீறே" என்றதனால் பலர்பால் விகுதி பெற்றும் வந்தன. இறுத்த, செறித்த, கறுத்த இவை இறந்தகாலப் பெயரெச்சங்கள். இறு, செறி, கறு பகுதிகள். முதலிலும் இறுதியிலுமுள்ளபெயரெச்சங்கள் வினைமுதற்பொருளையும் இடையிலுள்ள பெயரெச்சம் செயப்படுபொருளையுங்கொண்டன. விடுத்தி முன்னிலையொருமை யெதிர்காலப் பிறவினைமுற்று விடுபகுதி, தகரத் தோற்றமும் உகரக்கேடும் சந்தி, து பிறவினை விகுதி, அனைத்தும் ஒருபகுதி, இ முன்னிலையொருமை விகுதி. தன்வினையில் விடுதியெனவரும். (சா)

7. (இ-ள்.) கரிய திரை வாரிதி செவப்ப - கரியகடல் செந்நிறயடைய, கடை கண் சிவந்தோன் தனை காண்பான் - கடைக்கண்சிவந்த இராமமூர்த்தியைக்காண, திருகு சினத்த வாள் அரக்கன் - (பகைவரிடத்து) மாறுபட்ட

கோபத்தையுடைய வாளையேந்திய இராவணன், செம் பொன் மணி கோபுரம் இவர - செவந்த பொற்கட்டில் இரத்தினமழுத்திய கோபுரத்தின்மேல் ஏற, வரை கொன்று உயர்ந்த - அட்டகுலபருவதங்களை வென்று செருக்கியுயர்ந்த, மணி தடம் தோள் அரக்கன் - இரத்தினமழுத்திய பரந்ததோளையுடைய இராவணனை, காண்பான் - காண, மணிவண்ணன் - நீலமணிபோலநிறம் வாய்ந்த இராமமூர்த்தி, இரவி தடம் தேர் செலவு அகற்றும - சூரியனது பரந்ததேர் விரைந்துசெல்லும் செலவினையொழிக்கும், சுவேத வரையின் மீது இவர்ந்தான் - (சிகரத்தையுடைய) சுவேதமலையின்மேலேறினார்.

அட்டகசங்களோடு போர்செய்து அவற்றின் கொம்பு முறிந்ததிட்டத்தில் இரத்தினமிழைத்திருத்தலால் மணிதடந்தோள் என்றார். வாரிதி நீர்பிறப்பது என்னும் பொருள்மேல் நிற்றலால் காரணப்பெயர். கரிய, சினந்த பண்படியாகப்பிறந்த குறிப்பு வினைபெயரெச்சங்கள். காண்பான் எதிர்காலவினையெச்சம் காண் பகுதி, பான் எச்சவிகுதி. இவரநிகழ்காலவினையெச்சம் இவர் பகுதி, உடையவன் தொழிலை யுடைமைமேலேற்றிச் சினத்தவாள் என்றார். கரியதிரை வாரிதிசெவப்ப என்றது சொன்முரணணி. வாரிதிசெவப்பக்கடைக்கண்சிவந்தோன் என்ற குறிப்பால் நிலைகலக்குதல் என்னும் பொருள்தோன்றுதலால் குறிப்பணி. செவ பண்படியாகப்பிறந்த தெரிநிலை வினைப்பகுதி, சிவ உரிச்சொல்லடியாகப் பிறந்த வினைப்பகுதி. (எ)

8. (இ-ள்.) வெள்ளிப் பொருப்பை எடுத்த புயன் - வெள்ளிமலையை வேரோடு பறித்தெடுத்த புயத்தையுடைய இராவணன், இவன் ஆம என்ன-(இங்குத்தோன்றும்) இவன்றானென்று, வீடணன் - விபீஷணர், போர் வலாற்கு உரைத்தல் கேட்டிடலும் - போர்த்தொழிலில் மிக்க இராமமூர்த்திக்குச் சொல்லுதலைக்கேட்ட அப்பொழுதே, மணி கோபுரத்தின் மிசை தாவி-இரத்தினமழுத்திய இலங்கைநகர்க் கோபுரத்தின்மேற்றாண்டி, களவம் கொடிய அரக்கன் ஒடும் - வஞ்சகத்தையுடைய கொடிய இராவணனோடும், செரு ஏற்று - போர்செய்து, அவன் தன் கதிர் முடிகள் தள்ளி - அவனுடைய விளக்கமமைந்த பத்துக் கிரீடங்களையும் பறித்து, சயம்கொண்டு - வெற்றிகொண்டு, இரவி காதலன் - சூரியன் புத்திரனாகிய சுக்கிரீபன், இராமன் அடி தாழ்ந்தான் - இராமமூர்த்தியின் திருவடியை வணங்கினன்.

தாவி இறந்தகால வினையெச்சம். தா பகுதி, வகரமெய்சந்தி, இ எச்சவிகுதி. வெள்ளிப்பொருப்பை எடுத்த எனப் புயத்தின் மிகுதியைக் கூறினமையால் வீறுகோளணி. கயிலையெடுத்தமைபின்னர் வருதல்காண்க. "கொழுமணிமுடிகடோறுங்கொண்டனகுழுவின்கூட்டம், அமுதருகுறுகின்றனடித்தலமதனிற்சூட்டித், தொழுதயனணிநின்றன" எனக்கம்பராமாயணத்தில் வருதல்காண்க. (அ)

9. (இ-ள்.) விலங்கல் - மலையையொத்த, திணிதோள் அங்கதனை - திண்ணியதோள்களையுடைய அங்கதனை, இராமன் தூது விடுப்ப - இராமமூர்த்தி தூது அனுப்ப, அயன்-அந்த அங்கதன், இலங்கை நகரின் இடை எய்தி-இலங்கைநகரத்திற்சென்று, இகல் வேல் (பகைவருடன்) போர்செய்யும் வேலையேந்திய, அரக்கன் முன் உறலும் - இராவணன்முன்போயிருக்க, அலங்கல்

வடிவாள் - வெற்றிமாலையையணிந்த வடித்தவாளையேந்திய, இராவணனும் - அந்த இராவணனும், நீயாரை கொல் என - நீயாரென்றுவினவ, உன்புலன்கள் தேய - உனது இந்திரியங்கள் தத்தநிலையினின்றுகெட, வால் நுதியில் - (தனது) வாலினுதியால், பிணித்தோன் புதல்வன் என - கட்டியவாலியினுடைய புத்திரனென்று, புகன்றான் - சொன்னான்.

வாலதியில் எனப்பாடங்கூறி வாலினாலெனப்பொருள்கூறுவாருமுண்டு. அங்கதன் பகைவருடலையழிப்பவன். அலங்கல் அசைதல் இது தொழிலாகுபெயராய் மாலையின்மேல் நின்றது. உறலும் நிகழ்காலவினையெச்சம் உறு பகுதி, உகரக்கேடு சந்தி, அல் சாரியை, உம் எச்சவிகுதி, யாரை ஐ சாரியை யிடைச்சொல், புகன்றான் இறந்தகாலவினைமுற்று புகல் பகுதி. வாலி சிவபூசையிலிருக்குஞ் சமயத்தில் இராவணன் பின்வந்திறுக்கிக் கட்டிச் சேர்க்க வாலி தன்வாலில் இறுகக்கட்டிச் சிவபூசைமுடித்தான் என "வெய்யவாளரக்கன் கையிருபதினால் வீக்கவும்விறன்மிகுவாலி, கையினாலவனைநெருக்கெனவிறுக்கி வாலினாற்கடிதுறக்கட்டி, மையணிகண்டன்பூசனைமுடித்து" என உத்தராராமாயணத்தில் வருதலகாண்க. (கூ)

10. (இ-ள்.) என்றல் ஓடும் - என்று அங்கதன்கூற, இலங்கைநகர் எரித்த கவி - இலங்கைநகரத்தையெரித்த குரங்கு, யாண்டு உளது என்ன - எவ்விடத்திலுள்ளதென்று வினவ, உன் தன் சிறுவன் - உனதுபுதல்வனாகிய இந்திரசித்து, வீக்க அகப்பட்ட - கட்ட அக்குரங்கு அகப்பட்ட, இழிவின் - இழிசெயலால், உயர்வாநரத்தலைவர் - உயர்ந்தவாநரசேனாபதிகள், உளம் கொதித்து - மனங்கொதித்து, கன்றி கடிய - கோபித்துத்துரத்த, கானத்து இடை ஒளித்து - காட்டிலோடியொளித்து, அந்த புன் குரங்கு - அந்த அற்பக்குரங்கு, பொன்றியதுவோ - மடிந்ததோ, உய்ந்ததோ - அன்றிச்சீவித்துள்ளதோ, அறியேன் - (யான் ஒன்றும்) அறியேன்.

வாநரம் நரனையொப்பது. உன் எனத்திரிந்துநின்ற நீயென்னு முன்னிலையொருமைப்பெயரோடு தன் எனத்திரிந்துநின்ற படர்க்கைக்குரியதான் என்னுஞ்சாரியை நின்றது இடவழுவமைதி. கன்றி இறந்தகாலவினையெச்சம் கன்று பகுதி, உகரக்கேடுசந்தி, இ எச்சவிகுதி, பொன்றியது, உய்ந்தது இறந்தகாலவினைமுற்றுகள் பொன்று பகுதி, னகரவீறுதொக்குநின்ற இன் இறந்தகால இடைநிலை, யகரமெய்சந்தி, அ சாரியை, து ஒன்றன்பால்விகுதி, வருமொழிமுதலுயிர் வரக்குற்றியலுகரம் கெடாதுநின்றது "உயிர்வரினுக்குறள் மெய்விட்டோடும்" ஓடும் என்ற இலேசால். உய் பகுதி, ஓகாரங்கள் ஐயப்பொருளன. (க0)

11. (இ-ள்.) பொற்புக்கு அரசை - அழகினுக்கு அரசியாகிய சீதாபிராட்டியை, விடுத்தி என புகல - விடுவிப்பாய் என்று அங்கதன்சொல்ல, மறுத்து - இகழ்ந்துமறுத்து, இப்புன்குரங்கை - இந்த அற்பக்குரங்கினை, மல்போர் அரக்கர் - தன் அருகினின்ற மல்யுத்தத்திற்சிறந்த அரக்கரை (நோக்கி) கோறிர் என - கொல்லுங்களென்று ஏவ, வந்தோர் - போரிற்குவந்த அந்த அரக்கர்களுடைய, ஆவி அறமாய்த்து - உயிரைப்பற்றறக்கெடுத்து, வெற்பு ஆர் - மலையையொத்த, தடம் தோள் அங்கதனும் - உயர்ந்ததோளையுடைய அங்கத

னும், இராமன் உழை இன் - இராமமூர்த்தியினிடத்து, விரைவினிற்போய்-விரைந்துசென்று, கல்பாடு அழித்த - அட்டகுலபாவதங்களின் பெருமையைக்கெடுத்த, புயத்து அரக்கன் - புயத்தையுடைய இராவணனது, செய்தி அனைத்தும் - செய்திமுழுமையும், சட்டெனத்தான் - விடாதுதொடுத்துக்கூறினான்.

கோறிர் முன்னிலைப்பன்மை யேவல்வினைமுற்று கொல் பகுதி, முதல் நீளுதல் விகாரம், து சாரியை, லகரக்கேடுந் தகரத்திரிபும சந்தி, இர் பன்மையேவல் விகுதி. ஆர் உவமை யுருபிடைச்சொல். (கக)

12. (இ-ள்.) செம் கண புலிபோத்து அன்ன - சிவந்தகண்களையுடைய புலிப்போத்தையொத்த, அங்கதன் செப்பும் எல்லை - அங்கதனகூறுங்காலத்தில், கங்கைக்கு இறைவன் - கங்கைத்துறைக்குத் தலைவராகிய இராமமூர்த்தி, துணைவில்-விரைந்து, கடல் தானை சூழ - கடல்போலப்பரந்த எழுபது வானரசேனைவெள்ளம்புடைசூழ, வெங்கண்கொடியோர் - அஞ்சாமையையுடைய இராவணன்முதலியோர், மிடைகின்ற - நெருங்கிய, இலங்கைமூதூர்-இலங்கையாகிய தொன்றுதொட்டுள்ள நகரை (சூழ்ந்த) மங்குல் - மேகங்கள், புறம்போகு - புறத்திற்செல்ல, உயர் இஞ்சி - (மேகமண்டலத்துக்கும்) அப்பாற்சென்றமதிலை, வளைந்துகொண்டான் - முற்றுகைசெய்தார்.

அன்ன உவமவுருபிடைச்சொல்லடியாகப்பிறந்த குறிப்புவினைப்பெயரெச்சம் அன் இடைச்சொற்பகுதி, னகரமெய்சந்தி, அ எச்சவிகுதி, போகு என்னும் வினைப்பகுதி வினையெச்சப்பொருள்மேல்நின்றது. வளைந்துகொண்டான். தற்பொருட்டில்வர்த வினைமுற்று-வளை பகுதி, து சாரியை, நகரத்தோற்றமும் ளகரம் ணகரமாகத்திரிதலும் சந்தி, டகரமெய் இடைநிலை, ஆன் உயர்திணையாண்பால்விகுதி. (கஉ)

13. (இ-ள்.) கரை கொன்று இரங்கு - கரையொடுமோதியொலிக்கும், கடலின் - கடல்போல, கவி வெள்ளம் எய்தி - எழுபதுவானரசேனைவெள்ளம், புரிசைப்புறத்தின் இறுத்து - மதிலின்புறத்தில் முற்றுகைசெய்து, ஆர்க்கும் ஓசை கேட்டு - கோஷிக்கும் வீரகோஷத்தைக்கேட்டு, வரைகொன்ற - மலையைவென்ற, திண்தோள் அரக்கன் - திண்ணியதோள்களையுடைய இராவணனுடைய, திறல் மள்ளர்யாரும - வெற்றியையுடைய வீரர்கள் எல்லாரும், பொரு வெம் சிலை கை - போர்செய்யும் கொடியவில்லையேந்திய கையையுடைய, பெரியோன் ஓடும் - இராமமூர்த்தியோடும், போரின் ஏற்றார்-போர்த்தொழில்செய்ய எதிர்ந்தார்கள்.

யார் என்பதில் யா என்னும் வினாவிடைச்சொல் எல்லாம் என்னும் பொருள்மேல் நின்றது. இரங்குகடல் பொருசிலைவினைத்தொகை நிலைத்தொடர்கள். (கங)

14. (இ-ள்.) கம்பம் ஆர் களிறு-கம்பத்திற்கட்டிய யானைச்சேனையையுடைய, பிரசங்கன் கனன்று செல்ல - பிரசங்கனென்னும் அரக்கன் கோபித்துப் போர்முகத்துவர, சம்பாதி-சம்பாதியென்னும் வானரசேனைத்தலைவன், வெற்பு ஒன்று எறிந்து - மலையொன்றைவேரொடுபறித்துவீசி, அவன் தனை மாய்த்தான் - அந்தப்பிரசங்கனைக்கொன்றான், வம்பு ஆர் மலர் தாருவின்

வாசநிறைந்த மலரையுடைய விருக்ஷத்தால், மாருதிபோதல் ஓடும்-அனுமன் அடிக்க, சம்புமாலி - சம்புமாலியென்னும் அரக்கன், வெம்பா உயிர்போகி-மனமொந்து உயிர்கழிந்து, விழுந்தனன்-நிலத்தின்மேல்விழுந்தான்.

கம்பம் ஈறுதொக்குநின்ற மகரமெய்யின்மேல் வருமொழிமுதல் உயிரேறிக் கம்பார் எனநின்றது. கனன்று வெம்பா இறந்தகாலவினையெச்சங்கள் கனல் பகுதி, லகரம் னகரமாகத்திரிதல் சந்தி, றகரமெய் இறந்தகால இடைநிலை, உ எச்சவிகுதி. வெம்பு பகுதி, உகரக்கேடுசந்தி, ஆ இறந்தகாலவினையெச்சவிகுதி. (கச)

15. (இ-ள்.) வென் வேல் - வெற்றியையுடைய வேலையேந்திய, பிரதபன் தன் உயிர் வீய-பிரதபன் என்னும் அரக்கனுடைய உயிர் அழிய, வெம்போர்-கொடியபோர்த்தொழிலையுடைய, ஒன்னார் வணங்கும் - பகைவர்வணங்கும், நளன் - நளனென்னும் வானரத்தலைவன, ஓர் கதை கொண்டு மாய்த்தான்-ஒருதண்டாயுதத்தால் அவனைக்கொன்றான், கல் நாடு - மலைவிரும்பும், திண் தோள் தபனன் தனை-திண்ணிய தோளையுடைய தபனனென்னும் அரக்கனை, கேசன் காய்ந்து-கேசனென்னும் வானரசேனைத்தலைவன் கோபித்து, பொன் நாடு மாதர்-விண்ணுலகத்திலுள்ள தெய்வப்பெண்களினது, நலம் கூட்டுண-இன்பத்தைக் கொள்ளைகொண்டு அநுபவிக்க, போக்கினான் - செலுத்தினான்.

வென் வெற்றி. இவ்வுலகத்தின் இன்பத்தினும் தேவருலகத்தி னின்பமிக்கதாதலால் கூட்டுண என்றார். கூட்டுண காரியப்பொருள்மேல் நிற்றலால் எதிர்காலவினையெச்சம் கூட்டுண் பகுதி, அ எச்சவிகுதி. போதல் வினைக்குத் தபனனும் போக்குதல் வினைக்குக் கேசனும் வினைமுதல்களாதலால் போக்கினான் என்பது இருவரின் முடியும் ஒருபிறவினைமுற்று. (கரு)

16. (இ-ள்.) வில் நுங்க வீங்கு-வில்திளைக்கப்பருத்த, திணி தோள் உடை-திண்ணியதோளையுடைய, மித்திராக்கன் தன் - மித்திராக்ஷனென்னு மரக்கனுடைய, அங்கம்வீழ - சரீரம் நிலத்தில்மேல்வீழ, விறல் வீடணன்-வெற்றியையுடைய விபீஷணர், தண்டின் மாய்த்தான் - தமது தண்டாயுதத்தினால் உயிர்வாங்கினார், மன்னற்கு இளையோன் - இராமமூர்த்திக்கு இளைய இலட்சுமணர, விருபாக்கனை-விருபாக்கனென்னு மரக்கனை, வாளின் ஒன்றால்-ஒருவாளால்வெட்டால், தென் அம்புலத்தோர்-தென்புலத்தோர், விருந்து ஏற்ப செலுத்தினான் - வந்து விருந்தெதிர்கொள்ள அனுப்பினார்.

நுங்குதல் விழுங்குதல், விருபாக்கன் வேறுபட்ட பார்வையையுடையவன். வில்லிற்கு விழுங்குதலில்லாமையால் விட்ட இலக்கணை. ஏற்ப எதிர்காலவினையெச்சம் ஏல் பகுதி, பகரமெய்விரித்தல் விகாரம், லகரம் றகரமாகத்திரிதல் சந்தி, அ எச்சவிகுதி. (கசு)

17. (இ-ள்.) வெயில் கான்று - கிரணத்தைவீசி, இருள் சீத்து எழு-இருளையோட்டியெழுந்த, வெம் கதிர் செல்வன் மைந்தன் - சூரியன்புத்திரனாகிய சுக்கிரீபன், அயில் வேல் பிரகத்தனை - கூரியவேலையேந்திய பிரகத்தனென்னும் அரக்கனை, வெம் களத்து ஆவி உண்டான் - போர்க்களத்தில் அவன்பிராணனைச்செகுத்தான், துயிலாதவென்றி-ஊக்கமிகுந்த வெற்றியையுடைய, மயிந்தன்-மயிந்தனென்னும் வானரசேனாபதி, பொருதோமரத்தால் - போர்

செய்தற்குரிய எறியையுதநதால், வயம் வெம் சிலை - வெற்றியையுடைய கொடியவில்லையேந்திய, வச்சிரமுட்டி-வச்சிரமுட்டியென்னும் அரக்கனை, வாகைகொண்டான்-வெற்றிகொண்டான்.

மைந்தன் பிதாவின் வன்மையாயுள்ளவன் எனநிற்றலால் காரணப்பெயர். மைந்து (வன்மை) பகுதி. கானறு, சீத்து, இறந்தகாலவினையெச்சங்கள்; கால் பகுதி, லகரம் னகரமாகததிரிதல் சந்தி, றகரமெய் இடைநிலை, உ எச்சவிகுதி, சீ பகுதி, துயிலாத எதிர்மறைப்பெயரெச்சம் துயில் பகுதி, ஆ எதிர்மறைவிகுதி, அனைத்தும் ஒருபகுதி, து சாரியை, உகரக்கேடுசந்தி, அ எச்சவிகுதி, வெயில்கான்ற இருள் சீந்து, துயிலாத வெனறி பொருள்கட்கு உரியவினை கூறாது ஒப்புடைவினை கூறியது குணவணி. (கஎ)

18. (இ-ள்.) கங்கைநாடன்-இராமமூர்த்தி, அழல் வெம் பருவாய் - நெருப்பைக்கொப்புளிக்குங் கொடியபிளந்தவாயையும், திறல் - வெற்றியையுமுடைய, அக்கினிகேது - அக்கினிகேதுவும், ஓங்கும் எழுவென்ற - உயர்ந்த தூணினைவென்ற, திண் தோள் வலி-திணணியதோளின்வன்மையையுடைய, ரச்சமிகேது-ரச்சமிகேதுவும், ஒன்னார் தொழும் - பகைவர்வணங்கும், எச்சகோபன்-எச்சகோபனும, அவிர் ஆழி-விளங்குஞ்சக்கரத்தையேந்திய, சுதந்தன் என்னும் - சுதந்தனுமாகிய, கழிவெம சினத்தார்-மிகுந்தகொடியகோபத்தை யுடையவரது, உயிர் உண்டனன-உயிரைக்கொள்ளைகொண்டார்.

உயிரைப்போக்குதலின்றி உண்ணுதலின்மையால் விடாத ஆகுபெயர். குணவணி யெனினும ஒக்கும். (கஅ)

19. (இ-ள்.) சுடுவெம் சினத்த - சுட்டுவருத்துங் கொடியகோபத்தையுடைய, வயம் மீளி - வெற்றிமிக்க மீளிப்பருவத்தையுடைய, துமித்தன் என்போன் - துமித்தனென்னும் வாநரசேனாபதி, அடல் கூர் அசனி - வலிமைமிகுந்த இடியேறனையொத்த, பிரபன் தனது ஆவிகொண்டான் - பிரபனது உயிரைக் கொள்ளைகொண்டான், கடலும் சுவற்றும் - கடலையும் வற்றச்செய்யும், கனல் வெம் கண - வடவாக்கினிபோன்ற கொடியகண்களையுடைய, குசேனன்-குசேனனென்னும் அரக்கன், வெய்யமிடல்-கொடிய வன்மையையுடைய, வித்துன்மாலி உயிர் - வித்துன்மாலி யென்னும் அரக்கனுயிரை, விண் அகத்து ஏற்றினன் - வீரசுவர்க்கத்தில் குடியேற்றினன்.

மீளி பாலபருவத்துக்கு மேற்பட்டபருவமாதலால் மீளிப்பருவம் என்றும. சுவற்றும் என்னும் பிறவினைப்பெயரெச்சம் கண் என்னும் வினைமுதற்பொருள்கொண்டது. சுவற்று பிறவினைபபகுதி. தனவினையில் சுவறு எனவரும். வெய்ய பண்படியாகப்பிறநத குறிப்புவினைப்பெயரெச்சம். வெம்மை பகுதி, மீளித்துமித்தன் எனப்பாடங்கொள்க. (கக)

20. (இ-ள்.) இ ஆறு - இந்தவகையால், இராமன் - இராமமூர்த்தி, எரிநும்பி இலங்கு-அக்கினியைச்சிந்திவிளஙகும், கூவை வேல் - கூரியவேலையேந்திய, வெம வாய அரக்கர்தம்மை - கொடிய அரக்கர்களை, வில்கொடு நூழிலாட்டும் - தாமேந்தியவில்லால் நூழிலாட்டுச்செய்யும், அவ்வேலை தன்னில்-அக்காலையில், திரைவேலையின்-அலையையுடைய மேலைக்கடலில், ஆழிவெய்யோன் - ஒருசக்கரத்தையுடைய சூரியன், செய்வான் - செவ்வானமானது, களம்

போல் குடபால் உற-போர்க்களத்தைப்போல மேலைத்திசையில் பரவ, சென்றுசேர்ந்தானை - அத்தமித்தான்.

இராமன் யாவரையுஞ் சந்தோஷிப்பிக்கிறவன். நூழிலாட்டு சேனையோட வேல் எறிதல். எரிவினைமுதற்பொருளில்வந்த இகரவிகுதியொடுபுணர்ந்து குறைந்தொழிற்பெயர். தும்மி இறந்தகாலவினையெச்சம தும்மு பகுதி, உகரகேடு சந்தி, இ எச்சவிகுதி, எரிதுபமி குணவணி. செவ்வானகளம்போல் உவமையைப் பொருளாகவைத்துக்கூறியது விபரீதவுவமையணி. (௨௦)

21. (இ-ள்.) கங்குல் பொழுதில் - இராக்காலத்தில், இருதர்க்கு இறை-அரக்கர்க்குத் தலைவனாகிய இராவணனுக்கு, காதல் மைந்தன் - விருப்பமிக்கபுத்திரனாகிய இந்திரசித்து, வெம் கை சிலையின் - தனது கொடியகரத்திலேந்திய வில்லிலேறிட்டெய்த, கணைமாரி விலக்கி - சரவருஷத்தைத்தடுத்து, அன்னோன்-அந்த இந்திரசித்தினுடைய, துங்கம் கொடிஞ்சி - உயர்ந்தமொட்டையுடைய, தடம் தேர் துகள் ஆக - பரந்ததேர்பொடியாக, வீசி-மேலெடுத்து வீசி, கொடும சிஙகப் போத்து என்ன - கொடியஆண்சிங்கத்தைப்போல, அங்கதன் சீறி ஆர்த்தான் - அங்கதன்கோபித்து வீரகோஷஞ்செய்தான்.

இறைகாதல் மைந்தன் முறைக்கியை பொருளில்வந்த நான்காம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். காதல் இகடப்பிறவரல். (௨௧)

22. (இ-ள்) மான தேர் அழிந்த - குதிரைபூண்டதேர சிதைந்த, திறல் இந்திரசித்து-வெற்றியையுடைய இந்திரசித்துவானவன், வானில்-ஆகாயத்தில் (பூத்த) மீன்தோய்படலத்தில் - நட்சத்திரங்களோடு கலந்த மேகபடலத்தில், மறைந்து-தன்னுருக்காட்டாமல் ஒளித்து, வெகுண்டுநோக்கி-கோபித்துப்பார்த்து, சான்றோர்புகழும்-பெரியோர்புகழும், தனிவில் கை-ஒப்பில்லாத வில்லையேந்திய கரங்களையுடைய, தலைவர் தமமேல் - இராம இலட்சுமணர்மேல், ஊன்தோய் - பகைவர்தசைகலந்த, பகுவாய் அரவம கணை - பிளந்த வாயையுடைய சர்ப்பபாணத்தை, உந்தி ஆர்த்தான் - செலுத்தி வீரகோஷஞ்செய்தான்.

இந்திரசித்து இந்திரனைச்செயித்தவன். தேரழிந்த இந்திரசித்து உயர்திணையொடுசார்ந்த அஃறிணை உயர்திணைமுடிபேற்றுவருதலால் திணைவழுவமைதி. ந-பொது "உயர்திணைதொடர்ந்த" என்னும சூ ஆல். உந்தி இறந்தகாலவினையெசசம் உந்து பகுதி. (௨௨)

23. (இ-ள்.) செம கண் - செவந்தகண்களையும், பனை கை-பனைமரம்போன்ற கையையும, கொலை-கொலைத்தொழிலையுமுடைய, வேழம்-யானையானது, சிலமபிநூலின்-சிலமபிநூற்றநூலால், தங்கி சிமிழ்ப்புண்டு கிடந்தாலென்ன-பொருந்திக கட்டுப்பட்டுக்கிடந்தாற்போல, தமபி ஓடும் - இலட்சுமணரோடும், பொஙகும்தழ்ல்வாய் - கொதிக்கும்விஷாகினியைகக்காபபுளிகதும வாயையுடைய, புயங்கமகணை - சர்ப்பபாணமானது, தோளபிணிப்ப - தமது தோளைச் சிக்கெனக்கட்டலால், இகல் வென்றி வீரன் - போரில்வெற்றியையுடைய இராமமூர்த்தி, வெம் கண்களத்தில் - கொடிய இடம்பரந்த போர்க்களத்தில், கிடந்தான்-மூர்ச்சிததுக்கிடந்தார்.

கிடந்தாலெனவிரிதலால் கிடந்தென தொகுத்தல்விகாரம். சிமிழ்ப்புண்டு செயப்பாட்டுவினையெச்சம் சிமிழ் பகுதி, பகரமெய் விரித்தல்விகாரம், பகரமெய் சந்தி, உண்புதியன புகுதலால்வந்த செயப்பாட்டு விலைவிகுதி, டகரமெய் இறந்தகால இடைநிலை, உ எச்சவிகுதி. பிணிப்ப காரணப்பொருளில்வருதலால் இறந்தகாலவினையெச்சம் பிணி பகுதி, பகரமெய்விரித்தல் விகாரம், பகரமெய் சந்தி, அ எச்சவிகுதி. (உ௩)

24.. (இ-ள்.) செய்ய - செவந்த, தாமரைகண்ணன் - தாமரைமலர்போன்ற கணகளையுடைய இராமமூர்த்தியின், செய்திநோக்கி - அவசமடைந்தசெய்தியைப்பார்த்து, வெய்யவன் காதலன் - சூரியன்புத்திரனாகிய சுக்கிரீபன், வெகுளிமீகொள - கோபந்தலைக்கேற, ஐயிரு தலைவர்போந்து - பத்துவானர சேனைத்தலைவர்சென்று, அரக்கன்மைந்தனை - இராவணன்புத்திரனாகிய இந்திரசித்துவை, கையினில் கவர்க என - உயிரொடு கையாற்பிடிக்கக்கடவீரென்று, கடிதில் தூண்டினான் - விரைந்துசெலுத்தினான்.

செய்ய பண்படியாகப்பிறந்த குறிப்புவினைப்பெயரெச்சம் செம்மை பகுதி, ஈறுகெடுதலும் மகரமெய் யகரமெய்யாகத்திரிதலும் யகரத்தோற்றமும் சந்தி, அ எச்சவிகுதி, போந்து இறந்தகாலவினையெச்சம் புகு பகுதி, ஈறுகெடுதலும் உகரம் ஓகாரமாகத்திரிதலும் நகரத்தோற்றமும் சந்தி, தகரமெய் இறந்தகாலவிடைநிலை. உ எச்சவிகுதி, கவர்கென வியங்கோள் வினைமுற்றின் ஈறுதொக்கது. (உ௪)

25. (இ-ள்.) தூண்டிய - சுக்கிரீபனாலேவப்பட்ட, மாருதிமுதல தூயவர் - அனுமன்முதலிய புனிதகுணமுடையோர், தேண்டினர் - தேடிப்பார்த்தார்கள், வெய்யவன் - கொடியகுணமுடைய இந்திரசித்து, வான் இடைசெல்ல - ககனமார்க்கமாகச்செல்ல, காண்டலும் - அவன் இவர்களைக்கண்ட அப்பொழுதே, கணைகளால் வீழ்த்தி - தமது பாணங்களால் அவர்களைத் தரைப்படுத்தி, தாதைபால் மீண்டனன் - தனதுபிதாவாகிய இராவணனிடத்து விரும்பிச்சென்று, புகுந்தமை விளம்பினான் - நடந்தசெய்தியை எடுத்துச்சொன்னான்.

முதல பண்படியாகப்பிறந்த குறிப்புவினைபபெயரெச்சம் முதல் பகுதி, தேண்டினர் இவ்வினைமுற்றில் ணகரமெய் விரித்தல்விகாரம். புகுந்தமை இறந்தகாலவிடைநிலை பெற்றுவந்த தொழிற்பெயா. (உ௫)

26. (இ-ள்.) தாதையும் - இராவணனும், மைந்தனைத் தழுவி - தனது புத்திரனாகிய இந்திரசித்துவைத்தழுவி, ஒற்றரால் - தூதுவரால், சீதையைகொணர்ந்து - சீதாபிராட்டியைக் கொண்டுவந்து, அவர் செய்தி காட்டு என - இராம இலக்ஷுமணருடைய செய்தியைக் காட்டாயென்று, ஓதலும் - சொல்ல, புட்பகத்து ஏற்றி (இந்திரசித்தின் ஏவலால் காக்கும் அரக்கிகள்) புட்பகவிமானத்திலேற்றி, ஒல்லை போய் - விரைந்து (போர்க்களத்திற்) சென்று, போது அரி - தாமரைமலர்போலச் செவ்வரிபாந்த, நெடும் கண்ணாள் - பரந்தகண்களையுடைய சீதாபிராட்டி, புலம்ப காட்டினார் - மனம்வருந்திப் புலம்பக்காட்டினார்கள்.

சீதாபிராட்டியை அரக்கமாதர்கள் புட்பகவிமானத்திலேற்றி மூர்ச்சித்துக்கிடந்த ராமலட்சுமணரைக் காட்டியது. பிரமாஸ்திரத்திற் கட்டுண்டகாலத்திலெனக் கம்பராமாயணத்திற் கூறியிருக்கின்றது, இங்கு நாகபாசத்திற் கட்டுண்டகாலத்தில் எனக்கூறுதல் கற்பபேதத்தால் என உணர்க. கொணர்ந்து இறந்தகாலவினையெச்சம் கொணுபகுதி, முதல் குறுகலும் ரகமெய் விரிதலும் விகாரம், நகரமெய் சந்தி, த் இடைநிலை, உ எச்சவிகுதி. ஒல்லை விரைவுப்பொருள்மேல் நின்ற இடைச்சொல். (உசு)

27. (இ-ள்.) திரிசடை - விபீஷணன் புத்திரியாகிய திரிசடை என்பவள், அரில் தப உணர்ந்தனள் - குற்றமறத்தெரிந்து, நீ அழுங்கல் என - நீ வருந்தாதே யென்று, மனம் கொள தெருட்ட - மனங்கொளிய தெளிவிக்க, தேறிய-மனந்தெளிந்து புலம்புதலொழிந்த, புரி குழல் அணங்கினை- மைப்புரியையொத்த கூந்தலையுடைய சீதாபிராட்டியை, காக்கும் புன்மையோர் - இமைகொட்டாமற் காக்கும் தீய அரக்கியர், மரு மலர் சோலையில் - வாசமிக்கமலர்களையுடைய அசோகவனத்தில், சிறை வைத்தார் - சிறையில் வைத்தார்கள்.

தப உரிச்சொல்லடியாகப் பிறந்த நிகழ்காலவினையெச்சம், தபு பகுதி. அழுங்கல் எதிர்மறை யொருமை யேவல் வினைமுற்று அழுங்கு பகுதி,உகரக்கேடு சந்தி, அல் விகுதி. அழுங்கற்க எனப் பொருள்கொண்டு அல் எதிர்மறை வியங்கோள் வினைமுற்று விகுதியெனக் கூறினும் அமையும்.தெருட்ட நிகழ்காலத்தில்வந்த பிறவினை வினையெச்சம் தெருட்டு பிறவினைப்பகுதி. உணர்ந்தனள் முற்றெச்சம். (உஎ)

28. (இ-ள்.) முகம் ஒளி இழந்திலர்-தமதுமுகமோ ஒளியிழக்காதிருக்கின்றனர், உயிர் உண்டு ஆம் என-(அதனால்) உயிருண்டென்று, தெளிவு ஒடும்-மனம் தெளிந்து, வீடணன் - விபீஷணர், செப்பும் எல்லையில் - சொல்லுங்காலத்தில், களி ஒடும் - களிப்போடும், தடம் சிறை கலுழன் - பரந்தசிறகையுடைய கருடவூர்தி, எய்தினன் - அங்குவர, துளை எயிறு அரவு தன் - துளைபொருந்திய பற்களையுடைய சர்ப்பபாணத்தினது, தொடர்ச்சி விட்டது-கட்டுவிட்டது.

எய்தினன் முற்றெச்சம். முகம் ஒளியிழந்திலர் உயர்திணையொடுசார்ந்த அஃறிணை உயர்திணை முடிபேற்றது, திணைவழுவமைதி, ந - பொது "உயர்திணைதொடர்ந்த பொருண்முதலாறும்" என்றசூ-ஆல். (உஅ)

29. (இ-ள்.) தாள் - தூரையுடைய, வரைமுடி முதல் - மந்தரகிரியின் உச்சியில் (தம்பமாகநட்டு வாசுகியாற்பிணித்திழுத்த) தழும்பு நீர்ந்து - வடுவினின்றுநீங்கி, உயர்-உயர்ந்துவிளங்கித்தோன்றும், கோள் விடும் மதி என்ன-நவக்கோள்களிலொன்ருகிய சந்திரனைப்போல, குமரர் உய்ந்து எழ - இராம இலட்சுமணர்கள் வடுநீங்கிச்சீவித்தெழ, தோள்வலியால்-தனதுதோளின்வலியால், அமிழ்து எடுத்ததோன்றல் - கடலினுள்ள அமிர்தினையெடுத்த கருடவூர்தி, நீள் இரும் சிறகினால் - தமது நீண்ட பெரிய சிறகுகளினால், நீவி ஏகினன் - தடவிச்சென்றான்.

தனதுதாயாகிய வினதையின்சிறை நீக்குதற்பொருட்டுத் திருமாலைச்சரணடைந்து அமுதங்கொண்டுவந்தமையால் அமிழ்தெடுத்த தோன்றல் என்றார். உவமைக்கும் பொருளுக்கும் ஒற்றுமையுண்மையால் உவமையின்றொழிலைப் பொருட்கேற்றி வடுநீங்கி என்றும். நீவி இறந்தகாலவினையெச்சம் நீவு பகுதி, உகரக்கேடு சந்தி, இ எச்சவிகுதி. சந்திரன் தம்பமாக இருந்தது "மாயிருஞாலந்தாழியாமத்துமந்தரமதிதறியாக" என இந்நூலில் வருதல்காண்க.

30. (இ-ள்.) முருகு உறழ் செவ்வியோர் - முருகக்கடவுளை ஒத்த இராமலட்சுமணர்கள், குனித்த - வளைத்த, மொய்ம்பு உடைய-வலிமையையுடைய, வரிசிலை - கட்டமைந்த வில்லின், நாண் ஒலி - நாணத்தொனியும், மடித்த வாய் உடைய - மடித்தவாயையுடைய, பரிதி சேய் முதலிய - சூரியன்புதல்வனாகிய சுக்கிரீபன்முதலிய, படைஞர் - சேனாவீரருடைய, ஆர்ப்பு ஒலி-வீரகோஷமும், உரும் என்ன - இடியேற்றைப்போல, இராவணன் - இராவணனுடைய, செவியின் உற்ற - காதில்வந்துதாக்கின.

உற்றதே உற்றவே எனப்பாடங்கொள்க. முருகன் முருகு ஈறுதொக்குநின்றது. படைஞர்பொருட் பெயர்ச்சொல் படை பகுதி, ஞகரம் பெயரிடைநிலை, அர் பலர்பால்விகுதி. நாணொலி, ஆர்ப்பொலி என வினைமுதல்கள் இரண்டாதலால் உற்ற எனப் பன்மைப்பயனிலைதந்தார். உடைய குறிப்பு வினைப்பெயரொச்சம் இது ஈறுதொக்குநின்றது. (௩0)

31. (இ-ள்.) கேட்டலும்-கேட்ட அப்பொழுதே, இராவணன் - இராவணனவன், கிளர்ந்ததானைமேல்-போர்க்கெழுந்தசேனையின்மேல், பூட்டுவில்-நாண்பூட்டிய வில்லையேந்திய, புகை நிறம் கண்ணன்-தூமாக்ஷனை (நோக்கி) போக என - போர்க்குச்செல்லக்கடவாயென்றுகூற, வாள் திறல் ஒடும்-வாளின்வன்மையோடும், செருமலைய - (அவ்வரக்கன்) போர்செய்ய, மாருதி-அனுமன், தாள் துணைபிடித்தனன் - அவனது இரண்டுகால்களையும் ஒருசேரப்பிடித்து, தரையின் எற்றினான்-நிலத்தின்மேல் அடித்துக்கொன்றான்.

கிளர்ந்த இறந்தகாலவினையெச்சம் கிளர் பகுதி, போக என்னும் வியங்கோள் வினைமுற்றின் ஈறுதொக்கது. பிடித்தனன் முற்றெச்சம். (௩க)

32. (இ-ள்.) கச்சை - கழுத்திடுகயிற்றையும், அம்புகர்முகம்-அழகியபுள்ளிதங்கிய முகத்தையும், களி-மதச்செருக்கையுமுடைய, நல்யானைபோல்-அரசிலக்கணமமைந்த யானையைப்போல், வச்சிரத்து எயிற்றவன்-வச்சிரதந்தனவன், மலைய - போர்செய்ய, வாலி சேய் - வாலியின்புத்திரனாகிய அங்கதன், அவன் கையில் - அவன் கையிலுள்ள, நச்சுவாள் பறித்து - நஞ்சுபூசிய வாளைப்பறித்து, செச்சை நாள்மலர் - வெட்சியினது அன்றலர்ந்த மலர்மாலை, தாழ்முடி தலை - தங்கிய மகுடமணிந்த தலையானது, சிதற வீசினான்-சிதறும்படி வெட்டினான்.

நல்யானை என்றமையால் அரசிலக்கணம் அமைந்த யானை என்றும். அரசிலக்கணமாவன எழுறுப்புயர்ந்து எழுறுப்புத்தாழ்ந்திருத்தல். நஞ்சு நச்சுமென்றொடர் வேற்றுமைவழியில் வன்றொடராதல் ௩-உயி-௩௪-ஆம் சூ-ஆல்.()

33. (இ-ள்.) மாருதிக்கு அகம்பனன் உடைந்து - அனுமனுக்கு அகம்பனன் தோற்று, வான் தவழ் - ஆகாயத்தில் தவழும், கார் நிறத்து இராவணற்கு-

மேகம்போலு நிறத்தையுடைய இராவணனுக்கு, உரைக்குங்காலையில் - சொல்லுங்காலத்தில், பார்புதைத்து எழும் - நிலவுலகைப் புதைத்துப்பரந்த, இருள் பருகி - இருளைக்குடித்து, பாய்திரை - பரந்த அலைகளையுடைய, ஆர்கலி அகடு கீண்டு - கடலின் வயிற்றைக்கிழித்து, அருக்கன் தோன்றினன்-சூரியனுதயஞ்செய்தான்.

பார் முதனிலைதிரிந்த தொழிலாகுபெயராய் உலகின்மேனின்றது, பர என்னும் வினைப்பகுதி முதல் நீண்டு ரற்றகரங்கெட்டுப் பாரொனநின்றது. கார் பண்பாகுபெயராய் மேகத்தின்மேல் ஈறுகெட்டு " இனையவுமென்ற திலை் ஈற்றுகரமுங்கெட்டு முதல்நீண்டு நின்றது. இருளையோட்டுதலும் கடலினடுவிற்றோன்றுதலும் ஆகிய உரியபொருளின் வினைதோன்றஇருள் பருகி யகடுகீண்டென ஒப்புடைப்பொருள் வினைதந்துகூறியது குணவணி. (௩௩)

34. (இ-ள்.) இணை விழி - இரண்டுகண்களும், எரிகவிழ்த்து புகைய - அக்கினியைச் சிந்திப்புகைய, ஏற்று எதிர்வரு - எதிர்ந்து முன்னிட்ட, பிரகத்தனை - பிரகத்தனென்னு மரக்கனை, நிருதர் வெம் கூற்று என - அரக்கர்களுக்குக் கொடிய யமனைப்போல, திரியும் நீலன் - திரியாநின்ற நீலனென்னும் வாநரசேனாபதி, சிறைவாயிலில்-இலங்கைக்கீழைவாசலில், குருதிவாய் வழி உக-உதிரம் வாயின்வழியேசிந்த, குத்தி வீழ்த்தினன்-குத்திநிலத்தின்மேலே விழுத்தினன். (௩௪)

35. (இ-ள்.) அகம்பனன் திரிசிரா பனசன் - அகம்பனும் திரிசிராவும் பனசனும், ஆடல் வேல் - வெற்றிதங்கிய வேலையேந்திய, நிகும்பன்-நிகும்பனும், ஒள்வாள் அதிகாயன்-ஒள்ளிய வாளையேந்திய அதிகாயனும், நீள் கும்பன்-உயர்ந்தோங்கிய கும்பனும், நகும் கதிர்வேல் - விளங்காநின்ற ஒளியமைந்த வேலை ஏந்திய, இராவணி நராந்தகன் - இந்திரசித்தும் நராந்தகனும்,திகழ்ந்த வேல் - விளங்காநின்ற வேலையேந்திய, மகோதரன் தேவாந்தகன் - மகோதரனும் தேவாந்தகனும்.

அகம்பனன் என்பதுமுதல் தேவரந்தகன்காறும் எண்ணும்மைதொக்கு நின்றதொடர். (௩௫)

36. (இ-ள்.) ஈங்கு இவர் முதலிய - இவ்விடத்து இவ்வரக்கர் முதலாகிய, தலைவர் எண்ணிலர் - அளவில்லாத இராக்ஷதசேனாபதிகள், வாங்கிய வில்லினர்-வளைத்த வில்லையேந்தினவரும், மடித்த வாயினர்-மடித்த வாயையுடையவரும், வீங்கிய தோளினர் - பருத்த தோள்களையுடையவரும், வெகுண்ட நெஞ்சினர் - கோபித்தெழுந்த மனமுடையவருமாய், பாங்கினில் - தனது பக்கங்களில், அளப்பு அரும்படை ஒடு ஏக - அளவு செய்தற்கரிய சேனையோடுவர.

அகம்பனன் எனனுஞ் செய்யுள் முதல் மாற்றலர் என்னுஞ் செய்யுள்காறும் குளகம் ஆதலால் ஏக என்னும் வினையெச்சம் பின்வரும் செய்யுளில் எய்தினன் என்னும் வினைமுற்றின் முதனிலைகொண்டது. (௩௬)

37. (இ-ள்.) மாற்றலர் - பகைவர்கள், வயிறு எரி தவழ்ந்து - தமது வயிற்றில் நெருப்புத்தவழ்தலால், மாழ்குற - மயங்கவும், கூற்றமும் - இயமனும், கண் புதைத்து அஞ்ச-தனது கண்களைமூடி அஞ்சியொதுங்கவும், கொல் சினத்து-கொல்லுங் கோபமிக்க, ஏற்று உரி - இடபத்தின்றோலாற் போர்த்த, முரசு இனம் - போர் முரசின் கூட்டங்கள், இடியின் ஆர்ப்பு எழ - இடியைப்போலக் கோஷிக்கவும்,ஆற்றல் சால்-வலிமைமிக்க, இராவணன்-இராவணனானவன், அமரில் எய்தினான் - போர்க்களத்தில் வந்தான்.

மாழ்குற நிகழ்காலவினையெச்சம். மாழ்குறு பகுதி. (௩௭)

38. (இ-ள்.) கொய் உளை - கொய்த புறமயிரினையுடைய, சுவல் பரிகோடி-பிடரினையுடைய கோடிகுதிரைகளை, பூட்டிய - தொடுத்த, வையம் ஊர்ந்து-தேரைநடத்தி, அடு கணை மழை - கொல்லுதற்குரிய சரவருஷத்தை, பொழிந்திடும் வெய்யனை - பெய்யும் இராவணனை, காண்டலும் - கண்ட அப்பொழுதே, மாருதி வெகுண்டு - அநுமன் கோபித்து, எய் எனும் அளவையின்-எய் யென்னுங்காலத்தில், எதிர்ந்து கூறுவான் - எதிர்ந்துசொல்லாநின்றான்.

பொழிந்திடும் நிகழ்காலப்பெயரொச்சம். பொழி பகுதி. து சாரியை. நகரத்தோற்றமும் உகரக்கேடும் சந்தி, இடு பகுதிப்பொருள்விகுதி. அனைத்தும் ஒருபகுதி, உம் பெயரொச்சவிகுதி இது நிகழ்காலத்தின்மேல்நின்றது.(௩௮)

39. (இ-ள்.) கரும் தடம் கண்ணி - கரிய பரந்த கண்களையுடைய உமாதேவியாரை, பங்கன் வாழ் - இடப்பாகத்திலுடைய சிவபெருமான் வாழாநின்ற, கயிலை எடுத்த - வெள்ளியங்கிரியை வேரோடுபறித்தெடுத்த, உன் புயம்வலி காண்பான் - உனது இருபதுபுயங்களின் வனமையைக்காண, பொருந்தினேன் - வந்தேன், எனது மார்பு இடை - எனதுமார்பினிடத்து, ஒருகால் குத்து என நின்று - ஒருதரங் குத்தாயென்று தாழ்ந்து நின்று, போர் இரப்ப-போரினையிரந்துவேண்ட, என்னை முன்னர் விரைந்து-என்னை முன்பு விரைவாய், குத்துக என்று - குத்தக்கடவாயென்று, அரக்கன்-இராவணன், வெற்பு உறழ் - மலையையொத்த, மார்பு எதிர் கொடுப்ப - தனதுமார்பை யெதிர்ந்துகொடுக்க, இருந்தடம் கிரியின் அசனி வீழ்ந்தா லென்ன - பெரிய உயர்ந்தமலையின்மேல் இடிவீழ்ந்தாற்போல, எறும் வலிஅனுமன்-மிக்க வலிமையையுடைய அனுமனானவன், குத்தினன்-குத்தினான்.

குத்துக வியங்கோ ளீறுதொக்குநின்றது. வீழ்ந்தென்ன தொகுத்தல்விகாரம். முன்னர் காலவேறுபாட்டின்மேனின்ற இடைச்சொல். முன் இடைச்சொல் பகுதி, னகரமெய்சந்தி, அர் பகுதிப்பொருள்விகுதி. (௩௯)

40. (இ-ள்.) எறும் வலி தடம் தோள் - மிக்க வலிமையை யுடைய பரந்த தோளையுடைய, மாருதி புடைப்ப - அனுமன் குத்த, இழி பெரும் குருதி-சிந்தும் பெரிய உதிரவெள்ளம், கான்று ஒழுக - வெளிப்பட்டுப் பெருக்கெடுப்ப, அறிவு அழிந்து - உணர்வு அழிந்து, ஒல்லை - விரைவில், உணர்வு வந்து எய்தி - கெட்ட அறிவுவந்து கூடி, ஆற்றல் அம் கவியினை வியப்ப - வலிமையின் அழகுமிக்க அனுமனை இராவணன் மெச்ச, கறை கெழு வேலோய்-உ

திரமிக்க வேலை ஏந்திய இராவணனே, நின் முறை - இப்போ துனது முறை, என் மேல் குத்து என்ன - என்மேற் குத்தாயென்றிரப்ப, கல் செய் தோள் நிமிர்த்து மலையைப் பெயர்த்துவைத்தாலொத்த கைகளை மேலெடுத்தோச்சி, குறுகி நின்று - சமீபித்து நின்று, அண்ட கோளகை வெடிப்ப - வானவட்டம் வெடிபட, அனுமன்மேல் குத்திநின்று - அனுமன்மேல் ஓர்குத்துக் குத்தி நின்று, ஆர்த்தான் - வீரகோஷஞ்செய்தான்.

எழுவலி சொல்லின்பந் தோன்றநிற்றலால் ஒருபொருட் பன்மொழி கான்று பால் பகுதி, லகரனகரமாகத் திரிந்தது சந்தி. றகரமெய் இறந்தகால இடைநிலை, உ எச்சவிகுதி. (௪0)

41. (இ-ள்.) வாய் வழி - வாயின்வழியே, குருதி பொழி தர - உதிரஞ் சிந்த, அனுமன் - அனுமனனவன், மண் இடை மயங்கி வீழ்ந்து - நிலவுலகின் மேல் மூர்ச்சித்து விழுந்து, அயர-சோர்ந்துகிடக்க, பாய் புலிப் போத்தின்-பாய்ந்துசெல்லும் புலிப்போத்தைப்போல, அமர்க்கு எதிர் புகுந்த - போரிலெதிர்த்துவந்த, நீலன் மேல்-வானரசேனைபதியாகிய நீலன்மேல்,பரி கொள் தேர் கடவி - குதிரைபூண்ட தேரைச் செலுத்தி, காய் கனல் - சுட்டுவருத்தும் நெருப்பைக் கொப்புளிக்கும், பகழி ஒன்றினால் வீழ்த்தி - ஓர் அம்பினால் நிலவுலகின்மேல் விழுத்தி, கவி குலத்தலைவரை - வானரசேனை வெள்ளத் தலைவர்களை, துரந்து - ஓட்டி, சேய் உறழ்-முருகக்கடவுளையொத்த, கொற்றத்து இலக்குவன் - வெற்றியையுடைய இலக்ஷுமணரது, தடம் தோள் - உயர்ந்ததோளிற்சாத்திய, சிலைத் தொழில் வியந்து - வில்லின்தொழிலைமெச்சி, எதிர் புகுந்தான் - எதிரேவந்தான்.

கடவி துரந்து வியந்து இறந்தகாலத்தன் வினை வினையெச்சங்கள். கடவு துர விய பகுதிகள். வீழ்த்தி இறந்தகாலப் பிறவினை வினையெச்சம். வீழ் பகுதி, தகரமெய் சந்தி, து பிறவினை விகுதி அனைத்துமொருபகுதி, உகரக் கேடுசந்தி, இ வினை யெச்சவிகுதி. (௪௧)

42. (இ-ள்.) அல்லி அம் கமலம் - அகவிதழையுடைய அழகிய தாமரையில் வசிக்கும், கடவுளே ஆக - பிரமனாக விருந்தாலு மிருக்க, அஞ்சன வண்ணனே ஆக - மைபோலுங் கரியநிறத்தினையுடைய திருமாலாயிருக்கினுமிருக்க, கொல் சினம் - கொல்லும் கோபத்தையுடைய, அடல் ஏறு அண்ணலே ஆக-வலிமைமிக்க உருத்திரமூர்த்தியா யிருக்கினுமிருக்க, குறுகலர் கடந்த யான் ஆக - பகைவரைக்கடந்த நானாயிருக்கினுமிருக்க, வில்லினால் இவனை வெலற்கு - வில்லினால் இந்த இலக்ஷுமணனை வெல்ல, அரிது என்ன - முடியாதென்று, வெள் நிணம் சேறு ஒடும் - வெள்ளிய நிணக்குழம்போடும், குருதி பில்கு - உதிரஞ் சிந்தும், நெடு இலை வேல் எறிந்து - நெடிய தகட்டு வடிவாகிய வேலையெறிந்து, வார் கழல் கால் - நீண்ட வீரகண்டையை அணிந்த காலையுடைய, இலக்குவன் மார்பு அகம் - அவ்விலட்சுமணருடைய மார்பினை, பிளந்தான் - பிளவுபடுத்தினான்.

பிரமன் முதலிகளோடு தன்னையு மொருவனாகக் கருதினனாதலால் குறுகலர்க்கடந்த யானாக என்றான். அண்ணலே யாகக் குறுகலர் என்றதை அண்

ணலேயாக குறுகலர் எனப்பாடங்கொள்க. ஆக அகரவீற்று வியங்கோள்வி னைமுற்றாதலால் ந-ஆ.யி-"செய்யியவென்னும்வினையெச்சம்" என்னும் சூ-வி தியால்வருமொழிமுதல் வல்லெழுத்து இயல்பாயிற்று. குறுகலர்க்கடந்த உ யர்திணையில்வந்த இரண்டாம்வேற்றுமைத் தொகையாதலால் வருமொழி முதல் வல்லெழுத்து மிக்கது. வெலற்கு நிகழ்கால வினையெச்சம். வெல் ப குதி, அல் சாரியை, லகரம் றகரமாகத் திரிந்தது சந்தி, கு எச்சவிகுதி. இ து அரிது என்னுங்குறிப்பு வினைமுற்றின் முதனிலைகொண்டது. (சஉ)

43. (இ-ள்.) குருதி வேல் பாய - உதிரந்தோய்ந்த வேல்பாய்தலால், நிலத் து இடைவீழ்ந்த-நிலத்தின்மேல் விழுந்த, அரசு இளம் கோளரி தன்னை- அரசர்களாகிய யானைகளுக்கு இளஞ்சிங்கம்போன்ற இலட்சுமணனை, இரு பதுகையும்-தனது இருபதுகைகளினாலும், வருந்துற எடுத்தும்-தனதுதேகம் வருந்த எடுத்தும், எடுப்பு அரிது ஆகி நின்று-எடுத்தற்கரிதாகிச்சோர்ந்துநின் று, அசையும் - வருந்தும், திருவிலி முகங்கள் பத்தினும் - அருட்செல்வமில் லாத இராவணனுடைய பத்துமுகங்களினும், குருதி சிந்திட - உதிரஞ்சிந்த, அனுமன் குத்தி வீழ்த்து - அனுமன்குத்தி நிலத்தின்மேல்விழுத்தி, வரிசிலை- கட்டமைந்த வில்லையேந்திய, இளவல் தனை எடுத்து ஏகி - இலட்சுமணனை யெடுத்துச்சென்று, மணிநிறவண்ணன் முன் - நீலமணிபோலும் நிறத்தையு டைய இராமமூர்த்தியின்முன், உய்த்தான்-செலுத்தினன்.

பொருட்செல்வத்திற்சிறந்தது அருட்செல்வமாதலால் செல்வத்தின்மி க்கோனாயினும் அருட்செல்வமின்மையால் திருவிலி என்றதற்கு அவ்வாறு கூறினும். அனுமன் உயர்ந்த கபோலத்தையுடையவன். இளவல் பண்பாகு பெயராய்ப் பின்னோன்மேல்நின்றது. இளமை பகுதி ஈறுகெடுதலும் வகா த்தோற்றமும் சந்தி, அல் பண்புப்பெயர் விகுதி. பாய காரணத்தின்மேல் நிற்றலால் இறந்தகாலத்தில்வந்த வினையெச்சம். வருந்துற சிந்திட இரண் டுங் காரியத்தின்மேல் நிற்றலால் எதிர்காலத்தில் வந்தவினையெச்சங்கள். சி ந்து பகுதி, உகரக்கேடு சந்தி, இடு பகுதிப்பொருள்விகுதி, அனைத்து மொரு பகுதி, அ எச்சவிகுதி, உகரக்கேடு சந்தி. அரசிளங்கோளரி - ஏகதேசவுருவ வணி. (சஙு)

44. (இ-ள்.) எய்தும் அவ்வேலை - சென்ற அச்சமையத்தில், இளவல்-இல ட்சுமணர், வேல்படும் அயர்ச்சி - வேல்நுழைதலினாலாகிய சோர்வினின்று, தீர்ந்து எழுந்து நின்று - நீங்கி எழுந்து நின்று, ஐயன் - இராமமூர்த்தியினு டைய, செய்ய பங்கயம் தாள் - செவந்ததாமரைமலரையொத்த திருவடிக ளை, தொழுதனன் நிற்ப - வணங்கிநிற்ப, சிலைதொழிற்கு ஒருவன் என்று-வி ற்றொழிற்கு ஒருவனென்று, உரைக்கும் - (வீரர்) புகழ்ந்து பேசும், ஐய - அழகினையுடைய, செம் கமலம் காடு - செந்தாமரைக்காடு, பூத்தால் அனை ய - பூத்ததையொத்த அவையவங்கள்வாய்ந்த, அஞ்சனம் கொண்டல்-கரிய மேகம்போன்ற இராமமூர்த்தி, கண் செவந்து - கண்கள்செவந்து, வையம்- உலகினர், ஏத்தெடுக்கும்-புகழ்ந்துபேசும், அனுமன்மேல் இவரா-அனுமன் மேலேறி, இராவணன் ஓடு அமர் மலைந்தான்-இராவணனோடுபோர்செய்தார்.

போரிற்கொருவன் என்றாற்போலச் சிலைத்தொழிற்கொருவனென்றது வீரமிகுதியையுணர்த்திநிற்றலால் வீறுகோளணி. நூற்றலாலாகிய நூலை நூற்ற நூலென்றாற்போலப் படுமயர்ச்சியென்றது காரணப்பொருளில்வந்த பெயரெச்சமாதலால் நுழைதலாலாகிய அயர்ச்சியெனக்கூறினும். அயர்ச்சி தீர்ந்து நீக்கப்பொருளில்வந்த ஐந்தாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். தொழுதனன் முற்றெச்சம். பூத்தலைய தொகுத்தல்விகாரம். ஐய பண்படியாகப் பிறந்த குறிப்புவினைப்பெயரெச்சம் ஐ பகுதி, யகரமெய்சந்தி, அ பெயரெச்சவிகுதி. இவரா செய்யா என்னும் வாய்பாட்டு இறந்தகாலவினையெச்சம் இவர் பகுதி, ஆ இறந்தகாலவினையெச்சவிகுதி. (சச)

45. (இ-ள்.) காற்று உறழ் - காற்றினையொத்த, கடுப்பின் - வேகத்தையும், கலினம் - கடிவாளத்தையுமுடைய, மான் தடம் தேர் - குதிரைபூண்ட பரந்த தேரும், கழை சுளி - குத்துக்கோலைக்கண்டாற் கோபிக்கும், கவுள் மதம் - கபோலஞ்சிந்து மதத்தினையுடைய, களிறு - யானையும், பால்திரை கவரி - பாற்கடலிற்றோன்றிய அலையையொத்த சாமரைபூண்ட, கூந்தல்மா - புறமயிரையுடைய குதிரைகளும், தறுகண் - அஞ்சாமையையுடைய, பாய்புலி போத்து அன்ன - பாயும்புலிப்போத்தையொத்த, வயவர் - காலாட்களும், வீற்றுவீற்றுக - துண்டு துண்டாக, மறிதர - மடங்கிவீழ, இராமன் - இராமமூர்த்தி, வரிசிலை - கட்டமைந்த வில்லை, குனித்தலும் - வளைக்க, அரக்கன் - இராவணன், வெகுண்டு - கோபித்து, கூற்று மெய்பனிப்ப - இயமன் உடல் நடுங்க, அனுமன்மேல் - அனுமன்மீது, கொடும் கணை பொழிந்து நின்று - கொடிய சரவருஷத்தைப்பொழிந்து நின்று, ஆர்த்தான் - கோஷித்தான்.

பிறர்க்கு வருத்தஞ்செய்யாது செல்லுதற்பொருட்டுப் புறத்திற்சூழ்ந்து செல்லுவோர் ஏந்திய குத்துக்கோலோடு மோதுதலால் கழைசுளி கவுண்மதக்களிறென்றார். பனிப்ப எதிர்காலத்தில் வந்த வினையெச்சம், பனிபகுதி பகரமெய்சந்தி, பகரமெய் விரித்தல் விகாரம். அ எச்சவிகுதி. வீற்று வீற்று இரட்டைக்கிளவி, இது பிரிந்து நின்றிசைப்பில் பொருள்படாதென்றறிக. ()

46. (இ-ள்.) மாருதி மருமம் பிளந்திட - அனுமனுடையமார்பு பிளவுபட, அரக்கன் - இராவணன், வடிகணை தொடுத்தமை - வடித்தலையுடையபாணத்தைப்பிரயோகித்ததை, நோக்கி - பார்த்து, கார்முகம விநோதன் - வில்லின் விளையாட்டையுடையவனாகிய இராமமூர்த்தி, நிருதர்கோன் கவசம் - அரக்கர் தலைவனாகிய இராவணனுடைய கவசமும், கனல் உமிழ் - தீயைக்கக்கும், படைக்கலம் - ஆயுதமும், தடம் தேர் ஊர்தரு பாகன் - பரந்த தேரைநடத்தும் பாகனேந்திய, வரிசிலை அனைத்தும் - கட்டமைந்த வில்லும் ஆகிய இவையெல்லாம், ஓர் ஒரு பகழியால் - ஒவ்வொரு பாணங்களால், துணித்து - துண்டுபடுத்தி, தார் புனை - வெற்றிமாலையையணிந்த, மவுலி ஒருபதும் - பத்துக்கிரீடங்களையும், கணையால் தள்ளி - பாணங்களால் வீழ்த்தி, ஈங்கு - இராவணனை நோக்கி, இவை புகல்வான் - இவற்றைச் சொல்லுகின்றார்.

ஒருபதும் என்பதினிறுதியிலுள்ள உம்மை இனைத்தென அறிபொருட்கண்வந்த முற்றும்மை. வடிக்கணை உருபும் பயனுமுடன்றொக்க இரண்டாம்

வேற்றுமைத் தொகைநிலைத்தொடராதலால் வருமொழிமுதல் வல்லெழுத்து மிக்கது. படர்க்கைக்குரிய ஆங்கென்றது முன்னிலைக்குரிய ஈங்கென்றது இடவழுவமைதி. மற்று அசைநிலை. (௪௬)

47. (இ-ள்.) கூந்தல் மான்-புறமயிரையுடைய குதிரைபூண்ட, தடம் தேர்-பரந்ததேரும், அணிந்த பொன் கவசம் - அணிந்தபொன்னாலாகிய கவசமும், கொடும் சிலை - வளைந்தவில்லும், அடும் கணை புட்டில் - கொல்லாநின்ற அம்பறாத்தூணியும், காந்து - விளங்காநின்ற, எரிகவிழ்க்கும் - அக்கினியைச் சிந்தும், படைக்கலம்-ஆயுதங்களும், இன்றி நின்றனை-ஆகிய இவைகளில்லாமல்நின்றாய், சீதையை கடிதின் ஈந்து - சீதையைவிரைந்துதந்து, நின் ஆவி-உனது பிராணன், உய்தியேல்-பிழைப்பாயானால், உய்தி-பிழைப்பாய், அன்று எனில - அல்லவாகில், இன்றுபோய்-இன்றைக்குப்போய், நாளைபோந்து-நாளைக்குவந்து, வெம் களத்தில் - கொடியபோர்க்களத்தில், நின் கிளை ஒடு விளிதியேல் - உன்சுற்றத்தாரோடு சாவாயாகில், போக என விடுத்தான்-போகக்கடவாயென்றேவினார்.

நின்னாவி அவனுமுயிரும் வேறன்மையால் ஒற்றுமைக்கிழமைப்பொருளில்வந்த ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். கிளை ஒன்றினின்றொன்று கிளைத்தல்போலத் தன்னினின்றுகிளைத்தோர் மேல்நிற்றலா லுவமையாகுபெயர். உய்தலும் விளிதலும், நிச்சயமாதலால் எதிர்காலத்தினாற் கூற வேண்டுவதை இறந்தகாலத்தாற்கூறியது தெளிவுபற்றிவந்த காலவழுவமைதி. ந-பொது. "விரைவினு மிகவினுந் தெளிவினும்" என்னுஞ்சூத்திரத்தானுணர்க. உய்விளி பகுதிகள், தகரமெய் இறந்தகால இடைநிலை, இ முன்னிலையொருமைவிகுதி. "ஆளையாவுனக்கமைந்தனவமைந்தமாருதம்போல், பூளையானது கண்டனையின்றுபோய்ப்போர்க்கு, நாளைவாவெனநல்கினான்" எனக் கம்பராமாயணத்தில் வருதல்காண்க. இது தழிஞ்சியென்னுந்துறை. (௪௭)

48. (இ-ள்.) வெள்ளி அம்பொருப்பும் எடுத்தவன் - கைலையங்கிரியையும் எடுத்த இராவணன், நாணம் சுமக்கலன் ஆகி - தோற்றநாணத்தைச்சுமக்க ஆற்றாதவனாகி, வெய்துயிர்த்து - பெருமூச்செறிந்து, பள்ளம் நீர்வேலி-கடலே அரணாகவுடைய, இலங்கையின் எய்தி - இலங்கைநகரையடைந்து, பரிவுடன் அமைச்சரோடு எண்ணி - வருத்தத்துடன் மந்திரிகளோடு ஆலோசித்து, எள் அரும் மதுகைக்கு - நிந்தித்தலில்லாத தனதுவன்மைக்கு, இணையில்லாத கும்பகன்னனை-வேறுநிகரில்லாத கும்பகன்னனை, படுதுயில் எழுப்பி-பெரியநித்திரையினின்றுமெழுப்பி, அள் இலை - கூரியதகட்டுவடிவாகிய, சூலம் திரித்து - சூலத்தைத்திரித்து, மானுடர்தம் ஆவி உண்டிடுக என-மனுடராகிய இராமலட்சுமணர்களுடைய உயிரைக் கொள்ளைகொள்ளக்கடவாயென்று, விடுத்தான்-ஏவினான்.

அமைச்சர் அமாத்தியர் என்னும் வடசொற்றிரிபு. அமா அருகில், தியர் இருப்பவர். கும்பகன்னன் குடம்போலுங் காதினையுடையவன். பொருப்பு என்பதன் இறுதியின் உம்மை உயர்வுசிறப்புப்பொருட்டு. (௪௮)

49. (இ-ள்.) விடுத்தலும் இராவணன் ஏவ, இமைபபில் - இமைகொட்டுத ற்குமுன்னமே, செருக்களத்து எய்தி - போர்க்களத்தை அடைந்து, வாநரவீ ரரை அள்ளி - வாநரவீரர்களைத் தனதுகைகளால் அள்ளி, வாய்ப்படுத்துமடுத்து - தனதுபெருவாயிற்பெய்து, கவுள்புடை குதட்டி - கவுளில் ஒதுக்கிக் குதட்டி, மலர்கதிர் - பரந்தகிரணத்தையுடைய, பரிதி சேய் தன்னைபிடித்து - சூரியன்புத்திரனாகிய சுக்கிரீபனைப்பிடித்து, உயர் இலங்கை புகுதலும் - செல்வமிக்க இலங்கைநகரிற்செல்ல, தடம் கண் அரக்கியர் - பரந்தகண்களையுடைய அரக்கமாதர்கள், பெய்த மென் சாந்தின் - (கும்பகன்னன்) மேல்வீசிய மிருதுவாகிய சந்தனக்குழம்பாகிய சிதோபசாரத்தால், இரவிசேய் - சூரியன்புத்திரனாகிய அச்சுக்கிரீபன், அடுத்தமெய் துயர்நீர்ந்து - (அரக்கனால்) தனக்குண்டாகிய தேகச்சோர்வினின்றுநீங்கி, அரக்கன் - அக்கும்பகன்னனுடைய, மூக்கு செவி பறித்து - மூக்கையும் செவியையும் கொய்து, அகன்றான் - அவனினின்று நீங்கினான்.

குதட்டி இறந்தகாலவினையெச்சம் குதட்டு பகுதி, ஊடு எண்ணுப்பொருளில்வந்த இடைச்சொல். இரவிசேய் எனபதன்முதலில் அகரச்சுட்டுத்தொகுத்தல். துயர்தீர்ந்து நீக்கப்பொருளில்வந்த ஐந்தாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். (சுகூ)

50. (இ-ள்.) திருகுவெம் சீற்றம் - மாறுபட்ட கொடியகோபத்தையுடைய, மடங்கல் ஏறு அனையான் - ஆண்சிங்கத்தையொத்த கும்பகன்னன், செவி மூக்கினைகவர்ந்த - தனது செவியையு மூக்கையும் கொய்துசென்ற, இரவி காதலனைத்தொடர்ந்து - சூரியன்புத்திரனாகிய சுக்கிரீபனைப் பின்றொடர்ந்து, வெம் களத்திரன் ஏறறவர் - வெய்யபோர்க்களத்தில் எதிர்த்த வாநரசேனாவீரருடைய, உயிர் பிழிந்து உண்டு - உயிரை உடலினின்றுங் கொண்டு உண்டு, வருதலும் - வர, இராமன் கொடுமரம் குழைத்து - இராமமூர்த்தி வில்லினைவளைத்து, பற்பல - பலவாக, வடிகணை தூண்டி - வடித்தலையுடைய அம்புகளையேவி, அருவரை - பெரியமலையையொத்த, தடம் தோள் - உயர்ந்ததோளும், மருமம் - மார்பும், நீள்சென்னி - நீண்டசிரசும், வீற்று வீற்றாய்விழ - துண்டு துண்டாய் நிலத்திலவிழ, அறுத்தான் - துண்டுசெய்தார்.

கவர்ந்த இறந்தகாலப்பெயரெச்சம், கவர் பகுதி, இது வினைமுதற்பொருள்கொண்டது. வருதலும் நிகழ்காலத்தில்வந்த எதிர்காலவினையெச்சம் வா பகுதி, குறுகலும் ரகரவுகரம் விரிதலும் விகாரம், து அல் இரண்டும்சாரியை, உம் எச்சவிகுதி. குழைத்து இறந்தகாலவினையெச்சம் குழை பகுதி. (ருo)

51. (இ-ள்.) களத்து இடை கும்பகன்னனை - போர்க்களததில கும்பகன்னனை, இராமன் கடிந்தமை கேட்ட - இராமமூர்த்திகொன்ற செய்தியைக்கேள்விப்பட்ட, வல் அரக்கன் - வலிய இராவணன், உளத்து இடை - தனதுமனத்தினிடத்து, வெகுளி மேற்கொள - கோபமேலெழுந்தோங்க, கண்ணின் ஒழுகு - தனது கண்களினின்றுஞ்சிந்தும், வெம் கனல் சிகை - கொடியகோபாக்கினியின்கொழுந்தை, கதுவி - பற்றுதலால், துளி புயல் வறப்ப - துளித்தலையுடைய மேகங்கள்வறப்ப, கனன்று - கோபித்து, அதிகாயன் தன் முகம்

நோக்கி - தனதுபுத்திரனாகிய அதிகாயனுடைய முகத்தைப்பார்த்து, நீ துனைவின் - நீவிரைந்து, அளப்பு அரும் சேனை - அளவுசெய்தற்கரியசேனை, சூழ்வர செல்க என்று - பக்கத்திற்சூழ்ந்துவரச் செல்லக்கடவாயென்று, அறைதலும் - கூற, அடிகளத்து எதிர்ந்தான்-கொல்லும்போர்க்களத்தில் போருக்கு எதிர்ந்தான்.

அதிகாயன் பருத்தசரீரத்தையுடையவன். கதுவி காரணப்பொருளில் வந்த இறந்தகாலவினையெச்சம் கதுவு பகுதி, உகரக்கேடு சந்தி, இ எச்சவிகுதி, வறப்ப காரியப்பொருளில் நிற்றலால் எதிர்காலத்தில்வந்த பின்படியாகப்பிறந்த வினையெச்சம் வற பகுதி, பகரமெய் சந்தி, பகரமெய் விரித்தல் விகாரம், அ எச்சவிகுதி, கனன்று இறந்தகாலவினையெச்சம், கனல் பகுதி, லகரம் னகரமாகத்திரிதல் சந்தி, றகரமெய் இடைநிலை, உ எச்சவிகுதி, வெகுளி தொழிற்பெயர் வெகுள் பகுதி, இ தொழிற்பெயர்விகுதி. (௫௧)

52. (இ-ள்.) பொருப்பு உறழ் தடம் தோள் - மலையையொத்த பரந்ததோளையுடைய, வாநரம் எழுநூறு - எழுநூறுவாநரவீரரையும், உருவ-ஒருசேரவுருவ, கதிர்பொழி-கிரணத்தைச்சிந்தும், ஓர்வேலால்-ஒருவேலினை, செருக்களத்து எறியும் - போர்க்களத்தில் எறியும், நராந்தகன் தன்னை - நராந்தகனை, அங்கதன்-அங்கதனானவன், பரிவொடும் செகுத்தான்-வெறுப்பில்லாமற்கொன்றான், உருத்து வந்து உடற்றும் - கோபித்துவந்துபோர்செய்யும், தேவாந்தகனை-தேவாந்தகனை, அனுமன் ஓர் குத்தினால் - அனுமனானவன் ஓர்குத்தினால், ஒறுத்தான்-கொன்றான், பருப்பதம் அதனால் - ஒருமலையினை, மகோதரன் ஆவிபறிந்திட - மகோதரனென்னுமரக்கனுடைய உயிர்போக, நீலன் எறிந்தனன் - நீலனென்னும் வாநரசேனைத்தலைவன் வீசினான்.

மறிந்திட என்பதனைப் பறிந்திட எனப்பாடங்கொள்க. பருப்பதம் கணுக்களையுடையது. நராந்தகன் நரருக்கியமன். தேவாந்தகன் தேவர்களுக்கு இயமன். செகுத்தான் இறந்தகாலவினைமுற்று செகு பகுதி, உருத்து உரிச்சொல்லடியாகப்பிறந்த இறந்தகாலவினையெச்சம் உரு பகுதி, உடற்றும் எதிர்காலப்பெயரெச்சம் உடல் பகுதி, லகரமும், தகரமும் றகரமாகத்திரிதல் சந்தி, து சாரியை, உகரக்கேடு சந்தி, உம் எச்சவிகுதி. இரண்டனுருபிற்குமிடத்து மூன்றனுருபுவந்தது உருபுமயக்கம். (௫௨)

53. (இ-ள்.) மாருதி சினவி - அனுமன் கோபித்து, திரிசிரா - திரிசிராவினது, அம் கைவாள் பறித்து-அவனது கையிலேந்திய வாளைப்பிடுங்கி, அவன்தலை துமித்தான் - அவ்வரக்கனுடைய தலையைவெட்டினான், போர் முகத்து-யுத்தமுகத்தில், இடபன்-இடபனென்னும் வாநரசேனைத்தலைவன், மத்தனை-மத்தனென்னுமரக்கனை, கதையால் புகை எழ புடைத்து-தனது தண்டாயுதத்தால் புகைமேலெழ அடித்து, உயிர்குடித்தான்-அவன் உயிரையுண்டான், இலக்குவன்-இலட்சுமணர், கார்முகம் குழைத்து - வில்லினைவளைத்து, மலர் அயன் கணையால் - தாமரையில்வசிக்கும் பிரமாஸ்திரத்தால், அமரர்கண்களிப்ப-தேவர்கள்கண்டு களிகூர, நேரலர்கடந்த-பகைவரைக்கடந்த, திறல் அதி

காயன்-வெற்றியையுடைய அதிகாயனது, நெடும் தலை துமித்து நின்று-பெரி யதலையைத்துண்டித்து நின்று, ஆர்த்தான்-வீரகோஷஞ்செய்தார்.

துமித்து இறந்தகாலவினையெச்சம் துமி பகுதி, சினவி பெயரடியாகப் பிறந்த இறந்தகாலவினையெச்சம் சின பகுதி. சினம் பெயர். அமரர் இறப்பி ல்லாதவர். (ருங)

54. (இ-ள்.) கறங்கு-ஒலிக்கின்ற, தெள் திரை நீர் - தெள்ளிய அலையையு டைய கடல்சூழ்ந்த, உலகு எல்லாம் வென்ற - உலகினையெல்லாம் வெற்றி கொண்ட, கதழ் சினத்து-மிக்ககோபத்தையும், அடல்-வெற்றியையுமுடைய, அதிகாயன் இறந்தமை - தனதுபுத்திரனாகிய அதிகாயன் இறந்தசெய்தியை, நிருதர்கோன் கேட்டு-இராவணன்கேட்டு, சினவி-கோபித்து, இந்திரசித்தி னைவிடுப்ப-இந்திரசித்தினையேவ, செறிந்த கூர் இருள்வாள் - நெருங்கிய மிக் க இருளில், வெம் சமர் உடற்றி - கொடியபோர்செய்து, திசைமுகன் பகழி யால்-பிரமாஸ்திரத்தால், இராமன்-இராமமூர்த்தியும், போர் மறம் கள்-போ ரில் வெற்றியைக் கொள்ளைகொள்ளும், இளவல்-இலட்சுமணரும், வாநரத்த லைவர்-வாநரசேனைத்தலைவருமாகிய, யாரையும் - எல்லாரையும், மண் இடை வீழ்த்தான் - நிலத்தின்மேல்விழுத்தினன்.

கதழ் சினம் வினைத்தொகைநிலைத்தொடர். இதனடியாகக்கதழ்ந்த கத ழ்ந்து, கதழ்ந்தான் எனவினைவிகற்பங்கள்வரும். அடல் வெற்றிமேல்நிற்றலா ல் தொழிலாகுபெயர் அடு பகுதி, 'உகரக்கேடு சந்தி, அல் தொழிற்பெயர் விகுதி. (ருச)

55. (இ-ள்.) வரி சிலை கல்வி - கட்டமைந்த விற்றொழிற் கல்வியே, உருவு எடுத்தது அனைய - உருவெடுத்ததை யொப்ப வுருக்கொண்ட, வாள் எயிறு அரக்கன் - விளங்கும வக்கிரதந்தங்களையுடைய இந்திரசித்து, வெம் சமரில்- கொடியபோரில், புரி தொழில் அனைத்தும் - தான்செய்த தொழில் முற்றும், இராவணற்கு உரைத்து - தனது பிதாவாகிய இராவணனுக்குச் சொல்லி, பொங்கு பேர் உவகையின் இருப்ப - மேலெழுந்த பெரியமகிழ்ச்சியோடு அ வனிருக்க, நிருதர் புங்கவன் ஆம் - அரக்கர்களில் உயர்ந்தவனாகிய, வீடண ன் - விபீஷணன், சாம்பன் - சாம்பனும், நிகர் இல் போர் அனுமன் அருகு- தனக்கு ஒப்பில்லாத போர்த்தொழிலையுடைய அனுமனுமாகிய இவர்கள் பக்கத்து, துனைவினில் சென்று எய்தி - விரைவிறசென் றடைந்து, நீர் பிழைத்தமையால் - நீங்கள் உயிரோடிருத்தலால், யாரும் இறந்திலர் என்று- எவரும் உயிர்கழிந்திலரென்று, அறைந்தான் - கூறினன்.

எடுத்தனைய தொகுத்தல்விகாரம. (ருரு)

56. (இ-ள்.) ஐய கேள் - அனுமனே கேளாய், மெய் புகு கருவி - சரீரத்தி ற்றுளைத்து அழுந்திய ஆயுதங்களை, மாற்றுறும் அதகம் - மேலெழுப்பும் சஞ் சீவியும், துணி படும் - பிளவுபட்ட, மெய் பொருத்து அதகம் - சரீரத்தைப் பொருத்துஞ் சஞ்சீவியும, எய்திய தழும்பு - அம்புகளேறிட்ட தழும்பினை, தீர்த்திடும் அதகம் - தீர்த்து முன்னிருந்தவடிவேயாக்கும் சஞ்சீவியும், இன்

உயிர் அளித்திடும் அதகம - கழிந்த இனிய உயிரைமீட்டுக்கொடுக்குஞ் சஞ்சீவியும் ஆகிய இவைகள், வெள்ளி வரைக்கும் - கயிலையங்கிரிக்கும், நல் இடப கிரிக்கும் - நல்ல ரிஷபமலைக்கும், நாப்பண் - நடுவில், இனிது அமரும் - தீனக்கொரு இடையூறின்றி இருக்கும, மை அறு - குற்றமற்ற, மருத்துவரையினில் உள - மருத்துமலையிலுளளன, நீ கொணர்க என - நீ கொண்டுவரக்கடவாயென்று சாம்பன்கூற, மாருதி பாய்ந்தான் - அனுமன் (கொண்டுவரப்) பாய்ந்தான்.

ஐய அண்மைவிளி. மெய்புகுகருவி மாற்றுறுமதகமுதலியன நான்கு என்னும என் தொகக்குநின்ற செவ்வெண். "மாண்டாரையுய்விக்குமருந்தொன்றுமெய்வேறுவகிர்களாகக, கீண்டாலும் பொருந்துவிப்பதொருமருந்துபடைக்கலங்கள்கிளர்ப்பதொன்று, மீணடேயுந்தம்முருவேயருளுவதோர்மெய்மருந்துமுள" எனக்கம்பராமாயணததில் வருதல்காண்க. (ருசு)

57. (இ-ள்.) பாய்தலும்-அனுமன் பாய, அதனில் மருந்து காண்கிலனாய்-அம்மலையில் அந்தமருந்தைக் காணாதவனாய், பரு வரை பறித்து வந்து உய்ப்ப - பருத்த அம்மலையை வேரோடு பறித்துக்கொண்டுவந்து போர்க்களத்தில்வைக்க, சேய - செவந்த, தாமரை கண் செல்வனை முதலோர் - தாமரை போன்ற கண்களையுடைய இராமமூர்த்தி முதலியோர், துயில் உணர்ந்தார் என எழுந்தார் - நித்திரையினின்று எழுந்தவர்போல எழுந்தார்கள், ஏய - பொருந்த, அம் மலையை - அந்த மலையை, மாருதி - அனுமன், முன்னர் இருந்த உழி வைத்து - முன்பு இருந்த இடத்தில் வைத்து, மீண்டு எய்த - திரும்பிவந்தடைய, காய் சினம் கதுவி - மிக்க கோபத்தைநகன்றி, இரவி சேய் முதலோர் - சூரியன்புத்திரனாகிய சுக்கிரீபன்முதலியோர், கடி மதில் இலங்கை - காவல் மிக்க மதில்சூழ்ந்த இலங்கையில், தீ மடுத்தார் - தீக்கொளுவினார்கள்.

சேய பண்படியாகப்பிறந்த குறிப்புவினைப்பெயரெச்சம செம்மைபகுதி, முதல்நீளுதலும, ஈறுகெட்டு மகரமெய் யகரமெய்யாகத் திரிதலும் சந்தி. அ எச்சவிகுதி. ஏய நிகழ்காலவினையெச்சம் ஏய்பகுதி, அ வினையெச்சவிகுதி.

58. (இ-ள்.) நிருதர் கோன் - அரக்கர்களுக்குத் தலைவனாகிய இராவணன். அன்னது கேட்டு - அதனைக் கேட்டு, கும்பகன்னன தன் மைநதரை - கும்பகன்னனுடைய புத்திரர்களை, அழையா - அழைத்து, மின் நகு - மின்னல்போலவிளங்கும், சுடர் வேல் - விளக்கம் அமைந்த வேலையேந்திய, தலைவரொடு ஏகி - சேனைத்தலைவரோடுசென்று, வெம் சமர் புரிக என விடுப்ப - கொடியபோரைச் செய்வீரென்று ஏவ, கல் நவில் திரள் தோள் - மலையையொத்த திரண்டதோளையுடைய, குரங்கு வெம் சேனை - கொடிய வானரசேனையாகிய, கனை கடல் - ஒலிக்குங் கடலானது, உடைந்தர கலக்கி - உடைந்து புடைபெயர உழக்கி, கொல் நுனை - கொல்லுதற்குரியநுனியையுடைய நுதிவாய்ந்த, அயில் வேல் கப்பணம் சிதறி - கூரியவேலாகிய கப்பணங்களைச் சிந்தி, கூற்றம் கறங்க - இயமனும் அஞ்ச, எதிர் மலைந்தார் - எதிர் நின்று போர்செய்தார்கள்.

கப்பணம் கைவேல் கும்பகன்னன்மக்களாவார் கும்பன், நிகும்பன். அழையா செய்யா என்னும் வாய்பாட் டிறந்தகால வினையெச்சம். அழை

பகுதி, யகரமெய்சந்தி, ஆ எச்சவிகுதி, வேற்கப்பணம் இருபெயரொட்டுப் பண்புத்தொகை. குரக்குவெஞ்சேனை மென்றொடர் வன்றொடர் ஆதல் ந-உயிர்-கூச-சூ-இல் "மன்னே" என்ற விதியால். (ருஅ)

59. (இ-ள்.) அங்கதன் சினவி - அங்கதன் கோபித்து, அகம்பனன் என்னும் அரக்கனுக்கு - அகம்பனனாகிய அரக்கனுக்கு, அமரர் உலகு அளித்து-விண்ணுலகம்தந்து, வெம் கனல் நேர் - வடவாமுகாக்கினியையொத்த, பிரசங்கனை - பிரசங்கனென்னு மரக்கனை, மறலி விருந்து எதிர் கொள்க என விடுத்தான - இயமன் விருந்தெதிர் ஏற்கக்கடவ னென்று யமபுரத்துக்கு அனுப்பினான், அடு சினம் துவிதன் - கொல்லுங் கோபமிக்க துவிதனென்னும் வானரசேனைத்தலைவன், செம் கை வள் உகிரால் - செவந்த கையிலுள்ள கூரிய நகங்களால், சுரோணிதக் கண்ணனை செகுத்தான் - சுரோணிதாக்ஷனைக் கொன்றான், திறல் மயிந்தன் - வெற்றியையுடைய மயிந்த னென்னும் வானரசேனைத்தலைவன், பங்கம் இல் மயூபாக்கனை - குற்றமில்லாத மயூபாக்கனென்னும் அரக்கனை, பறவை கூட்டுண - கழுகுமுதலிய பறவைகள் கொள்ளைகொண்டுதசையுண்ண, உயிர் படுத்தான் - அவன் உயிரைப் போக்கினான்.

மறலி கொல்லுதலையுடையவன், மறல் (கொலை) பகுதி, இ பெயர்விகுதி. பறவை வினைமுதற்பொருளில்வந்த தொழிற்பெயர் பற பகுதி, வகரத்தோற்றம் சந்தி, ஐ விகுதி. அமரர் ஈறுதொக்கு அமர் என நின்றது. (ருகூ)

60. (இ-ள்.) நள் இருள் விழுங்கி - மிக்க இருளைவிழுங்கி, கதிர் எதிர் எடுக்கும - கிரணங்களைச் சத்திசெய்யம், பரிதி சேய - சூரியன்புத்திரனாகிய சுக்கிரீபன், நாகு இளம் பிறை தாழ் - இளமைதங்கிய பிறையையொத்த, வெள் எயிறு அகல் வாய் - வெள்ளிய வக்கிரதந்தங்களபொருந்திய அகன்றவாயையுடைய, கும்பன் - கும்பனென்னுமரக்கன், வான் மகளிர - அரம்பையருடைய, நகை விருநது அயின்றிட - புன்னகையாகிய விருந்தினை யனுபவித்துத்திளைக்க, விடுத்தான் - ஏவினான், கொள்ளை வண்டு-வண்டின் கூட்டங்கள் அறை தார் - மதுவுண்டொலிசரு மாலையையணிந்த, நிகும்பனை-நிகும்பனென்னும அரக்கனை, திறல் கூர் அநுமன - வெற்றிமிக்க அனுமன், ஓர் குத்தினில் கொன்றான் - ஒரு குத்தால் சிதைத்தான, வள்ளல்-இராமமூர்த்தி, ஓர் கணையால் - ஒருபாணத்தால், அடல் புரி - கொலைத் தொழிலைச் செய்யும், மகரக்கண்ணனை - மகராக்ஷனென்னும் அரக்கனை, ஆர் உயிர் மாய்த்தான்- அரிய உயிர்வாங்கினான்.

மகரக்கண்ணன் மகரமீன்போன்ற கண்களையுடையவன். பிறை தொழிற்பெயா பிறபகுதி, ஈறுகெடுதல் சந்தி, ஐ தொழிறபெயர் விகுதி, இது ஆகுபெயராய்ச் சந்திரன்மேல் நிற்றலால் தொழிலாகுபெயர். அயின்றிட நிகழ்காலவினையெச்சம் அயில் பகுதி, து சாரியை, லகரம் னகரமாதலும் உகரக்கேடும் சந்தி, இடு பகுதிப்பொருள்விகுதி, அனைத்தும் ஒருபகுதி. இல் ஏழாம் பொருளில் வந்த ஐந்தனுருபு. வள்ளல் பண்பாகுபெயராய் நிற்றலாலதைப் பண்புப்பெயர் வண்மைபகுதி, ஈறுகெடுதலும் ளகரத்தோற்றமும் சந்தி, அல் பண்புப்பெயர்விகுதி. நாகிள ஒருபொருட் பன்மொழி. (கூ0)

61. (இ-ள்.) ஈங்கு இவை - இவ்விடத்தில் நிகழ்ந்த செய்திகள், அரக்கன் செவி முதல் உறலும் - இராவணனுடைய காதிறபட, இந்திர சித்தினை ஏவ - அவன் இந்திரசித்தினை ஏவ, ஆங்கு - அவ்விடத்தில், அவன் - அவ்விந்திரசித்து, மாயா சீதையை - மாயையாலாக்கிய ஓர்சீதையை, விறல் கூர் அனுமன் முன் - வெற்றிமிக்க அனுமன் முன்பு, தடிந்து - கொன்று, இகல் வேள்வி - போர்க்குரிய யாகமாகிய, நிகும்பலைக்கு - நிகும்பலையை, தீங்கு அற புரிவான் - விதிப்படி செய்ய, உறலும் - அடைய, மாருதி-அனுமன், திரு மறு மார்பன் - இலக்ஷ்மியிருக்கும் ஸ்ரீவத்சமென்று மறுப்பொருந்திய மார்பையுடைய இராமமூர்த்தியின், பாங்கு வந்து - பக்கம்வந்து, அரக்கன் புரிந்தமை - அவ்விந்திரசித்துச்செய்த செய்தியை, உரைப்ப - கூற, பருவரல் கடலில் வீழ்ந்து - துன்பமாகிய கடலில் விழுந்து, அயர்ந்தான் - சோர்ந்தான்.

சீதை படைச்சாலிற்றோன்றினவள், இரண்டனுருபு சிற்குமிடத்து நான்கனுருபு நிற்றலுருபுமயக்கம். தடிந்து இறந்தகாலவினையெச்சம். தடி பகுதி. புரிந்தமை இறந்தகால இடைநிலைபெறறுவந்த தொழிற்பெயர், செவிப்புலனைச் செவிமுதலென்றார். (சுக)

62. இ-ள்.) ஆய போழ்து-இவ்வாறான காலையில், அனுமன் உரைத்தல் கேட்டு - அனுமன் கூறிய வார்த்தையைக்கேட்டு, ஐய - ஐயனே, அழுங்கிடேல்-வருந்தல்வேண்டாம், இராவணி-இராவணன் புத்திரனாகிய இந்திரசித்து, வஞ்ச மாயையில் - வஞ்சத்தையுடைய மாயையினால், சீதை வகுத்தனன் - சீதையினுருவகுத்து, தடிந்து - கொன்று, மகம் செய்வான்-யாகத்தைச் செய்ய, நிகும்பலைக்கு அகன்றான் - நிகும்பலைக்குச் சென்றான், மேய அவ்வேள்வி - பொருந்திய அந்தயாகம், முற்றுறின் - முடிந்தால், நம்மால் வெல்லுதல் அரிது - நம்மால் வெல்லுதல் முடியாது, அமர் உடற்றி - போர் செய்து, தீயினை செகுப்பான் - அந்தயாகத்தைச் சிதைக்க, இளவலை விடுத்தி என்று - இலட்சுமணனை யனுப்புவாயென்று, வீடணன் தெளிந்து உரைத்தான்-விபீஷணன் மனந்தெளிந்து சொன்னான்.

வீடணன் வண்டின் வடிவாகச் சென்று தெளிந்து கூறினமையால் தெளிந்தென்றார். இராவணி இராவணன் புத்திரன் இது தத்திதாந்தபதம். வகுத்தனன் முற்றெச்சம். அழுங்கிடேல் முன்னிலை யொருமை யெதிர்மறையேவல் வினைமுற்று. அழுங்கிடு பகுதி. உக க்கேடு சந்தி, எல் விகுதி. வண்டின் வடிவமாகச் சென்றானென்பது "வண்டினதுருவங்கொண்டுமானவன் மனத்திற்போனான், றண்டலையிருக்கைதன்னைப்பொருக்கெனச் சார்ந்துதானே, கண்டனனென்ப" எனவரும் கம்பராமாயணச்செய்யுளாலுணர்க. சுஉ

63. (இ-ள்.) உரைத்தலும் - இராவணன்கூற, கமலம் தடம் கண்ணான் - தாமரைமலரைப்போலப் பரந்தகண்களையுடைய இராமமூர்த்தி, இளவல் - இலட்சுமணனை (நோக்கி) ஒல்லை போக என - விரைந்து செல்லக்கடவாயென்று ஏவ, தொழுது ஏகி - வணங்கிச்சென்று, வரை தடம் திணி தோள் - மலைபோலுயர்ந்த திண்ணியதோளையுடைய, அனுமன் மேல் இவர்ந்து - அனுமன்,

மேல் ஆரோகணித்து, வாநர வீரர் பின் தொடர - வாநரசேனைவீரர் பின்றொடர்ந்துவரவும், அரக்கர் கோன் - அரக்கர்தலைவனாகிய இராவணனுடைய, இளவல் - தம்பியாகிய விபீஷணன், கனன்று முன் நடப்ப - கோபித்து முன்செல்லவும், அரன் விழித்து எரித்த முப்புரத்தின் - சிவபெருமான் நெற்றிக்கண் திறந்தெரித்த திரிபுரத்தைப்போல, செரு களம் செவப்ப - யுத்தகளம் உதிரத்தாற் செவப்பேற, சிறிது கண் சிவக்கும் - சற்றுக் கண்கள் சிவக்கும், சேவகன் - இலட்சுமணர், நிகும்பலை சேர்ந்தான் - நிகும்பலையாகத்தைச் சேர்ந்தார்.

தொழுது என்னும் வினையெச்சம் ஏகி யென்னும் வினையெச்சத்தின் முதனிலையையும், அவ்வெச்சமிவர்ந்து என்னும் வினையெச்சத்தின் முதனிலையும், அது சிவக்குமென்னும் பெயரெச்சத்தின் முதனிலையும், அவ்வெச்சம் சேவகனென்னும் வினைமுதற்பொருளையு முறையே கொண்டன. (சுங)

64. (இ-ள்.) அரு மறை - அரிய வேதவிதிப்படி, தக்கன் புரி மகம் - தக்கன் செய்தயாகத்தை, கணங்கள் அழித்தது என - சிவகணங்கள் அழித்தாற்போல, அடல் சினத்து-கொல்லுங் கோபத்தையுடைய, அரக்கன் புரிதரும் வேள்வி-இந்திரசித்துச்செய்யும் நிகும்பலையாகத்தை, வாநரத்தலைவர் அழித்தலும்-வாநரசேனைத்தலைவர் சிதைக்க, புண் திறந்தது அன்ன-புண்திறந்ததையொத்த, எரி உமிழ்-கோபாக்கினியைச் சிந்தும், தறு கண்-கொல்லுங்கண்களையுடைய, அரக்கர் கோன் சிறுவன் - இராவணன்புத்திரனாகிய இந்திரசித்து, இமை கரிந்து - இமைகள்கருகி, அழல் உக விழித்து - கோபாக்கினி சிந்த கண்களைவிழித்து, பரிதி - சூரியனுடைய, மான் தடம் தேர் அனைய - குதிரைபூண்ட பரந்ததேரையொத்த, பொன் தேரில் - பொன்னாற்சமைந்த தேரில், பாய் புலி போத்து என்ன - பாய்ந்து மலையிலேறும் புலிப்போத்தைப்போல, இவர்ந்தான் - ஏறினன்.

முதல் சினைக்கொற்றுமை உண்மையால் சினைவினையை முதல்மேலேற்றி இமைகரிந்தழலுக விழித்தெனவும், உவமைக்கும் பொருட்கும் ஒற்றுமை உண்மையால் பொருளின் தொழிலை உவமைக்கேற்றியுங் கொள்க. என உவமையுருபிடைச் சொல்லடியாகப் பிறந்த நிகழ்காலவினையெச்சம். என இடைச்சொல் பகுதி. னகரக்கேடு சந்தி. அ வினையெச்ச விகுதி. (சுச)

65. (இ-ள்.) அந்தரத்து அமரர் - வானத்திலுறைந்த தேவர்கள், இமைப்பு உறுத கண்கள் இமைத்து - இமைகொட்டாத கண்களை இமைகொட்டி, வான் துறந்தனர் அகல - அவ்வாகாயத்தைவிட்டு நீங்கவும், மந்தரம் வெடிப்ப-மந்தரகிரி வெடிபடவும், மாதிரம் தலைவர் - திக்குப்பாலர்கள், வயிறு எரி தவழ்ந்து - தமதுவயிற்றில் அச்சமாகிய நெருப்புத்தவழ்தலால், நின்று ஏங்க-கம்பித்துநின்று மனம்வருந்தவும், கந்து அடு புழை கை - கட்டுத்தறியை முறிக்கும் துவாரம்பொருந்திய துதிக்கையையுடைய, திக்கயம் வெருவி - அஷ்டகஜங்களும் அஞ்சி, களி மதம் துறந்து - செருக்கால்வரும் மதநீங்கி, கான் பட... டந்செல்லவும், அண்டகோளகையும் வெடி தர - அண்டவட்டங்க

ளும் வெம்படமும், இந்திரன் பகைஞன் - இந்திரசித்து, வரி வில் நாண் எறிந்தான் - கட்டமைந்த வில்லில் குணத்தொனிசெய்தான்.

மாதிரத்தலைவர் திகையம் இவற்றினிறுதியில் இனைத்தென அறிபொருளில்வந்த முற்றும்மைதொகுத்தல், வெருவுதலால் மதநீங்குதலின் வெருவி காரணப்பொருளில்வந்த இறந்தகாலவினையெச்சம். வெருவு பகுதி. பகைஞன் பொருட்பெயர் பகை பகுதி, ஞகரம் பெயரிடைநிலை, அன் விகுதி. (௬௫)

66. (இ-ள்.) களத்து எதிர் ஏற்ற - போர்க்களத்திலெதிர்த்த, ஓர் ஒரு கவிகட்கு - ஒவ்வொரு குரங்குகட்கு, வில் விசையின் - வில்லின்விசையால் ஏவிய, ஆயிரம் ஆயிரம் கணைகள் - ஆயிரமாயிரம் பாணங்களும், துளைத்து - ஒவ்வொருகுரங்கையுந்துளைத்து, நேமி அம் கிரியும் - சக்கரவாளகிரியும், துணைவினின் உருவி - விரைந்துபோயுருவி, விண் படர - ஆகாயத்திற்செல்லவும், வளை தலை புகுதும் அரவு என - வளையிற் செல்லும்பாம்பைப்போல, சில போய் - சிலஅம்புகள்சென்று, அனுமனது ஆகம் ஊடு உருவ - அனுமனுடையசரீரத்தினூடுவிற்பட்டுருவவும், தளி புயல் ஏழும் - குளிர்ந்த ஏழுமேகங்களும், கடை யுகத்து இறைக்கும் தாரைபோல் - யுகமுடிவிற் சிந்தும் மழையைப்போல, கணை மழை பொழிந்தான் - சரவருஷத்தைச் சொரிந்தான்.

ஓர் ஒரு கவிகட்கும் ஒவ்வோராயிரங் கணைகளை யேவினான் என்பார், ஓரொருகவிகட் காயிரமாயிரமென்றார். சிலபண்படியாகப் பிறந்த பலவின்பாற்படர்க்கைக் குறிப்புவினைமுற்றுப்பெயர். சின்மை பகுதி. (௬௬)

67. (இ-ள்.) கூற்று - இயமனுடைய, மெய் பனிப்ப - உடல் கம்பிக்க, அரக்கர் கோன் விடுத்த - இந்திரசித்து ஏவிய, கொடும் கணை யாவையும் - கொடிய அம்புகள் முழுமையும், கணையால் மாற்றி - தமதுகணைகளால் அறுத்து, வாள் அரக்கன் - வாளையேந்திய அந்த இந்திரசித்துவினுடைய, மருமம் - மார்பிலும், நீள் தடம் கை - நீண்டகையிலு மணிந்த, அணி - ஆபரணங்களும், முடி - கிரீடமும், நுண் துகள் படுத்தி - நுண்ணிய பொடிகளாகச்செய்து, காற்று உறழ் புரவி - காற்றையொத்த வேகத்தையுடைய குதிரைகளையும், கவினம் மான் தடம் தேர் - கடிவாளத்தையுடைய குதிரை பூண்ட பரந்ததேர்களையும், களிறு இனம் - யானைக்கூட்டங்களையும், துணித்து - துண்டுபடுத்தி, வெம் குருதி ஊற்று இருந்து ஒழுக - கொடிய உதிரமூற்றெடுத்தொழுகவும், கவந்தம் ஆட்டு அயர - கவந்தங்களாடவும், இலக்குவன் - இலட்சுமணர், உறு கணை பொழிந்தான் - மிக்க சரவருஷத்தைச்சிந்தினர்.

கவந்தம் உடற்குறை. (௬௭)

68. (இ-ள்.) இந்திரன் மருமம் - (அந்தப்பாணம்) இந்திரனுடைய மார்பை, போழ்ந்தது - பிளந்தது, மறலி நாவின் - இயமனுடைய நாவின், தீம் சுவை அறிந்தது - இனியசுவையை யறிந்தது, அந்தரத்து இயங்கும் - ஆகாயத்தில் சஞ்சரிக்கும், புட்பக ஊர்தி - புட்பகவிமானமானது, அரத்த வெம் புனலின் ஆடியது - உதிரவெள்ளத்தில் முழுகியது, செம் தழல் கடவுள் - அக்கினிதேவனுடைய, பழு எலும்பு ஒடித்தது - பழுவெலும்பினை முறித்தது, தீய,

ன் - இந்திரசித்து, வெம் திறல் முகப்பகழி - கொடிய வலிமைவாய்ந்த முக த்தையுடைய பாணத்தை, மந்தரம் தடம் தோள் - மந்தரகிரியை யொத்த உயர்ந்ததோள்களையுடைய, மாருதி - அநுமனது, மருமம் போழ்ந்திட - மார் புபிளவுபட, வல்லினின் விடுத்தான் - வலித்து எவினன்.

தீய என்பதைத் தீயன் எனப் பாடங்கொள்க. போழ்ந்தது என்றன்பா ற் படர்க்கை யிறந்தகாலவினைமுற்று போழ்பகுதி, நகரமெய்சந்தி, தகரமெ ய் இறந்தகாலவிடைநிலை, அசாரியை, து விகுதி. இயங்கும் நிகழ்காலத்தின் மேல் நின்ற பெயரெச்சம் இயங்கு - குதி. இந்திரன் ஐசுவரியமுடையவன். ஊர்தி தொழிலாகுபெயராய் வாகனத்தின்மேல்நின்றது ஊர் பகுதி, தி தொ ழிற்பெயர் விகுதி. ஒடித்தது என்றதொக்கு ஒடித்த என நின்றது. இலட்சும ண ரம்பின்வலிமையின்பெருமையைக் குறினமையால மிகுதிநவிற்சியணி.

69. (இ-ள்.) உரு கெழு தோற்றத்து - அச்சமிகுந்த தோற்றத்தை யுடைய, அனுமன் மார்பு அகலத்து - அனுமனுடைய மார்பில், உடற்று வெம் பகழி- வருத்தாநின்ற கொடியபாணம், போழ்ந்து உருவ - பிளந்து உருவுதலால், கு ருதிகான்றிடலும் - உதிரஞ்சோர, இலக்குவன் - (அதுநோக்கிய) இலட்சும ணருடைய, புருவத்தொடும் - புருவத்தோடும், உயர் கொடுமை சிலை குழைய- உயர்ந்த வளைந்த வில்லும் வளைய, வரி சிலை அற்றது - இந்திரசித்துவின் கட் டமைந்த வில் துண்டுபட்டது, ஊர் தரு பாகன் மறிந்தனன் - அவனது தே ரைநடத்தும் பாகனுநிலைகலங்கியிறந்தான், வாம் பரி மறிந்த-அவனது தேரிற் பூட்டியதாவிச்செல்லும் குதிரைகளுமடங்கிவீழ்ந்தன, விரை செலும் - விரை ந்துசெல்லும், மான் தேர் சிதர்ந்தது - குதிரைபூண்ட தேரும் பொடிபட்டது, அவ்வரக்கன்-அந்த இந்திரசித்து, வியன் நகர் - பரந்தநகரமாகிய, இலங்கை யிற் புகுந்தான் - இலங்கைக்குச் சென்றான்.

மார்பகலம் ஒருபொருட்பன்மொழி. போழ்ந்து இறந்தகால வினையெ ச்சம் போழ் பகுதி, நகரமெய் சந்தி, தகரமெய் இடைநிலை, உ எச்சவிகுதி. வாவும் என்னும் பெயரெச்சத்தின் ஈற்றுஉயிர்மெய்கெட்டு வாம எனநின்ற து. ந. வி. "செய்யுமெனெச்சவீற்றுயிர்மெய்சேறலும்" என்ற சூத்திரவிதி யால். மறிந்தனன் மறி பகுதி. (சுக)

70. (இ-ள்.) ஓர் இமை ஒடுங்கும் முன்னர் - ஒரு இமைப்பொழுது தொடுங்கு தற்குமுன், ஓர் தடம் தேர் பண்ணுறுத்து - ஓர் பரந்த தேரை அலங்கரித்து, ஒல்லையின் இவர்ந்து - விரைந்து ஏறி, போர் முகத்து எய்தி - யுத்தமுகத்தில் வந்து, கவி குலம் அனைத்தும் - வானரக்கூட்டங்கள் முழுமையும், பொன்ற- இறக்க, வெம் கணை மழை பொழியும் - கொடிய சரவருஷத்தைச் சிந்தும், கார் நிறத்து அரக்கன் - கரிய நிறத்தையுடைய இந்திரசித்துவினது, கொடிஞ்சி மான் தேரில் - மொட்டையுடைய குதிரைபூண்ட தேரில் கட்டிய, கவனம் - வேகத்தையுடைய, வாம் புரவிகள் அனைத்தும் - தாவிச்செல்லுங் குதிரைகள் முழுமையும், பாரிடை மறிய - நிலவுலகின்மேல் வீழ்ந்திறக்க, வீடணன் எதிர் போய் - விபீஷணன் அவன் எதிர்சென்று, பாழி அம் கதையினால் - பருத்த அழகிய தண்டாயுதத்தினால், புடைத்தான் - அடித்தான்.

இமை என்னு முதனிலைத்தொழிற்பெயர் காலத்தின்மேல் நிற்றலால் தொழிலாகுபெயர். பொன்ற இறந்தகாலவினையெச்சம பொன்று பகுதி, உகரக்கேடு சந்தி, அ எச்சவிகுதி. மறிய காரியப்பொருள்மேல் நிற்றலால் எதிர்காலவினையெச்சம் மறி பகுதி. (௭0)

71. (இ-ள்.) நரை விடை - வெள்ளிய இடபவாகனத்தை, ஊர்ந்த கடவுளும் - நடத்தியருளும் உருத்திரமூர்த்தியும், மலர் மேல் நான் முகக் கடவுளும் - தாமரைமலரின்மேல்வசிக்கும்பிரமதேவனும, வியப்ப - அதிசயிக்கவும, அருவரை தடம் தோள் - அரியமலையையொத்த உயர்ந்த தோளையுடைய, இந்திரன் - தேவேந்திரன், இகழ்ந்த அரசு இயல் - கைவிட்ட அரசியலானது, கிடைத்தது என்று உவப்ப - இப்போது கிடைத்ததென்று மகிழவும், திரை எறி - அலை எறியும, குருதி புனல் - உதிரவெள்ளமானது, பரந்து ஓடி - பரவியோடிப் பாய்தலால், கரும கடல் முழுவதும - கரியகடல்முற்றும், செவப்ப - செவக்கவும், இரவும் நன் பகலும - இராப்போதும பகற்போதும, மூன்று நாள் ஒழியாது - மூன்றுநாள்களும் ஒழியாமல், இருவரும் - இலட்சுமணரும் இந்திரசித்தும், வெம் சமர் விளைத்தார் - கொடிய போர்செய்தார்கள்.

வியப்ப, உவப்ப, செவப்ப என்னும்மை தொக்குநின்ற எச்சங்கள் காரியப்பொருண்மேனிற்றலால் எதிர்காலவினையெச்சங்கள். விய உவ செவ பகுதிகள். பாய்தலால் இசையெச்சம. இகழ்ந்த அரசியல் கிடைத்ததென்றுவப்ப இது பொருண் முரணணி. கரும கடல முழுவதுஞ் செவப்ப இது சொன்முரணணி. (௭௧)

72. (இ-ள்.) அந்தரத்து அமரர் - ஆகாயத்தினின்ற தேவர்கள், மலர்மழை பொழிய - புட்பவருஷத்தைச்சிந்த, ஆடகம பொருப்பினை - பொன்மலையை, குழைத்த - வளைத்த, சந்திர மௌலி கடவுள் ஆம என்ன - சந்திரனையணிந்த கிரீடத்தையுடைய சிவபிரானைப்போல, கடம சிலை - பெரிய தனுசு, குழைவுற வாங்கி - வளையக் காதுகாறுஞ் செல்ல வளைத்து, கதம் அடு - கட்டுத்தறியை முறிக்கும், புழைக்கை - துவாரமபொருந்திய துதிக்கையையும், கடாமதத்தையுமுடைய, களிறு அனைய - யானையை நிகர்த்த, இலக்குவன் - இலட்சுமணர், விசும்பு காத்தருளும் - விண்ணுலகைக் காக்கும, இந்திரன் கணையால் - இந்திராஸ்திரத்தினால், இராவணி சென்னி - இந்திரசித்தினுடைய தலையை, இரு நிலத்து - பெரிய நிலவுலகின்மேல், அறுத்து வீழ்த்தினன் - அறுத்து விழுத்தினன்.

வாங்கி இறந்தகாலவினையெச்சம வாங்கு பகுதி, உகரக்கேடு சந்தி, இ எச்சவிகுதி. வாங்கி அறுத்து என்னும் வேறுபல அடுக்கிய வினையெச்சங்கள் வீழ்த்தினனென்னும வினைமுற்றின் முதனிலையைத் தனித்தனிகொண்டன. ந-பொது "உருபுபலவடுக்கினும்" என்னும் சூத்திரத்தால். சிவபிரான் மேருவை வளைத்த அன்றே திரிபுரம் பாழ்பட்டதுபோல வில் காதுகாறுஞ் செல்ல வளைத்த அன்றே இராவணி பட்டானென்பதுதோன்றச் சந்திரமௌலி கடவுளாம் என்னத் தடஞ்சிலை குழைவுறவாங்கி என்றார். (௭௨)

73. (இ-ள்.) விண்ணவர் இயக்கர் - தேவர்களும் யக்ஷர்களும், விஞ்சையர் முனிவர் - வித்தியாதரரும முனிவர்களும, வானரர் - வானர சேனாவீரரும், வியந்தனர் ஏத்த - அதிசயித்துத் துதிக்கவும, கண் அகல் - இடம்பரந்த, ஞாலம் முழுதும் - நிலவுலகமுற்றும, களிப்ப - களிகூரவும், கார் முகம கல்வியின் - வில்வித்தையின், துறைபோய் - மார்க்கத்திற் கைதேர்ந்த, அண்ணல் சேவடியின் - இராமமூர்த்தியின் செவந்த திருவடிகளை, இளவல் போய்வணங்க - இலட்சுமணர் சென்று வணங்க, வாய் - தனதுவாயால், பிழி குறும்

துளி - மதுவாகிய சிறுதுளியை, பிலிற்றும் - சிந்தும். தண் - குளிர்ந்த, நறும கமலம் - நறுமணங்கமழும் தாமரைபோன்ற, கண்ணன் - கண்களையுடைய இராமமூர்த்தி, உள் மகிழ்ந்து - மனமகிழ்ந்து, தழுவி நின்று ஆசி கூறினன் - புல்லி ஆசிவசனங்கூறினர்.

வியந்தனர் முற்றெச்சம், பிலிற்றும் நிகழ்காலப் பெயரெச்சம், பிலிற்று பகுதி, உம் நிகழ்கால இடைநிலையோடு கூடிய பெயரெச்சவிகுதி, இது கமலமென்னும் வினைமுதற் பொருள் கொண்டது. தழுவிநின்று இடைவிடாமைப்பொருள்மேல் வந்த இறந்தகாலவினையெச்சம். தழுவு பகுதி உகரக்கேடு சந்தி. இ சாரியை, நில் இடைவிடாமைப்பொருள்மேல் வந்தவிகுதி. அதுவனாக்கும் ஓர்பகுதி, றகர மெய் இறந்தகால இடைநிலை. உ எச்சவிகுதி. வருமொழி முதல் மெல்லெழுத்துவர ஈற்றுலகரம் னகரமாய் அகன்ஞாலம் எனவருதல் ந-மெய். உச-சூ-இல். "மெலிமேவினணவும்" என்றமையால். (எங)

74. (இ-ள்.) ஈங்கு இவை நிற்க - இவ்விடத்தில் இச்செய்திகணிகழ, இராவணி - இந்திரசித்து, அமரின் - போரில், இறந்தமை - இறந்தசெய்தியை, ஒற்றர் போய இசைப்ப - தூதுவர் சென்று கூற, ஆங்கு இசை மிழற்று - என்றுநீங்காது ஏழிசைகளுமொலிக்கும, திவவு - முறுக்காணியையுடைய, யாழ் உயர்த்தோன் - வீணைத்துவசத்தையுயர்த்திய இராவணன், துன்ப வாரிதியில் வீழ்ந்து - துன்பக்கடலில்விழுந்து, அழுந்தி - நிலைகாணாது அழுந்தி, பாங்கு உறை - தனதுபக்கத்திலிருக்கும, பரி தேர் - குதிரையும தேரும, வெம் சினம் களிறு பதாதி - கொடிய கோபத்தையுடைய யானையும காலாளும், என்று உரைக்கும் நால் படையும - என்று சொல்லப்படு நான்குசேனையும், வீங்கு நீர் வேலை - பெருத்த நீரையுடையதாகிய கடல்சூழ்ந்த, புவி முழுது உருச்செல - நிலமுழுது நெளிக்க, வெம் சமர் புரிக என விடுத்தான - கொடிய சண்டைசெய்யக்கடவீரென்று விடுத்தனன்.

தானையாகிய வொலிமேனிற்றலால் தானியாகுபெயர். நிற்க-நிற்க லென்னுஞ்சொல் நிகழ்காலநிகழ்தலென்னும்பொருணிகழ்ச்சிதோன்ற உடன்பாட்டு வியங்கோள். உருச்செல-காரியப்பொருண்மேன்றலால் எதிர்கால வினையெச்சம், உரு பகுதி சாரியை செல் பகுதி உகரக்கேடுஞ்சந்தி, அ எச்சவிகுதி, இதனை யாக வென்று உருச்செல என விகாரப்பட்டுவருவனவும் உள். முழுதும் உருச்செல எனத் தனது படைமுழுதும ஒருசேரச்செல்க என வலியுறுத்தலின் பொருள் பொதாலால் உதாரவணி. "உதாரமென்பது ஒருசெயலின் - குறிப்பினொருபொருள் நெறிப்பட்டுத்தோன்றும்" என்றது தண்டியலங்காரம். (எச)

75. (இ-ள்.) ஆயிரம் கோடி - ஆயிரங்கோடிகளாகும், ஓர் அளப்பிலா நாள் வருநாதி - ஒரு அளவில்லாத நாள்தோறும் வருநாதி, எண்ணினும் - வரையறுக்கப்புகினும், எண்ணுதற்கு அரிதாம் - வரையறுத்தற்கரிய, போர் மேய - போர்த்தொழிலை விரும்பிய, மூலபலத்தினை - மூலப்படையை, இராமன் - இராமமூர்த்தி, வில் விளையாட்டு அயர்ந்து - சிறிது வில்விளையாட்டுச்செய்து, எளிதில் - தனக்கு ஓர் அருமைதோன்றாது, சாயும் வெம் களத்தில் - வருத்துங் கொடிய போர்க்களத்தில், கடிகை ஓர் ஏழில் - ஓர் ஏழுநாழிகைப்பொழுதில், கனல் விழி - தீப்பறக்குங் கண்களையும, புலவு நாறு அழல் வாய் - புலால்நாற்றமவீசும தீக்கொப்புளிக்கும் வாயையுமுடைய, பேயும் - பேய்க்கணமும், வெம் குறும் தாள் பூதமும் - கொடிய சிறிய கால்களையுடைய பூதகணங்களும், உவப்ப - சந்தோஷிக்க, பெய் கணை மாரியின் - சொரியும் தனது சரவருஷத்தால், அறுத்தான் - துண்டுபடுத்தினர்.

* சேனையாறினுள் மூலப்படை யென்ற, அப்படையிலுள்ளோர் தனது பிதாதைமுதலியோர் காலந்தோறும் தொன்றுதொட்டுவரும்சேனைவீரர்கள். அறுவகைப்படையாவன மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, கைப்படை. கம்பராமாயணத்தில் எழுநாராழிகை எனக்கூறியிருக்கின்றது. "ஆனையாயிரந்தேர்பதினாயிர மடல்பரியொருகோடி சேனைகாவலராயிரமபேர்படில்செழுமணிகின்றுடுங், கானமாயிரமாயிரங்கோடிக்குக்கவின்மணிகணீரொனணும், ஏனையமணியேழனாராழிகையாடியதினிதன்றே." என வருதல்காண்க. (எரு)

76. (இ-ள்.) உரவு நீர் - பெரிய நீர்மயமாகிய, தரங்கம - அலைகளையுடைய, கடல் பெரும் தானை - கடலையொத்த பெரியமூலச்சேனை, சிதைந்தமை-அழிந்தசெய்தியை, ஒற்றர் போய் உரைப்ப - தூதுவர்கள் சென்றுகூற, புருவம்-புருவங்கள், வாள் நுதலில் ஏறின - ஒள்ளிய நெற்றியின்மேல் ஏறின, விழித்த விழிகள் ஓர் இருபதும் - விழித்த இருபதுகண்களும, புகைந்த - புகைந்தன, அரு வரை - பெரியமலையையொத்த, தடம் தோள் இருபதும - உயர்ந்த இருபதுதோள்களும், பணையா - பணைத்து, அண்ட கோளகை முட்டி அளாந்த-அண்டவட்டத்தின் சிகரத்தை அளாந்தன, (அதனால்) அரக்கன் மெய்யுருவாகிய இராவணன்கோபம், என் ஆம என நினைந்து - யாதாய முடியுமோ என்று கருதி, வானவர்கள் - தேவர்கள, வெருவி ஓடினர் - அஞ்சிப்போயினார்கள்.

பணையா செய்யா வென்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம. தோளிருபது ஒருமையிற் பன்மைவந்த வழுவமைதி. புகைந்த என்பது அன்சாரியை பெறாதுவந்த பலவின்பால் படர்க்கைவினைமுற்று, அளாந்தன என்பதும் புகைந்தன அளாந்தன எனவரும். (எசு)

77. (இ-ள்.) பொருப்பு உறழ் - மலையையொத்த, புடைபெயர்கின்ற தோள்களையுடைய, மாபெரும பக்கன மகோதரன - மாபெரும்பக்கனும் மகோதரனும, பொருதமரைசடந்த - போர்செய்து வீரரைவென்ற, உருப்பம் வெம சினத்த - உக்கிரமிகுந்த கொடியகோபத்தையுடைய, தோல விருபாக்கன - வெற்றிவாய்ந்த விருபாக்கனும், ஒடை அம்புகா முகம - பட்டந்தரித்த அழகியபுள்ளிதங்கியமுகமும, பரூஉ தாள - பருத்த காலகளையும, மருப்பு உடைய நடம கை - கொம்பினையுடைய நீண்டதுதிக்கையுமுடைய, வாரணம-யானையும், தடம்தோ-பாகததேரும், வாமபரி- தாவிச்செல்லும குதிரையும், பரிதி வாள உறவர்-சூரியனைப்போல ஒளிவாய்ந்த வாளாள்பகைப்புலத்தையுழும் வீரரும், இரைத்து எழுகடலின்-சத்தித்து எழாநின்ற கடலைப்போல, ஆர்த்து முனசெல்ல-கோஷித்து முனனே போக, இகல அமா வேட்டு- பகைவரோடு போர்செய்தலை விரும்பி, எதிா எழுந்தான - எதிரந்தெழுந்தனன்.

எழும்போதே பகைவரோடெதிர்தலைக்கருதி யெழுந்தனனாகலால் எதிரொழுந்தானென்றார். மகோதரன் பெருவயிறுடையவனெ, பொருநர் பொருபகுதி, நகரமெய் பெயரிடைநிலை, அர் பலர்பால்விகுதி, இகல் பகைவர்மேல் நிறறலால் தொழிலாகுபெயர். வேட்டு இறந்தகாலவினையெச்சம. வேள் பகுதி, ளகரம் டகரமாகத்திரிதல் சந்தி, டகரமெய் இடைநிலை, உ எச்சவிகுதி.

78. (இ-ள்.) மூவகை உலகும் - மூன்று உலகங்களும், தனது அடிபடுத்த-தனது காலின்கீழ்ப்படுத்திய, முழவு உறழ்-மத்தளத்தையொத்த, தடம்புயத்து அரக்கன் - உயர்ந்தபுயத்தையுடைய இராவணன், வாவு மான் தேரில்-தாண்டிச்செல்லுங் குதிரைபூண்டதேரில், மதிகுடைநிழற்ற-சந்திரனையொத்த

தத் தவளவட்டக்குடை ஒருபால் நிழலைச்செய்யவும், வயங்குவெண் சாமரை இரட்ட-விளங்கும் வெள்ளியசவரி ஒருபால்வீசவும், கோ எடுத்து அருந்து - விண்ணுலகையெடுத்துண்ணும், குருதிவாள் அவுணர் - உதிரந்தோய்ந்த வாளையேந்திய அசுரர்கள், குற்றுடைவாள சுமந்து எக-குற்றுடைவாளைச்சுமந்து ஒருபால்வரவும், தேவர் மெய் நடுங்கி-தேவர்கள் உடல் நடுங்கி, திசைதொறும் வணங்க - திசைசம்தோறுநின்று ஒருபால்வணங்கவும், செருக்களத்து - போர்க்களத்தில், வல்லையின் அடைந்தான் - விரைந்துவந்து சேர்ந்தான.

தேவருயிர்பருகுதலினால் கோவெடுத்தருந்துமென்றார். கோ இடவாகுபெயர். இரட்ட நிகழ்காலவினையெச்சம, இரட்டு பகுதி, அருந்தும் நிகழ்காலத்தில்வந்த பெயரெச்சம், அருந்து பகுதி, உகரக்கேடு சந்தி, உம் எச்சவிகுதி, இது வாள் என்னும் வினைமுதற்பொருளைக்கொண்டது. (எஅ)

79. (இ-ள்.) ஆயிரம்செருவில் - அநேகஞ்சமரஞ்செய்யும்போரில், மறலியை புறம் கண்டு - இயமனை முதுகுபார்த்து, அமர் பெறுநர-அவனிடத்தில் போர் பெறுமையால், அரும் சமம வேட்டு-பெறுதற்கரிய போரைவிரும்பி, மாயிரு ஞாலம் முழுவதும் - பெரிய நிலவுலகமுழுதும், திரிந்த - திரிந்துழன்ற, வாகை-வெற்றிமாலையையணிந்த, வெல்திறல்-வெல்லும்வலிமைவாய்ந்த, விருபாக்கன்-விருபாக்கனென்னும் அரக்கன், காய்கதிர்-சுட்டுவருத்துங் கிரணத்தையுடைய, பரிதி சிறுவனை எதிர்ந்து - சூரியன்புத்திரனாகிய சுக்கிரீபனையெதிர்ந்து, ஓர் கணத்தினால் புடைத்திடும் - ஓர்தண்டாயுதத்தாலடிக்க, வெகுண்டு-அச்சுக்கிரீபன் கோபித்து, தீ உமிழ - கோபாக்கினியைச்சிந்தும், தறுகண் பிதுங்க - கொடியகண்கள் பிதுங்க, வாள் அரக்கன் மறிதர - வாளையேந்திய அவ்விருபாக்கன் மடங்கிவீழ்ந்து உயிர்கழிய சென்னியை பறித்தான்-அவன் தலையைக் கைகளாற்பறித்தான்.

ஞாலம் இடவாகுபெயர். மாயிரு ஒருபொருட் பன்மொழி. வருமொழி முதல் உயிர்வர வகரவுடம்படுமெய் தோன்றாது யகரமெய்தோன்றியது உரிச்சொற்றொடராதலால் ந-மெய் "இடையுரிவடசொல்லின் இயம்பியகொளாதவும்" என்ற சூத்திரத்தால், புறம்கண்டு பெறுநர் வேட்டு என வேறுபல அடுக்கிய வினையெச்சங்கள் தனித்தனித்திரிந்த எனனும் முதனிலையையும் அப்பெயரெச்சம் வேல் என்றும் வினைமுதற்பொருளையுங் கொள்ளவைத்தது. உடையவன்தொழிலை உடைமைமேலேற்றிக் கூறும்வழக்கால். (எகூ)

80. (இ-ள்.) உலகு எல்லாம் விழுங்கும் - எல்லாவுலகங்களையும்விழுங்கும், மறலி நா என்ன - இயமனது நாவைப்போல, உமிழ் - கக்காநின்ற, கொடும் தழல் சிகைபரப்பி - கொடிய நெருப்பின் கொழுந்துவீசி, இலகு வாள் விதிர்த்து-விளங்கும்வாளை யசைத்து, கேடகம் திரித்து - கேடகத்தைத்திரித்து, மகோதரன-மகோதரனென்னும் அரக்கன், களத்து எதிர் ஏற்ப - போர்க்களத்தில் எதிர்க்க, கொலை பழுத்து ஒழுகும-கொலைத்தொழில்கனிந்து ஒழுகும, குருதிவாள் ஏந்தி-உதிரந்தோய்ந்த வாளையேந்திய, கூன்புறம் - வளைந்த முதுகையுடைய, பலகை கைகொண்டு - கேடகத்தைக்கையிலேந்தி, மலையும் வெம் சமத்தின் - போர்செய்யும் கொடியபோர்க்களத்தில், வாலி தன் துணைவன்-வாலிசகோதரனாகிய சுக்கிரீபன், அவன தலை - அம்மகோதரனுடைய தலையை, துமித்து எறிந்தான் - வெட்டிவீசினான்.

விதிர்த்து துமித்து இறந்தகாலவினையெச்சங்கள். விதிர் துமி வினைப்பகுதிகள். (அ0)

81 (இ-ள்) கரங்களும் கழுத்தும் பருத்த தோள்களும் கழுத்துகளும், ஆகக்குப வெங்களத்தில் - ஒப்பிடற்கரிய கொடியபோர்க்களத்தில், கவிக்குலத் தலைவர் தாங்கு - வானரசேனைத் தலைவர்களை முற்றுந்தகண்டு, சிங்க ஏறு அன்ன - ஆண்சிங்கம் ஒத்த, கொடும் சமர் விளைத்து - கொடியபோர்செய்து, மாபெரும் பகைஞன் - மாபெரும்பகைஞனாய், அங்கதன் சினவி சென்று - அங்கதன் கோபித்துப்போய், துங்க மாவரையின் - உயர்ந்த பெரியமலையைப்போல, திரண்ட தோள்வலியால் - திரண்ட தோளின் வலியால், சோர்வுற - சோர்வடைய, நிலத்து இட்டு வீழ்த்தி - நிலத்திலிட்டு மேல்விழுந்து, வாள் அரிபோத்தின் - நரசிங்கத்தைப்போல, நகத்து அமைவிடுதலால், அவனுடல் பிளந்து - அந்தமாபெரும்பகைஞனுடைய சரீரத்தைப்பிளந்து, உயிர் தான் - அவனுயிரைத் திறக்கலந்தான்

துரந்து இறந்தகாலவினையெச்சம் இல் ... பொருளில்வந்த ஐந்தனுருபு. திரண்ட இறந்தகாலப்பெயரெச்சம், திரள் பகுதி, ளகாரம் ணகாரமாகத் திரிதல் சந்தி, டகரமெய் இறந்தகால இடைநிலை, அ பெயரெச்சவிகுதி. அளைந்தான் இறந்தகாலவினைமுற்று, அளை பகுதி, ஆன் ஆண்பால்விகுதி. (அக)

82 (இ-ள்) தானை அம் தலைவர் - தனது சேனைத் தலைவர்கள், வெளிர்த்தமை - இறந்துகிடந்ததை, வல் அரக்கன் (ராவணன்) - வலிய இராவணன் பார்த்து, தழல் எழ விழித்து - கோபாக்கினி உண்டாம்படி கண்களையும் விழித்து, வான் இடையுகுத்த - ஆகாயத்திலே ... பொருந்த - நக்ஷத்திரக்கூட்டங்கள் சிதறவும், மண்ணை ... வலி ... வெடிப்ப - வெடிப்படவும், சேனை அவிழ - சேனைகள் மலர, கமலம் பொகுட்டு - தாமரைப்பொகுட்டில் இனிது உறைபவனும் - மகிழ்ந்திருக்கும் பிரமனும், செவி தலம் புகப்ப - தனது காதுகளையடைய, பால் நிறம் - வெளியநிறத்தையுடைய, சங்கம் ஒராது - பத்துச்சங்கங்களையும், தனது பாழிவாய் வைத்து - தனது பின் வாய்களில் வைத்து, ஒலித்தான் - சோகத்துடன் செய்தான்

புகுந்த இறந்தகாலப்பெயரெச்சம், புகு பகுதி, இது உருவெவ்வேறுவினைமுதற்பொருள்கொண்டது. மற்றையவை - பிறிதுபொருளில்வந்த இடைச்சொல்லடியாகப்பிறந்த குறிப்புவினைப்பெயரெச்சம், மற்று பகுதி, ஐ சாரியை, உகரம் கெடும் யகரம் தோன்றலும் சந்தி, அ பெயரெச்சவிகுதி. வெடிப்ப நிகழ்காலவினையெச்சம், வெடி பகுதி, பகரமெய் சந்தி, பகரமெய் விரித்தல்விகாரம், அ எச்சவிகுதி. (அஉ)

83. (இ-ள்) மை அறா - பட்டமையுடைய ஆதிசேடனது, நெற்றி சுடிகையில் கிடந்த - நெற்றியிலுள்ள உச்சிமாணையில் சுமையாகக்கிடந்த, பார்முகம் கிழிய - இவ்வுலகம் கிழிபட, மைம் மழு குடுமி - மேகத்தை ஒழு சிகரத்தையுடைய, ஓர் எட்டுவரை பறித்து - எட்டு அட்டகுலபருவதங்களையும் வேரோடும்பறித்து, எறியும் - வீசாநின்ற, வானரம் தலைவர்கள் எவரும் - வானரசேனைவீரர்கள் எல்லோரும், கை இணை - தமது இரண்டுகைகளிலும், முழந்தாள் மருமம் நீள் சென்னி எங்கணும் - முழங்காலிலும் மார்பிலும் உயர்ந்த சிரசிலும் எவ்விடத்தும், காயகன் செருக்கி - சுட்டுவருத்தும் அம்புகளால் செருகப்பட்டு, எய்ய மலங்கிடப்ப - முள்ளம்பன்றிபோற்கிடப்ப, உலகு எல்லாம்

வென்ற இராவணனை - எல்லாவுலகங்களையும் வெற்றிகொண்ட இராவணனை, இரும் சிலை குழைத்தான் - பெரிய வில்லினை வளைத்தான்.

ஒழிய என்னும் நிகழ்காலவினையெச்சம் எதிர்மறைப் பெயரெச்சத்தின் முதனிலை கொண்டது. செருக்கி பகுதி தொக்கதினை செயப்பாட்டு வினையெச்சம். செருக்கு பகுதி, உகரங்கெட்டு சாரியை இ எச்சவிகுதி. எய் முனை எம்பனரி. (௮௩)

84. (இ-ள்.) அவை நோக்கி - வானரவீரர்கள் பாணங்களால் எதிர்பட்டுக்கிடந்தவைப் பார்த்து, இலக்குவன் சினவி - இலட்சுமணன் கோபித்து, வடவரை அனைய - மகாமேருவையொத்த, வெருவப்பத்து - வில்லினைவளைத்து, பொன்தடம் - பொன்னுறச்சமைந்த பராந்த ... வல்லன் - ... காப்பாகனுடைய, ... செல்வனி - உபா ... , பொங்கு - கொதிக்கும், அழல் ... - அக்கினியாஸ்திரத்தால் வீழ்ந்தி - அறுந்துவிழுந்தி, பறவை முதுகுச்சென்றால் அலற ... கண்டான், ... சிவப்ப அறுத்த - ... சேர ... சிறந்தியகாத, ... புயத்து - பாத ... புடைய, அரக்கர் - இராவணனோடிய, கொற்ற ... வெற்றியுடைய. வெம் ... - கொடிய பதாவில் ... , ... துணைப்பட, குருதிசாய - உதிரம்தோய்ந்த, கணையினால் அறுத்தான் - சரதுபாணங்களினால் துண்டிசெய்தான்.

கண்டவாறு தொகுத்தலவிகாரம், அல்லாடல் என்றும் எதிர்மறைக்குறிப்பு வினையெச்சத்தில் மகர ... - அரந்தம் ... பெயரெச்சத்துத்துச்சாரியையும் அகரவுருபும் தொக்குதல். (௮௪)

85 (இ-ள்) பாடகம்தொடாச்ச பாதகம் தொடாசப்போல, பழுவினை சிபி, பபு-வினை ... விட்டாடு ... , ... பறக் கட, பசும்பு ல் அனைய ... கொண்ட மேகங்கள் போல் ... நிமகா யந்த இராமமூர்த்தியை, அடைப பசும்பொன் ... ஒக்கப்பொருந்த த, செய்ய தாமரைத்தாள் செவ்விய ... சாமர்த்தியமையோல் நிருவடி யை, சரணம் என்று அடைந்த - அடைக்கலமென்று புகலடைந்த, பேரறி வின் வீடணன் - பேரறிவையுடைய விபீஷணனை வெகுண்டு - கோபித்து, ஓங்கதயிருல அடித்து - ஒருதண்டாயுதத்தினாலடித்து, வெம்மினத்து கொ டியகோபத்தையுடைய, அரக்கர்கோன் நடவும் - இராவணனடத்தும், தேர்ந்து உயர்-சக்ரத்தாலுயர்ந்த பசும்பொன் கொடிக்கு - பசியபொன்னாலாகிய மொட்டையுடைய, அம் தடம் தோ அழகிய பாதத்தில் பட்டிய, குதிரைகளையும் கொன்றான் - குதிரைமுழுமையும் செகுத்தான்

பாதகடகம் பாடகம் மருஉ. பாதம் விடாது வளைந்து வருப்பால்தைந்தசா தலால் பழுவினைக்கு உவமையாகின்றது, உவமைக்கும் பொருட்கும் ஒற்று மை உண்மையால் உவமையின்றிற்றிலைப்பொருட்கேற்றி வளைந்து விடாது சூழ்ந்த பழுவினையென்றும். பசுமை என்னும் பண்பு இளங்குதலமேனியாலா ல ஒப்பொன் என்றும். ஆடகம் சாம்பூநதம் பொன் ஜாதரூபம் ஒன்று ஆடகப்பா ம்பொன் பசும்பொன் என்னும் பொதுப்பெயரை விசேஷித்துநின்ற இருபெ

யரொட்டுப் பண்பத்தொகை நால்வகைப்பொருள் ... கடகம், கிளிச்சிறை, சா
ம்புநதம், சாதரூபம். (அரு)

86. (இ-ள்.) கொடிஞ்சி [illegible] தேர் [illegible] உடைய அழகியபாரத்த
தேரில்பூட்டிய, கொய் உளை பரிகள் - [illegible] புறமயிரையுடைய குதிரைக
ள், மறிதரும்-மடங்கிவிழ, இரவி [illegible] செலுத்து - [illegible] யானைக்கொண்ற, ம
[illegible] அனைய-நரசிம்மத்தை [illegible], [illegible] இராவணன்
சோபித்து, வாய்மடித்து [illegible] - வாயினைமடித்துப் பற்களை அதுக்கி,
உரப்பி-அதட்டி, விடம் கனிழ்ந்து - [illegible] விஷத்தைக்கக்கி, எ
ரிகால்-அக்கினியைக்கக்கும், சுடர் [illegible] [illegible] கட்டுவடிவாகி
ய நெடியவேலை, வீடணன்மேல் [illegible] மேலெறிய, கடம்
கவிழ் - மதநீரைச்சிந்தும், [illegible], நிகர்
இளையோன்-ஒப்பற்ற இலட்சுமணன், [illegible] துணி
த்தான்-அவன் எறிந்தவேலைத் துண்டுபடுத்தினான்.

[illegible] அசைநிலை, உரப்பி [illegible], உகரக் [illegible], இ [illegible] (அசு)

87. (இ-ள்.) புயல் நிறம் விளர்ப்ப - [illegible] வெரு
ப்பேற, கருகிட மேனி - கருத்த [illegible] புருவ [illegible]
வீசம வாளையுமுடைய, அரசன் [illegible] இராவணன் [illegible], வெ
யிலினை இழைத்து - [illegible], [illegible] தொழில் பயிற்றி-
கொலைசெய்தொழிலை [illegible] - கொடியவி
ஷமாகிய தோய்யிலை, [illegible], மயன் - [illegible],
உளம் வருந்த - மனம் [illegible] - அளவி
லகாலம் [illegible], [illegible] - ([illegible]) வாத்தி
ருல, மறை ஓம்பும் அந்தணர் - [illegible], அயிலி
னை எறிய - வேலையெறிய, இளையோன் உரம் பிளந்து - இலட்சுமணர்மார்பு
பிளந்து, மண் மிசை வீழ்ந்து-நிலவுலகின்மேல்வீழ்ந்து, உயிர் அயர்ந்தான்-
உயிர்சோர்ந்தான்.

சினவி என்னும் இறந்தகாலவினையெச்சம் எறிய என்னும் நிகழ்காலவி
னையெச்சத்தின் முதனிலைகொண்டது இழைத்து பயிற்றி, பதி சமைத்து எ
ன்னுமவைகளாகிய வேறுபாடு அடுக்கியவினையெச்சங்கள், அளித்த என்
னும் இறந்தகாலப்பெயரெச்சத்தின் முதனிலையைத்தனித்தனிகொண்டு முடி
ந்தன. அளி பகுதி, தகரமெய் சாரி, தகரமெய் இடைநிலை, அ பெயரெச்சவி
குதி இது அயிலென்னும் செயப்படுபொருள்கொண்டது. இளையோன் உர
ம்பிளந்து உயர்திணையொடு சார்ந்த அஃறிணை உயர்திணைமுடிபேற்றது வ
ழுவமைதி. (அஎ)

88. (இ-ள்.) கலினம் மான் தடம் தேர் - கடிவாளம்பூண்ட குதிரைகள்கட்
டிய பரந்ததேரை, கொணர - சாரதி கொண்டுவர, வல் அரக்கன் - வலிய
இராவணன், கடி மதில் இலங்கையில் புகலும் - காவலாகிய மதில் சூழ்ந்த
இலங்கையிற்செல்ல, மலை உறழ் தடம் தோள் - மலையையொத்த பரந்ததோ
ளையுடைய, மாருதி - அனுமன், முன் போல மருந்து மாமலை - முன்போலப்
பெரிய சஞ்சீவிமலையை, கொணர்ந்து உய்ப்ப-அங்குக்கொண்டுவந்துவைக்க,
அலகு இல் சீர் சுசேனன் - அளவில்லாத சீர்த்தியையுடைய சஞ்சீவிக்குத்த

லையனுகிய சுக்சேனனென்பவரோ, மாருதியை அனுப்ப - ஏவியபோது சஞ்சீவியைத்தர, ஐயன் - இலட்சுமணன், முன் போல உய்ந்து எழுந்தான் - முன்புபோலச் சீவித்தெழுந்தான், சிலை விழுங்கு உயர் தோள் - வில்லால் விழுங்கப்பட்ட உயர்ந்த தோள்களையுடைய, இராமன் - இராமமூர்த்தி, மாருதியை தழுவி - அனுமனை இறுகத்தழுவி, யாரே இவை தெரிப்பார் - இவ்விடத்தில் இவற்றைக் கூறுகின்றார்.


அங்கெனாது ஈறு கெட்டு நீங்கும் ... ன்சொல்லின் மேனின்றது. உடந்து இத் தொகை வேற்றுமை, உடம்பொடு. உம்மை என்னும் தனிநிலையடியாக உம்மைத் தொகை, உம்மைத் தொகையான பண்புத்தொகை விசேடங்கள் வருக.

89. (இ-ள்.) உற்ற உழி - அபாயம் வந்த இடத்து, ஆவி தவிர்ப்பார்க்கு - பிராணனைத் தந்தவர்க்கு, உயிரை நிகர்ப்பது - அவ்வுயிரைப் போன்ற பொருள், உண்டு எனில் அன்றோ - இருந்தாலல்லவா, மற்று ஒரு கைம்மாறு அறியும் என்று - வேறொரு பிரதி உபகாரம் உலகினார் செய்வாரென்று, உவப்ப - (இராமமூர்த்தி) மகிழ்ந்துசொல்ல, மருந்து மா மலையை - பெரிய சஞ்சீவி மலையை, மீட்டும் - மீளவும், கல் தடம் திணி தோள் அனுமன் - மலைபோலப் பருத்த திணிய தோள்களையுடைய அனுமன், முன்போல் வைத்து - முன்புபோல அங்கு வைத்து, இவண் கடிது வந்துறும் - இவ்விடத்தில் விரைந்து வந்து அடைய, வெற்றி வேல் அரசன் - வெற்றியையுடைய வேலையேந்திய இராவணன், வேறு ஒரு மணித்தேர் இவர்ந்து - வேறே ஒரு மணிகட்டிய தேரின்மேலேறி, வெம் களத்து இடை - கொடிய போர்க்களத்தில் வந்தான்.

மற்றொரு கைம்மாறு அறிவரென்று உவப்ப என்னுந் தொடரில் யான் செய்யும் கைம்மாறு பிறிதில்லை என்னும் பொருள் போதரலால் குறிப்பெச்சம். (அகூ)

90. (இ-ள்) மலர் அயன் அண்டம் - தாமரை மலரில் வசிக்கும் பிரமனண்டத்தும், எகினம் மென் நடையை - அன்னமாகிய வாகனத்தையும், வலி அழிந்து இரிய மோதியது - வலிமை கெட்டோடப் போர்செய்ததும், வெம் கதிரோன் - விளங்குஞ் சூரியனைத் துரத்தி, பரி ஏழுடைத் தேர் தராது - ஏழு குதிரைகள் பூண்ட தேரை வென்று, பாழி அம் கிரி வலம் வந்தது - சக்கரவாளகிரியைப் பிரதக்ஷணஞ்செய்ததும், அளப்ப அறு - அளவில்லாத, புவனம் முழுவதும் திரிந்தது ஆய - அண்டமுழுவதும் திரிந்ததுமாகிய, விண் இடை பரந்து உலவும் - ஆகாயத்திற் பரவிச் சஞ்சரிக்கும், கலினம் மான - கடிவாளம் பூண்ட குதிரைகட்டிய, தடம் தேர் கடவி - பருத்த தேரை நடத்தி, வல் அரக்கன் - வலிய இராவணன், கவி குலம் இரிய - வானரசேனைக் கூட்டம் புறங்காட்டியோட, வந்து எற்றினன் - வந்து எதிர்த்தான்.

எகினமென்புழி இறுதியினின்ற உம்மை உயர்வு சிறப்பும்மை. மோதியது வலம்வந்தது திரிந்தது என்னும் வினைமுற்றுப் பெயர்களின் இறுதியிலெண்ணும்மை தொக்கது. கடவி இறந்தகாலவினையெச்சம். கடவு பகுதி, வகரமெய் சந்தி, இ எச்சவிகுதி. தடம் உரிச்சொல்லாதலால் வருமொழி வல்லெழுத்து இயல்பாதல் நன்-மெய் "இடையுரிவடசொலின்" என்னுஞ் சூத்திரத்தால். (கூ0)



ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள்

சிவசுந்தர சாயாரூப சிவமகிமா

சங்கிரகம்.

ஸ்ரீ பாலஸுப்ரமணிய விலாச பிரஸ், சிதம்பரம்.

1914

உ

சிவமயம்

கணபதி துணை

சிவசுந்தர சாயாரூப சிவமகிமா
சங்கிரகம்.

இது

சோணசைலமலை

ஸ்ரீமத் சுப்பிரமணியசிவாசாரியரவர்கள்

விருப்பப்படி

ஸ்ரீவன்றொண்டரவர்கள்

பாஷையாக்கிய வசனமாய

காரைக்குடி

ராம. சொ. சொக்கலிங்கச்செட்டியாரால்

இயற்றப்பெற்று

கொத்தமங்கலம்

அரு. ராம. அரு.
சுப்பிரமணியச்செட்டியாரால்

சிதம்பரம்

ஸ்ரீ பாலாம்பிகா விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

முகவுரை.

ஸ்ரீ சுப்பிரமண்ணிய சாந்நித்திய விசேஷ ஸ்தலமாகிய தேர கைபட்டியிலே, ஆதிசைவகுலத்திலே, பாரத்துவாசகோத்திரத்திலே, காவறைஸ்திபரென்னுந் திருக்கூட்டத்தாரிலொருவராகிய ஸ்ரீ குமாரசாமி சிவாசாரியரின் சேஷ்டகுமாரரும், திருவெப்பிரிச்சரமென்னும் சிவக்ஷேத்திரத்திலுள்ள ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள் திருப்பட்டாலயத்தலைவருமாகிய ஸ்ரீமத் சுப்பிரமணிய சிவாசாரியாரவர்கள், தமது குலமாகிய ஆதிசைவகுலத்திலே அவதரித்தவராகிய பரமசிவசாயாநுப ஆலாலசுந்தரரே, உலகெல்லாமுய்யும்பொருட்டு, மூன்றுவயசு சுபாலரூபியாய் அவதரித்தருளிச் செய்தருளிய செயல்களெல்லாம், லோகோபகார அற்புத விசேஷசெயல்களேயாகவும்; <u>அறிவிலார் சிலர், அவரை நரர்போலவுமுடையாராக்கருதிக் குதர்க்கங்கூறி அதிபாதகரா</u>தலைநோக்கி, அன்னவர் பற்றுத சிறுமையினையும் ஒருபொருளாக்கொண்டு, ஸ்ரீசுந்தரமூர்த்திகளின் சொரூபமகிமை விளங்கச் சுருக்கமாக ஒருநூல் எழுதி விரைந்து தருகவென்று ஆஞ்ஞாபித்தார்கள். அது செய்தற்குரிய அறிவு சிறிது மில்லேனுயினும், அவர்கள் சுந்தரமூர்த்திகள் வந்தருளிய உயர்குலத்தவராயு அத்திருப்பட்டாலயத் தலைமையுமிருக்கின்ற ஒற்றுமையுடன், அந்நாயனார்க்கு நெருங்கின தன்மை வாய்ந்த அன்பிற் சிறந்து, சுந்தரசொரூபத்தியான விசேஷத்தால் அச்சுந்தரப்பிரதிநிதியென்னவிருக்குதலால், அவ்வாஞ்ஞையை மறுத்தற்கஞ்சி அச்சுந்தரராந்தனைபாதத்தை மேற்கொண்டு அத்திருவடிகளை வணங்கிச்சிறியேன் அறிவின் சிறுமைக்குத் தக்கவாறு அச்சுந்தரவள்ளல் விளக்கமெட்டும் இந்நூலுரைத்தேன். என்சிற்றறிவுமுற்றுங்குற்றமேயாதலின். இதனைக்கண்டு பெரியோர் முகஞ்செய்யாது, தமது பேரறிவின் பெருமையைத் துணைத்தால், குற்றமுற்றும் நீக்கித் திருத்தஞ்செய்து திருவடிச்சமர்ப்பணஞ் செய்விக்கும் வண்ணம், பெரியார் திருவடிகளைச் சிரமேற்கொண்டு வணங்குகின்றேன்.

ராம. செ. சொக்கலிங்கச்செட்டி



சிவமயம்.

ஓம் கணபதயே நம:

சிவசுந்தரசாயாரூபசிவமகிமாசங்கிரகம்.

திருச்சிற்றம்பலம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
வாழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்.

பொல்லாவிநாயகர்துதி.

தவர்சொல் சிவசுந் தரசாயா ரூப
சிவமகிமா சங்கிரகஞ் செப்ப—வவராருள்செய்
சொல்லார்சீர்த் தொண்டத் தொகைப் - பொருளசொன்
பொல்லார்தா ளென்மனமே போற்று.

சுந்தரமூர்த்திசுவாமிகள்துதி.

பொன்பொலி செஞ்சடைப் புண்ணியன் கண்ணடிப் போதவுரு
நன்பொலி வான்வரு கென்றழைத் தாண்டவ னானிலமேன்
மன்பொலிந் துய்வுற வந்தருள் சுந்தர வள்ளலணி
மின்பொலி செஞ்சர ணன்பொலி நெஞ்சுற வேண்டுவனே.

நூலாசிரியர்கள் துதி.

திருவருளின் நெறிசெப்பும் பல்காப்பு பலகிற
சிவனையுப் விந்தநா வக்கசிவ வருநாத
தருவருண்மை நாயனார் ... சரிகநாடு
பவிர ரர்கிகள் கொழு நமா ... பனிபர
பொருவில்குரு முனிகாளை நாயியல் ... நாடு
பொன்பொழிக்கா சுந்தரர் பெருமுநார் பதியாம்
பெரியர் தந் திருப்பூக வையாப மிரு நுமார் ... நிலை
பெருமாற்று வலைப்பற்றன பெயரிய நூல் பெருமையட

சிவசுந்தராசாரியர் சிவமரோசங்கிரகம் என்கின்ற இந் நூற்பெயரின் பொருள், சைவ ... கிளைராக பெரியமலிதழ் மூவாதி கேவர் முதலிய ராசார்யராகவும், அவரவாளின்று சீடசைச சிவனையுமாற் பெரிய ... பயராப பிரார் குசரி யங்கள் பேலவாதபால், குமரகுருவுஞ் செகாரததிப பெமராரிகளியார் விருப்பாராகிமைகய ... சிவபரமையிருவ சிநிமுனா மய் கண்ணுடைய ... முமா, (சுவாமி வந்த) என்றுயங்கப்பெறுமு, பரம ... வாரு திருவந்த மநிமரியப் அழுருழு துங்கிவந்திநாரி, சிரசமாட சிவிசேகசிர பரம்பூபாதி சாரிசர பாகபாகரு ன், காப யுமுப ... ராகப்கோசகசெ வெளிவந்தருளிய சுந்தரமூர் ... ரி னாகிய பரமசிவனு டைய அபாரபமியாபமிவாகடிய்ன சுந்தரடி என்பதாம்,

இதனால், பரமசிவன், காதலர்க்கு சற்பைகண்ணுடையரின் றும் முறையாய்ப்பெறுவு சிலசிரயகார அவு சிரகக்கின் பொரு சிட வெளிவந்தருளிய பரமசிவனே, ஸ்ரீ சுந்தராசாரியசுசுவாமிகள் என்பது தெளிவாயது. ஆதலே அப்பரமசிவனே சிவத சிவாகமாதி சாஸ்திரங்கள், நந்திகாயக்காழுர் சிறுசில இடங் களில் விளக்குதலபோலவே, சுந்தராசாரியருதிகரைம தந்திரநாமத் தால் வழங்கப்பெறுவனென்க. இவ்வாறு சிவதசிரசாகிய உபநிட தங்கள் கூறுகின்றன. இது பின் காட்டப்பெறும். இவ்வுண்மை யறியார் சிலர், மூர்த்திகள் கண்ணுடையில் வந்ததைதக. தாங்கள் அ பத்தமாகக் கூறும் விம்பப் பிரதி விம்ப முறைபோற்கொண்டு,

மீக்கை கம்பனக்கூறி இடப்பட்டமையந்துவா. அதுபிரதிபலிக்கக் மாத்திரையே யன்றி, அமைத்த வெளிவந்தலாகிய உண்மை நிகழ்ச்சிகளேயின்று. இதுவோ வென்றால் எல்லாம்வல்ல இறைவன், [illegible] பொருட்டு அநுக்கிரகிக்கத் திருவுளங்கொண்டு திருவருளே திருமேனியாய்ச் சஞ்சரித்து வருதல்போலக், திருவருளாகிய கண்ணாடியினுள் சாயா ரூபமாத்திர (சக்கராவக) வென்றெழுந்தருளில்லைகாட்டிக்காமே வெளிவந்தமையால், அவர் கூறும் பக்திபாவத்தோடுள்ள இக் குச் செவ்வியெல்லாம் புலப்படுத்துந் தன்மையுமாகின்றார். வேதசிவாகமாதி சாஸ்திரப் பிரமாணத்தில் செய்யாவிய சுந்தரமூர்த்திகள், போதாகார திவ்யமூர்த்திகளின் பொருட்டே, பாலுட வழுவுகொண்டு (திருவவதாரஞ்செய்தருளிய) உண்மையைமறு நோக்குமே பெரியவரல்லாத சிலர், பூர்வகத்திகளீட்டு விளங்கிய அற்புதசெயல்களின் பற்பலவற்றையும் சரித்திரமூலமாகக் கேட்டுணர்ந்தும், பொருளுமில் புராணமிலகப்பட்டவைகளாய் இவர் கட்டளைப்போலப்பத்திகளோடு கூடிச் சிற்றின்ப நுகர்ச்சியாதி செய்தவரென்றும், சீவர்களிலொருவரென்றுங்கூறி, உய்விலாச் சிவத்துரோகிகளாய் எரிவாய் நரகத்தையடைகின்றார்கள். இவர்கள், இவ்வுண்மைகளையெல்லாம் நோக்கி உண்மையுணர்ந்து ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் பரமசிவமே யென்பது தெளிந்து வழிபாடுசெய்துய்வது நோக்கமே இந்நூல்வெளிவந்ததென்க.

ஸ்ரீசுந்தரமூர்த்திகள், திருக்கயிலாசபதியின் திருவுளத்துக்கத் திருத்தொண்டராய்த் திருப்புங்கூர்ப் பெருந்தல் திருமாலை சாத்துதலாகிய திருத்தொண்டு செய்துகொண்டு வேற்றுமையின்றி வாழ்கின்றவர். இவர் கண்ணாடியிற் றோன்றியது முதலிய பெரிக்கிரம், அகஸ்தியர் உபமந்தியாதிய பெரியர் திருவாக்கின் விளக்கமே. வேற்றுமையின்மையை, "நந்தயாரூரனென்றுரைத்தான் மலையுத்தமனே" என்ற மந்திரவாசக அந்தரார்த்தமுகமின்று விளக்கும்.

பல்லூழி காலங்களுக்குப்பின் பாற்கடலிற் றோன்றியவிஷம் தேவர் யாவரையுந் துரத்தித், தலைமைவகித்தூர ஓடாது நின்ற விஷ்ணு மூர்த்தியின் வெள்ளைமேனியையும் வெதுப்பிக்கருமை

யாக்கி, அத்தேவர்களுக்கும் முன்னேறியபடி விடாது துரத்திச்செ ன்றபோது, உயிர்க்கிறுதி குறுகப்பட்டுவந்து வேண்டிய விஷ்ணு வாதி தேவர்கட்கிரங்கிய சிவபிரான், இவ்விஷத்தைக் கிரகித்து வருகவென்று ஏவியருளச் சென்றருளிய ஸ்ரீசுந்தரமூர்த்திகள், புறத்தே வந்து தமது திருக்கரமொன்றை நீட்டியபொழுது, அவ் விஷம் நாவற்கனியளவாய்த் திரண்டுவர, அதனை அச்சுந்தரனுதி யாற்பற்றிக்கொண்டு சிவசந்நிதி சென்று கொடுத்தனவே, சிவ பிரான் உண்டு கண்டத்தமைத்தருளி, அவர்க்கு ஆலாலசுந் தரரென்று விசேஷ நாமங்கொடுத்தருளினர். அத்திருநாமமே அவர் விஷங்கிரகித்துச் சென்றதை விளக்குமாயிருப்ப, (கேசீ விஷஸ்யபாத்ரேண யத்ருத்ரேணாபிபத்ஸஹ.) கேசீ விஷஸ்ய பாத்திரேண யத்ருத்திரேண பிபதஸ:. என்ற ஆரிய வேத மாகிய உபநிஷத்வசனத்தாலும் நிச்சயமானதாலாம் இதன் பொ ருள், கேசியாகிய சிவபிரான் விஷத்தை ஆலாலசுந்தரராகிய ருத்திரனென்னும் பாத்திரத்தாற் பானித்தார் என்பதாம்.

இவ்வசனத்தின் எதார்த்தம் இதுவாயிருக்க, இதனை முன் பின்னோக்கி யுண்மை யுணரும் திண்மையறிவில்லாத மாற்சரிய மனமுடையார் சிலர், இதற்குமாறாகக், கேசியாகிய விஷ்ணு ருத் திரனாகிய பாத்திரத்தால் விஷத்தைப் பானித்தாரென்று கூறு வர். (அவனவ்வளவின் மகிழ்க) என்றபடி. அவர் அதுசொல் லிய அவ்வளவின் மகிழட்டும். அப்பொருள் பொருந்தாது அதோ கதியாதல் நோக்கிப் பின்வருந்தாதொழிக. கேசி என்றசொற் பொருள் விஷ்ணு என்பதிவர்கள் கருத்து. இருக்கட்டும். கேச த்தை யுடையானெவனோ? அவன் கேசி எனப்பெறுவன். இதுசர் வசம்மதம், விஷ்ணு கேசத்தையுடையானென்பதற்குரிய சிறந்த இயைபு யாதுளது? மிருந்த கேசியென்பர்போலும். மற்றையர்க் குக் காட்டிலுமிகுதியாதோ? அம்மிகுதியாலுள்ள சிலாக்கியந் தான் யாதோ? விரிப்பானேன். விஷங்கண்டளவே நடு நடுங்கி மிகப்பயந்தும், முன்புகடல் கடைதற்கு எத்தனித்த அவ்வள விற்குத்தாமே வகித்துக்கொண்ட தலைமை நோக்கி வெட்குற்று, மற்றைத்தேவர்களுடனோடாது நின்று மேனிவெதும்பிக் கருகி உயிர்க்கிறுதி வந்து விட்டதென்றுளந் திகைத்துலகெலா மோடி

அ[illegible] ஆகும்வபக்கால் [illegible] எனவும் "[illegible]" கூறுகின்றாராதலால் அகங்கசவ் [illegible] [illegible] தலறிதெங்க.

இனிக்கேசீஎன்னுஞ்சொல்சிவனுக்கேஉரித்தென்பதற்குரி சிறந்த இயைபென்னெனிற் கூறுதும். மாற்சரிய குணமும், விபரீதபுத்தியு முற்றுங் கைவிட்டு உற்று நோக்குவா ருண்மையுணர்க. சிவபிரானுடைய கேசமானது, விஷ்ணு மூர்த்தியாதி தேவர்க்குள்ள கேசம்போலாகாமல், ஜடாரூபமாகவும், செந்நிறமாகவும் "அதோமுகப் படாது மேல்நோக்கி நிற்கின்ற தாகவு

உலகெலாம் அழிக்கக்கூடிய அதிவேகப் பெருகப் பிரவாகமாய்ப் பரந்துவந்த கங்கையாகிய பேராற்றை ஒரு துளிபோ லடக்கிக் கொண்ட (ர்) பேராற்ற லுடையதாகவும், இன்னும் எத்தனையோ மகிமைகள் வாய்ந்ததாகவு மிருத்தலால், சேஷியென்னும் திருப பதத்திருநாமம் சசாங்கரைப் போல சிவனுக்கே உரியதென்று மினிது தெளியலாயது. இதனை 'விசேஷியா சேஷி, இரணிய சேஷி முதலியசிவநாமங்களும், கேசவநாமத்தினை போல ஊனமுற் றொழியாது தனாத்துமேகளாய் நின்றுலவி யுறுத நமென்க.

சர்வ சக்திச்சுவாதி அஷ்டமங்கள திவ்ய குணபரம் பதி எவனோ! அவன், எதை நினைத்தாலும் தொடங்கினாலும் அக்காரியம் யாது மிடையூறின்றி முடிவுபெறும். முடிவுறத்தொழிந்தாலே அவன் பரம்பதியாகவென்று சிறந்து முறைதலாம், விஷ்ணுமூர்த்தி நினைக்கத் தொடங்கியதாம கடல் கடைந்தமுது கவிர்க்கநற்கன்றி மீட்சியில. இது அபாகதாபாரமாம். நினைத்துத் தொடங்கிய அரியல் அவனாறு முடியாதொழிந்த மன்றி மிரைமிட் டெய்தனர். பின்பு சிவபிரான் தயைமேற்கொண்டு விக்கினேசருள்ளை செய்து தொடங்கின காரியமாகிய அமுதம் பெற்றுக்கொண்டார்கள். உளபடி உற்றுநோக்குதல உத்தமர்கள் சிவனுக்குப்போன்ற தன்மை, அழிவையாகிய விஷ்ணுமூர்த்திக்குண்டென்று நினைதலுஞ் செய்யாரென்க. இதுவுமன்றி வேதமுற்கூறிய உபநிஷத் வசனத்தின்படி, சுந்தரமூர்த்திகளே விஷங்கிரகித்து வந்தாரென்பதும் அதனை விஷ்ணுமுயிர்க்குவந்த ஆபத்தாங்கருதி யாபத முழைபிட்டுப் பிரார்த்தித்து அடிமைகளாகிய அவ்விஷ்ணு வாதியர்க்குயிர் தந்து காத்தருளியதற்கு சிவபிரான் உண்டாக்கினரென்பதும் சிவதுல்லிய பதிவிலியாகிய அதிபவசனத்தாலும் தெளியக்காணலாம். அது (ஸ்ரீகண்ட) ஹாலா
[illegible]
[illegible]
ஆசீர்ண ஹாலாஹல தேவகாமராக் உமாபதி; சுந்தரமாதி தேசரிசுக்ஷிய தூர்ணம் ஸசேதாரமேதத்ஜக் ராகஜம் பூபலவத் காக்கரே என்பதாம். இதன் பொருள், உமாபதியானவர், விஷ்ணுவாதிதேவர்கள் விஷவேகஞ்சகிக்கமாட்டா தலறுவதைச்

ஸமீபத்திற் கேட்டுச் சுந்தரமூர்த்திகளை வினவியருளினர். அவ்வாஞ்ஞை சிரமேற்கொண்ட சுந்தரமூர்த்திகள் அத்தேவர்களிடத்து வைத்த இரக்கமிகுதியால் அதிவேகமாக விரைந்து சென்று அதிகோரமான விடத்தைத் திருக்கரத்தின் விரல் நுனியினால் நாவற்கனிபோலக் கிரகித்தார் என்பதே.

விஷ்ணுவாதி தேவர்யாவரும் சகிக்கலாற்றாது ஓடோடத் துரத்திவந்த அதிதுர்த்தர விஷப்பிரவாகத்தை நோக்கி, ஓரணுவும் மெலகூப்பின்றித் திருக்கரம்நீட்டியமாத்திரையே, தமதுஆஞ்ஞையால் அவ்விஷப்பிரவாகம் நாவற்கனியளவாய்த் திரண்டு கரத்தில் வரச்செய்தருளிய சுந்தரமூர்த்திகளை, அவ்விஷ்ணுவாதி தேவர்யாவர்க்கும் மேலான மகாதேவராகிய பரமசிவனே என்னுமுண்மை தெளிதற்கு, இனி வேறு நூலாராய்ச்சியும் வேண்டுமோ? இத்தகைய பரமசிவ சுந்தரமூர்த்திகள் பூமியில் வந்தபின் நம்மைப்போலப் பெண்களைக்கூடிச் சிற்றின்பம் அனுபவித்தாரென்று கூறும் அறிவிலாரது புன்மை நோக்குந்தோறு மிஃதொன்றே போலியது. மூர்த்திகள் பூமியில் வந்து பரவையார் சங்கிலியார் சமேதராயிருந்தாரென்று, கூறும் அவர் சரித்திரத்தைப், பூர்வமுறைபோல அர்த்தநாரீசுரராகிய சிவசக்திகள், ஜீவர்களுய்யும் பொருட்டு ஆண் பெண்ணுருவாய் வேறுபோலக்காட்டி இருவராய் நின்று செய்தருளுகின்ற திவ்ய சரித்திரங்களைப் போற்கொள்வதன்றி, விபரீதமாக்கொள்வார் மீளாநரகர்களாவரென்க. மூர்த்திகள் பூமியில் வந்தருளிய திவ்ய சரித்திரமூலமாகவும் மேலும் உண்மை விளங்குவதாம்.

ஸ்ரீசுந்தரமூர்த்திகள் கயிலையிற் செய்கின்ற கைத்திருத்தொண்டிவருக்கருளுகின்ற சிவபிரான், மூர்த்திகளது திருவாய்த்திறக்கொண்டு, லோகோபகாரமாக ஆரியவேதசாரமாகிய சீரியவேதமென்கின்ற திராவிடவேத தேவாரசுருதி வெளிவருதற்கேதுவாமெனத் திருவுளங்கொண்டருளி, அந்தொண்டும் தமது திருவாக்கின் வந்த ஆரியவேத காடின்னிய சப்த சம்ஸ்கிருத பாஷையில்வேண்டாது, இனிமையே தன்மயமாகிய தமிழ்ப்பாஷையில் நிகழ விரும்பினமையால் அப்பாஷைக்கே முக்கியமான தமிழ்த்தேசத்தில் நிகழ்தலே பொருத்தமெனக்

கொண்டு, காரணம்புணர்த்து, மூர்த்திகளைத் தமிழ்நாட்டிற் சுரியமானுடசரீரியாக்கி அனுப்பக்கருதித் திருநந்தனவனத்தில கமலினி அநிந்திதை என்னுமிருவரை விரும்பப்பார்த்து, அதுவே காரணமாகக்காட்டிச் சுந்தரனை நீ மானுடசரீரியாய்ப் பூமியிற் செல்வாயாக என்று ஆஜ்ஞாபித்தருளினார்.

இவ்வாறு காரணம்புணர்த்தாவிடில், உரிய தவஞ்செய்து கயிலைபடையக்கருதும் உலகர், நாம் கயிலையை அடைந்தாலும் காலாந்தரத்தில் சிவாஜ்ஞையால் பூமிக்குத்திரும்பவும் வரநேரும் போலுமென்றெண்ணிக் கயிலாச கமனத்திற் பராமுகராவாக ளென்பதையும், காரணம்புணர்த்திலால், கயிலாசத்தில உத்தஸ்தானத்தைப் படைத்தவராயினும், குற்றஞ்செய்தால் தள்ளுண்கப்படுவார்களென்றறிந்து, உலகர்கள் நடக்கவேண்டிய பாதுகாத்து ஒழுங்கின்வழிநடந்து உய்யமாட்டார்களென்பதையுந் தேர்ந்தே, சுந்தரமூர்த்திகளிடத்துச் சிவபிரான் தா[illegible]ரமாய்ப் காரணம்புணர்த்தினரெனக. அல்லது அக்கிரம கணவனத்திலேயே பல்லூழிகாலமாக ஒவ்வொருநாளுஞ்சென்று வருமூர்த்திகளுக்கும் அப்பெண்மணிகளுக்கும் அக்காலங்களில், ஒருபொழுதும்தோன்றாத இச்சை, அவ்வொருதினத்தில் மாத்திரமுண்டாதற்கு வேறுகாரணமில்லையென்றெண்ணுங்கால், சிவபிரானே இச்சிக்கச்செய்தாரென்பது தெற்றெனக்காணலாம். இதனை, "அன்னவன்பெயராலாலசுந்தரன், முன்னமாங்கொருநாண்முதல்வன்றனக் கின்னவாறுநாண்மலர் கொய்திடத், துன்னினானந்தனவனச் சூழலில். அந்தமில் அநிந்திதையாய்ச் சுழற், கந்தமாலைக்கமலினியென்பவர், கொந்துகொண்டதிருமலர் கொய்வுழி, வந்துவானவரீசனருளினால். மாதவஞ்செய்த தென்றிசைவாழ்ந்திடத், தீதிலாத்திருத்தொண்டத்தொகைதரப், போதுவாரவர்மேன்மனம்போக்கிடக், காதன்மாதருங் காட்சியிற் கண்ணினார்." என்ற பெரியபுராணத்திருவிருத்தங்களும், மூர்த்திகள் வானவரீசராகிய பரமசிவனருளினாலேயே, மலர்கொய்வுழிவந்து அவர்மேல் மனம்போக்கிட என்றும், அதுவும் தென்றிசைவாழவும் திருத்தொண்டத்தொகைதரவுமே என்றும் மாதரைக் கண்டவுடனே தாமே பாய்ந்தோடித் தம்மையுடை

பாதை வலித்திழுக்கும் சேற்றுப் பெருவழியில் வீழ்ந்து வீழ்கின்ற வண்டியர் மனைக்கொல்லைகளில், மரக்கிளைகள், பாகலின் குடைந்து வைக்கோற்போர்கள் விறைப்பிற் கடந்து சேர்க்கும் அவ்வகையூரிலே படுமனை அப்பால் சேர்ந்து மறுபக்கம் போகத்தலால் அக்கடாமத்திலே வைத்தனர் அப்பால் சென்று சென்றார் பொருட்டுத விலக்குகளாலும் தெரியலாம். இனிப் “போக்கிட” என்கிற இடர்நிலையைப் பாசிலமைத்தலைந்றினும் அமையுமாறக.

மேற்காட்டியபடி சிவாலத்தை மேற்கொண்ட ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள், திருவொற்றியூரிலே, சங்கிலிகேசத்திலே, திருமுனைப்பாடிநாட்டிலே, திருநாவலூரிலே, ஆதிசைவர்குலத்தி லுதித்த சிறந்த சற்குருவாகிய சிவாசாரியார் ஆதிசைவகுலத்திலே, கௌசிககோத்திரத்திலே, அந்தர் கொண்டான் அந் தாயாரிகளிருவரின் முத்துமாராகிய சடையனாரும் அவர் பத்தினியார் இசைஞானியாரும் சற்புத்திரப் பேற்றை விரும்பிச் செய்த வந்த அருந்தவத்தைக்கண்டு, அவ்விருவரும் ஒருநாள் பலவினை மேல் புத்திரப்பேறில்லாமை குறித்துக்கவன்று போயிக்கொண்டுருக்குந்தமயத்தில், அவ்விருவர் பக்தியில், சிவபெருமான் விரிகம மூன்று வயசுப்பாலகரியாய், அதிசுந்தர தேகசோபை விசித்திரதாரியாய்த் திருவவதாரஞ்செய்தருளினர். இவர் இவ்வாறு அயோனிசராய் மூன்று வயசுப்பாலகரியாய் வந்தருளினரென்கின்ற உண்மையைத் திருநாவலூர்ப் புராணத்தில்,

“சுந்தரரூபு கௌசிககோத் திரனுந ரா யபயோன் சுருதி யாய்ந்தோன்”

உரியவரும் தரியறிந்த சடையர்ச்கா மனிபோல மனைவிபன் பேறு
மரியசுதர் மூவர்களிற் சடையரு மேறும் பயபோ னனத்தவனை
பிரியமுடன் இல்லத்தி னிப்பசைவழு வாதியற்றம பெற்றி யானன்
தருமகயின் மைபிறுன் மெய்த் தனிக்குசியினைச் சருத் தவஞ்செய்கின்றேன்.

மணிவிரிகை ஞானிபெறு மணங்கமழும் மென் மலரணையில் வதிந்து நெஞ்சம்
கனிவினொடு மகப்பேறி லாமையினைச் சிந்தித்துக் கழறுங் காலை
பனியிருளோ டகற்றுமெம பகலவன்றன் கிரணமதிற் பட்ட பைங்கூழ்
கனிதழைப்ப முகில்பொழிந்த தெனவொளிர்சே யிப்பிருவ ராப்பவ
[மாதோ.

ஆன்றரவி மதியிரவி வாரமுத்தி ரத்தினிரி யடர்ந்தே சேரரை
மூன்றுயைய தொடுமதலை பற்பலவூ டணையிலங்க முக்கட் டேவன்
றோன்றினனென் றுளமகிழ்ந்து சடையனார் சுற்றமுற்றுத் தோளிற்சேர்த்தார்
வான்றருமென் மலர்சொரிந்து வானவர்துந் துபிமுழக்கு வானோ ரார்த்தார்.

என்ற செய்யுள்களாலினிதுணரலாம். இதில், "முக்கட் டேவன் றோன்றினனென் றுளமகிழ்ந்து" என்ற உண்மையாலும் ஸ்ரீசுந்தரமூர்த்திகள் சிவனே என்பதை நிச்சயித்துணரலாம். இன்னுமிதனைப் பெரியபுராணத் திருவிருத்தங்களாலும் உற்று நோக்கித்தெற்றெனக்காணலாம். அப்பெரியபுராணத்தில், மூர்த்திகள் திருவவதாரங்கூறுமிடத்து, நாடு, நகரம், குலம், பிதா மாதாக்களுக்குள் தல்லைமேகான்ற, இன்ன நாட்டிலே இன்ன நகரிலே இன்னகுலத்திலே இன்னாருக்கு இன்னார் கெர்ப்பத்திலிருந்து பிறந்தாரென்று இந்த முறையாய்க்கூறாமல், "ஆண்டவர்தமக்குநாடு" திருமுனைப்பாடி நாடு., என்றும், "அருமறைச்சைவமோங்க வருளுலகுரிக்க, வாய்மைத் திருநாவலூராம்." என்றும், "சடையனுக்கு இசைஞானிபால், நிதகன்றுலகுய்யத் திருவவதாரஞ்செய்தார்." என்றும் மூர்த்திகளுக்கேதல்லை உண்மைகாட்டிய முறையினாலும் ஊகித்துணரலாம். இப்பெரிய புராணத் திருவிருத்தங்களையும் உற்றுநோக்குவார் நோக்குக. அவற்றுள் முதலாவது திருவிருத்தம்.

கங்கையு மதியும் பாம்புங் கடுக்கையு முடிமேல் வைத்த
வங்கண ரோலை காட்டி யாண்டவர் தமக்கு நாடு
மங்கையர் வதன சீத மதியிரு மருங்கு மோடிச்
செங்கயல் குழைக ளுடுந் திருமுனைப் பாடி நாடு. என்பதாம்.

இதன்பொருள், கங்கை மதி பாம்பு கடுக்கைகளை முடியில் வைத்த அருட்கண்ணராகிய பரமசிவனால், அடிமையோலைகாட்டி ஆட்கொள்ளப்பெற்ற சுந்தரமூர்த்திகள், தன்னிடத்துவந்தருளுதற்குரிய அரியபெரிய தவத்தைப்பல்லூழிகாலஞ்செய்துள்ள நாடு எதுவென்றால்? சகலகுணவதிகளாகிய சுமங்கல ஸ்திரிபுருஷர்களும் சகலவளப்பங்களும் நிறைந்துள்ள திருமுனைப்பாடி நாடாகும் என்பதாம்.

இக்கிரந்தத்திலுள்ள விசேஷப்பொருள்களைத் திருவருள்விளக்கிய ஆய்வு உற்றுநோக்கிக்காண்போம். பிறரால் மாற்றமுடியாத தன்னை பரமேறுதியன்பங்களோத்த நின்ற பலபந்தத்தாலாகிய பெருவலியைப் பகைதமாற்றி, ஒரு காலத்தும் மாறாது பொலிந்து விளங்கு நித்தியானந்தானுபவமுற்று வாழத்தக்க பேரின்பமாகிய பொருட்கடப்பத்தைச் சீவர்களுக்குத் தந்தருளுகின்ற பரமகாருணிகன் சிவனே என்று, மறைமுழுதும முறையிடுவதும் பசுபதியாகிய பரமசிவனே என்பது யாவர்க்கு நன்குவிளங்க "கங்கை" என்னுந் தனிமொழியை முன்வைத்து. அதனுடனேயே, எத்துணைச்சிறந்த அத்தியந்தத் துரோகதியினராய் எவ்வளவு படைபலமும் பேராற்றலுமுடையராயினும், அவர்களையுமடக்கித் தண்டிப்பதில் ஆருநிகரில்லை, உக்கிர சாமர்த்தியங்களாலும் விளங்கு மகாசத்திமானவனே என்பதையும் விளக்கிறார்.

இவை முதலிய உண்மைகளை உள்ளபடி உணரவிடாது, சீவர்கள் அறிவை மறைத்து நிற்கின்ற மலவிருளை நீக்கிச், சிவஞானப்பிரகாசத்தைச் செலுத்துகின்ற ஞானதாதாவும் அவனே என்பது விளங்க, "மதி" என்னுஞ்சொல்லைப் பின்வைத்து, அதனாலே, அபராதிகளாயினும், ஆபத்து மேலிட்டலாற்றுதலடைந்து துதிப்பாரை, ஆபத்து நீக்கி மேன்மைப்படுத்துகின்ற சிவகாருணியப்பெருவள்ளல் அவனே என்பதையும் விளக்கினார்.

அடைந்தாரைமாத்திரமன்றி, அடையாது கொடுஞ்செயல் மேற்கொண்டு இடர் செய்யுந்துஷ்டரையும், தட்டித்தீர்த்துச் சிட்டராக்கி ஏன்றுகொள்ளும் அத்தியந்த பரமதயாநிதி அப்பரமசிவனே என்பது விளங்க, "பாம்பு" என்னுஞ்சொல்லை அடுக்கவைத்து விளக்கினார்.

சிவபிரான் துஷ்டருக்கும் அருள்செய்யுங் கிருபாளுவாதலால், நாம் எக்குற்றஞ்செய்யினும் அதை நோக்காதருள்வரென்றெண்ணிச் செய்யுங்குற்றவாளிகளிடத்து அதிகோபங்கொண்டு பெருந்தண்டனை செய்பவனும் அவனே என்பதுடனே விளங்குதற்கே, கொன்றை இதழி முதலிய வேறு பெயர்கள் பற்

பலவிருந்தும் அப்பெயர்களை வேண்டாது, கடுக்கலென்னும் பொருளுந்தரத்தக்க, "கடுக்கை" என்னுஞ்சொல்லை யெடுத்தமைத்து, அப்பொருளால் அதனை முன்னிறுத்தியபின் கொன்றைப்பூமாலை என்னும் பொருளால், மேற்காட்டியன முதலியவை செயலும் பிறர் சகாயமின்றித்தானே செய்யவல்ல சர்வசுதந்திரத்துவ பரமகர்த்தாவாகிய பசுபதி அப்பரமசிவனே என்பதை விளக்கினர்.

கடுக்கை என்னுஞ் சொற்பொருளாகிய கொன்றைப்பூமாலை பரமகர்த்தா சிவனே என்பதை விளக்குவ தெங்ஙனமெனிற் கூறுதும்; பிரணவமந்திரமானது. ஸ்ரீபஞ்சாக்ஷர அஷ்டாக்ஷராதிமந்திரங்கள் சிவவிஷ்ணுவாதி தேவர்களுக்குரியனவாகுமே போலாகாமல், யாவர்க்கும் பொதுவாக்கொள்ளினும், அப்பொருளை உபசாரமே; அப்பொருணீக்கித் தனக்காகக்கொண்டு குறிப்பதெய்வம் உள்ளபடி பிரணவார்த்த சொரூபியாகிய ஏகதெய்வமே என்று சுருதியாதிகளாகிய பிரமாணத்துடன், சைவர்களாகிய நம்மவர் கூறுதல்போல, மற்றை மதஸ்தர் தங்கூறும் போலியுரையை மறுத்து நிதரிசனத்தில் உண்மை தேறுமாறு இக்கொன்றைப்பூவே. இது, ஏகதேசமின்றி முழுதும் பிரணவப்போலவே வளைந்துள்ள சிலகம்பிகளும், ஐந்து இதழ்களும் ஒன்று சேர்ந்த வடிவாயிருக்கின்ற நிதரிசனத்தால், ஸ்ரீபஞ்சாக்ஷர சிவமந்திரத்துக்குரியபரமசிவனே தூலசூக்குமாதி பிரணவங்களுக்குரியானென்பதனை, அக்கம்பிகளும் இதழ்களும் பிரிவில்லா ஒற்றுமை காட்டி விளக்கிப், பரமசிவனொருவனே தவிர விஷ்ணுபிரமாதிகள், அப்பிரணவப்பொருளை வகித்தற்குரிய ஆற்றல் சிறிதுமில்லாதவர்களே என்பதனையும், சிவனே அதற்குரிய ஆற்றலுடையானென்பதனையும், அப்பூமாலை பிறரெவராலும் அவரவர்க்குரிய மாலையாக வகிக்கப்பெறாமல், சிவனொருவனே தனக்குரிய திருவடையாளமாலையாகவகிக்கப் பெறுகின்ற உண்மைகாட்டிவிளக்குதலை நோக்குங்கால்; வேறுநூலாராய்ச்சி வேண்டாது சிவனொருவனே பரமகர்த்தாவாகிய பசுபதி என்பது நன்கு தெளியப்பெறுமென்க. விஷ்ணுபிரமாதிகளின் திருவடையாள மாலைகள் துளசி தாமரைகளே என்பதும், அவைகள் அத்தேவர்க

ளைப் பிரணவார்த்த சொரூபியென்று விளக்குதற்கு எவ்வித சம்பந்தமுமில்லாதனவே என்பதும் யாவருந்தெரிந்த விஷயமே. நிற்க.

மேலும் வன்னிதும்பை மத்தமுதலியவுஞ்சடைமேல்வைத் திருத்தலும், கொன்றை மதியரவு கங்கையாகிய இந்நான்குமாத் திரமே சென்னியெடுக்கின்றாரியாரு, பசுவர்க்கத்தினராகிய வனைத் தேவர் முனிவர்களாற் செய்யப்பட்ட பன்னூல்களிற் கூறுமவ் வனைய பன்மார்க்கங்களுஞ் சாமானியங்களே என்கின்றதற்கும், பசு பதியாகிய பரமசிவனே செய்தருளிய முன்னூலாகிய வேதசி வாகமாதி சிவசாஸ்திரங்களிற் கூறுகின்ற சரியை, கிரியை, யோ கம், ஞானமென்னும், தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கங்களாகிய நன்மார்க்கங்கள் நான்குமே அப் பரமசிவனால் மேலாகவைக்கப்பெற்ற சின்மார்க்கங்களென்கின்ற உண்மையுணர்தற்கென்க. இதனை, "தெங்கமழுமலர்தழிஞ்சிங்கள் கங்கைதிகழரவம்வளர் சடைமேற்சேரவைத்து" என்ற உமாபதி வாக்கும் விளக்கும்.

"ஒன்று நீயல்லையன்றி யொன்றில்லை" என்னும் பிரபலசுரு தியின்படி, அன்றியொன்றில்லாமலெங்கும் நிறைந்து நிற்கின்ற அந்தரியாமியாயினும், மேற்கூறிய பரமகர்த்திருத்துவ சர்வைஸ் வரிய மகாப்பிரபுவாயிருந்தும், "ஒன்று நீயல்லை" என்றபடி யா தொன்றையும் பற்றாது அதீதனாய் நிற்கின்ற பற்றற்ற பரம்பொரு ளே அப்பரமசிவன் என்பது விளங்கச், சிரசு முடி தலை என்பன வாதிசொற்களை வேண்டாது, "சடை" என்னுஞ்சொல்லைப்பின் வைத்து விளக்கினர்.

வெப்பம் நீக்கித்தட்பந்தருதலும், அடக்கியாளுதலும், இ ருளைநீக்கி ஒளியைத்தருதலும், அடைந்தார்க்கு அபயங்கொடுத் தருளி மேலாகவைத்தலும், துஷ்டரையும் சிஷ்டராக்கி ஏன்று கோடலும், அது நோக்கிப் புத்திபூர்வகமாக அக்கிரமஞ்செய்வ ரேல் அவரைக்கடித்து ஒறுத்தலும், இவை முதலிய பசுபதித் துவ உத்தமகுணங்களையே, அப்பரமசிவன் மேன்மையாக்கொ ண்டவனென்பதும், அவனருள் வழிநிற்பாரு மிக்குணங்களையே மேற்கோடற்கதுவே ஆஞ்ஞையுமாமென்பதும் விளங்க, 'மேல்' என்னுஞ்சொல்லைப் பின்வைத்து இக்குணங்களில் யாதொன்றும்

அக்காலத்தும்வழுவுவனவல்ல, என்றும் நிலைத்துள்ளனவே யென்பது விளங்க, வேய்ந்த,கொண்டையென்பனவாதிசொற்களை முன்னிட்டு "வைத்த" என்னுஞ்சொல்லைப்பின்வைத்து. இவையெல்லாம் திருவருட் பெருக்கத்தாற் செய்யப் பெறுகின்றன என்பது விளங்க, "ஆங்கணர்" என்னுஞ் சொல்லைப்பின்வைத்து விளக்கினார்.

சடைப்புனைந்த என்றும் பெயராயிருந்தும், சடைமேல்வைத்த என்றும் வருஞ் சொற்களைச் சேர்த்துக்கூறி அங்கணரென்று அதிற்றுக்கூறியது. பரமசிவன் பரிபாகர்களுக்குப் பிரசாதங்களாகிய மும்மொழிகளைக் கொடுத்துப் பாசநீக்கிச் சிவமாக்கி யாளுகின்றனரென்பதும், அவ்வாட்டுபாடுலை இரப்பதே விளக்குஞ்சிவஞானபோதமென்பதும் முன்புறமே தெரித்துக்கொள்க.

இக்கதைய அருட் கண்ணராகிய சிவபிரான், குருவடிவாய் வந்தருளிக், காமதுக்கதைத்தருளான கண்ணோபாசக காட்டியே, பரிபாகர்களுக்கு அருட்செய்த் திருமுறை இனிதுவிளங்க, "ஓலைகாட்டி" என்னுந் திருவாசகம் பின்வைத்தருளினார் அத்திருவோலைத் திருவாசகம். "ஏந்தரசந்தரமந்தி மறையோரான் செய்கை, பெருமுனி வெண்ணெய்நல்லூர்ப் பித்தனுக பொறுமென்பால், வருமுறை மரபோர் நம் வழித்தொண்டர்க்குச் சுற்கோலை, யிருவயர வெழுதித் தெரிந்தனிருப்பனென மூக்கு" என்பதாம். இதுபெரியார்க்கு மேன்மைதெரித்தபடி. பாசநீக்கிச் சிவமாக்கி யாட்கொண்டருளியமை இனிதுணர்த்ஸாற், சிவஞானபோதமேயாமென்க. "நின்ற சிவனொன்றுகண்த்தேர்த்தன்றான நிகழ்போதத் தேர்ந்தனைத் தெளிதலாதும்" என்றபடி, மதிவழி என்ற உபநிஷதங்களால் எடுத்தோதப்பெறுகின்றவனும், வெண்ணெய்போல, மென்மை, தண்மை, மிருதுவை, குழைவு முதலிய இன்பங்கள் யாவும் நிறைந்தவனும், அநித்தியங்களான எண்ணாயிர பல்லூர் போலாகாமல், நித்திய தத்துவாதீத நல்லூர்வாசியும், அருளாதிக்கப்பெரும்பித்தனுமாகிய முதியவேதிய சிவஞானவெண்ணெய்ப் பதியெனத் தேர்தற்கும் சபையார் முன்தெளிதற்கும், இவ்வோலைத்திருவாசகமே துணையாயிருந்தமையாலும், இது சிவஞானபோதமே யென்பதில் எட்டுணையும் உட்

சுந்தரமூர்த்திகள், பிரமவிஷ்ணுவாதி சீவர்கள் யாவரை
யும் அடிமைகொண்டாளுகின்ற ஆண்டவனாகிய சிவனை
என்பதினிது விளக்குதற்கே, (ஆட்கொள்பெற்றார் நாடு) என்
றிருந்தாலும் செய்யுட்கு விரோதமில்லாதிருக்கவும், அங்ஙன
மின்றி "ஆண்டவர் காமக்குநாடு" என்றதனி, "காமக்கு" என்
பதில் நான்கனுருபைத்திரித்துப்பொருட்டாய், அந்நாடு அவ்வாண்
டவர்க் குரிமையாகுந் தகுதியை விளக்கலால், அதற்கிணமா
கிய மற்றெங்கனும், எவ்வுலகும், எல்லா அண்டங்களும், பரம
சிவனுக்குரித்தாதல்போல, அப்பரமசிவனையாகிய சுந்தரமூர்த்
திகளுக்குரிய உடைமைகளே என்பதும் விளக்கினர். நெய்வருணை
அது உருபாகத்திரித்து உரிமையை விளக்கினதெனினும் பொ
ருந்தும்.

இனிப், பேதையாதி வேறுபெயர் கூறாது, "மங்கையர்"
என்றமையால், அச்சொல், பெண்களையுணர்த்துவதுடன் பக்கு
வத்தையும், மகளம் முதலென்பவர்க்குவதுடன் முதன்மையை
யும், மதி சந்திரனையுணர்த்துவதுடன் போகத்தையும், உண
ர்த்துமாதலால், மங்கையர்வதன சீதமதி, என்பது பக்குவமுத
ன்மைவாய்ந்த குளிர்ந்தபோகம் எனப்பொருள்பட்டு, அதுபொ
துவாய் நிற்றலால், சீவர்களது பரிபாக முதிர்ச்சியிலுள்ள நல்
லுணர்ச்சியையும் அப்பொழுது அவர்க்கு அருளும்படி நோக்
குஞ்சிவபோகத்தையும் உணர்த்துமென்க.

"இதமதுர்த்தமோடி" என்பது காதுகளினிருபக்கத்துமோ
டி என்றுணர்த்துவதுடன் சீவர்களது நல்லறிவு சிவன்பாலும்.
சிவபோகம் சீவர்கள்பாலும் ஓடிச்சேறலை யுணர்த்துமென்க. அ
வை இரண்டும் ஆங்காங்குச் சேறலிற் களைமுதலின் கூறற்கியை
யாமையின் அச்சொற்றொடர் அதனை விளக்காது நிற்றல் காண்க.
இடையீடின்றி விரைந்து ஓடுதலை யுணர்த்தற்குச் சென்று என்
னாது ஓடி என்றார்.

"செங்கயல்" என்பது, இரண்டு கயல் மீன்களையுணர்த்துவது
டன். கயல்போலும், குஞ்சுகள்போலும் தன்மையையுடைய
சிவனையும் சீவர்களையும் உவமை ஆகுபெயராய் நின்றுணர்த்து
மென்க. "குழைகளுடும்" என்பது, சிவம், குழைந்த அன்பினி
டத்தை நாடும், சீவன், தன்பாலிரக்கமுற்றுக் குழைந்துவருட

அருளினிடத்தை நாடும் என்பதைத் விளக்கும். வாளா, கயல் என்னது, "செங்கயல் என்றார், சிவம் பக்ஷபாதமின்றி எக்காலத்துஞ் செப்பமாக நிற்றலையும் அப்பக்குவசீவர்கள் பிரபஞ்சத்திற் சாயாது, ஸ்திரமாகிக் குழைந்துருகும் மெய்யன்பின்றிறத்தால் நேர்நிற்றலையுமுணர்த்தற்கென்க. ஓடி. என்னும் வினையெச்சம், எதுப்பொருட்டாய் நாடும் என்னும் பெயரெச்ச வினையைக் கொள்ள, அது, நாடு என்னும் பெயர் கொண்டு முடிந்தது.

இதனால், பிரமவிஷ்ணுவாதி சமஸ்தசீவர்களையும் அடிமையாக்கொண்டாளுகின்ற ஆண்டவராகிய ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகளுக்கு, எல்லா நாடுகளும் உலகங்களும் அண்டங்களும் உரிய உடைமைப்பொருள்களை என்பதும், அவற்றுள்ளும் லோகோபகாரமாக மூர்த்திகள் மானுடவடிவாய் வந்தருளுதற்கிடமான விசிட்டமுடையது திருமுனைப்பாடி நாடே என்பதும், அந்நாட்டிலுள்ள சீவர்கள், பக்குவமுதன்மையெய்ந்த ஞானிகளென்பதும், அந்த ஞானம் சிவன்பால் ஓடுதலால், அச்சீவர்கள் சிவனது குழைந்த அருளின்கண்ணே நாட்டமுள்ளாரென்பதும் சிவபோதம் அவர்கள்பால் ஓடுதலால், அச்சிவன் அவர்களது அன்பின்கண்ணே நாட்டம் வைத்தருளுவரென்பதும் தெளியப்பெறும். இப்பெருமையெல்லாம், ஸ்ரீசுந்தரமூர்த்திகள் திருவவதாரஞ்செய்து வீற்றிருந்தருளிய விசேடத்தாலென்க. இவ்வுண்மையை இந்நாட்டின்பெயர்ப் பொருளும் விளக்குதல் காண்க.

திருமுனைப்பாடி என்பது இந்நாட்டின் பெயர்; இதன் பொருள், சர்வைஸ்வரியசம்பந்த ஈஸ்வரநாம பரமசிவனாகிய முதற்கடவுளைப்பாடுதலையுடையது என்பதாம். இப்பெயர், திருமுனைப்பாடி என்று மூன்று சொற்றொகுதி ஒருபெயராய் நிற்கின்றநிலையே, பதிபசுபாசமுப்பொருட்டொகுதியாதி பற்பல பொருள் விளக்கமுஞ்செய்யுமென்க.

"ஆண்டவர்தமக்குநாடு திருமுனைப்பாடி" என்றிருந்தாலே போதியதாயிருக்கவும், "நாடு" என்னும் ஓர் அருமைத் திருமொழியை மேலும் ஈற்றில் வைத்தருளிய பெருங்கருணையின் உரிமைநோக்குங்கால், சேக்கிழார்பெருமானது திருவாய்நின்றும் இத்திருப்புராணம் வெளியிட்டருளிய நடேசப்பெருமான், இத்

திருப்பாசுரத்தையும், இதுபோலவே இப்புராணத் திருவிருத்தங்களெல்லாவற்றையும், உள்ளிட்டு நாடுவாயாகவென்று ஆஞ்ஞை தந்தருளியதாக் கோடற்கிடந்தருகின்றது.

இச்சிவாஞ்ஞைசிரமேற்கொண்டு ஆழ்ந்து கிடக்கும் அரும்பொருள்களை உள்ளிட்டு நோக்கி வெளியிட்டருளும், திருவருள் விலாசப்பரசிவபோதத் துரிமையராகித் தெரிசிவசீலப் பெருமக்களே, இத்திருப்பாசுரத்துட்பொருள் முற்றுந் தெற்றெனத்தோன்றப்பெற்றவை மேன்மையிற்றெனவோரு நற்முறையார்க்கு விரித்துரைத்தருளுவர். ஒன்றுக்கும் பற்றாத அறிவிலாச்சிறியேன் உரைப்ப தெங்ஙனம், 'சிறியேனறிவுக்கவர் தந்திருப்பாதந்தந்த,தெறிசேய சிந்தியானறி நீர்மை கும்பிட்டேனன்பால்". என்றருளி எமக்குக்காட்டியருளிய, சேக்கிழார் பெருமானாகிய திருபாவாகீச சிவபாதகமலங்களைச் சிரமேற்கொண்டு, ஆசைமேலீட்டினால் அறியாதுரைத்தேன். பெரியார் பொறுத்தருளுக.

இத்திருவிருத்தத்தாலும், சேதனசேதனப் பிரபஞ்சமுழுதும், தனக்கு அடிமையும் உடைமையுமாக வைத்தாளுகின்ற ஆண்டவனாகிய பரமசிவனே, சுந்தரமூர்த்திகளென்பது விளக்கமாகவும், இவர், லோகோபகாரமாக மானுடவடிவினராய்ப் பூமியில் வந்தருளிய பின் சிற்றின்பம் நுகர்ந்தாரென்று கூறும் மூடவசனம், மணம்பெறாதொழிதலுமன்றி, அதி துர்நாற்றமுடைத்தாய் எங்கும் பரந்து, நன்மணமே மணக்கும் நல்லோர்களின் சின்மனநாசிகளிற் சென்றுதைத் திடர்செய்தலால், அப்பெரியார் முனிவையும், அதனாலும் மேலும் நரகவாச ஸ்திரத்தையுமே செய்யுமென்க.

இரண்டாவது திருவிருத்தம்.

பெருகிய நலத்தான் மிக்க பெருந்திரு நாடு தன்னி
லருமறைச் சைவ மோங்க வருளினா லவத ரித்த
மருவிய தவத்தான் மிக்க வளம்பதி வாய்மை குன்றாத்
திருமறை யவர்க ணீடுந் திருநாவ லூரா மன்றே. என்பதாம்

பதியில் அவதரித்தாரென்றது, அவதரித்த வளம்பதி என்ற இதனாலும்; மூர்த்திகளுக்கே தலைமையுரிமை விளங்குதல் காண்க. இதில் இந்நாட்டின் பெருமை விளக்குகின்ற ஆசிரியர்,

அதனுண்மை எடுத்தோதலில் தமக்குள்ள ஆசைப்பெருக்க மினிது தோன்ற, அதற்குரிய விசேஷணங்கள் ஒன்றிரண்டோ டமையாது, மிகுத்தெடுத்தோதிய உண்மையும், அச்சொற்பொருள்களின் வண்மையும் இந்நாட்டிலுள்ளார், பக்குவமுதன்மை வாய்ந்த குளிர்ந்தஞானஸ்தாகளை என்று மேற்கூறிய உட்பொருளை வலியுறுத்தி, அங்ஙன மிகுத்தெடுத்தோதிய விசேஷணங்களும், "பெருகிய, நலத்தால், மிக்க, பெரும், திரு," என ஐந்தேயாகக்கூறிய முறையால், அந்த ஞானமும ஸ்ரீபஞ்சாக்ஷர வழிதத்தான சிவஞானமே என்பதையு மினிது விளக்குமென்க.

"அருமறைச்சைவமோங்க வருளினலவதரித்த" என்ற அருமைத்திருவாசகங்கள், வினைக்கீடாக மாயாசம்பந்தசரீரிகளாய்ச் சீவர்கள் பிறத்தல்போலன்று, ஸ்ரீசுந்தரமூர்த்திகள், பரமசிவன் ஏவலைமேற்கொண்டு, வைதிகசைவந்தழைத்தறவே, மானுடவடிவு கொண்டு வந்தருளினரென்று மேற்கூறியதை வலியுறுத்தி, அவ்வாசகங்களும் கூடாது குறையாது ஐந்தேயாய் நிற்றலாலும் ஸ்ரீபஞ்சாக்ஷர நெறியாகிய சைவவிளக்கஞ் செய்தற்கே வந்தருளினரென்பதை மேலும் விளக்குமென்க.

இப்பதிக்கு விசேஷணங்கூறுமிடத்து, "மருவியதவத்தால் மிக்கவளம்" என நான்கு திருவாசகங்களைக்கூறியது, இப்பதியிலுள்ளாரியாவரும், சரியை கிரியை யோகம் ஞானமாகிய நான்கு திருத்தொண்டுகளையே மேற்கொண்டதாச புத்திரசக சன்மார்க்கர்களே என்பதூஉம். அத்திருத்தொண்டுகளுக்குரிய சாதனங்களாக நால்கு நிலப்பொருள்களும் நிறையப்பெறறுள்ளதே இப்பதியென்பது மினிது விளக்குமென்க.

இப்பதியின் பெயர் கூறுங்கால், "வாய்மை, குன்றாத, திரு; மறையவர்கள் நீடு, திரு" என ஆறுதிருவாசகங்களை விசேஷணங்கூறியதுகொண்டு, அத்திருமறையவர்கள் அறுதொழிலாளரென்பதூஉம், காமாதி ஆறு குற்றநீக்கி நன்னெறியினின்று, ஆறு குணபரமபதியாகிய சாட்குண்ணிய சிவபிரானருளைப்பெற்றவர்களென்பதூஉம் மினிது காண்க. இனிப்பதப்பொருள்களாவென்றால் மிகவெளிதாம் அமைக.

மூன்றாவது திருவிருத்தம்.

மாதொரு பாகனார்க்கு வழிவழி யடிமை செய்யும்
வேதியர் குலத்திற் றோன்றி மேம்படு சடைய னாருக்
கேதமில கற்பின் வாழ்க்கை மனையிசை ஞானி யார்பாற்
றீதகன் றுலக முய்யத் திருவவ தாரஞ் செய்தார். என்பதாம்.

இதனால், எனைப்போல வினைக்கீடாகவன்று; உலகந் தீதகன்றுய்யுமுபகாரமே, மூர்த்திகள் வந்தருளினாரென்னு முண்மை பிரகாசித்தல் காண்க. இதில், இவர் தோன்றிய குலத்திற்கு, வழிவழி விசேஷணங் கூறியது கொண்டும், அஷ்டமங்கள திவ்விய குண பரமசிவ தலமாகிய சதாசிவ முகோற்பன்ன ஆதிசைவகுலமே அக்குலமென்பதூஉம், அதினின்றும் நான்குபடி தாழ்ந்ததாகிய ஈசானப்பிரம முகோற்பன்ன பிராமணகுலமன் றென்பதூஉந் தெளியக் காண்க.

நான்காவது திருவிருத்தம்.

தம்பிரா னருளி னாலே தவத்தினான் மிக்கார் போற்று
நம்பியா ரூர ரென்றே நாமமுஞ் சாத்தி மிக்க
வைம்படை சதங்கை சாத்தி யணிமணிச் சுட்டி சாத்திச்
செம்பொனா ணரையின் மின்னத் தெருவிற்றே ருருட்டுநாளில்.
என்பதாம்.

இதில், “தவத்தினான் மிக்கார் போற்றும் நம்பி” என்ற உண்மை நோக்குங்கால், இருவினையொப்பு மலபரிபாகசத்திநிபா தத் துத்தமர்க்கே, ஒரு நம்பியாகிய சுந்தரமூர்த்திகளேச சிவனே என்றுண்மை தெரிந்து போற்றும் பெரும் பாக்கியங் கைகூடு மென்பதூஉம், மலசகிதர்களாகிய பிரம விஷ்ணுவாதிகட்கு அது கிடைப்பதரிதென்பதூஉம், அவருள்ளும், சரியை கிரியாதி உண்மைத் திறந்தொண்டி னின்று தவமிகுந்து பரிபாகமுற்றவராகில் அவர்க்கே அது கிடைக்குமென்பது மினிது விளங்கும்.

“நம்பி, தம்பிரான் அருளினாலே நாமமுஞ் சாத்தி” எனக் கொண்டு கூட்டி, நம்பியாகிய ஆலாலசுந்தரமூர்த்திகள், இப் பூமியில் வந்த பின்னும், தம்பிரானாகிய சிவனே அருளினால், தமது திருப்பெயரும், மூர்த்திகள் இங்கு வந்ததற்கிசைய அவர் மூதாதையின் பெயருமாகிய ஆரூரரென்னும் நாமமே சாத்தப்

பெற்று, எனப்பொருள் கொள்க. இதனானும், அருளினாலாகிய வந்தாரென்பதும், சீவர்கள் போல வினைக்கீடாகவந்தவரல்லரென்பதும், இவர் சிவனே என்பது மினிது விளங்கும்.

நாமமும் என்றதில் உம்மையானது, இறந்தது தழீஇய எச்ச உம்மையாய்த், தம்பிரான், தமதருளினாலே முன்பு கயிலையினின்றும் பூமிக்கு வரும்படி ஏவியதுமன்றி; வந்த பின்பு நாமமுஞ் சாத்தினாரென்பதையும், எதிரது தழீஇய எச்ச உம்மையாய், இப்போது நாமகரணஞ் செய்ததுமன்றி, இனிமேலும் இந்நம்பியாகிய ஆரூரரிடத்து நிகழுஞ் செயல்கள் முழுதும், அத்தம்பிரான், தமதருளினாற் செய்விப்பனவே என்பதையும் அவ்வாறன்றி ஒரு சிறிதும் வேறில்லை என்பதையு மினிது விளக்குதல் காண்க.

சடையனார் இசைஞானியாராகிய பிதாமாதாக்களிருவரும், தங்கள் மத்தியில் மூன்று வயசு நரபாலரூபியாய் ஒளிப்பிழம்பாய் வந்தருளிய அப்பொழுதே, சற்புத்திரப்பேற்றை விரும்பி அருந்தவஞ் செய்த தம்மிடத்து வைத்த அருள் மிகுதியால், சிவனே குழந்தையாய் வந்தருளினாரென் றுள்ளபடி கருதியவாறே பாவித்துப் பாராட்டி வருகின்றார்களாதலால் உலகமுறைப்படி நாமகரணம் அவர்செய்தாரல்லர், தம்பிரானே அது செய்தாரென்பதை, "தம்பிரானருளினாலே" என்னுந் திருவாசகம் ஒருவாது நின்று விளக்குதல் காண்க. இதனை ஏகாரமுமினிது தெளிவிக்கும். நம்பியாரூரரென்பதே நாமமாகக் கொண்டால், தேருருட்டும் என்றதற்கு வினைமுதலில்லையாதலால், நம்பி என வேறு பிரித்து எழுவாயாகக் கோடலே திண்ணம்.

இத்திருவிருத்தங்களினுட் பொருள்களொவ்வொன்றும், ஆழ்ந்து நோக்குதற்குரிய அறிவு போதாமையானும், விரிந்து பெருகுமாதலானும், மேல்மூர்த்திகளது திவ்விய சரித்திரங்களிலாங்காங்குத் திருவருள் விளக்கஞ் செய்யுமவ்வளவிலாராய்வாம்.

ஸ்ரீசுந்தரமூர்த்திகள் இவ்வாறு மூன்றுவயசுப்பாலரூபியாய் வந்துவளர்ந்து பாலப்பருவங்கடந்து, சீவர்கள், மங்கையர்பால் மோகங்கொண்டு சிற்றின்பநுகர்தற்குரிய தென்றெண்ணப்படுகின்ற யௌவனப்பருவத்தையடைந்தார். அதுநோக்கிய சடையனார்,

அவர்க்கு மணஞ்செயக்கருதி, மூர்த்திகளது திருவருள்நோக்காற் பரிபாகமுதிர்ந்து சிவகதிபெறுதற்குரிய அருந்தவம்புரிந்து, பூர்வமே பரிபூர்த்தியாகப்பெற்றுவந்த பெண்மணியைப் பேசி நிச்சயித்து, அதற்குரிய சடங்குகளைச்செய்ய, மூர்த்திகள் திருமணக்கோலங்கொண்டருளி, அவ்வூர் நடராயத்திருவீதி சென்றருளும்பொழுது காணப்பெற்ற சலட்சணவதிகளாகிய பெண்கள், கூறுதலை "கண்களெண்ணிலாத வேண்டுங்காளையைக்காணவென்பார், மண்களிகூரவந்த மணங்கண்டு வாழ்கவென்பார்." "ஆண்டகையதனிலோர்கின் பொள்ளாத்தலைக்கொளென்பார், பூண்டபங்கிவனை காணும் புண்ணியமூர்த்தியென்பார்." என்று பெரியபுராணம் விளக்குகின்றது.

இதனால், காளைப்பருவத்தினராய்க் காணப்பெறுகின்ற இச்சுந்தரசிவத்தைக் காணவேண்டுமென்ற மண்ணிலகப்படாத (ஏனையரால் மதிக்கப்படாத) ஞானக்கண்ணிலன்றி, எண்ணிலகப்பட்ட ஊனக்கண்ணினால் முடியாதென்பதும், மணக்கின்ற தம்பதிகளாகிய தாங்களும் மாதாபிதாக்களும் சுற்றத்தார் முதலியினோருமாத்திரம் களிகூரச்செய்கின்ற ஏனையர் மணம்போலாகாது, மண்ணிலுள்ளார் விண்ணிலுள்ளார் மற்றுமுள்ளார் யாவரும் பரமார்த்த தரிசனமுணர்ந்து களிகூரத்தக்க சிவமணமே, இச்சுந்தரசிவ திருமணமென்பதும், இச்சுந்தரசிவநோக்கமானது, காமித்தற்குரிய மணஞ்செய்யும் இக்காலத்திலும், ஏனையது காமநோக்கம்போலாகாது, அனவரதம் திருவருணோக்கமே என்பதும், ஏனையர்களின் கர்மானுருணசரீரங்கள்போலன்று, இச்சுந்தரசிவமூர்த்தம் புண்ணியமயமே என்பதும் தெளிவாயது.

தம்மையே விரும்பித் தம்முகமுதலியவற்றையே பார்த்துக்கொண்டு, சலட்சணவதிகளாய்ப் பல்லாயிரம் பெண்கள் காமநோக்கமேகாட்டிச் சூழ்ந்துநிற்கின்ற இந்தச்சமயத்திலுங்கூடத் தமது, திருமுகமண்டலம் திருவருள் வெள்ளமே பொழிந்து யாவர்க்கும் அருணோக்கங்காட்டி நிற்குமானால்; இச்சிவசுந்தரமூர்த்திகள், பூமியில் வந்து சிற்றின்பநுகர்ந்தாரென்னு மூடவசனம் எக்கதியிற் புகுக்கு மென்பது சொல்லவும் வேண்டுமோ? அமைச, அருணோக்க முதலியனவே தமக்கியல்பாயுள்ளவர், சிவசுந்தர

மூர்த்திகளென்று பெரியபுராணம் இவ்விடத்து விளக்கியதைத், திருநாவலூர்ப்புராணமும் "அருடருநோக்கதன்றிய வரகநோக்கின்றென்பார், மருட்டுவித்துநிரைபாருநம் வானவனிவனே யென்பார். "அயன்படையாருநானே யமைந்த நல்லழகனென்பார்" என்று விளக்கி வலியுறுத்தல் காண்க.

இச்சுந்தரசிவ திருமணத்தில், சிவபிரான் முதியவேதியராய் வந்தருளி வல்வழக்குரைத்தனவற்றை விளக்குகின்ற பெரியபுராணத் திருவிருத்தங்களிலுள்ள 'உள்ளிருள்பல விரிவஞ்சியமைந்தாம். இனி மூர்த்திகளைத் தடுத்தாட்கொண்டழைத்துச்சென்று கோயிலுட்புகுந்து மறைந்தருளிய சிவபிரானை, மூர்த்திகள் அழைத்து நின்றபொழுது, சிவபிரான் ரிஷபாரூடராய் வந்தருளி மூர்த்திகளைநோக்கி, "முன்பு நீ நமக்குத்தொண்டன்முன்னிய வேட்கைகூரப், பின்பு நம்மேவலாலே பிறந்தனைமண்ணின்மீது" என்ற பெரியபுராணத் திருவிருத்தத்தால், சுந்தரனே நீமுன்பும் கயிலாசத்தில் நமக்குத்தொண்டு செய்தவந்தாய், அப்பொழுது, உனது தொண்டு பரப்பிரயோசனத்துக்கு ஏதுவாகட்டுமெனக்கருதி உன்னுடைய வாய்த்தொண்டில் நமக்கு விருப்பமுண்டாயது. அவ்வாறு நாம்முன்னிய வேட்கை அதிகப்படுதலால், நம் ஏவலினாலே பின்பு, இச்சுந்தரரூபியாய் மண்ணின்மீதுவந்தனை என்று கூறியதாகத் தெரிதலால், இதுகொண்டும், சுந்தரமூர்த்திகள், வினைக்கீடாகப்பிறக்கும் சீவர்களிலொருவரல்லர்; சிவவர்க்கத்தவரே என்றும், இவரைப் பரமசிவன், பூமிக்கு அனுப்பியது, தமது திருவுள்ளத்தே பரப்பிரயோசனங்குறித்தெழுந்த விருப்பத்தாலேயே என்றும், மூர்த்திகள் கயிலாசத்தில், பெண்களை விரும்புதலாகிய குற்றஞ்செய்திலரென்றும், பரமசிவனே ஒருகாரணங்காட்டிப் பூமிக்கு அனுப்பவேண்டியேபெண்களை விரும்புவித்தாரென்றும் முற்கூறியனவெல்லாம் உண்மையே என்று நன்கு தெளியலாம்.

ஈண்டு எடுத்துக்காட்டிய பெரியபுராணத்திருவிருத்தத்தில், "முன்னியவேட்கை" என்றதற்கு நாம் முன்னியவேட்கை என்று பரமசிவன் கூறியதாக பொருள் கொள்ளுதல் எங்ஙனமெனில்? "பின்பு நம்மேவலாலே" என்றதும் அவ்வாறு பொருள்

கொள்ளுதலேயே திரிபொருளெனப்படுமென்க. என்னை? மூர்த்திக ளே பெண்களை முன்னிய வேட்கையராயினர்? அது பொருந்தாதாமா குக். அந்நூற்றொசிரியர் சுவாமிகளாயினாரே? அவராசிரியராயுடையவன் டியவரே. அவ்வறுபாருவ ஸ்ரீவ்யாஸநாயகத்தைப் பெருந்தா என்றே கூறுவர். அவ்வாசிரியர் "ஸ்வாமி" என்ற அதிகாரப அருளைத் திருவாயால், பரமசிவம் முன்னிய வேட்கை கொண்டு விளக்குகின்றனர். அப்படிக் குறிக்கும்போது பிரதியாக ர்த்தமாக வருகின்றதுவன், காஞ்சியிற் சென்றிலர் திருக்கூ டமையாலுமா, பரமசிவன் முன்னிய வேட்கை தவிர்ந்தவராயின் ஒரு செய்யத் தெரிக அவ்வாறே, மேற்கொண்ட முறையால இறைவன் கருத்தானையே பட்டுணர் அப்பரிசே, அவ்விடம் வருவது அவசியமாக நடப்பது ஆவதையடையாதலாலும், மூர்த்திகளிடத்துப் பெண்விருப்பம் உண்டு என்றது மிகைபடுவது நன்கு தெளியலாம்.

இவ்வாறன்றி, "முன்னிய வேட்கைகூர" என்பதற்கு சுந் தரமூர்த்திகளை பெண்களை முன்னியதாலுண்டாகிய வேட்கை அதிகப்படுதலால் என்றுபொருள் கொள்ளுதல் பூர்வாபர விரோ தமாதலால் அது பொருந்தாதென்க. அங்ஙனம் மூர்த்திகள் பர மசிவபிரேரகத்தால் பெண்களை நோக்கி விரும்பிய அப்போ தே, அந்நினைப்பை மாற்றிச் சிவஸ்மரணையுடன் பூக்கொய்து வந்தாரென்றே சரித்திரம் கூறுதலால் "முன்னிய வேட்கை" என்பது, அதிகப்படுதலாலென்று பொருள் தருகின்ற "கூர" என்ற திருமொழியை மேலும் புணர்த்தது பூர்வாபர விரோத மாகும்; சேக்கிழார்பெருமான் திருவாக்கினின்று வந்த சுத்தசைவ சிவவாக்கில் பூர்வாபர விரோதம் காண்டல், எவராலும் எவ்வாற் றானும் எக்காலத்தும் எட்டுணையேனு மியலாததாதலால், பரமசிவ னுக்கே மூர்த்திகளது கைத்தொண்டை முன்னிய வேட்கை அதிகப்படுதலாலென்று பொருள்கொள்ளுகின்ற நல்லெண்ணமே திண்ணமென்க.

இனிச் சிவபிரான், மூர்த்திகள், பெண்களை விரும்பிய குற் றத்தினால் அவரைப் பூமிக்கு அனுப்பினதாக வெளிக்காட்டி, யதற்கிசையச் சரித்திரமுறை கூறுமிடத்து, முன்னியவேட்கை

கூர" என்றதற்குச், சுந்தரனை நீ பெண்களை முன்னியவேட்கை கூறுதலால் என்று, பெரியார் பொருள் கூறினும், பரமசிவன் முன் பின் நோக்கி உள்ளிட்டுணர்வாருணர்கெனக் கருதி, மூர்த்திகளது கைத்தொண்டை விரும்பி அதற்காகவே பூமிக்கு அனுப்புதலை வெளிக்காட்டாது மறைத்து வைத்ததுபோல், அவனருள் வழிபட்ட அப்பெரியாரும், திருவருளை முன்னிட்டு முன் பின் நோக்கி உள்ளிட்டுண்மையுணர்வாருணர்கவெனக் கருதியே, அதனை வெளிக்காட்டாது, அவ்வாறு கூறினதாகவே கொள்வாருத்தமரென்க.

இவ்வாறு பரமசிவன், நாம் உனதுவாய்த்தொண்டை முன்னிய வேட்கை கூர்தலால், நம் ஏவலால் நீ பூமியில் வந்தனை என்று கூறவேண்டிய அவசியம் யாதுமில்லாதிருக்கவும், இதனை முன்னமே கூறிக் காட்டியது, உடனே அவ்வேட்கையைத் தெரிவித்து ஏதுவுங் காட்டியபடியினிதுறவேயாம். இதனை வருந் திருவிருத்தத்தாலுங் காண்க. "மற்றுநீ வன்மைபேசி வன்றொண்டனென்னுநாமம், பெற்றனை நமக்குமன்பிற் பெருகிய சிறப்பின்மிக்க, அர்ச்சனைபாட்டேயாகு மாதலான் மண்மேல் நம்மைச், சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும்வாயார்." இதில், நீ மென்மையின்றி வன்மையே பேசினும், நமக்கு இடையறாத திருத்தொண்டனேயாமென்று தழுவிக்கொண்டதும், பரமசிவனை மூர்த்திகளது பரப்பிரயோசன வாய்த்திருத்தொண்டை விரும்பி வேட்கை கூர்ந்தாரென்பதை இனிது விளக்கும்.

மூர்த்திகள் நேரே பேசிய வன்மையும், மென்மையாய் நன்மையே பயக்குமென்று, பரமசிவனை மிகுந்த ஆதரவுடன் ஏன்று கொள்வாரானால்? மூர்த்திகளிடத்து, எப்பொழுதாவது எவ்விதத்திலாவது ஓரணுத்துணைக் குற்றமாவது உளதாதலும், அது நோக்கி அவர்வர்சிக்கப்பெறுதலும் உண்டென்று அறிவில்லாராவது கூறுவரா? என்பதூகித்துணர்க.

இனி நமக்கும் "அர்ச்சனை அன்பில் பெருகிய சிறப்பின்மிக்க பாட்டேயாகும்" என்பதை, பரமசிவன் முன்னமே கூறியது, மூர்த்திகள் ஆதிசைவ மரபினராய் வந்தமையால், அம்மரபிற்குரிய முக்கியமான சிவார்ச்சனையில் பிரவேசித்துவிட்டால், தாம்

முன்னியவாய்க்கிருத்தொண்டிற்கு இடையீடுநேருமெனக்கருதி பேயன்றிவேறில்லை இதனை, வாளாபாட்டேயாகுமென்றது, அன்பில்லைப நவியசிறப்பின்மிக்க என்று விசேடணங்கள் அடுக்கிமிகுத்துக்கூறிய ஆசைபெருக்கமும, அது உண்மையேயெனவிளக்கும்.

அங்ஙனங்கூறிய விசேடணங்களும் நான்கேயாகக்கூறியது. மூர்த்திகள் திருவாயினின்றுவெளிவருகின்ற தேவாரத்திருப்பாசுரமெல்லாம், சரியாதிநாற்பாதங்களைவிளக்கிச சீவர்களைஅவ்வழிபடுத்தியுய்விக்கின்ற பரப்பிரயோசனத்தையேவிளைவிப்பதென்னும உண்மைவிளக்குதற்கே என்க.

“மண்மேல்நம்மைசொல்தமிழ்பாடுக” என்றது, பரமசிவன், மூர்த்திகளிடத்து விரும்பியவாய்த்திருத்தொண்டு. பாஷைகளிற்சிறந்து இனிமையே தன்மயமாகிய தமிழிலேயென்றும், அதுவும் அதற்குரியதமிழ்தேசமாகியதக்ஷணபூமியிலேநிகழும்படிவிரும்பினரென்றும்,மேலேகூறியதைவலியுறுத்தியதுகாண்க. பரமசிவனுக்கு வேறுநாமங்கள்கூறுது, “தூமறைபாடும் வாயார்,”என்று கூறியதும், எவராலும் மறுக்கமுடியாத முக்கியப்பிரமாணமாகிய தூயசுருதியைநேரேதமதுதிருவாயில்வடமொழியினாற்பாடியருளினவராயிருந்தும், அம்மொழியின் காடின்னியம்நோக்கி அதில்பராமுகராய் இனியதமிழையேவிரும்பினரென்றுபக்கத்துணையாய்மேலும்வலியுறுத்துகின்றமாண்புகாண்க.

பரமசிவன் பாடுகவென்றருளியபின்னும், சுந்தரமூர்த்திகள், “கோதிலாவமுதேயுன்றன்குணப்பெருங்கடலைநாயேன், யாதினையறிந்தென்சொல்லிப் பாடுகேனெனமொழிந்தார்.” என்றதிருவிருத்தத்தின்படி, பரமசிவனைநோக்கித், தன்னைப்பூசித்ததேவர்களை ஏனையர்போலிறவாதுநீண்டகாலமிருக்கச்செய்தல்நோக்கி உபசாரமாகஅமிர்தமென்று சொல்லப்பெறினும்,என்றுமிறவாமையைச் செய்யமாட்டாதகோதுள்ள அமிர்தம்போலாகாது, தன்னையே நினைக்கின்றவர்க்குத்தன்னையேபோல என்றுமிறவாப் பெருவாழ்வு தந்தருளுகின்றஉண்மைஅமிர்தசொரூபியாகிய எம்பெருமானே, தேவரீருடையஅபாரகுணாதிசய மகிமைகளோ? ஏனையகடல்கள் போலாகாமல், ஒவ்வொன்றும் பெருங்கடல்களாயிருக்கின்றன; அடியேனோ,? நாயேன்; நீரைநாவால்நக்கியுண்பதேநாயினியல்பு;

அதுஒருசிறுகுழியினீரையேனும்முற்றுமுண்பதரிது; அந்நாயனையேனாகிய நான், தேவரீருடையகுணப்பெருங்கடலையுண்டறிந்துரைப்பதெங்ஙனம் என்று விண்ணப்பித்தருளினார்.

சுந்தரமூர்த்திகள் பரமசிவனையாயிரந்தும்இவ்வாறுகூறியது, தாம்சீவர்களைஉய்வித்தற்கே, சீவர்கள்போலமானுடசரீரியாய் வந்தமையால், சீவர்கள் பரதந்திரர், சிவனேசுதந்திரன்; அவன் செய்வித்தாலன்றித்தாமேசெய்யும்வலியிலர்சீவரென்னும் உண்மையைப், "பாட்டுவித்தாலாரொருவர்பாடாதாரே" என்ற சுருதியின்படி, பரமசிவன் பாடுவிக்கத்தாம்பாடினதாகக்காட்டிவிளக்கக்கருதியேயன்றிவேறில்லையென்க. இவ்வுண்மையே இவ்வாறு பின் வருமிடங்கடோறுங் கொள்க.

மூர்த்திகள், எதைப்பற்றிக்கதைச்சொல்லிப்பாடுவேனென்று கேட்டுக்கொண்டபின், அவர்கருத்தின்படியே, "முன்பெனைப்பித்தனென்றேமொழிந்தனையாதலாலே, யென்பெயர்பித்தனென்றே பாடுவாயென்றார்." இதனாற்பரமசிவனுக்குத்தன்னைப்பித்தனென்றுகூறுதலில்மிகப்பிரியமுண்டென்பது வெளியாகின்றது. பல்லாயிரஞ்சொற்களில்வேறொன்றுங்கூறாமையாலும், நீமுன்சொன்னபடி என்னைப்பித்தனென்றுபாடுக என்றுமேலேபோதியதாயிருக்க, அவ்வாறுகூறாமல்பித்தனென்று, இருமுறைகூறியதாலும், அதனை என்பெயரென்றுங்காட்டி, அம்மட்டிலும்அமையாது, என்றேயென்று ஏனைச்சொற்களைப்பிரித்தொதுக்குகின்றபிரிநிலையேகாரமுங் காட்டிக்கூறியதாலும், முன்புமூர்த்திகள், நீபித்தனோஎன்றபொழுதும், "பித்தனுமாகபின்னுமபேயனுமாக" என்று இருமுறை தாமுங்கூறிக்கொண்டமையாலும், இன்னும்பல ஏதுக்களாலும், தன்னைப் பித்தனென்பதில் பரமசிவன் மிகப்பிரியமென்பது திண்ணமே.

மிகுபிரியம் நோக்கியே இவரின்முன்னையர்களாகிய ஸ்ரீமந் மாணிக்கவாசகராகியமூவர்களும்இவவருமைத்திருமொழியைத், தத்தஞ்சுருதிகளிலும்பற்பலஇடங்களில் வைத்திருக்கின்றார்கள். பித்தன்என்னுஞ்சொற்பொருள், பயித்தியகாரனென்பதாம். அளவறிந்துசெய்யத்தெரியாத பயித்தியகாரர்போலப், பரமசிவன் "குடங்கைநீரும்பச்சிலையுமிடுவார்க்கிமையாக்குஞ்சரமும், படங்கொள்பாயும்பூவணையுந்தருவாய்மதுரைப்பரமேட்டி" என்றுபெ

ரியார்கூறியபடி, ஒருஉள்ளங்கையளவினதாகியநீரும் ஒருபச்சிலையுந்தனக்குப்போகித்தவர்க்கு, அதற்குத்தக்கஅளவினதாகிய பலனைக்கொடுத்தலே அளவறிந்தருளியமுறைமையாயிருக்க, அவ்வாறன்றி இந்திரபதவிபிரமபதவிவிஷ்ணுபதவிமுதலியபெரும்பதவிகளைக்கொடுக்கின்றபயித்தியக்குணமுள்ளாரென்பதை, இப்பித்தனென்னுஞ்சொல்லேதெளிவிக்கின்றது. இதனால் அவரது அளவுகடந்தகொடைப்பெருக்கத்தைப்பிரகாசப்படுத்தலால், ஏனையசிவசங்கராதிநாமங்களைக்காட்டிலும், என்பெயர் பித்தனென்றேபாடுவாயென்றுதாமேகூறிக்கொண்ட இந்தச்சிவநாமத்திலமிகப்பிரியரென்பதுதெளியப்பெறும். இச்சிவாயத்தைச்சுருதியும் எடுத்துவிளக்குமென்க. இக்குணப்பெருஞ்சிறப்புநோக்கியே, சுந்தரமூர்த்திகள், இச்சொல்லைத், தமதுசரித்திரமுறைமையைப்பற்றிவெளியிட்டுநோக்குவார், அதற்கிசையமுதியவேதியரைத் தாமேகோபித்துப்பித்தனென்றிழித்துக்கூறியதாகக்கொள்ளும்படியும், உள்ளிட்டுநோக்குவார், மேற்கூறியஉண்மைப்பொருளை கொள்ளும்படியும் திருவுளங்கொண்டே, தாம் சிவர்கள்போல மானுடவடிவினராய் நிற்கின்றநிலைமைக்கிசையக்கூறினதன்றி வேறில்லையென்க. இவ்வுண்மையைஇனிஇவர், நீதிசபைகளில்வழக்குப்பேசிக்கைவந்தவரெனவும், பழையசிற்சபையிலாடுகின்றவரெனவும், வெளியிட்டும், உள்ளிட்டும்பொருள்கொள்வார்கொள்ளும்படி, "பழையமன்றாடிபோலும்" என்றுபின்கூறுதலானுந்தெளியலாம். சரித்திரமுழுதுமே இப்படியேமூர்த்திகளசெயலெல்லாம் உள்ளிட்டு நோக்கியே உண்மையுணர்க.

சுந்தரமூர்த்திகளது திருவாய்த்தொண்டைப்பரமசிவன் விரும்பியது, அத்திருவாயினின்றும்வெளிவருகின்றதிராவிடவேதமாகியதேவாரச்சுருதியை உலகெலாம்நோக்கிஅவ்வழிநின்றுய்தலாகியபரப்பிரயோசனத்தின் பொருட்டேயென்றுமேற்கூறியதை, "எல்லாவுலகுய்ய, பல்லாறுலகினினம்புகழ்பாடென்று, பரமெய்தானருள்செய்தான்" என்றுபரமசிவன், மூர்த்திகள்முதலில்திருப்பதிகம்பாடின உடனே அவரைநோக்கிக்கூறியதைவிளக்குகின்றபெரியபுராணத்திருவிருத்தத்தானுமினிதுகாண்க. இவ்வாறுசிவாஞ்ஞைசிரமேற்கொண்டருளியமூர்த்திகள், திருவெண்ணைநல்லூர்முதலாய சிவஸ்தலங்கடோறுஞ்சென்று தேவாரம்பாடிச்சிதம்பரந்தெரிசி

ணஞ்செய்துகொண்டிருக்கும்பொழுது, திருவாரூர்வீதிவிடங்கத்தியாகராசப்பெருமான், "தாளமெறிபுனன்மறிதிரைப்பொன்னி, மடுத்தநீள்வண்ணப்பண்ணையாரூரில் வருகநம்பாலென," ஆஞ்ஞாபித்தருளினார். இதில்திருவாரூருக்கு, அதிக்கிரமித்துக்கூறிய விசேஷணப்பொலிவினுட்பொருள்கள்பற்பலவாய் விரியும் நிற்க. அவ்விசேஷணங்களும், பிரவாகமாறாதகாவிரிநதியை விளக்கிப்பத்துச்சொற்களாலமைந்து நிற்றலை நோக்கில், ஏனையதேவமானுடராஜாக்களுக்குரியனவாய், இடையிலாவது, ஆயுள்முடிவிலாவது, அழிந்தொழிகின்றதசாங்கம்போலாகாது, தம்மைப்போலவே என்றுநித்தியங்களாய்விளங்குகின்றதசாங்கங்களையுடைய ராஜாதிராஜமகாராஜவீதிவிடங்கத்தியாகராஜப்பெருமான், ஜகமெல்லாந்திருவருட்செங்கோல்செல்லக்கொலுவீற்றிருந்தருளுகின்ற பெருஞ்சிறப்புவாய்ந்த சிவராஜதானியாகும் இத்திருவாரூரென்பதினிதுவிளங்கும்.

சிவாஞ்ஞைசிரமேற்கொண்டு,சுந்தரர்திருவாரூருக்குவரும்போது, பரமசிவன், முன், வருகவென்று ஆஞ்ஞாபித்தஅம்மட்டிலமையாது,ஆராதகாதலினால்,அத்திருவாரூரிலுள்ளார்யாவருக்கும், நம்ஆரூரனெனவன்நமதுஆராதகாதலினால்நாமேபோய்த்திருவாரூருக்குவரவேண்டுமென்றழைக்கநோக்கி, அவனும்ஆராதகாதலுடன்வருகின்றான், நீங்கள்யாவரும்நம்மைப்போலமிகமகிழ்ந்தெதிர்கொள்ளுங்களென்று ஆஞ்ஞாபித்தருளினார். "தேராருநெடுவீதித் திருவாரூர்வாழ்வாருக், காராதகாதலினம்மாரூரனையழைக்க, வாராநின்றானவனை மகிழ்ந்தெதிர்கொள்வீரென்று,நீராருஞ்சடைமுடிமேனிலவணிந்தாரருள்செய்தார். என்றதிருவிருத்தமினிதுவிளக்கும். இதில் ஆராதகாதல் என்பது இரண்டிடத்துங்கொள்க.நாமேவலியச் சென்றழைக்கக் கூடிய அத்துணைச்சிறப்புடையவனே அவனென்பதை, "நம் ஆரூரன்" என்ற திருமொழி நன்குவிளக்குதல்காண்க. இதனாலுமிவர் சிவவர்க்கத்தவரே என்பது தெளிவாயது.

சிவாஞ்ஞையின்படியே திருவாரூர்வாழ்வார்யாவரும், அந்நகரில்அளவில்லாதஅலங்காரஞ்செய்து, மூர்த்திகளைச்சிவனெனத்துணிந்தெதிர்கொண்டுவணங்கித் துதித்தழைக்கவந்தருளிச்சந்நிதிசென்று தேவாரம் பாடும்பொழுது; தியாகராசப்பெருமான்,

"தோழமைபாகவுனக்குநம்மைத்தந்தனம்" என்று அருளிச்செய்ய, "அன்று முதலடியார்களெல்லாந் தம்பிரான்றோழரென்றே பறைந்தார்" என்றுபெரியபுராணம்விளக்குகின்றது. இதனாலும் மூர்த்திகள், சீவவர்க்கத்தினரல்லர்சிவவர்க்கத்தவரே என்பது தெளிவாமென்க. என்னை? பிரமவிஷ்ணுவாதியாவருஞ்சீவர்களே. சீவரெல்லாந்தம்பிரானடிமைகளே. மூர்த்திகள்அச்சீவரிலொருவரானால்; அவ்வாறே தம்பிரானடிமையென்று சொல்லப்பெறுவர். அங்ஙனமாகாது சிவவர்க்கத்தவராயிருத்தல்நோக்கியே, தியாகராசப்பெருமான், "நம்மையுனக்குத்தோழமைபாகத்தந்தனம்." என்றருளியவாறு தம்பிரான்றோழரென்றுவழங்கப்பெறுதலாலென்க.

ஆனால், குபேரனைத்தோழனென்றுகூறுதலெங்ஙனமெனில்? அவன், இதற்கெனத்தவஞ்செய்துவேண்டிக்கொண்டதற்கிரங்கி, வேண்டுவார்வேண்டுவதேயீயுங் கிருபாவள்ளலாகிய பரமசிவன், அவனுக்குப் பெருஞ்செல்வமுங்கொடுத்து, அது சாமானியமாயினும் ஐஸ்வரியசம்பந்தமும் நோக்கி, உபசாரமாகத்தோழனெ . மூர்த்திகளைத்தாமேஆராதகாதலினால்வலிந்தழைத்து, ஊரார்க்குமகிழ்ந்தெதிர்கொள்ளும்படி ஆஞ்ஞைசெய்து, அவர்சந்நிதியில்வந்தவுடனே எல்லையில்லாத ஆவலுடன்தாமாகவே வலிய, நம்மை உனக்குத்தோழமையாகச் சுத்தக்கிரயஞ்செய்து தந்துவிட்டோமென்றதுபோல உண்மையாகக் கூறியதன்றென்க. இப்படியேபரமசிவன்மூர்த்திகளிடத்துச்செய்யும், ஒவ்வொருசெயலும், உற்றுநோக் மிடத்துப், பரமசிவனுக்கு, இவரது,வாய்த்திருத்தொண்டி தியந்தவிருப்பமுண்டென்பதும், அதுபற்றியே இவரைத்தாமேகாரணம் புணர்த்துப்பூமிக்கனுப்பினரென்பதும் தெற்றெனவிளக்கமாகி, "முன்னியவேட்கைகூர" என்றதற்குப், பரமசிவன், இவரதுவாய்த்தொண்டு பரப்பிரயோசனமாகக் கருதியஆசையதிகரித்தலால், என்றுமுற்கூறியபொருளை வலியுறுத்திவிளக்குமென்க.

முன்கயிலாசத்தில்உமாதேவியார்ஆஞ்ஞைசிரமேற்கொண்ட கமலினியார், இத்திருவாரூரில், உருத்திரகணிகையர் குலத்திலே தமமைப் புத்திரியாராகப்பெறுதற்குரிய அருந்தவம்புரிந்துவருகின்ற [illegible]என்னும்பெயருடையபெண்மணிக்குப்புத்திரியாகவந்தவதரித்தருளினார். இக்குலத்தைப்பதியிலார்குலமென்ப. இதன்பொ

ருள், இக்குலப்பெண்களை பிறப்பிறப்பில்லாதபரமபதியாகியபரமசி வனையேதமக்குநாயகராகக்கொண்டவர்களேயன்றி, ஏனைப்பெண் களுக்குரிய நாயகர்களாகிய பிறப்பிறப்புப் பட்டபதிகள் போன்றப தியில்லாரென்பதேயாம். இதனை, இக்குல . . . மாளாகூளிகையார் குல மென்னுமுருத்திரகணிகையர்குலமென்ற கூறப்பெறுதலானுந் தெளியலாம். இக்கமலினியார் நங்கை போணிசாரகவே வந்தவதரித் தருளினாரென்பதைச், சிவனே பெயர்பாக்கொண்டருளிக் குலமேநன் குவிளங்கும். இவ்வாறு அவதரித்தருளிய இவர்க்குச், சிவ நல்லியர் களாகியபெரியோர்கள், சிவனுக்குரிய அதிமங்கியப்பிரசித்தமாயதி ணை . . . பதிருவாதிரைநக்ஷத்திரதினத்திலே, பரவையாரென்று நாமகரணஞ்செய்தார்கள். இதனை, "பரவையாரென்றுநாமம், விதி புளிவிளக்கத்தாலேமேதகுசான்றோராற, மதியணிபுனிதனன் னண்பங்கலவணியாற்சாத்தி" என்ற திருவிருத்தத்தாற் காண்க. மூன்மூர்த்திகள்சிவனேயேநாமகரணஞ்செய்யப்பெற்றதுபோல வே, இவரும்சிவநல்லியர்களாலேநாமகரணஞ்செய்யப்பெற்றதும இவர்மகிமை . . . தாம். இவர், பாருடைவினையாப்படியில் வந்தபின்னும், . . . ந்தமெய்பெற்றிருந்தலானும் இவர்சிவசந்நி வர்க்கத்தவரென்ட . . . தெளியப்பெறும். இவர், பூமியில்வந்தபின் னும பூர்வபுணர்ச்சியுடன்கயிலையிற்போலவேபாசநாதவிகாரமு மின்றியிருந்தாரன்றி, எவ்விதவிகாரமுமுற்றாரல்லர். இதனை "உள் ளமெய்த்தன்மைமுன்னைப் பின்மையுந்தோன்றவுய்ப்பார்." என்றதி ருவிருத்தத்தானுந்தெளியலாம்.

இவரையும், மூர்த்திகளையும், கயிலாசத்தில் ஒருவரை ஒருவர் நினைக்கச்செய்து, அதுவேவெளிப்படகாரணமாகக்காட்டிப், பூமிக் கனுப்பியபரமசிவனே, இப்பொழுதும்அவ்வாறுநினைப்பித்து, அவ் விருவருக்கும் உலகறியவிவாகஞ்செய்துவைக்கும்படி திருத்தொ ண்டரனைவருக்கும் ஆஞ்ஞாபித்து அவ்வாறு செய்வித்தருளினார். இதனை, "என்றின்னனவேபலவும்புகலுமிருளாரளகச்சுருளோதி யையும், வன்றொண்டரையும் படிமேல்வரமுன்பருள்வானருளும் வகையார்நினைவார், சென்றும்பர்களும்பணியுஞ்செல்வத் திருவா ரூர்வாழ்பெருமானடிகளன்றங்கவர்மன்றலைநீர்செயுமென்றடியார றியும்படியாலருளி." என்றதிருவிருத்தத்தாற்காண்க. இதில் "படி மேல்வரமுன்பருள்வானருளும் வகையார்நினைவார்," என்றதினுட்

பொருள்களைத் திருவுளமொன்றினாலே யுண்டாக்குதலையில்
ர்க்கு முழுமுதற்கடவுளாகிய பரமசிவனை, வேடனாகிய கிராதனாங்காட்டிப்பூ
மிக்க வுயிரிறைவனென்பார், அப்பாசுபதப் பிரயோசனங்களின்பொருட்டு
டேயன்றோ, இவர் சிவவர்க்கத்தவரென்பதாம், வினைக்கிடைகப
ப்படுகின்றவர் சிவவர்க்கத்தினரல்லரென்பது, இவைமுதலிய வுட்கி
டைப்பொருள் நல்லார்கெஜ்ஜிறனவிராது. இவ்வாறே இப்பேரி
பராணமுழுதிலுமடங்கியுள்ள விடங்களெல்லாம் உய்த்துணர்க
தக்கதாயிருக்கின்றன. அவைகளையெல்லாந் தொகுத்திராவிடபாரக்கி
னை மேற்கொண்டு சொல்லப்புகின் விரியுமென்றஞ்சி, அவ்வுண்மைகள்
ஸ்ருதிசென்பதுமன்றி நாரதர், "அந்நுமவனைப் பாரென்னவா."
என்றுதிரத்திருந்தகத்திலாசிரியர் தெரிவிக்கின்றனர்.

இவ்விருவரும், சிவவர்க்கத்தவர் சிவராத்திரிவிரதத்தால் நலமடை
தலால், இராசனீ, கம்பதிகள் போல இவர்கள் திருநாமங்களையுடைய
கூடலாதிபவிஷ்ணுவாகரோர் நடையால் சிருட்டி முதலியவற்றை நாம
களைச்சொல்லக்கேட்டு நடந்தமையாலும், உலகமெல்லாங் காத்தருளும் நாதர்
டையதாம்படி நடத்தியபின் அருளைப் பெற்றமையால் இவ்விருவர்
கருவியாகிய சாவித்திரியிடத்திலே பிரதிமைகளாக்கிக் கூறத்
தெவிட்டாக் கனிமுதலாங் கனியுண்ட அருள், அவ்விருவர்
பின்னிருந்த கிருபைப் பரசிவனிடத்திலேயே கூறிய வரங்களிரத்து
மையாலும், அந்த அவன் முற்படத்தமையாலும் இவர்கள், விகா
ரமுள்ளவராயிருந்தும் அவர் நிராவிகாரசிவன் அநுக்கிரகத்தினை யடைந்த
லேயன்றி, ஏவலாளராகிய நந்திதேவரின் தன்மைகளை யுடையவராகமாட்டாரென்ப
தலாலும், பரசிவன் திருவருள் வலியைப் படைத்தலால் முற்பிறப்பிலிருந்தாலென்றமையானும் இல்லை.
அவனிடத்தில் பக்ஷபாதமுளதாகி, நிர்ப்பக்ஷபாதியென்னும் சுருதிக
ளுமெய்யாகாதொழியுமாதலாலும், அவ்விருவர்க்கும் பரமதாகத் தலைமையும் பக்ஷபாதமில்லாமையும் வருமாதலாலும். பரமசிவன்
எப்பொழுதும் ஒருவரிடத்து நிர்ப்பக்ஷபாதியேயென்று கூறுமுபிரபலசு
ருதிப்பிரமாணம் பொய்ப்பொழுதுமாகாதலாலும், இவ்விருவரும்
நிர்விகாரிகளேயென்று மேற்கூறிய அண்மையேயென்பது இனிது விளங்கும்.

மூர்த்திகள், மானுடவடிவினராய்ப் பூமியில் வந்தபின்னும்,
இவர் துபத்தினியாராகியவரை தச்சுமையாட்களாய்ச்சிவக
ணங்களைவந்து குண்டையூர் ,செல்மலைமுழுதுஞ் சுமந்து
கொண்டுவந்து, திருவாரூரிற் சேர்ப்பார்களானால், இவ்விருவரைப்

யுஞ் சிவனுஞ்சிவசத்தியுமே என்றுதுவேறுகூறுதற் கெவ்வாற்றானுமிசையுமோ?

கோட்புலிநாயனார், உள்ளபடிமனப்பூர்வமாக, அதிசுந்தரதிவ்யலக்ஷணதருணிகளாகிய தமதுபுத்திரிகளிருவரையும், மணஞ்செய்துகொண்டருளுகவென்றுதாமேவலியப்பிரார்த்திக்கவும், மூர்த்திகள், அவ்வாறுஏன்றுகொள்ளாது அவர்களைத்தமக்கும் புத்திரிகளாகவேகொண்டருளுவாரானால், நிர்விகாரியாகிய இவர்பூர்வ சிவநியமனங்கடவாமைப்பொருட்டுப்பரவையாரைமணஞ்செய்து கிருகஸ்தர்போலநடித்தல்நோக்கி. இவரைஎவ்விதத்திலாவதுஎப்போதாவது பெண்விருப்புற்றுச் சிற்றின்பநுகர்ந்தவரென்று கூறுதற்கியையுமோவென்பதுஉத்தமருணர்வாரென்க.

தன்சாதிலோகங்களாகிய இரும்புபித்தளையாதிகளையேபொன்னாக்குவனதரிசனவேதி பரிசனவேதிகள். இதுசிவநியமனமே. இங்ஙனமாகவும், அப்பரமசிவனை, மூர்த்திகள்பொருட்டுந், தரிசனபரிசனம்யாதுமின்றி, லோகமல்லாதசுட்டமண்ணாகியசெங்கலைமாற்றுயர்ந்தபொன்னாக்கிக்கொடுப்பரானால், மூர்த்திகளிடத்துள்ள அதிப்பிரியமும்; அதற்குரியகாரணமின்னதென்பதும், உண்மைகண்டுணருந்திண்மையறிஞரன்றியாவரறியவல்லுநர்.

மூர்த்திகள், சீகாழிப்பதியானது ஸ்ரீஞானசம்பந்தர்திருவவதாரஸ்தலமாதலால், இதனைமிதித்துக்கொண்டுட்செல்லேனென்று புறத்தேபோதல்கண்டு, தோணியப்பர்மிகவிரைந்துஅவரெதிர்சென்றுபாடுவித்ததும், திருவதிகைவீரட்டானமானது அப்பமூர்த்திகள் திருக்கைத்திருத்தொண்டுஞ்செய்துவீற்றிருந்தருளியதலமாதலால், இதனுட்செல்லேனென்றுபுறத்தோர்மடத்திற்சென்றுதிருப்பள்ளிகொண்டருள, உடனேவீரட்டானேசுரர் அங்குச்சென்று இருவர்க்கரியஅருமைத்திருவடிகள்பன் முறை சூட்டிப்பாடுவித்ததும், திருக்கச்சூரிலே ஈஸ்வரநாமப்பிரசித்தமகைஸ்வரியமகாப்பிரபுவாகியபரமசிவன்பிக்ஷைஎடுத்துவந்துஅன்னமளித்ததும், திருக்குருகாவூரிலே, சமஸ்தசராசரசீவகோடிகளனைத்தையுந்தமக்கடிமையாட்களாய்வைத்தாளுகின்ற பசுபதியாகியபரமசிவன், சோற்றுச்சுமையாளாய்ப்பொதிசோறுசுமந்துவந்து மார்க்கத்திலே காத்திருந்துகொடுத்தருளியதும், மூர்த்திகள் திருமுதுகுன்றம்நோக்கிச்

செல்லும்போது, பரமசிவன் வேதியராய் வந்து இதுகூடலையாற்றூர்க்குச் செல்லுவழி என்றுகூறி அங்குச் செல்லுவித்துப்பாடுவித்ததும், திருமுதுகுன்றத்திற்பெற்ற பொன்னை, மணிமுத்தாற்றிலிடுவித்ததும், திருவாரூர்க்கமலாலயத் திருக்குளத்திலெடுப்பித்ததும், அதனை அக்குளத்திலுடனே காட்டாதுமறைப்பித்து அதற்கொருபதிகம்பாடியபின் காட்டியதும், அதன்பின்னும் அப்பொன்னை மாற்றுக்குறையக் காட்டி, அதற்கொருபதிகம்பாடியருளியபின் அதனை மாற்றுநேரொக்கக்காட்டியது, இவைபோன்றனபற்பலவும் உற்றுநோக்குவார்க்கு, மூர்த்திநாயனார் திருத்தொண்டில், பரமசிவனுக்குத் தளர்வின்றி மேன்மேலும் பெருகிவருகின்ற அதிவிருப்பமும், அதனாலே பரமப்பிரயோசனங் கருதி இவரை, வலிந்து காரணம்புணர்த்திப் பூசிக்கலுற்றமையென்று மேற்கூறியதுண்மையென்பதும் தெற்றெனவிளங்குமென்க.

மூர்த்திகள், பரவைநாச்சியாருடனேகவந்து, கமலாலயத் திருக்குளத்தில் வடகீழ்த்திசையிலிறங்கிப் பொன்னைக்காணாதபோது, அதற்காகத் திருப்பதிகம்பாடிய அருமையை விளக்குகின்ற பெரியபுராணத்திருவிருத்தம், "எத்தாதேயிருந்தறியேனெனவெடுத்துத் திருப்பாட்டெடுத்தலுங், காதலாலம்பலத்து நடக்கண்ணுதலைக், கூத்தாதந்தருளாயிக் கோமளத்தின் முன்னென்று, நீத்தாருந் தொடர்வரியநெறிநின்றார் பரவுதலும்" என்பதாம். இதில், மூர்த்திகளை "நீத்தாருந்தொடர்வரியநெறிநின்றார்." என்று கூறுகின்ற உண்மைகாண்க.

சாமானியருஞ்சிறிதறிந்தவளவே, பொன்பெண்முதலியனவெல்லாம் அநித்தியங்களெனத் துணிந்து அப்பற்றொழிதலே வேண்டுவாராகவும், அதுவே சகலசாஸ்திரசம்மதமாகவும், அதுவே முத்திக்கேதுவாகவும், அத்தகைய சாமானியர்தரத்திலுமிகுமிகத்தாழ்வானநிலையென்னும்படி, மூர்த்திகள் பொன்னைவேண்டிநிற்றலையும், அவ்வாறுவேண்டும்பொழுதும், நான் இவளிடத்தில் திருமுதுகுன்றத்தில் மணிமுத்தாற்றிலிட்டபொன்னை, இத்திருவாரூர்க்குளத்திலெடுத்துத்தருகின்றேனென்றுகூறிய அப்பொழுதே பரிகசித்தாள்; உறுதிகூறி அழைத்துவந்தேன், இவளுமிதுபார்த்துக்கொண்டுநிற்கின்றாள்; பொன்காணாதொழிதலுமன்றி இவள்முன்னே எனக்கு அவமானமுமுளதாகின்றது, ஆதலால் அம்பலக்கூத்தனே,

இவ்விடத்தில் அப்பொன்னைக்காட்டித் தந்தருளாயென்பனவாதி பொருள்விரிதற்கிடமாக, "இக்கோமளத்தின்முன்" என்றுவேண்டிக்கொள்ளுதலையும், அதுவும்வேறுசொற்களாற்கூறாது, பத்திநிவாஞ்சைமுதிர்ந்தவர்போலக்கோமளமென்றுமிகவுயர்த்தித்தம்பத்திநிலையைச்சிலாகித்துக்கூறுதலையும், தமது செய்யுள்மூலமாகவே விளக்குகின்றஇந்நூலாசிரியரை, அசுந்தரமூர்த்திகளைப், பற்றுமுற்றுமொழிந்தமுத்தர்களாலுந்நழுவாதுதொடர்ந்துசேறற்கரியதத்துவாதீதஉத்தமோத்தமநிஷ்களங்க சுத்தஸ்தானத்தில் நிர்ச்சலனராய்நிலைத்துநிற்கின்றவரென்றெடுத்துக்கூறுவாரானல், மூர்த்திகள்பொன்னைவேண்டினரென்பதும், பெண்ணைக்கோமளமென்றுவாஞ்சித்துக்கூறினரென்பதும், இவைபோலஇன்னுமுன்பினுள்ளவைகளும்; பரமசிவப்பிரீதிகரமாக லோகோபகாரத்தின்பொருட்டுவந்தருளியகோலத்துக்கிசைய நடித்தனவேயன்றி உண்மையென்றுகூறுதற்கு எட்டுணையும் பொருந்துமோவென்பதுத்தமர்களுணர்வாராக.

இதனைப், பின்னையோர் (தியம்பகோசர்) பலரும், "துறந்தமுனிவர்தொழும்பரவைதுணைவா" என்பதாதியாகஉண்மைகூறுதலாலுந்தெளியலாம். பரவைநாச்சியார், பற்றுமுற்றுமற்றுத்துறந்த முனிவர் களாலே தொழத்தக்கவரானல்? இவரது துணைவராகியமூர்த்திகள் மகிமை கூறவும்வேண்டுமோ? பரவையார் சிவசத்திவர்க்கத்தவராதலினன்றோ? முனிவர்களாலுந்தொழப்பெறுகின்றார்., இத்தகையசத்தியாகியபரவையார், சிவமாகியமூர்த்திகள் சிற்றின்பநுகர்ச்சிக்கு விழுவாரோவென்னும்மூடவசனம்எக்கதியிற்புகுத்துமென்பதினிக்கூறவும்வேண்டுமோ? மூர்த்திகள், பொன்னைக்காட்டித்தரும்படிவேண்டும்போதுவேறுநாமங்கூறாது. "கூத்தாதந்தருளாய்" என்றுகூறியகுறிப்பும், பரமசிவனே, நீயும்இவ்விதமாகஎன்னை ஆட்டுவித்து நடிக்கின்றாய், நானும்உன் ஆஞ்ஞைமேற்கொண்டு நடிக்கின்றேன் என்னுமுண்மையைவிளக்கும்.

முன்கயிலையில்உமாதேவியார் ஆஞ்ஞைசிரமேற்கொண்ட அநிந்திதையார், தொண்டைநாட்டிலே, திருவொற்றியூருக்குச்சமீபத்திலுள்ளஞாயிறுஎன்னும்நகரத்திலே, வேளாளர்குலத்திலே, அருந்தவம்புரிந்தஞாயிறுகிழவரிடத்தேபுத்திரியாராய் வந்தருளிச்சங்கிலியாரென்னும் நாமம்பூண்டுவளர்ந்துவருவாராயினர்.

இவரிவ்வாறுமானுடவடிவினராய்வரும்போதும் உமாதேவியார் திருவடிகளை அணுத்துணையுமறவாத அன்புடன்வந்தஅம்முறையினால், அக்கயிலையிலிருந்தபோது தாமிடத்துள்ள முதன்மையானஉணர்வுதம்மைவிட்டுநீங்காதுஉடனாகவேவந்ததனலால், இங்குவந்தபின்னும், தமக்கொருவர்போதிக்கவேண்டாது, தாமேயாவும் அறிந்துகொள்ளுமுற்றுணர்ச்சியராயிருந்தாரென்க. இதனை, மலையான்மடந்தைமலர்ப்பாதமறவாவன்பால்வந்தநெறி, தலையாமுணர்வுவந்தணையத்தாமேயறிந்தசங்கிலியார்." என்னுந்திருவிருத்தத்தாற்காண்க.

இவர்விளையாட்டிற்குரியசைசவப்பருவத்திலும், மானுடத்தன்மைசிறிதுமின்றிப்பூர்வநிகழ்ச்சித்தெய்வத்தன்மையராகவேஇருந்தார். இதனை, "சீர்கொண்மரபில்வருஞ்செயலேயன்றித்தெய்வநிகழ்தன்மையாரிலெவருமதிசயிக்கும்பண்பில்வளரும்பைந்தொடியார்" என்னுந்திருவிருத்தத்தாலும் "வடிவுங்குணமுநம்முடையமகட்குமண்ணுளோர்க்கிசையும், படிவமன்றிமேம்பட்டபரிசாம்பான்மையறிகிலோம்" என்றிவர்தந்தையார்தம்பத்தினியாரிடத்துக்கூறுதலையுணர்த்துந்திருவிருத்தத்தாலுங்காண்க.

இவரது, தந்தைதாயர், இவர்க்குமணஞ்செய்யக்கருதிப்பேசுவதுநோக்கி, நீங்கள்கருதுவதுநமக்குப்பொருந்துவதன்று, சிவபிரான்திருவருளையேபெற்றவராகியஒருவர்க்கேநான் உரிமையாவதென்று, சுந்தரமூர்த்திகளையேகுறிப்பாலுணருமபடிகூறியருளினர். இதனாலுமிவர்முற்றறிவினரென்பதினிதுவிளங்கும். இதனை, "ஏயுமாற்றமன்றிதுவெம்பெருமானீசன்றிருவருளே, மேயவொருவர்க்குரியதியான்" என்னுந்திருவிருத்தத்தாற்காண்க. இதிலுள்ளதேற்றேகாரமும், சுந்தரமூர்த்திகள்எப்போதாவதுபரமசிவனால், குற்றங்கண்டுநிக்கிரகிக்கப்பெற்றவரல்லர், எப்போதும் அநுக்கிரகமாகியதிருவருளையேபெற்றவர்பெறுகின்றவரேஎன்பதைநன்குவிளக்கும்.

இச்சங்கிலியாரிடத்தென்றுந்தெய்வத்தன்மையே யுள்ளதென்பதை, இவரைமணஞ்செய்யக்கருதிமணம்பேசிவரச்சிலமுதியரைவிடுத்தானொருவன், அத்தீமையையாங்குச்செய்தமையால்உடனே இறந்தமையாலும் அவனிறந்ததுபோலவே அவனால்விடுக்கப்பட்

டாருமிறந்து அவனுடன்சென்றமையானுந்தெளியலாம். இதனை "நீதங்கிழைத்தேயிறந்தான்போற்செல்லவிடுத்தாருடன்சென்றார்" என்னுந்திருவிருத்தத்தாற்காண்க. இதனால், இவரதுகுலமும்வடிவும்நோக்கிமணஞ்செய்யக்கருதியஅபுத்திபூர்வமானகுற்றத்திற்கே உயிரிழந்தொழியும்பெருந்தண்டனைநிகழ்ந்ததுதெரிந்தும்இன்னுமிவர்சரித்திரமகிமைமுற்றுந்தெரிந்தும், இவரைச்சுந்தரமூர்த்திகளதுசிற்றின்பநுகர்ச்சிக்குவந்தவரென்றுபோக்கூழ்வசப்பட்டுக்கூறும்புத்திபூர்வப்பெருங்குற்றத்திற்குத்தகுந்தண்டனைகளிவ்வளவினவென்றெடுத்துரைக்கவெம்மனோர்க்கியைவதன்று, அமைக. இன்னுமிவரதுதெய்வத்தன்மைவிளக்குவனபற்பல. ஆங்காங்குற்றுநோக்கியுண்மைதெளிக.

இச்சங்கிலியாரைச்சுந்தரமூர்த்திகளுக்குமணஞ்செய்விக்கும்பொருட்டுப்பரமசிவனே இரண்டுமுறைசென்றுடன்பாடுசெய்வித்துத்திருத்தொண்டர்க்கறிவித்தனர், அவர்களும் அவ்வாறுசெய்தார்கள். இக்கலியாணமும்பரவையார்கலியாணமும்பெற்றோர்சுற்றத்தார் சம்பந்தம்சிறிதுமின்றித், திருத்தொண்டர்களேபாத்தியஸ்தர்களாயிருந்துசெய்யப்பெற்றமையானுமிவர்கள் சிவசாயுகத்தவர்களேஎன்பதினிதுதெளியலாம்.

மூர்த்திகளும் பரவையார்சங்கிலியாரும், சிவமுஞ்சத்திகளுமேயாதலால்ஏனையர்க்குப்போலஇவர்களிடத்துச்சிற்றின்பநுகர்ச்சிஎவ்விதத்தினும் எப்பொழுதுமில்லை, அனவரதம்நித்தியானந்தமாகியபேரின்பமேயுள்ளதென்பதை, "இந்நிலையிற்பேரின்பமினிதமர்வார்" என்றுவிளக்கியஅருமைத்திருவிருத்தத்தாற்றெளிக. இது, இவர்சங்கிலியாரைமணஞ்செய்தபின் அவரோடுகூடிஇன்புற்றுவாழ்கின்றாரென்றுஞ்சரித்திரங்கூறுமிடத்துள்ளதே, இவ்வாறு திருவொற்றியூரிலே. பரசிவமுஞ்சங்கிலியாராகியசிவசக்தியுமபேரின்பமாகியநித்தியானந்தானுபவப்பெருவாழ்வுறறிருக்கும்பொழுது மூர்த்திகள், திருவாரூரில்வீதிவிடங்கத்தியாகராசதெரிசனத்தில்மிகுவிருப்புற்று ஆங்குச்செல்லக்கருதி வெளிவந்தவுடனேஇருகண்களுமொளிமறைந்துவழிதெரியாதாக, அதுசங்கிலியாரைப்பிரியேனென்று சிவசந்நிதியிற்கூறியசத்தியத்துக்குவிரோதமாக, அவரைப்பிரிந்துசெல்லநினைத்தமையால்வந்ததென்றுடனே

தெரிந்தார் ரென, "வைபி

லிவ்விஷயத்தைப் பெகாலை நீவை ருடு வள ருர திருவிருக்கத்தா ராகாண்க. இசைவி நுவ கவிதைஜயம் யாது தெரிந்துகொண்டாரா கலால், சங்கிலியாரைப் பிரிந்தபோது மறைந்தக்கண்கள் வெளியா மென்ப தறிந்திருந்தவராயிருந்தும், வீதிவிடங்கத் தியாகராஜதரிச னமிருப்பதுதியால் அவர் மேல் ஏகலைபொருதலையாகத் துணிந் து செல்வாராயினார். ஆயினும், கண்மறைந்தது ஞாயமே; அதனை நாமவகித்த நந்திகரால் பிறவே புகான் நீக்கிக்கொள்ளவேண்டும்; நீக்கி க்கொடுப்பின்னமேயலது தெரிந்துகொண்டே சென்றனென் பது தெளிவாமென்க.

அங்ஙனமாகில் இடைவிடைபெறவேண்டியபடியேதன்னை யோசெய்தீர் சிவாகமங்களிற் கூறுவதுபோலப் பரமசிவனுக்குவின் ணப்பித்து அப்படிமுறையே வேண்டியே திருவருளால் மாற்றிக்கொள்ள வேண்டியபடியாகயிராதாலால், அவர்கள், தாம்பன் முறைபாடி வேண்டிப் பிரசெபல்கோக்கி அவ்வாறு செய்துடர் நீங்கியுய்கவென ஞ் திருவுளத்த தன்றி வேறில்லையென்க. இவர், கண்மறை ந்தது ஞாயமேயென்றுகொண்டது, பரமசிவன் தன்னால் அத்தியந்த பிரீதிவைக்கப்பெற்றவர்களிடத்தும், சிறிது குற்றங்கண்டாலுமப க்ஷபாதமின்றி அதற்குரிய தண்டனை செய்பவனே என்றுலகறிந்து சிறிதுங்குற்றஞ்செய்யாதுய்யக்கருதிப் பதிநுவருட்செயலேயென்க. மூர்த்திகள், திருவொற்றியூரினின்றும் வருமார்க்கத்திலுள்ள தலங் களைத் தரிசித்துக்கொண்டு வருமபோது திருவெண்பாக்கத்தில் கோ லொன்றும், காஞ்சீபுரத்தில் இடக்கண்ணும், குத்தாலமென்றுவழங் குகின்ற திருத்துருத்தியில் நோய்நீக்கமும்பெற்றுத் திருவாரூரில் வந் து மற்றைக்கண்ணும்பெற்றுப், பரவையார் ஊடல் தெரிந்து, தியாக ராசப்பெருமானை தூதராக அனுப்பி ஊடல்நீக்குவித்துத் திருமா ளிகைசென்றின்புற்றமர்ந்தனர்.

இதனாலும், மூர்த்திகளும்பரவையாரும் நிஷ்காமிகளாகியசிவ சக்திகளே என்பதினிதுவிளங்கும். எங்ஙனமெனில்? இவ்விருவரு ம், ஒருவரை ஒருவர் சீவர்களைப்போலச்சிற்றின்ப ஏதுவாகக்காமித் துப்புணர்ந்துமக்களைப்பெற்று மேலுமேலுஞ்சமுசாரபந்தப்படுமி யல்பினராயினால்! காமாதிகுற்றமுற்றுநீங்கி இருவினை ஒப்புமலபரிபா

கமுற்றசத்திநிபாதர்க்கே முத்திகொடுக்கப்பெறுமென்றும் காமாதி குற்றமுற்றுந்நீங்கினென்னெறிநிற்கவேண்டுவது அத்தியாவசியமென்றும், மீறிநடப்பவர் நரகிற்புகுத்தித் தண்டிக்கப்பெறுவார்களென்றும், வேதசிவாகமசுருதிமூலமாகயாவர்க்கும் விதித்தருளியபரமசிவன், அவ்விதிக்குவிரோதமாகத், காமமுறுதாளுமாகச்சென்று பரவையாரை இணக்கிமூர்த்திகள் அவரோடுகூடி இன்புற்றிருக்கச் செய்வாரா? என்பதாகித்துணருங்கால் இவ்விருவர் நம்பிரிவின்றிச் சேர்ந்திருத்தல் நம்மனோர்போலச்சிற்றின்பத்திற்குஏதுவாகா; பேரின்பவிளைவேயாய், அதுலோகோபகாரத்திற்குஏதுவாமென்பது கருதியே, பரமசிவன் தூதாளாகச் சென்றதன்றி வேறில்லை என்னுமுண்மைதெளிவாதலாலென்க.

பரமசிவன், முன்உமாதேவியாரைப்பிரிந்து கயிலையில்யோகியாயிருந்தபொழுது, சமஸ்தசீவர்களும், யாதொருசெயலுமின்றி நிஷ்காமிகளாய் உலகவிருத்திக்கேதுவான சிற்றின்பநுகர்ச்சியின்றி இருந்தசெயல்பிரசித்தமே. மூர்த்திகளும்பரவையாரும் சிவசக்திவர்க்கத்தவராதலால், இப்பொழுது இவ்விருவர்பிரிவுங்காலநீளுமாகில், முன்னைத்தப்பிரிவிற்போலவே, சமஸ்தசீவர்களுஞ்செயலற்று நிஷ்காமிகளாவார்கள்; அங்ஙனமாதல்அச்சீவர்கள் கன்மசேஷம்புசித்தொழித்துநன்மையடைதற்கு விரோதமாகுமாதலால், அவ்வாறாகாது, இவ்விருவரும்பிரிவின்றிச்சேர்ந்திருத்தலைச்செய்யின் அதுசீவர்கள்கன்மசேஷம்புசித்தொழித்து நன்மையடைந்துய்தற்கேதுவாகுமென்றெண்ணியேபரமசிவன்தாமே தூதாளாகச்சென்றதன்றிவேறில்லைஎன்க. இதனை, “ஞாலமுய்யவெழுந்தருளுநாம்பிதூதர்பரவையார், கோலமணிமாளிகைவாயில்குறுகுவார்.” என்னுந்திருவிருத்தத்தானும்நன்குணரலாம். இது, நம்பியாகியசுந்தரமூர்த்திகளுடையதூதராகியதியாகராஜப்பெருமான். பரவையார்திருமாளிகைக்கு எழுந்தருளியது, ஞாலத்திலுள்ளசீவர்கள்உய்தற்காகவேஎன்பது தெளியவிளக்கி மேற்கூறியவாறேவலியுறுத்தல்காண்க.

நாயகநாயகிகளிடத்துநிகழும் பிணக்கைமாற்றி இணக்கிச்சமாதானஞ்செய்யவேண்டுமேல், அத்தம்பதிகளின்தகுதிக்குரியதரத்தினராயுள்ளாரொருவர்சென்றுசமாதானஞ்செய்தாற்றான்அக்

காரியம் முடிவுபெறும். இது உலகவழக்கப்பிரசித்தமே. மூர்த்திகள் பரவையார்க்குத் திக்குறிய பெருந்தூதனர் பரமசிவனையன்றிப் பிறரில்லையாதலால், அப்பரமசிவனையவர்தம் வேண்டிக்கொண்டார். அதுகாரணத்தாற் சிறிதுங்குறையில்லையாதலால், அப்பரமசிவனைத் தூதாளாகச் சென்றதென்றுலகவழக்கில்லை; தூக்கினுமிழுக்காதென்க.

ஒருவரிருவர் செல்வது தூதர்களியல்பு. அது, பெண்கள்பாற் புருடர்களிற்றின்பநுகர்தலைச்செய்தற்கு ரகசியமாகச்செல்லுந் தூதர்கள்செயலாம். தியாகராசப்பெருமான், மேற்கூறியபடி ஞாலமெல்லாமுய்தற்காக வேதாகமரென்றிருநூவியாரப் காட்டிச்சென்றாராதலால், காப்பரிந்து செல்லாமல், அதிபிரமேந்திராதிசமஸ்த தேவர்களும், அளவில்லாத முனிவர் யோகர் சித்தர் முதலானோரும், அளவில்லாத பூதகணங்களும், கணநாதர்களும், திருவாலகத்திருத்தொண்டர் பற்பலரும், திருநந்திதேவரும் நாற்புறஞ் சூழ்ந்து சேவித்துவர, வேதங்களெல்லாந் தொடர்ந்துவர, வாத்தியங்களெல்லாங் கோஷித்துவர, ரிஷபாரூடராய்க், கற்பகமந்தாராதிபுஷ்பமழைபொழிந்துவர, ஒரேதிருவீதியிற் சிவலோகமுழுதுங்காணும்படி எழுந்தருளிப் பரவையார் திருமாளிகைக்குச் சென்றருளினாராகையால்; இதனைச், சிற்றின்பநுகரச் செய்தற்குப் பெண்டிர்செல்லும்ரகசியத் தூதுபோல்வதென்றுமூடரேனுமிசைக்க முடியுமா? பரமசிவன் மேற்கூறியவாறு சென்றதென்பதை 'பாரிடத்தலைவர் முன்னும்பல்கணநாதர் தேவர், சேர்வுறு முனிவர்சித்தரியக்கர்கணிறைதலாலே, பேரருளாளர் செய்தப்பெற்றமாளிகைதான்றென்பாற், சீர்வளர்கயிலைவெள்ளித் திருமலைபோன்றதன்றே." என்பதுமுதலிய திருவிருத்தங்களாற் காண்க.

இத்தனைவைபவங்களுடன் இடபாரூடராய்ப் பரமசிவன்சென்றருளியதை உற்றுநோக்கும் உத்தமர்கள், பரமசிவன் தூதாளனச்சென்றது, மேற்கூறியபடி ஞாலமெலாமுய்விக்கும் அநுக்கிரகத்தின்பொருட்டேயாகுமென்னு முண்மைதெளிவார்கள். ஏனையர், பெண்களையிணக்க ரகசியமாகச்செல்லுந்தூதுபோல்வதென்று, ஒருவாறுபோகூழ்வலத்தால் அறிவிழந்துகூறின், அவர்கள் எத்துணைச்சிறந்தாராயினுஞ் சகித்தற்கரியபெருந்தண்டனைப்பட்டுத்

றன்புறுவார்களென்றுமுன்னைவிளக்குதற்காகவே, அதிதீவிரபரிபாகமுதிர்ந்தபேரறிஞராகிய ஏயர்கோன்கலிக்காமநாயனாரை அவ்வாறுநினைப்பித்து, அந்நினைப்பின்வசத்தராய்நிற்கும்பொழுதும் அவரதுதிருவாக்கிற்றோன்றுந்திருமொழிகள்மூலமாக, அவர் தம்மிடத்துவைத்தஇடையறாப் பேரன்பின்பெருக்கமேநிலைதவறாது விளங்குதல்கண்டும், அந்நினைப்பினால்வந்தசிவாபசாரத்திற்குரிய தண்டனையாகச், சகிக்கமுடியாதசூலைநோயிலகப்படுத்தி, அச்சிவாபசாரமும் சுந்தரசிவனுக்குச்செய்ததாதலால், இச்சூலைநோய் நமதுசுந்தரன்வந்துதீர்த்தாலன்றித்தீராதென்றுகூறி, அதனாலே நம்மாலுமுடியாதென்றாற்குறிப்புங்காட்டி, அவ்வாறுமூர்த்திகளை அனுப்பியே அந்நோய்நீக்கமுமந்தப்படிநேரச்செய்விப்பாரானால், இனிஅவ்வாறுநினைக்குமவனையாருநரகக்கதியைக்கூறவும்வேண்டுமோ? கூறப்புகினும்மெல்லையடையாதென்க.

உலகில்நாயகிகளும் நாயகர்களும் ஊடல்கூடல் செய்தல் முறைஎன்பதும், அவ்வாறு ஊடிக்கூடுதலே இன்பமென்பதும் விளக்குதற்கே, பரமசிவனைப்பரவையாரையூடச்செய்து பின்கூடச்செய்தருளினார். அது அவரேசெய்வித்தாரென்பதனை, அவர் தூதுசென்றுவந்து உடன்பாடுதெரிவித்தபின்பு, மூர்த்திகள் அப்பரமசிவனை நோக்கி, 'பந்தமும்வீடுநீரருள்செய்யும்படி செய்தீ, ரெந்தைபிரானே' என்றுகூறியதிருவிருத்தத்தாற்காண்க. இது, எந்தைபிரானே சீவர்களுக்குப்பந்தமும், அதன்நீக்கமுந்தேவரீரே அருள்செய்யுந்தன்மையை, உம்மில் வேறாகாதவென்னிடத்தில், இப்பொழுது பரவைமூலமாகப்பந்தமுளதாக்காட்டி, அதன்நீக்கமுஞ்செய்துவிளக்கியருளினீர், என்னும் பொருளைத்தந்துமேற்கூறியதைத்தெளியவிளக்குமென்க.

இவ்விருவருங்கூடியிருந்தின்புறுவதும் அனவரதமும்பரமசிவனதுதிருவருட்பெருக்கின்றிறத்தையேபேணித், தங்கள்நிர்மலாந்தக்கரணத்திலிடையறாதுமருவுகின்றபேரின்பவெள்ளத்தழுந்திச்சுத்தாத்துவிதப்புணர்ச்சியேவாய்க்கப்பெற்றிருவருமொருவர்கலந்துநிற்கின்றநிலைமையாலொருவரேயாய்ப்பரசிவானந்தாநுபவிகளாய்வாழ்தலேயன்றிவேறில்லையென்க. இதனை, இருவருந்தம்பிரானார்தாமிடையாடிச்செய்த, திருவருட்கருணைவெள்ளத்திறத்தி

கோப்பெற்றிச்சிக்கைமருவுபேரின்பவெள்ளத்தழுந்தியபுணர்ச்சி வாய்ப்ப,வொருவரொருவர்மேவுநிலைமையிற்றிரிவொன்றனர்', என்றதிருவிருத்தத்தாலறிக. பரவையாருடன்முத்திகளை சேர்ப்பிக்குமிச்சரீரத்தைப்,பரமசிவன்,பிறரைக்கொண்டு முடிப்பிக்காமல் தாமேசென்றருளியது, பற்றுமுற்றுநீங்கப்பெற்று அதிதீவிரபாகமுதிர்ந்தசீவன்முத்தர்களால், பிராரத்தகர்மம் புசிக்கப்படுமேயொழிய, சரீரப்பற்றிலதும் அநாதியாம் அவர்களைச் சாரவிடாது, அதனைப்பரமசிவனே, தமதுசெயலாகக்கொண்டருளுவரென்னுஞ்சிவாகமசித்தாந்தங்கூறு முண்மையை அறிவிக்கிறிய நம் போலிகளுக்குத்தெரிதற்பொருட்டுமாமென்க.

சேரமான்பெருமாணயனர், அரசர்மரபில்அவதரித்தருளினவர்.இவர்.அரசாட்சிக்குப அங்கங்களை அவசியமாகவறித்துக்கொள்ளவேண்டியவராயிருந்தும்,அவைமுழுதும் அநிபாலியத்திலே பேவைபத்துந்தன்விரிட்டுத், தமதுசெபல்முழுதுஞ்சிவனடித்திருத்தொண்டேயாகப்பெரியதாவதாமந்திரிகள் இன்றியமையாமை தெரிவித்து வேண்டிக்கொண்டது குறித்துத், திருவருட்சம்மதந்தெரிந்துஅரசாட்சித்துடன்பாடுசெய்து,அதனைவகித்தருளிச், சுபதினத்தில்முடிசூடப்பெற்று,நகர்வலம்வந்துபத்தினசிங்காதனத்திற்கொலுவீற்றிருந்தருளுவதற்காக,யானைமீதேறிவந்தருளிச,சமஸ்தராஜவிருதுகளுடனமந்திரிகள்முதலாயஅங்கத்தவர்யாவருஞ்சூழத்திருவீதியிலேபவனிவந்தருளுகின்றஇந்தச்சமயத்திலும்,அவ்வீதியில்ஒருபக்கத்தில்லாதுங்கிப்பதுங்கிவருகின்றஒருவண்ணானுடம்பிலுள்ள உவர்மண்வெளுப்பைக்கண்டளவே, யானையினின்றிறங்கி அவன்முன்விரைந்துசென்றுவீழ்ந்துநமஸ்கரித்தருள, உடனே அவன்நடுநடுங்கி அடியேன் அடிவண்ணானென்று சொல்லிக்கொண்டுபன்முறைவணங்குதல் கண்டபின்னும், அவனை நோக்கி அடியேன்உமதுஅடிச்சேரன்,நீர் திருநீற்றுத்திருவேடத்தைநினைப்பித்தீர் வருந்தாது செல்லுமென்றுரைத்தருளினாரானால்இவரது திடபத்திச்சிறப்புஞ்சிவத்துவப்பொலிவும் எவர்தாமெடுத்திசைக்கவல்லார்,நிற்க.

இந்தகையசேரமான்பெருமாணயனருக்குத், தினந்தோறுந் தவறுதாசியதியாக, இவரதுசிவபூஜாந்தத்திலே தமதுதிருச்சிலம்

பொலிகேட்பித்துவந்தசிவபிரான், ஒருதினத்திற்கேட்பிக்காது தாமசித்துநாயனார்வாளாயுதத்தையெடுத்த அவசரம்நோக்கிஉடனேசிலம்பொலிகேட்பித்து, அன்பனே! நமதுசுந்தரன்சிற்சபையிலேநம்மைப்பாடுகின்ற திருப்பாடல்கேட்டு நின்றேமாதலால் இன்றுசிலம்பொலிகேட்பிக்கத்தாமசித்தோமென்றருளினார். இதனாலும், பரமசிவன், சுந்தரமூர்த்திகளிடத்து அளவைக்கடந்துள்ள அதிப்பிரியரென்பதூம், தம்மைப்போலவேயாவரும் அவரிடத்து அதிப்பிரியர்களாய்மெய்யன்புடன்அவரைவழிபாடுசெய்துய்கவெனத் திருவுளங்கொண்டேமூர்த்திகளின் சொரூபமகிமையை ஆங்காங்குத் தெரிவித்தருளுகின்றாரென்பதூம்தெளிவாதல்காண்க.

உபசாரமாத்திரையாகவேனும் பரமசிவன் குபேரன் றோழரென்றுகூறப்பெறுதல்போல, மூர்த்திகளும், செல்வத்தாற்குபேரனின்மேம்பாடுடையரும், அதன்மேலும்சிவத்துவவிளக்கச்சிறப்பினருமாகியசேரமான்பெருமானாயனார், பரமசிவன்மூலமாக உண்மைதெரிந்துதம்மைவந்தடைந்து வணங்கி அடிமைத்தன்மைமேற்கொண்டொழுகிவரவும், தாம்அவரைநட்பினராகமேற்கொண்டுவருதலால், சேரமான்றோழரென்றுகூறப்பெறுவாராயினர். இதுவும் மூர்த்திகளைப்பரமசிவனென்பதற்கோரேதுவாகும்.

சுந்தரமூர்த்திகள், ஒருமுறைதமதுதோழராகிய சேரர்பிரானுடன், காவிரியின்தென்கரைவழியாகமேற்றிசைநோக்கிச்சிவஸ்தலயாத்திரைசென்றுதிருக்கண்டியூரைவணங்கிக்கொண்டுவெளிவந்தருளினார். அப்பொழுதுசேரர்பிரான்காவிரியின்வடகரையிலுள்ளதிருவையாறுதோன்றக்கண்டு, அக்காவிரிஇருகரையும்அழித்துப்பிரளயவெள்ளம்போலப்பெருகி, ஓடமுதலியன செல்லவிடாதுஅதிவேகமாகச் செல்வதறிந்தும், மூர்த்திகளைநோக்கிச்சுவாமீ! அடியேன்மனம்இத்திருவையாற்றிற்சென்றுவணங்கவிரும்புகின்றது; இந்நதியைக்கடந்துபோய்வணங்குவோமென்றுவிண்ணப்பித்தார். இதனால், சேரர்பிரான், சுந்தரமூர்த்திகளைநம்மைப் போலவடிவங்கொண்டதுநோக்கிமனிதராகஒருபொழுதும் நினைத்தவரல்லரென்பதும், பரமசிவனேமானுடவடிவுகொண்டு வந்தருளினாரென்றுஅவரதுசொரூபநிலைஉள்ளபடிதெரிந்தேஅவ்வாறுகூறினாரென்பதும்தெளிவாதல்காண்க.

சேரர்பிரான் வேண்டுகோளின்படி, மூர்த்திகள், அங்குநின்றுகொண்டே திருப்பதிகம் ஒவ்வொருதிருப்பாசுரங்களினிறுதியிலும். "ஐயாறுடையவடிகளோ" என்றுபாடி அழைத்தருள்வாராயினார். உடனே. பசுவானதுதன்கன்றின் அழைப்பொலிகேட்டளவே மிக்கஆவலுடன்கனைப்பொலிகாட்டிமிகவிரைந்தோடி வருதல்போலப், பஞ்சநதீசுரரானவர், தம்மைமூர்த்திகள் அழைத்தருளிய திருப்பாசுரத்தொலிகேட்டளவே, அண்டமெலாநிறைந்தசராசரசீவகோடிகள் முழுதுங்கேட்கும்படி, "ஓலம்ஓலம்" என்று அசரீரத்தொனிசெய்தருளினார். உடனே, காவிரிநதிவெள்ளம், மேற்றிசையிற்பளிங்குமலைபோலத்தேங்கிநிற்க, அதன்கீழ்த்திசைவழியாக இருவரும், திருத்தொண்டர்கள் பரிசனங்கள் பல்லாயிரவருடன்சென்று பஞ்சநதீசுரரைத்தரிசனஞ்செய்துகொண்டு மீண்டு அவ்வழியேவந்து தென்கரையேறியபின் அணையின்றிச்சிவாஞ்ஞையைப்பார்த்தேங்கிநின்ற அவ்வெள்ளம் அணைபுடைத்தோடுதல்போல அதிவேகமாகவோடியது. இதனாலும், பரமசிவனும்மூர்த்திகளும்அப்பொழுது வடிவத்தால்வேறுற்றிருந்தாலுஞ்சொரூபத்தால் வேறுபாடுடையரல்லரென்பதினிது விளங்குதல்காண்க.

மூர்த்திகள், திருவையனைச்சக்களமபணிந்து, சேரர்பிரான் வேண்டுகோட்கிணங்கி அங்கிருந்து திருவாரூரை நினைந்துதிரும்பி விரைந்துவரும்போது, சேரர்பிரானுடன் அவர்பாற்பெற்ற அளவிலாப்பலவகைத்திரவியங்களைத், திருமுருகன்பூண்டியில் வீற்றிருந்தருளுகின்றபரமசிவன், தமது சிவகணங்களை வேடர்களாய்ச்சென்றபகரிக்கச்செய்து, மூர்த்திகள்வந்துதம்மைப்பாடியபின்புகொடுத்தருளினார். இதனால், மூர்த்திகள் திருவாரூரை நினைந்துவிரைந்துசெல்கின்றாராதலால், திருமுருகன்பூண்டியில்வந்துதம்மைப்பாடாதுவிடுவரெனக்கருதி இவரது திருப்பாட்டிற்கொண்ட பேராசையினாலேயே, திரவியங்களைக்கவர்வித்தாரென்பதுதெளிக. அன்றியும், பரமசிவன், தாமும்மூர்த்திகளும்வேற்றுமையின்றிவிளங்கும்உரிமைப்பாத்தியத்தால், மூர்த்திகளுக்கு இதுவரையுந்தாமேபொருள்கொடுத்து வந்ததுபோல, இப்பொழுதுந் தாமே முன்னிலையிற்கொடுப்பதன்றித், தமதுபக்தர்களானாலும் அவர்பொருளுந்தம்மாற்கொடுக்கப்பெற்றதம்பொருளையானாலும், பிறர்மூலமாகப்படர்க்கையிற்கொடுக்கப்பெறுதல், தமதுரிமைக்கும்அவர்தகுதிக்கும் வி

லக்காமென்றெண்ணியேபோலும். அப்பொருளைக்கவர்வித்துத்தாமேமுன்னிலையிற்கொடுத்தருளினரெனக்கோடலுமாமென்க.

சுந்தரமூர்த்திகளது திவ்வியசரித்திரம்பாடிக்கொண்டுவருகின்றகிருடாவாகிய சிவம், மூர்த்திகளின் சிவசொரூபநிலைகள் உள்ளிட்டுநோக்கும்படியுரியசொற்களால், இதுவரையெத்தனையோ இடங்களில் அங்கங்கேயும்விளக்கியிருக்கவும், மூர்த்திகள் மலைநாட்டிற்சென்று திருவஞ்சைக்களத்தினின்றும், வெள்ளானைமீது கயிலாசத்துக்கெழுந்தருளுகின்றசரித்திரபூர்த்திகூறத்தொடங்கும்பொழுதும், "படியினீடுபத்திமுதலன்புநீர்ப்பணைத்தோங்கி, வடிவுநம்பியாரூரர்செம்பொன்மேனிவனப்பாகக், கடியவெய்யவிருவினையின்களைகட்டெழுந்துகதிர்பரப்பி, முடிவிலாதசிவபோகமுதிர்ந்துமுறுகிவிளைந்ததால்" என்றுபாடியருளிற்று. இதில், நற்பயிராகியஆலாலசுந்தரரது, பூமியிற்செல்லுதற்கிசைந்தெழுந்தபத்தியாகியவித்து, அன்பாகியநீரிற்பூரித்துஅப்பூமியில்வேரூன்றி ஓங்குதலால், அவ்வித்தின்முளைத்துஉருவாயெழுந்து, ஆரூரரென்னுந்திருப்பெயர்பெற்றுவிளங்குஞ் செம்பொன்மேனியாகியபயிரானது, இயல்பானகடியவெய்யவினையாகியகளைகள்சிறிதுமின்றிவளர்ந்தெழுந்துகதிர்களைப்பரப்பித்தன்னிடத்தேஎன்றும்அழிவில்லாதநித்தியானந்தசிவபோகமுதிர்ந்துமுறுகி விளையப்பெற்றது என்னும் பொருள்விளக்கமாதல்காண்க. ஆகவே, மூர்த்திகளிடத்துப் பூமியில்வந்தபின்னும்முன்போலவே எப்பொழுதுநித்தியானந்தசிவபோகமேமுதிர்ந்துவிரிந்ததன்றி வேறுயாதுமில்லையென்பது தெளிவாயது.

பரமசிவவிருப்பத்தின்படியே, மூர்த்திகள், அப்பரமசிவனில் வேற்றுமையில்லாராதலால், தாமும்அவ்விருப்பங்கொண்டே, மாதர்பால், ஏனையர்மனம்போலவிரும்பிச்செல்கின்றபழக்கம்எப்பொழுதும் ஓரணுத்துணையுமில்லாத தமதுமனத்தைவலிந்துபோக்கி, அதுவேகாரணமாகவகித்துப்பூமியிற்சென்று, வாய்த் திருத்தொண்டின்மூலமாகப்பரமசிவபாரம்மியங்களைவிளக்கிச், சீவர்கள்அஃதுணர்ந்துசரியாதிவழிபாடுமேற்கொண்டுய்யும்பொருட்டுத்திருவுளங்கொண்டருளியசிவபக்திமேலீட்டினாலேயே, இப்பூமியில்வந்தவதரித்தருளினாராதலால்இவர்பூமியில்வந்துஆரூரரென்னுந்திருப்பெ

யர்களிக்கப்பெற்ற பெரியோர்கள் பெரியோர்களாகிய [illegible] பக்தி செய் வித்தாக [illegible] செய்த [illegible] நினைக்க. இதனை, 'ப [illegible]' [illegible] பெரியோர் [illegible] பக்தி யாலே [illegible] பெற்ற [illegible] அருளைத் தெளிக.

இச் சரிதையால் பெரியோர் [illegible] தக்க [illegible] பெரியோர்கள் [illegible] சிறந்த [illegible] யார் [illegible] தல் [illegible] பெருமைகளை விளங்கப் பெற்று [illegible] பெருமித் தூய்மையுடையார்களென்றார்.

பரிசன்று நற்செயப்பத்திப்பாயசின்றதுவி; ஆதலால், செம்பொன்மயமான மேனியான நாதனைத் தமக்குரியபடியேயறிந்தவர்களும், அம்மேனி அருள்மயமாதலால் அந்தமேனிக்குத் திருவருட் பிரகாசம் பரப்பி அகவிருளையும் புறவிருள் நீக்கிய தருக்கின்ற உண்மைப்பொருளுருவுக்குறித்து நாயகனைத் துதித்தனர்.

மூர்த்திகள் கயிலாசத்திற்கேகுந்த நாளுஞ்சமயஞ்சரிதத்துவிட்டனென்பார்; மேனியாகிய பாயிரமானது ஒப்புநோக்கத்தியப்பிரசிவ போகமூர்த்திக்குமுறையிதில் நினைத்துக்கொண்டுதுதிப்பார். பாயிரமானதுவலர்ந்தக்கூறு நாதத்தினின்று முற்றுவிட்டால், உடனே அப்பாயிரிட்டாரால், அவ்விடத்திலின்றுஞ் சகடங்களினோடு மேலான தானத்திலே த்தமாய் [illegible] பொன்னைக்கொண்டுபரிவதுலகமுடைக்கும். இதன் உதாரணமாதற்குயவம் [illegible]. அவைகள் செல் முதலியன [illegible] யாகமாகவும், தைப்பொல் முதலியன சேவைப போகமாகவும் [illegible] கொள்ளப்படும். மூர்த்திகளது செம்பொன்மேனியாகிய பாயிரமானது, அசாதாரணமாகப் பரமசிவனால் செய்யப்பெற்று, முழுதுந்தெய்வத்தன்மையுடைய பாயிரமாதலால். அப்பாயிரம் நல்வினையுஞ்சேவையும் அகற்றியதலாது, இனி அப்பரமசிவனால் பூமியினின்றும் கமலமுகப்பட்ட லாக்தனமாகிய வெள்ளானைமீதேழுந்தருளுவித்து, மிகமேலான கயிலாசத்தானத்தில் தமது அணிமையில் வைத்துப் பேணிக்கொள்ளப்பெறுதலையுணர்த்துவது இதன்கருத்தென்க.

மூர்த்திகளது சிவசொரூபஉண்மைநிலையை, ஆசிரியர், சரித்திர ஆரம்பஞ்செய்தமுதற்றிருவிருக்க முதலாக அங்கங்கேபற்பல திருவிருத்தங்களில் ஆழ்ந்து நோக்கிவிளங்கவைத்திருக்கவும், சரித்திரபூர்த்திசெய்யத்தொடங்கும்பொழுதும்மேற்காட்டிய திருவிருத்தத்தில் அவ்வுண்மைநிலையாவருக்குந்தெளிவாய்விளங்கவைத்தருளினார்; முன்னர்ப்பலஇடங்களினுமுள்ள உண்மையை ஆழ்ந்து நோக்காது, சரித்திரமுறைமாத்திரமே நோக்கிச்செல்வாரும், முடிவிலாவது, அவ்வுண்மைவெளிப்படநோக்கி, மூர்த்திகளது சிவசொரூபமகிமைதெரிந்துள்ளபடி வழிபாடுசெய்துய்கவெனத் திருவுளங்கொண்டே, முடிந்தது முடித்தலென்னுமுத்தியாகச், சரித்திரசம்பந்த அத்தியாவசியமின்றியும் இவ்வாறு ஈற்றில் விளங்கவைத்தருளினாரென்க.

இது, ஆரியவேதவக்தாவாகியபரமசிவன், அவ்வேதங்களிற் பற்பலஇடங்களிற்சிவபரத்துவவிளக்கஞ்செய்திருக்கவும் ஏனையர்க்குரைத்த உபசாரபரத்துவ நோக்கி மயங்காதுண்மை தெளியும்பொருட்டு, ஈற்றிலுள்ள அதர்வசிகாசமாப்தியில், சிவனொருவனே, யாவராலுந்தியானிக்கத்தக்கோன், அவனொருவனே யாவருக்குஞ் சிவஞ்செய்பவன் இதற்குமுன்உபசாரமாகப்பரத்துவங்கூறப்பெற்றஏனைய அரிபிரமேந்திராதிதேவசமூகமுழுதும் வர்ச்சிக்கப்படுவனவே அதர்வசிகைமுற்றிற்றுஎன்று கூறியுள்ளவேதமோதலுமென்க. அச்சுருதிவசனம் ஶிவ ஏகோ த்⁴யேய: ஶிவங்கர: ஸர்வமந்யத் பரித்யஜ்ய ஸமாப்தா அதர்வஶிகா

மூர்த்திகள்மேற்காட்டியபடி திருவாரூரினின்றும்மலைநாட்டுக்கெழுந்தருளுமார்க்கத்திலுள்ள அவிநாசியிற்சென்று, அங்கு முன்னரே, அவிநாசிலிங்கம் சுந்தரலிங்கமென்னும்பெயருடைய இரண்டுபிராமணச்சிறுவர்கள், தடாகத்திற்சென்றுகுளித்தபொழுது சுந்தரலிங்கனாமச்சிறுவன்முதலையாலிறந்தமைதெரிந்து, அதுளத்தனையோகாலங்களுக்குமுன்னிகழ்ந்ததாகவும் அத்தடாகமும் நீரின்றிவறந்துள்ளதாகவும், அங்குவந்து திருப்பதிகம் முதற்பாசுரம் பாடும்பொழுது அத்தடாகத்தில்நீர்பெருகுதலும், இரண்டாவதில் முதலைஅங்குவருதலும், மூன்றாவதில், அம்முதலைவயிற்றில்அச்சிறுவனுடல்சென்றவருடங்களின் வளர்ச்சியும்பெற்றுவருதலும், நான்

காவதில், இயமன் அச்சிறுவனுயிரை அவ்வுடலிற்புகுத்தலும், உடனே அம்முதலைக்கரையில்வந்து அச்சிறுவனை வெளிப்படக்கக்குதலும் நிகழப்பாடியருளிச், சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு சேரபிரான்றிருநகர்க்குச்சென்றருளினார். இதனையுமிவர்நிச்சலனராய்ச் சந்நிதிமாத்திரையேயிருந்தியாதுஞ்செய்கின்றபரமசிவனென்பது தெளியப்பெறும்.

மூர்த்திகள் அத்திருநகரிலுள்ள திருவஞ்சைக்களமென்னுஞ் சிவாலயத்திற்சென்று திருப்பதிகம்பாடியருளி, இனி திருக்கயிலைக்கெழுந்தருளுந் திருவுளக்குறிப்புணர்த்திய அளவிலே, கயிலாசபதியானவர், அபிரமேந்திராதிதேவர்களை அனுப்பிவெள்ளானையீதுவரவழைத்துக்கொண்டருளினார். இவர்நினைத்தபடியேயவர் செய்தலும் அவர்நினைத்தபடியே இவர்செய்தலுமாகிய இச்செயல்களை நோக்கியும், பரமசிவசுந்தரரிருவருந் சிறிதும் வேற்றுமையில்லா அபேதர்களென்பது நன்குதெளியலாம். அபேதமூர்த்தியாதலாலன்றோ? அவர் திருவஞ்சைக்களத்திற் குறிப்பாலுணர்த்தியருளியஅக்கணமே, பரமசிவன் பிரமவிஷ்ணுவாதிசமஸ்ததேவர்களையும் சகலவரிசைகளுடன் அனுப்பி, அவர்கள், தம்மைப்போலநினைத்து வணங்கித்தமது பட்டவர்த்தனமாகிய யானைமேலெழுந்தருளுவித்துடன் சூழ்ந்து துதித்துச் சேவித்துக்கொண்டழைத்துவரும்படி ஆஞ்ஞாபித்தருளினரென்பதும் உற்றுநோக்கியுண்மை தெளிக.

மூர்த்திகள், திருக்கயிலாசத்துக்கெழுந்தருளும்போது பாடியருளிய திப்பதிகமுதலாவது திருப்பாசுரம், "தானெனைமுன் படைத்தானதறிந்து தன்பொன்னடிக்கே, நானெனபாடலந்தோ நாயேனைப்பொருட்படுத்து, வானெனைவந்தெதிர்கொள்ளமத்தயானையருள்புரிந்து, ஊனுயிர்வேறுசெய்தானொடித்தான் மலையுத்தமனே" என்பதாம். இதில், 'தானெனைமுன்படைத்தான்" என்பது பரமசிவனே, மூர்த்திகளைகண்ணுடியினின்றுந் தோற்றுவித்தருளினுரென்பதையும், கயிலையிலிருந்தஆலாலசுந்தரசொரூபமே, பூமியில்வந்து ஆரூரநாமங்கொண்ட சுந்தரரூபமென்பதையுமினிதுவிளக்கி, "அது அறிந்து தன்பொன்னடிக்கே நான்என்னபாடல்" என்றபிற்றொடர்ச்சிகொண்டு, அங்ஙனந் தோற்றுவித்தது, பரப்பிரயோசனலோகோபகாரத்தின்பொருட்டுப் பரமசிவன் இவர்

வாய்க்கி ருதசொன்மையை [illegible] கூனின்

குதல காய்ந

[illegible]

வது([illegible]) [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

பாடி [illegible]

இதுறும். இவ [illegible]

வினெ [illegible]

[illegible] "[illegible]

நிலையாய் [illegible]. [illegible]

[illegible]

"வாக் [illegible]

னெல்லா [illegible]

ர் [illegible]

[illegible]

[illegible]

[illegible], இரண்டாவ [illegible]

செய் [illegible]

வதில, [illegible]

"விண் [illegible], "வா [illegible]

[illegible] "[illegible]

"அலாகொண்டு மன்னா நிறைந்து" [illegible], "[illegible]

விபாகமங்களறிவா [illegible], [illegible]

னெலா [illegible], [illegible]

னக்கேகறுவகோ, [illegible]

த்தமனை." என்றும் ஒன்பதாவது, "[illegible]

ன்மிகுதேவமெலலாம, [illegible]

ன்புரிந்து, மந்திர [illegible]

னென்றுறெடித்தான் [illegible] யுத்தமனை." என்றும் மூாத்தகளே, அ

ப்பொழுதுபாடியருளியவாய்மைகளாலும்வெகுதெளிவாகநிச்சயி த்துணரலாம்.

"சிரமலியானை" என்றது, இந்தஅயிராவணமென்னும் யானை, அயிராவதமுதலிய யானைகள்போலச் சாதாரணமன்றென்பதும். இரண்டாயிரங்கொம்புள்ளதென்பதும், இதுபரமசிவவிநாயகசுப்பிர மணியசிவமூர்த்திகள்மாத்திரமே ஏறிச்செலுத்தற்குரியபட்டவர் த்தனமென்பதும், பிரணவமேரூபமானதென்பதும்முதலிய மகிமைகளைவிளக்குமென்க.

மூர்த்திகளது, சொரூபமகிமைஉள்ளபடிதெரிந்துபரமசிவனே எனக்கொண்டநிச்சயஞானமுள்ளவர்களாதலால், அரிபிரமேந்திராதிதேவரனைவரும், மூர்த்திகளைவலம்வந்துவணங்கிச் சூழ்ந்து அரஅர என்பனவாதிவேத சிவாகமவாக்கிய சிவஸ்தோத்திரங்களைசெய்துவந்தார்களென்னும்உண்மையைமேற்காட்டிய எட்டாவதுதிருப்பாசுரந்தெளியவிளக்குதல்காண்க.

முதலாவதுதிருப்பாசுரத்தில், "ஊனுயிர்வேறுசெய்தான்" என்றது, நான், ஊனடைந்தஉடம்பையுடைய உயிர்களாகியசீவவர்க்கத்தினன் அல்லேன். அதனின்வேறாகியசிவவர்க்கத்தவனே என்பதை. இப்பொழுதுயாவருந்தெளிவாய்ப்பிரத்தியக்ஷத்திற்காணச் செய்தான் என்பதாம். பிரத்தியக்ஷத்திற் காணச்செய்ததென்னை யோவெனில்? சீவவர்க்கத்தில்கயிலைபடையக்கூடியவர்களைச்சாதாரணமாக, விமானநிதிகளிற்கணங்கள், வேறுசரீரிகளாக்கி அழைத்துச்செல்லுதலேயன்றி வேறில்லை. மூர்த்திகள், பூமியில்மானுடசரீரியாய்வந்ததுநோக்கிஅறிவிலார்அவரைச் சீவவர்க்கத்தினரென்று, நினைப்பினும், அந்நினைப்புநீங்கியுண்மைதெரிந்துய்தற்கே, பரமசிவன், தமதுதிருவெழுச்சிக்குரியசமஸ்தவரிசைகளுடன்சமஸ்ததேவரும், வேதசிவாகமவாக்கிய சிவஸ்துதிகளை செய்துகொண்டுவர, அசாதாரணமாகத் தாமேயல்லது பிறராலேறப்பெறாத, பிரணவரூபஅயிராவணயானைமீது, அதேசரீரியாய் எழுந்தருளிவரச்செய்தாராதலால், அதுவே அப்பொழுதுயாவருங்காணச்செய்த பிரத்தியக்ஷவிளக்கமென்க அதேசரீரத்துடன்மூர்த்திகள் கயிலைக்கெழுந்தருளினாரென்பதை, "களையாவுடலோடுசேரமானாரூரன், விளையாமதம்மாறுவெள்ளானைமேல்கொள்ள" என்னுந்திருவிசைப்பாச்சுருதியாலுந்தெளிக.

"ஊனுயிர் வேறுசெய்தான்" என்றதற்கு இவ்வாறன்றி உடம்பி னின்றும் உயிரை வேறு செய்தானென்றுபிறர் கூறின்? அவ்வாறுசெய்ததுமில்லை நினைத்ததுமில்லையாதலால், அது பொருளாமென்றொதுக்கி உண்மைகடைப்பிடித்துய்க. மூர்த்திகள், பூமியில்மானுடசரீரியாய் வந்ததுமன்றி அதற்கிசையச்சீவர்களைப்போலநடித்தமையும் நோக்கித், தம்மைச், சாமானியர்கள், சீவவர்க்கத்தினரென்று நினைத்துச் சிவத்துரோகிகளாகாதுய்கவெனத் திருவுளங்கொண்டபெருங்கருணையினாலேயே, தாம்கயிலைக்கெழுந்தருளும் இந்தச்சமயம், தமதுண்மைவெளியிடவேண்டியதவசியமெனக்கருதி, "ஊனுயிர்வேறு செய்தான்." என்றருளினாரென்க.

இவர், சிவவர்க்கத்தவரே என்பதற்கு, இதுகாறுங்கூறியபிரமாணங்களேயன்றி, இவர், திருக்கயிலாசவாயில்வரையானைமேலெழுந்தருளித்திருமுன்வந்ததைப்பார்த்துக்கொண்டு அணிமையிலிருக்கின்றமந்திரமாமுனிவர்கள், தன்வீட்டினுள் வருவானொருவன்போல,வாயில்கடோறும் யாதொருதடையுமின்றி, வருஞ்சமயங்கேட்டுத்தெரிந்துகொள்ளாமலும், அழைக்கப்பெறாமலும்,வந்ததுநோக்கி, இங்குஇவ்வாறுவரும்பாத்தியதைபரமசிவனுக்கல்லதுபிறர்க்கில்லையேஎனக்கருதிப்பரமசிவனைவணங்கிச்சுவாமிகாள், இவர் யாரென்றுகேட்டதற்கு அப்பரமசிவனே; இவன்நமதுரிமைப்பாத்தியதையாவுமுள்ளவனாகியநமது ஆரூரன்என்றுகூறினதும் பெருஞ்சான்றாகும். அங்ஙனங்கூறியதை மேற்காட்டிய ஒன்பதாவது திருப்பாசுரத்தில், "மந்திரமாமுனிவரிவனாரென வெம்பெருமா, னந்தமாரூரனென்றான்" என்பதால்நன்குணர்க.

மூர்த்திகள், கயிலைக்குவந்தபின்னும், பரமசிவன், மந்திரமாமுனிவர்களுக்கு,இவரை ஆரூரன் என்னும் நாமத்தால் விளக்கினது கொண்டும்,இவரது முன்னை ஆலாலசுந்தரநாமத்திருமேனியும், பூமியில்வந்தபின்னை ஆரூரநாமத்திருமேனியும் வேற்றுமையில்லாதுதிருவருள்மயமேயானஅபேதமேஎன்பதுதெளிக.

மூர்த்திகள், திருவஞ்சைக்களத்தில், யானைமீதெழுந்தருளும் பொழுது சேரர்பிரானும்உடன்வருகவெனத் திருவுளங்கொண்டதுணர்ந்து, அவருங்குதிரைமீதெழுந்தருளி மேற்சென்று, யானைமீதுவீற்றிருந்தருளுகின்றமூர்த்திகளைவலஞ்செய்துவணங்கி, அங்

குச்சூழ்ந்துவருகின்ற தேவசேனைகளுக்கெல்லாந் தலைவராகச் சேனாதிபதியாய் வரும்போது, பூமியில் அவரையே நோக்கி நின்ற அவரது சேனைவீரரெல்லாரும் முறுகிவளர்ந்த அன்பின்மேலீட்டினால். தங்கள் சரீரங்களை வாளால் நீக்கி வீரசரீரிகளாய், மேற்சென்று சேரர்பிரானைச்சூழ்ந்தார்களென்று விளங்கக்கூறிய ஆசிரியர், இதுகொண்டே சுந்தரமூர்த்திகளின்பரிவாரங்களாகிய திருத்தொண்டர்கள் எல்லாயிரவரும், மூர்த்திகளைப்போல முன்னைச்சரீரிகளாகவே மூர்த்திகளை முன்போலச்சூழ்ந்து சென்றார்களென்பது குறிப்பானுணர்கவெனத் திருவுளங்கொண்டே விளக்காது சென்றனர். அன்றியும் தூரத்திருந்தவ நம்பின்வந்தநண்பருமாகிய சேரர்பிரானையே நினைத்தழைத்துக்கொண்டாரானால்? எப்போதும் அணிமையர்களாய் முன்வந்த திருவணுக்கத்திருத்தொண்டர்களுடனாகவே சென்றாரென்பதுசொல்லாமே அமையுமாதலால், அவசியமின்மைநோக்கி விளக்காதுசென்றனரென்றும் ஊகித்துணரலாம். இது, உய்த்துணரவைத்தலென்னுமுத்திபோலும்.

பெரியபுராணத்தில், திருக்கயிலாசத்திருமலைச்சிறப்புமுதலாக வெள்ளானைச்சருக்கம்வரையிலும், சுந்தரமூர்த்திகளது சிவசொரூபமகிமைகளை எடுத்துக்காட்டுகின்ற உட்பொருள்விளக்கங்கள் பற்பல. அவையெல்லாம். ஆங்காங்குள்ளபடி எடுத்துக்காட்டி விளக்கும் வண்மை, தண்மைவாய்ந்துண்மையுணர்ந்த திண்மையறிவாளர்க்கன்றி அறிவிலாச்சிறியேனாலாவதன்றாதலினிம்மட்டிலமைந்தேன்.

இதுகாறுங்கூறியவாற்றால், சுந்தரமூர்த்திசுவாமிகள், பரமசிவனேயென்பதையும், அவர் மானுடவடிவினராய்வந்தது, பரமசிவன் ஒவ்வோர்காலங்களிற் பக்தானுக்கிரகார்த்தமாக ஒவ்வோர்வடிவுகொண்டுவருதல்போல, லோகோபகாரார்த்தமாகவே என்பதையும், அங்ஙனம்வந்ததும் பரமசிவவருகைபோல அயோனிஜராகவே வந்தாரென்பதையும், அவர் பரவையார் சங்கிலியாரைக்கூடியிருந்தது, பரமசிவன் ஹைமவதியாகிய கங்காதேவி பார்வதிதேவிசமேதராயிருத்தல்போல்வதன்றிச், சீவர்கள்போலச்சிற்றின்பநுகர்ச்சிக்கன்றென்பதையும், அங்ஙனங்கூடியிருந்தபோது ஊடல் கூடலாதி பற்பலவிஷயங்கள்நிகழக்காட்டியது, அபின்னபரமசிவசக்திகள் உலகெலாமுய்யும்பொருட்டு, ஆண்பெண்ணுருக்கொண்டதற்கிசையஉலகர்க்குக்காட்டியபற்பலசரித்திரங்கள்போல்வனவேயன்றிச்,

சீவர்களிடத்துள்ளகர்மானுகுணச்செயல்கள்போல்வனவன்றென்பதையும், இவர் திருமேனி, பரமசிவரூபம்போலசச்சிதானந்தமயமேஎன்பதையும், அதனாற்றான்ஆசிரியர், சரிததிரபூர்த்திசெய்யத்தொடங்கும்போதும்முடிந்ததும்முடிததலென்னுமுத்தியால், இவர்மேனியாகியபயிரானது, இயல்பானேவெய்யவினைக்களைகட்டெழுந்துகதிர்பரப்பிநித்தியானந்தமாகியசிவபோகமேவிளைவித்ததென்றுகூறினரென்பதையும், அதனையேஇவர், கயிலையிற்சென்றுசிவசந்நிதியிற்புகுந்துபன்முறைவணங்கிஎழுந்துநின்றருளியதை "படியுநெஞ்சொடுபன்முறைபணிந்தெழும்பரம்பரையானந்த,வடிவுநின்றது" என்றுமேலும்விளக்கினரென்பதையும்.இன்னுமிவைபோல்வனபலவற்றையும்,மற்றையோருமுற்றுநோக்கி, மூர்த்திகளை, நமமைப்போலமானுடரிலொருவரென்றும்,அவர்செயல்கள், நமதுகர்மானுகுணச்செயல்போல்வனவென்றுங் கருதி. அதற்கியைந்தனபேசிமீளாநரகுக்காளாவார்க்கிடித்துக்கூறிஉண்மைவிளக்கி,மூர்த்திகளைப்பரமசிவனேஎன்றுள்ளபடிதெளிந்துவழிபாடுசெய்துசெய்வித்துய்யும்பொருட்டுவேண்டிக்கொள்கின்றேன்.

யார்யார்எவ்வெச்செயல்களைச்செய்யினும்,அவற்றைஅவ்வச்செயல்வகைமாத்திரமேநோக்கி நிச்சயித்துண்மையுணர்தல்கூடாது. அவரவர்கருத்துவகையுள்ளிட்டுநோக்கியே நிச்சயித்துண்மையுணரலாமன்றிவேறில்லை. இதனை, "அரனடிக்கன்பர்செய்யும்பாவமுமறமதாகும், பரனடிக்கன்பிலாதார் புண்ணியம்பாவமாகும், வரமுடைத்தக்கன்செய்தமாவேள்விதீமையாகி, நரரினிற்பாலன்செய்தபாதகநன்மையாய்த்தே." என்றபிரபலசுருதியானுங்காண்க.

இதில், "அரனடிக்கன்பர்செய்யும்பாவமும்" என்றஅவ்வளவேநோக்கிஅவர்கள்பாவமுஞ்செய்வார்களென்றுகோடற்க. அவர்கள்செய்வது,செயல்வகைமாத்திரமேவெளிப்படநோக்குவோரால்பாவமாகக்கருதப்படினும்.கருத்துவகையைஉள்ளிட்டுநோக்கிற்புண்ணியமேயாமென்றுகொள்க.

இதனால்,பாவம்,புண்ணியமாதற்கும்,புண்ணியம்,பாவமாதற்குங்காரணம் அன்பும்அஃதின்மையுமே யாமென்றுகூறி; அதற்குநிதரிசனப்பிரமாணமாகச்சண்டேசுரர்செயலும்,தக்கன்செயலுங்காட்டிவிளக்கியிருத்தலால்,இப்பிரபலசுருதிப்பிரமாணம், எப்படி

த்தாராலுமறுத்தற்கியலாதசம்மதமேயாகுமென்க. இனி நம்மதத்தினர்தம்மதம்வேறாருமா? அமைக.

இப்பிரபலசுருதிப்பிரமாணங்கொண்டும் ஸ்ரீசுந்தரமூர்த்திகளது,செயல்வகையுங்கருத்துவகையும்நோக்கியுண்மைதெளிந்துய்வாருய்க. ஸ்ரீசுந்தரமூர்த்திகளது,சிவசொரூபநிலைமைநன்குணர்ந்துய்யும்பொருட்டு,இப்பெரியபுராணம், ஆங்காங்குப்பற்பல அற்புதவாக்கியங்களை,உள்ளிட்டு ஆழ்ந்துநோக்கிஉண்மைதெளியவைத்திருத்தல்போல, ஸ்ரீஞானசம்பந்தசுவாமிகள், திருநாவுக்கரசுசுவாமிகள் சரித்திரங்களிலும், ஆங்காங்கு அவர்களின், சொரூபநிலைஉள்ளிட்டுநோக்கியுண்மைதெளியவைத்துள்ளஅற்புத வாக்கியங்கள்அளவில்லாதனவாம். மற்றைநாயன்மார்சரித்திரங்கள்முழுதுமே,அவ்வாறுஉள்ளிட்டுநோக்கி உண்மைதெளிதற்குரியவாக்கியங்கள்பற்பலவாம். அவையெல்லாம், அவ்வச்சரித்திரங்களினுண்மைவிரித்துரைத்தருளுமுத்தமசிலர்க்கன்றி, ஒன்றுக்கும் பற்றாதசிறியேனுரைப்பதெங்ஙனம்.

"விண்ணோர்தமக்குந்தெரிவருநின்மேன்மையெங்கேயானெங்கே, தண்ணார்துதியென்றிதுவொருகுற்றந்தாளுய்ச்சமைந்ததா, லண்ணாவன்புக்கெளியாயானவாவாற்செய்தேனாதலினா, லெண்ணாதெல்லாம்பொறுத்தருள்வாயென்னுமிது வென்றுணிபாமே." என்று பெரியார்பணித்தபடி, எல்லையின்றிவிரிந்துள தன்மையோவகைகளாய்ப்பரந்துள்ளசுந்தரசிவஅபாரமகிமாப்பிரவாகமெங்கே, நாயினுங்கடையனான பெரும்பேதையேன்அறிவெங்கே, என்றுகருதி,அதனைக்கூறத்தொடங்குதலொழிந்துவாளாவிராமல்,ஏதோஇதுவரையும்பிதற்றியகுழறுபடைகளால்,அபசாரம்வருமோவென்றஞ்சினேனாதலால்,எம்பெருமானே, உலகரிற்சிலர்மூர்த்திகளதுசொரூபமகிமையுள்ளபடியுணர்ந்துவழிபாடுசெய்துய்வதொழிந்து, எம்மைப்போலச்சீவராகமதித்துவேண்டியவாறுபேசிநிரையத்துக்காளாகின்றார்களேஎன்றுபரிந்து,ஆசைமேலீட்

டினு லிவ்வளவுங்கூறினேன். இதனைப் பொறுத்தருளுகவென்று ஸ்ரீசாம்பசிவசரணாரவிந்தங்களைப்பணிந்துபிரார்த்தித்துக்கொண்டு, இந்நூலையத்திருவடிகளிலேயே சமர்ப்பணஞ் செய்கின்றேன்.

என்றுமின்பம் பெருகுமியல்பினா
லொன்றுகாதலி னுள்ளமு மோங்கிட
மன்றுளாரடி யாரவர் வான்புகழ்
நின்றதெங்கு நிலவி யுலகெலாம்.

வையநீடுக மாமழைமன்னுக
மெய்விரும்பியவன்பர் விளங்குக
சைவநன்னெறி தான்றழைத்தோங்குக
தெய்வவெண்டிருநீறுசிறக்கவே.

திருச்சிற்றம்பலம்.

சிவசுந்தரசாயாரூபசிவமகிமாசங்கிரகம்.

முற்றுப்பெற்றது.



உபாசனாகுருவணக்கம்.

திருவருளும் பொருள்வளரச் சிவனருளு நூல்வளரத் தெளியத்தேற்றுங், குருவருளுங் குணம்வளரக் கோனருளுங் கோல்வளரக் கோதில்சைவத, தருவருளும் பலன்வளரச் சகத்தருளுமாபதியே சைவவாய்மை, மருவருளுந் திருவுருவா வந்தருளு நாவலர்கோன் மலர்த்தாள்போற்றி. (௧)

என்னைநிகர் பதகர்பிற ரில்லாதேன் பிழைகள்பொறுத் தென்றுகொள்வார், பின்னொருவ ரில்லையெனும் பெருங்கருணையாலினிய பேசியீர்த்துத், தன்னடியென் சென்னியுறத் தந்தருட்பாதோதகமுஞ் சாரால்கி, யின்னுமருந் துணையாகி யிருந்தருளு நாவலர்கோ னிணைத்தாள்போற்றி. (௨)

பிள்ளையார் குமரரெனும் பெயரேபோ லுபப்தங்கள் பெறுதுநின்றே, யுள்ளையார் நாவலப்பே ரொருதனையே சிறுவருக்கு முணர்த்தநிற்போன், கள்ளையார் கடுக்கைமுடிக் கண்ணுதலைக் கண்ணுதலைக் கவினக்காட்டி, வள்ளையார் குழைபாகன் மகிமாப்ர சங்கமுத மழைபெய் மேகம். (௩)

கற்றுணர்ந்தன் புற்றவர்க்கே காழியரா தியர்செயுப காரத்தின்மேற், சிற்றுணர்வின் பாலருமெய் தேர்கெனவே தாகம நூற் றெளிவைவெவ்வே. றுற்றபல நூலாக வுஞற்றிலெகு லெகுவாக வுணர்ந்துவாய்மை, முற்றுணர்வு முறநூல முதம்பருவ முணர்ந்தூட்டி முதஞ்செய்மாதா. (௪)

தேவர்குறள் புராணமியல் சித்திமுதற் சிவநூலின் சிதைவு நீக்கி, யாவருநன் குணர்தரமுற் றெச்சமுத லடையாளமெல்லாங்காட்டித், தாவருநல் லுணர்வுலகஞ் சைவநெறி நின்றுய்வான் றருமெய்த்தாதை, சேவருகோன் போற்றனக்கென் றொன்றுநயாவாதியனித் தியதிருத்தன். (௫)

சைவமர பினிலரிய தவம்புரிந்து கந்தவேட னந்தையாகத், தெய்வமுமே லொன்றதுமா சிவமேயென் றுலகமெலாந் தெளிந்து நின்றே, யுய்வதா கவுமேனை யுவலைம்தப் பவநெறிக ளொன்றுறுமே, வைவதா கவுமகவாய் நல்லூரிற் பல்லுலகு மயப்பவந்தோன். (௬)

எமதிறைவ னெமதுறவ னெமதுதுணை யெமதுநகர் வெம துதார, மெமதுபுக லெமதுவாழ் வெமதாவி யெமதுபொரு ளெ மதுதேக, மெமதுதவ மெமதுபல மெமதுநல மெமதுபுல மெம துயோக, மெமதுபுத்தி யெமதுசித்தி யெமதுபத்தி யெமதுமு த்தி யெமதுபோகம். (௭)

எமதிருண்மூற் றிரியவரு ளொளுங்கிரணமெங்குங்விரித் தில ங்கும்பானு, மெமதுவினை யொப்புவர வெழிற்சரியா தியிற்சரி ப்பித் திதஞ்செயாசா, னெமதுமல பாகமற வினைபோக முமு டியொழித் திடுந்திரோதை, யெமதளிகொண் டருள்பதிகரு மியன்ஞான பரமகுரு விணைத்தாள் போற்றி. (௮)

வேதசூரம் வழுவினஞர் விளையுமென வருள்சிவனை விளக் கும்பண்ணின், பேதமுமா பதிசிவநூல் பிறக்குதனோக சாதந் தோ பெட்டபெட்டாங், கோதிவயி ரமபுகரை யொழித்தந நூற் பண்ணடைவே யுவந்துபாடு, நீதியாற் றமிழ்வேத நிகழ் வுறவெங் களும்பரப்பு நிமலமூர்த்தி. (௯)

முன்னுலகெ லாமெனும்பொன் மொழியொன்றே விரித்தடி யார் முதுநூலாய, தொன்னகராந் தில்லையிற்செய் துரசெய லொன் றனந்தமாத் துலங்குமென்றே, தன்னிகரசை வப்பிரகா சவித்தியா சாலையினூ தாபித்தங்க, ணன்னிலையே யபிவிருத்தி யாகிவரப் பெரும்பொருளு மமைத்தசீமான். (௧0)

என்னாலும் பிறராலு மெவராலு மளப்பரிய வியறசீராளன், பன்னுமெ பல்லுலகும் பகிரண்டங் களுமுவாது பரவிவாழ்தது, நன்றுமெ ஞறுமுக னைவலர்கோன் றிருபபாத நளினபோதாம, பொன்னுருமுடிசசென்னிப புரவலாசே வடிமுடியிற புனைந்து வாழ்வாம். (௧௧)

உபாசனுதநவணக்கம் முற்றிற்று.



சோதந பத்திரம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
௩௩	க௮	ெனனுந்திரு	ெனனுந்திரு
௩௪	௩௪	வளந்து	வளர்ந்து
௩௫	க௪	தன்மைட	தன்மை, 7.
,,	க௯	செய்க்க	செயக்க
௩௬	௩	சஙகிகம்	சங்கிரகம்
௩௭	உ௫	செய்கபின்	செய்தபின்
௩௮	உ	பாதந்கே	பார்த்கே
௩௯	உ	மூர்,ந்தி	மூர்த்தி
,,	௬	தூக்கினு	தூக்கினு
௪௰	க௬	இன்மா	இன்பமா
௪க	க௫	தள்ளியி	தள்ளிவி
௪௩	௭	தம்மைத்	தம்மை
௪௫	க௫	எங்குட	எங்கும்
௪௬	உஉ	ஜெய	ஜெய்ய
௪௯	உ௩	வேறில்லை	வேறில்லை.
,,	உ௮	யல்லாது	யல்லது
,,	,,	பெரு,த.	பெறுத
,,	௩௰	ராதலால்.	ராதலால்
,,	௩க	மென்க	மென்க.
௫௰	உ௬	ஆ நரன்.	ஆருரன்
,,	௩க	பொழுது.	பொழுது
௫க	௪	வீட்டிுனல்.	வீட்டினுல்
௫௩	உ௩	பெருட	பெரும்

சோதந பத்திரம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
௩	௧௭	தொகைப் பொருள்சொ	தொகைப் பொருள்சொ
௪	௧௧	கௌபீ	கௌபீ
௪	௧௮	நோக்கி யுண்மை	நோக்கியுண்மை
௫	௪	பதிபாகிய	பதிபாகிய
,,	௩௩	தாகவு	தாகவும்
௬	௫	வாய்ந்த	வாய்ந்த
,,	௨௬	அகதிய	அகஸ்திய
௭	௨௮	வேததிமென்	வேதமென்
௮	௨௯	கண்ணினோர்	கண்ணினோர்
௯	௨௬	னோர்ந்தயிலன்	னோர்ந்தசீலன்
௧௨	௩	தர்தக்க	தரத்தக்க
௧௪	௭	தியகாயிரு	தியதாயிரு
௧௬	௭	பெரெச்ச	பெயரெச்ச
,,	௨௩	சம்பந்த	சம்பந்த
,,	௨௫	முனைபாடி	முனைப்பாடி
௧௭	௧௧	திருபாத	திருப்பாத
௧௯	௰௧	குலமரகிய	குலமாகிய
௨௰	௯	கரணாரு	கரணாரு
௨௧	௰	நோக்கின்	நெருக்கின்
,,	௧௭	மாதாப்பிதா	மாதாபிதா
௨௨	௪	அபிஷை	அபிஷை
,,	௨௧	தாகதெரி	தாகத்தெரி
௨௪	௨௬	மூர்த்தி	மூர்த்தி
௨௬	௨௯	ராகிய	ராதிய
௨௭	௧௬	போருமேள்	பொருமேள்
௨௮	௨௨	தருளினோர்	சருளினோர் இத்தன்
௨௯	௧௬	சம்மந்த	சம்பந்த
௩௰	௩௨	மாண்டிக்	மாண்டிக,
௩௧	௨௫	நிர்பக்ஷ	நிஷ்பக்ஷ
,,	௨௭	நிர்பக்ஷ	நிஷபக்ஷ